பாலைப் பசுங்கிளியே

ரமணிசந்திரன்

பாலப் பருவத்திலே

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கெளடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை-600 014.

பதிப்புரை

தமிழில் நல்ல நூல்களுக்கு தமிழ் மக்களின் வரவேற்பு குறையாது என்பதற்கு ரமணிசந்திரன் நாவல் ஒரு எடுத்துக் காட்டு.

இலட்சிய கதா பாத்திரங்களைக் கொண்டு நல்ல கதையை தெளிவாகப் பின்னி, சுவையாகக் கொண்டு செல்லும் பாணி திருமதி ரமணிசந்திரனுக்கே உரியது. இதில் வரும் கதா பாத்திரங்களை எங்கோ பார்த்தது போன்ற பிரமை ஏற்படுவதில் வியப்பில்லை. அன்றாட நிகழ்வுகளைக் கொண்டே கதை பின்னப்படுவதால் வாசகர்களின் ஆர்வம் மேலும் தூண்டப்படுகிறது. படிப்பவர்களுக்கு ஒருவித திருப்தி - மனநிறைவு ஏற்படுகிறது. உயிரோட்டமுள்ள தமிழ் நடையும் உதவியாக இருக்கிறது. இத்தனை சிறப்புகளும் கொண்ட இந்த நாவலைப் படித்து மகிழுங்கள். கருத்தை எழுதுங்கள்.

— அருணோதயம் அருணன்

பாராட்டுரை

மதிப்புக்குரிய அருணோதயம் அருணன் அவர்கட்கு!

அன்புடன் எழுதிக் கொள்வது, நான் இலங்கையிலிருந்து இக் கடிதம் எழுதுகிறேன். திருமதி. ரமணிசந்திரனின் முத்தான நாவல்களை வாசிக்கும் லட்சக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி. அவரின் அநேகமான நாவ்ல்கள் புத்தக வடிவில் உங்களது அருணோதயம் வெளியீடாக வந்துள்ளது. ஏனைய எழுத்தாளர்களின் நாவல்களை விட ரமணிசந்திரனின் நாவல்கள் என்றால் எனக்கு உயிர். நான் கூடுதலாக விரும்பிப் படிப்பதே இவரது படைப்புக்களைத்தான். கிட்டத்தட்ட 45 நாவல்கள் படித்து விட்டேன். எனக்கு அவரது நாவல்கள்தான் உற்ற துணை, அவற்றைப் படிக்கின்ற போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி, நிம்மதி வேறெதிலும் கிடைப்பதில்லை. அதிலே காணும் மனநிறைவு, அதை எப்படி வார்த்தையில் சொல்லிவிட முடியும்.

மேலும், தற்சமயம் உள்ள வெளியீடுகளில் எழுத்துக்கள் மிகவும் பெரியனவாக நன்றாக உள்ளது. பழைய வெளியீடுகளில் எழுத்துக்கள் சிறியவையாக இருந்தன. இப்போது வருபவை நல்ல அழகாக உள்ளது. நான் புத்தகம் வாங்குமுன் அருணோதயம் வெளியீடா ·எனப் பார்த்து விடுவேன். உங்கள் வெளியீட்டில் வரும்போது நாவல்கள் ஒரு தனி அழகைப் பெறுகின்றது. ஐஸ் வைக்கிறேன் என்று எண்ணாதீர்கள் - முற்றிலும் உண்மையே. மற்றவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

மேலும் உங்கள் பணிமேன்மேலும் வள‌ர, தொடர வேண்டுமென வாழ்த்தி, வேண்டி விடைபெறுகிறேன்.

நன்றி

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
சுசீலா - இந்திரகுமார்

மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net : www.tamilnesan1981.blogspot.com

பாலைப் பசுங்கீளியே...!

1

"அத்தை! இங்கேவாயேன். இதோபார், இந்த நெற்றிச் சுட்டி இடது பக்கமாய்க் கொஞ்சம் சரிந்து கிடக்கிறது பாரேன். அம்மாவிடம் சொன்னால், 'நான் அலங்காரம் செய்ய வேண்டாமா? உனக்கே பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி' என்று போய்விட்டார்கள்." என்று தாயைக் குறை கூறியபடி, அவளுடைய அத்தையை உதவிக்கு அழைத்தாள் அர்ச்சனா.

அத்தை என்றால், அவர்களுடைய அம்மா சந்தியாவை ஒத்த மத்திய வயதுக்காரி அல்ல.

அன்றையக் கதாநாயகியாய் மேடையை அலங்கரிக்க இருக்கும் பதிமூன்றுவயது அர்ச்சனாவை விட மூன்றே வயது மூத்தவள். அதனாலேயே, அத்தை என்று முறை சொல்லி அழைத்த போதும் மானசாவை 'வாபோ' என்று ஏக வசனத்திலேயே பேசும் பழக்கம் அர்ச்சனாவுக்கு வந்துவிட்டது.

மானசாவுடைய தாயார் ஈசுவரிக்குப் பதினெட்டு வய தில் திருமணம் நடந்து மறு ஆண்டே மகன் கதிரேசனைப் பெற்றெடுத்தாள்.

ஐந்தாண்டு கழிந்ததும், இன்னொரு பிள்ளை வேண் டும் என்று கணவனும் மனைவியும் ஆசைப்பட்டனர். ஆனால், அது தரிக்கவே இல்லாமல் கண்ணாமூச்சி ஆட, கொஞ்சகாலம் முயன்று விட்டு, அலுத்துப் போய், 'சரி, நமக்கு ஒன்றே மதி!' என்று அவர்கள் விட்டு விட்ட பிறகும் பல ஆண்டுகள் கழித்து, ஈசுவரியின் முப்பத்தேழாவது வயதில் அவள் மீண்டும் கருத்தரித்தாள்.

முதலிலேயே அது குழந்தை என்று தெரிந்திருந்தால், ஈசுவரி மானசாவைப் பெற்றிருப்பாளோ என்னவோ? அந்த வயதில் பெண்களுக்கு வரும் கோளாறு என்று எண்ணி, சும்மா இருந்து விட்டவளுக்கு விஷயம் சரியாகத் தெரிய வந்தபோது வேறெதுவும் செய்வதற்குச் சற்று அதிக மாகவே காலம் கடந்து விட்டிருந்தது.

இந்த வயதிலா, எப்படி வளர்ப்பது என்று கலங்கியவ ளுக்கு, "என்ன பெரிய வயது? உனக்கு முப்பத்தேழு, எனக்கு நாற்பது. இன்னமும் இருபத்தைந்து ஆண்டுகள் நல்ல திடகாத்திரமாய் வாழ்ந்திருந்து, பையனோ, பெண்ணோ, இதற்கும் எல்லாவகை நல்லவைகளையும் செய்து குண் குளிரப் பார்க்கப் போகிறோம்" என்று தைரியம் சொன்னார் லிங்கம்.

அப்படித் தேற்றியவர், சில மாதங்களுக்கு முன் - அவர் சொன்ன இருபத்தைந்தில் கிட்டதட்டப் பத்தாண்டு கள் முன்னதாகவே இறந்து போனது தான் ஈசுவரிக்குத் தாங்கமாட்டாத இடியாகிப் போனது.

ஆறுமாதங்களாக எங்கே பார்த்தாலும் ஒரே இருட்டு தான். மனம், உடல் எல்லாம் ஓய்ந்து போயின.

ஏற்கனவே, முப்பத்தி எட்டாவது வயதில், மிகுந்த சிரமப்பட்டு மானசாவைப் பெற்றதிலிருந்தே ஈசுவரிக்கு முழு ஆரோக்கியம் என்றுமே இருந்தது இல்லை. எத்தனை வேலைகள் இருந்தாலும், அவளுக்கென்று நேரம் ஒதுக்கி, ''என்னம்மா...'' என்று பரிவுடன் பராமரித்த கணவன் இருந்த வரை ஏதோ பரவாயில்லாமல் நடமாடிக் கொண்டு தான் இருந்தாள்.

ஆனால், பிறகு... அதிலும் அந்த முதல் முப்பது நாட்கள்! நாள் விடிவதும் முடிவதும் எதுவும் தெரியாமல் இருளில் மூழ்கியிருந்த நாட்கள்...

அப்போதும், ஒரு மூலையில் கிடந்து பழைய கதை களை எண்ணி, எண்ணி அந்த நினைவில் அமைதி பெறவும் வழியில்லாமல், ''அம்மா, இந்தக் கம்பெனி தராமல் இழுக் கிறான்; நோட்டீஸ் விட வேண்டும். ஒரு கையெழுத்துப் போடுங்கள்... மொத்தத்தையும் திருப்புகிறனே, ரசீதில் கையெழுத்து... என்றெல்லாம் மகன் வந்து குறுக்கிடவும், தொழில் கணவனுடையதாக இருந்து அவருக்குப் பின் மனைவியின் உரிமையாய் அவளது கைக்கு வந்த தொழில் பங்குகள் அனைத்தையும் மகன் பெயருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டு கணவன் அறையே கதியென்று இருக்கலா னாள்.

சில சமயங்களில், மகள் நினைவும் வரும். லிங்கம் இருந்தவரை, கண்ணின் கருமணியாய் அவர் போற்றி வளர்த்தது ஞாபகம் வரும். அவ்வப்போது அறைக்குள் வந்து, அன்னையின் அருகில் வந்து மானசா - மானசா தேவி அமர்ந்திருக்கும் போது, அவள் பிறந்ததிலிருந்து நடந்தவை, அவளுடைய தந்தை அவளை முதல் முறையா கப் பார்த்தது, கையில் ஏந்தியது என்று ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்துக் கலங்குவாள். மகளைத் தொட்டு வருடி யவாறே கண்ணீர் சிந்துவாள்.

தன்னைப் பார்த்ததுமே தாய் கலங்குவதைக் கண்டு, மானசாவும் வாயடைத்துப் போவாள். ஏதோ சொல்ல வேண்டும் என்று வந்தால் கூட எதையும் சொல்ல மாட்டா மல் வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொள் ளும். சிறு வயதிலிருந்தே முழு ஆரோக்கியம் இல்லாமலே பார்த்திருந்த தாய்க்கு, எப்போதும் போலச் சி பணிவிடை களைச் செய்து விட்டுப் போய் விடுவாள்.

பதினாறு வயதுப் பெண். அவளுக்கு என்னென் னவோ செய்து, எப்படி எப்படியோ வாழவைக்க வேண் டும் என்று லிங்கம் எத்தனையோ கனவுகள் கண்டிருந்தார்.

அவைகளையெல்லாம் நிறைவேற்றுவது தன் பொறுப் பல்லவா என்று சில சமயங்களில் ஈசுவரிக்குத் தோன்றும். மகன் கதிரேசன் நல்ல கெட்டிக்காரப் பையன்; கணவர் விட்டுச் சென்ற தொழிலைத் திறம்பட நடத்துவது. போலவே, அவரது கனவுகளையும் நல்லபடியாகவே நிறை வேற்றுவான் என்பதில் முழு நம்பிக்கை இருந்ததால் அந்த மாதிரி எண்ணங்கள் தோன்றிய விரைவிலேயே மறைந்து விடும்.

இந்த நிலையில்தான், வீட்டில் ஒரு குதூகல நிகழ்ச்சி யாகக் கதிரேசனுடைய மகள் பெரியவள் ஆனாள்.

ஒரு சமயம் எண்ணிப் பார்க்கும்போது, ஈசுவரிக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது. கதிரேசனே சிறுபிள்ளை. அதற்குள், அவனுடைய மகள் இப்படி என்றால்...! என்று நினைப்பு ஓடும்போது, இத்தனை மாதங்களில், அவளுக் குச் சிரிப்பு கூட வந்தது. ரொம்ப நாளைக்குப் பிறகு வந்த முதல் சிரிப்பு!

லிங்கமும், அவளும் திட்டமிட்டிருந்தது போல, நடந் திருந்தால் இந்த நிகழ்ச்சி இப்போது நடக்க வாய்ப்பில்லை. ஏனெனில் மகனுக்கு இருபத்தைந்து வயது ஆகுமுன்,

அவனுக்குத் திருமணம் செய்யும் எண்ணமே அவர்களுக்குக் கிடையாது!

ஆனால் படிக்கும்போதே, பையன் காதல் என்று வந்து நின்று விட்டான். 'உடன்படித்த பெண்ணோடு உயிர்க் காதல்; பிரிந்தால் பைத்தியமே பிடித்துவிடும். அப்புறம், லைலா-மஜ்னு கதையாகிவிடும்' என்று வசனம் பேசத் தொடங்கி விட்டான்.

எல்லா வகையிலும் பெற்றோருக்குத் தயக்கம்தான்.

உடன் படிப்பவள் என்றால் ஒரே வயதாக இருக்கும்; இருபத்தியொரு வயதில் பையன் அப்போதுதான் உல கத்தை எட்டிப் பார்க்கிறவன்; ஆனால் அதே வயதில், பெண், குடும்பத்தைத் தாங்கத் தயாராகி விடுகிறவள்; எனவே மனதால் அவள் மூத்தவள் என்கிற கருத்து இருக்கும். அதேபோலப் பின்னரும், முன் நாற்பதுகளில் ஆண் இளைஞனாக இருக்கும் போது பெண் மூப்படைந்து விடுவாள்; இதையெல்லாம் யோசி என்று தந்தை சொன் னது எதையும் கதிரேசன் காதிலேயே வாங்கிக் கொள்ள வில்லை.

''அவளுக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்க்கிறார்கள்; அப்படி ஏதும் அவளுக்குத் திருமணம் என்று ஆகிவிட் டால், அப்புறம் நான் உயிரோடு இருக்க மாட்டேன்! 'பிளக்'கில் கை வைத்துச் செத்துவிடுவேன்!'' என்று தாயாரி டம் வந்து அழுதான்.

அப்புறம் என்ன?

சந்தியா வீட்டு மருமகள் ஆனாள்.

சந்தியாவுக்குக் கொஞ்சம் அலங்காரத்தில் நாட்டம் உண்டு. கொஞ்சம் தன்னலம் உண்டு. கொஞ்சம் பிடிவாத மும் உண்டு.

ஆனால் இதெல்லாம் இல்லாமல் யார் இருக்கிறார்கள்? அத்தோடு ஓரளவேனும் அதெல்லாம் இருந்தால்தான் இன்றைய உலகில் பிழைக்கவும் முடியும்? மேலும், அண்ணி அண்ணி என்று காலைச் சுற்றிய குழந்தை மானசாவை, அவள் ரொம்பத் தூக்கிக் கொஞ்சா விட்டாலும், முகம் சுளித்து விரட்டவும் இல்லை.

ஈசுவரிக்கு அதுவே போதுமானதாக இருந்தது.

வந்த மறு ஆண்டே, சந்தியா அர்ச்சனாவைப் பெற்றெடுத்து எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுத்தாள். மூன்று ஆண்டுகள் கழித்து, பையன் பிறந்து, அவனுக்குத் தாத்தாவின் பெயராய் சிவலிங்கம் என்று வைத்து, 'சிவா' என்று அழைக்கவும் பெரியவர்கள இருவருக்கும் உச்சி குளிர்ந்து விட்டது.

சிவலிங்கத்தின் தொழில் லேவாதேவி கொடுக்கல் வாங்கல். மனச்சாட்சிக்குப் பயப்பட்ட மனிதர் என்பதால் சமயத்தைப் பயன்படுத்தி அதிக வட்டி வாங்குவது இல்லை. மெய்யாகவே நட்டப்பட்டு வருகிறவர்களிடம் சற்று நீக்குப் போக்காகவும் நடந்து கொள்வார். சற்று ஏமாந்தால் முதலுக்கு மோசமாகி விடும் என்பதால் கவனத்துடன் தொழிலை நடத்தியவர், மகனையும் அப்படியே பழக்கினார்.

தொழிலைப் பொறுத்த வரை மகனும் தேறிவிட்டான் என்று மனைவியிடம் அவ்வப்போது அவர் கூறியதுண்டு.

ஆயினும், தாயும் பிள்ளையும் என்றாலும், வாயும் வயிறும் வேறு வேறுதான் என்று, மகன் குடும்பத்தைக் கூட அவர் தனிவீட்டில்தான் வைத்திருந்தார். லீவு நாட்களில் மகன் குடும்பத்தோடு இங்கு வந்துவிட, வீடு கோலாகலமாக இருக்கும்.

இப்போதுதான் - லிங்கத்தின் மறைவுக்குப் பிறகு தான், தாயையும் தங்கையையும் தனியே விட முடியாமல் குடியிருந்த வீட்டைக் காலி பண்ணிவிட்டு, கதிரேசன் குடும்பத்தோடு இங்கே இருப்பது.

பேத்தி, பேரனின் பேச்சுக் குரலும், சிரிப்புச் சத்தமும் ஈசுவரிக்குப் பெருத்த ஆறுதலை அளித்தன. மகள் மானசா வுக்கும் கிட்டத்தட்ட அதே வயதுதான் என்றாலும் பெரிய வர்களோடு தனித்து வளர்ந்ததாலோ என்னவோ, அவள் குரல் அதிகம் கேட்காது.

இப்படி, ஒருவாறு ஈசுவரி தேறிவந்த நேரத்தில்தான் பேத்தி அர்ச்சனாவின் விசேஷம் வந்தது. ஈசுவரியின் மனமும் மகிழ்ச்சியுற்றது.

மகன், மருமகளோடு கடைசிநாள் புட்டு சுற்று விழா பற்றிக் கலந்து பேசினாள்.

அவர்கள் சமூகத்தில், இந்த விழாவை மிகவும் பெரிதா கக் கொண்டாடுவார்கள். தாய் மாமன் வீட்டிலிருந்து சீர் கொண்டு வருவதும், பெண்ணின் வீட்டில் ஊரை அழைத்து விருந்து கொடுப்பதும், வாணவேடிக்கையும், கச்சேரி, பந் தல் அலங்காரங்களுமாக ஒரு திருமணம் போல நடக்கும்.

ஒரே ஒரு வேறுபாடு, விருந்துகளில் சைவத்தோடு, அசைவமும் இருக்கும்.

மானுவுக்குச் செய்தது போலச் செய் என்று சுருக்கமா கச் சொல்லி முடித்து விடமுடியாமல், மானசாவின் விழா வின்போது, கதிரேசனின் குடும்பம் ஊரில் இல்லை.

சந்தியாவுடைய கடைசித் தம்பியின் திருமணம் என்ப தோடு, விடுமுறை நாளாகவும் இருக்கவே அந்தக் குடும்பம் ஏற்கனவே சந்தியாவுடைய பெற்றோர் வசித்த பம்பாய்க்குச் சென்றுவிட்டிருந்தது.

பிறந்த வீடு சென்றால் எப்போதும் சந்தியாவுக்குத் திரும்ப மனமே வராது. தம்பியுடைய திருமணத்தைச் காரணமாகக் கொண்டு, மற்ற சகோதர சகோதரிகளும் சேர்ந்து வந்திருக்கவே, ''இதென்ன, திருமண வைபவமா? நீங்களே ஏதோ செய்து விடுங்கள், அத்தை! இங்கே கிளம்ப வசதிப்படாது'' என்று மாமியாரிடம் டெலிஃபோனிலேயே சொல்லி முடித்து விட்டாள் அவள்.

மருமகளை அதட்டி, மிரட்டியோ மகனிடம் கோள் மூட்டியோ அறியாத ஈசுவரிக்கு உள்ளூர வருத்தம்தான் என்றாலும் பேசாமல் இருந்து விட்டாள்.

எனவே, இப்போது ஒவ்வொன்றையும் அவளே கூற வேண்டியிருந்தது.

ஒரு நாள், பாங்கிற்குச் சென்று நகைகளைப் எடுத்து வந்தாள்.

நகைகளைப் பார்த்து விட்டு, ''நம் வீட்டில் இவ்வளவு நகைகள் இருக்கிறதென்று எனக்குத் தெரியவே தெரியாது அத்தை!'' என்று சந்தியா மிகவும் வியந்தாள்.

''ஆமாம், அம்மா. பொதுவாக வெளியே எடுப்பதே இல்லையல்லவா? எல்லாம் பெரிய பெரிய கல் நகைகள்; பழைய மாடல் வேறு. இது போல விழா சமயம் பெண் ணாய் உட்காரும் போது மட்டும்தான் அணிய முடியும். மானசாவுக்குப் போட்டு விட்டேன்... அப்போது நீ இங்கே இல்லையல்லவா? மற்றபடி இவ்வளவு பெரிய வைர நகைகள் இப்போது யார் அணிகிறார்கள் சொல்லு'' என் றாள் மாமியார்.

''அணியாததற்குச் செய்வானேன், அத்தை?'' என்று அந்த முப்பது பவுன் ஒட்டியாணத்தின் வைர முகப்பை வருடிப் பார்த்தபடியே சந்தியா வினவினாள்.

''இவை இங்கே செய்ததில்லை, சந்தியா. என் பெற் றோர் ரொம்பவும் செல்வாக்காக இருந்து கெட்டவர்கள். ஒரே பெண் நான். குடும்ப நகைகளை மட்டும் அப்படியே தந்து விட்டார்கள். நானோ, என் திருமணத்தின் போதும், அடுத்து வளைகாப்பின் போதும் மட்டுமே அணிந்தது. சும்மா அணியத்தான் உன் .மாமா வாங்கித் தந்திருக்கி றாரே... இந்தக் கெம்பும் மரகதமும், வைரமுமாய், இதுவும் செட்தான். வைர செட்டை அர்ச்சனாவுக்கு அணிந்து விட்டு, அடுத்ததை மானசாவுக்குப் போட்டு விடலாம் என்று எடுத்து வந்தேன்... என்று வெள்ளையாய் விவரித் தாள் ஈசுவரி.

அப்படி அணிவித்த நகைகளில்தான் நெற்றிச் சுட்டி எங்கோ தொங்குவதாக அர்ச்சனா அத்தை மானசாவிடம் முறையிட்டது.

வெகு கவனத்துடன் நோக்கி விட்டு நூலிழை விலகியி ருந்த சுட்டியை நேராக இழுத்து வைத்து 'ஹேர்பின்' குத்தி விட்டாள் மானசா.

''அட.. அடடா' அழகான அலங்காரம் செய்து வைத்த தைக் கலைத்துக் கொண்டு இருக்கிறாயே! ஆனாலும் இந்தக் கெட்ட புத்தி உனக்கு ஆகாதடி!'' என்று கூறியபடியே உள்ளே வந்தாள் மீனாட்சியம்மாள் சந்தியாவுடைய அன்னை.

''இல்லை, பாட்டி. நான் சரியாகத்தான் வைத்து விட் டேன்'' என்று பதிலளித்த மானசாவை அவள் கண்டு கொள்வதாகவே இல்லை.

அர்ச்சனாக் கண்ணு கண்ணுக்கு லட்சணமாய், அவளை விட அழகாக இருக்கிறாள் என்று மானசாவுக்குப் பொறாமையாம். அதனால் அலங்காரத்தைக் கோரமாக்கிக் கெடுக்கப் பார்க்கிறாளாம்.

''இல்லவே இல்லை பாட்டி... என்று மறுக்க முனைந்த மானசாவுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டு, வாயில் வார்த்தைக்கு முன் கண்ணில் கண்ணீர் தான் வந்தது.

இந்தப் பாட்டி எப்போதுமே இப்படி அநியாயமாகத் தான் பேசுவாள். பார்க்கும்போதெல்லாம், 'இதுவேறு தலைச்சுமை! எவ்வளவு செலவு இழுத்து வைக்கப் போகிற தோ' என்று ஒன்றுமே புரியாமல் ஏதேதோ புலம்புவாள். அதற்காகவே, அண்ணன் வீட்டுக்கு இந்தப் பாட்டி வரும் சமயங்களில், மானசா அங்கே போகவே மாட்டாள்.

இப்போதும், இவளிடம் பேசிப் பயன் இல்லை என் பதை உணர்ந்து, அண்ணன் மகளிடம் திரும்பினாள். ''ஆர்ச்சி, நீயே பாட்டிக்குச் சொல்! நீ சொல்லித்தானே நான் நெற்றிச் சுட்டியைச் சரி செய்தேன்? அதுவும் கோணலாக இருந்ததை மாற்றிச் சரியாகத்தானே வைத்தேன்? சொல்லு அவர்களிடம்...'' என்று வேண்டினாள்.

ஆனால், அவளுடைய அண்ணன் மகள் அவள் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கவே இல்லை!

தன் வட்டக் கண்களை அகல விரித்தாள் அவள். ''நிஜமாகவா பாட்டி? நான் அத்தையை விட ரொம்ப அழகாகவா இருக்கிறேன்?!'' என்று, எழில் என்று அவள் எண்ணிய விதத்தில் உடலை முறுக்கி, தலையைச் சரித்து, இமைகளைப் பட படவென்று கொட்டியவாறே வினவினாள்.



மீனாட்சிக்கு அர்ச்சனா முதல் பேத்தி. முதல் மகளுடைய முதல் மகள். அந்த வகையில் பேத்தியிடம் இயல்பான பாசமும் உண்டு.

கூடவே, அவளது வீட்டு நிலைமைக்கு, மகள் புளியம் கொம்பாகப் பிடித்து விட்டாள் என்பதும் உண்டு. தாயார் இங்கே வரும் போதும், மகள் அங்கே தாய் வீட்டுக்கு செல்லும் போதும் மீனாட்சிக்கு நிச்சயமாக இரண்டு சேலை வருமானம் உண்டு. கூடவே கொசுறாக பம்பாயில் விலை அதிகம் என்று இங்கிருந்து பாத்திரம் பண்டமாகவும் மூட் டைக் கட்டுவாள். பணம் கொடுப்பதைச் சந்தியா பார்த்துக் கொள்வாள். அதேபோல, சந்தியா தாய்வீடு செல்லும் போதும், கைநிறையப் பணம் கொண்டுபோய் நன்றாகச் செலவு செய்வாள்.

இதனாலேயே, தாய் வீட்டில் சந்தியாவுக்கு ராஜமரி யாதை உண்டு. 'அங்கே உழைத்து ஓடானது போதும்; இங்காவது நன்றாக ஓய்வு எடு' என்று இருக்கும் இடம் தேடி வந்து உணவு கொடுப்பார்கள். நாலு மடங்காக இவளும் எல்லோருக்கும் வாங்கிக் கொடுப்பாள்.

மருமகளின் விஷயங்களில் ஈசுவரி தலையிடுவதோ தடுப்பதோ கிடையாது என்பதால் எல்லாமே தடையற்று நடந்தது.

இப்படியே இருந்து விட்டிருக்கலாம்.

ஆனால், மகளுக்குத் தன்மீதும், தன் வீட்டினர் மீதும் உள்ள பிடிப்பை நிலை நிறுத்திக் கொள்ளவும் பெருக்கிக்

கொள்ளவும் விரும்பி, மீனாட்சி அடிக்கடி இச்சகம் பேசுவாள். கூடவே புகுந்த வீட்டில் மக்களுக்குச் சரியான கவனிப்பு இல்லை என்பது போலவும் பேசுவாள். அங்கே வெறுத்தால் மகள் இங்கே தான் சாய்வாள் என்கிற எண்ணம்.

இதனால் மகளுடைய குடும்பத்தில் அமைதி கெடுமோ என்றால், அதைப் பற்றி அந்த அம்மாளுக்கு அக்கறையே கிடையாது.

நல்லவேளையாக, ஈசுவரியின் இயல்பு பெரும்பாலும் விட்டுக் கொடுப்பதும், ஒதுங்கிப் போவதுமாக இருந்ததால், தாயின் போதனையில் சில சமயங்களில் சுள்ளென்று பேசினாலும் கூட, அது பெரிதாகாமலேயே மறைந்தது.

இருகை தட்டினால்தானே ஓசை?

எனவே சந்தியாவுக்கும், சண்டையிட வாய்ப்போ, அவசியமோ இல்லாமலேயே போயிற்று. அத்தோடு அவளுடைய குடும்பம் தனியாக இருந்தது வேறு, எதற்கும் மாமியாரும் மருமகளும் எதிர்ப்படுகிற நிலைமை இல்லாமலும் ஆயிற்று.

இப்போதுதான், முதல் தடவையாக, மாமியாரோடு சேர்ந்து இருக்கும்போது சந்தியாவுடைய பிறந்த வீட்டாரும் அங்கேயே வந்து தங்கும்படி நேர்ந்திருக்கிறது.

பெண்ணின் பதிமூன்று வயதுக்கும் பதினாறு வயதுக்கும் இடையே பெருமளவு வேறுபாடு உண்டு. கூடவே, தாய் தந்தையின் நல்ல அம்சங்களை மட்டுமே கொண்டு பிறந்து, குறையற்று வளர்ந்திருப்பவள் மானசா. இதழ் விரிந்து மணம் பரப்பும் நிலையில் இருந்த புதுப்பூ அவள்.

மொட்டுப் பருவத்தில் இருந்ததோடு, பெற்றவரின் ஓரளவு சாதாரணமான ஜாடையில் இருந்த அர்ச்சனாவால் மானசாவின் அருகில் நிற்க முடியாதுதான்.

ஆனால், தன் இச்சகப் பேச்சைப் பேத்தியிடமும் காட்டி, விரல்களால் பேத்தியின் கன்னங்களை வருடி நெட்டி முறித்தாள் மீனாட்சி. படபடவென்று சொடுக்கு விழவும், ''பாரேன், எவ்வளவு கண் விழுந்திருக்கிறது! இதுவே சொல்கிறதே! நீ அவளை விட அழகான பெண் என்று!'' என்றாள் வாய் கூசாமல்.

அத்தோடு நில்லாமல் தொடர்ந்து, ''அதனால்தான் கண்ட கண்ட பேருக்கெல்லாம் உன்னைக் கண்டால் ஆக வில்லை. நன்றாய் இருக்கிற முகத்தைக் கெடுக்கப் பார்க்கிற துகள்.. நீ என்னிடம் காட்டு, செல்லம், இவள் என்ன பண்ணி வைத்திருக்கிறாள் என்று பார்க்கிறேன்... என்று அந்த அம்மாள் கொஞ்ச, ''ஆமாம், பாட்டி. எனக்கு நீங்களே எல்லாம் சரி பண்ணி விடுங்கள், பாட்டி'' என்று அர்ச்சனா செல்லம் கொண்டாட, கனத்த மனதோடு மானசா அங்கிருந்து அகன்றாள்.

செல்லும் போதே அவள் உள்ளம் பொறுமியது. 'அர்ச்சனா அவள் பாட்டியிடம் பிரியமாய் இருப்பதை நான் வேண்டாம் என்றேனா? எனக்கு வேண்டியதெல்லாம், கூடப் பிறவாத சகோதரியாக வளர்ந்த 'ஆர்ச்சி'யின் அன்பு தானே! அதைக்கூடக் கெடுக்கப் பார்க்கிறார்களே! இவர்க ளுக்கு நான் ஒருநாளும் ஒரு கெடுதலும் செய்ததில்லை யே!' என்று ஏங்கினாள்.

இப்படி மானசா ஏங்குவது, இது முதல் தடவை அல்ல. அர்ச்சனாவுக்கு வைபவம் என்று இந்தப் பாட்டி வந்து, இந்த இரு வாரங்களில் பலமுறை நேர்ந்து விட்டதுதான்.

இதில் அவள் மனதை மிகவும் நோகடித்தது, அர்ச்சனா வின் நடத்தைதான். அத்தை, அத்தை என்று பிரியமாய்க் கூடவே சுற்றுகிறவள், பாட்டி இப்படி ஏதாவது சொல்லி விட்டால் ஆளே மாறிவிடுவாள். ''உன்னோடு பேசமாட் டேன் போ!'' என்று மானசாவை விரட்டுவாள்.

ஆனால், இதையெல்லாம் எடுத்துக் கொண்டு மானசா, தன் தாயிடம் செல்வது கிடையாது. ஒரு காரணம், சிறு வயதிலிருந்தே அவள் வளர்ந்த முறை. 'அம்மா அவ்வள வாக உடல் நலம் இல்லாதவள்; அவளுக்கு முடிந்த அளவு உதவ வேண்டுமே தவிர, உபத்திரவம் செய்யக் கூடாது' என்ற எண்ணத்துடனேயே அவள் வளர்க்கப்பட்டிருந்த தால், இதுபோன்ற தகராறுகளைத் தாயிடம் சொல்லி அவள் மனதை வருத்த மகளுக்கு மனம் வரவில்லை.

அத்தோடு, யாரையும் பற்றிக் குறைவாகப் பேசி னாலே ஈசுவரிக்குப் பிடிக்காது. 'உன் மனதில் குறைபாடு இருந்தால்தான், மற்றவர்களிடம் இருக்கும் குறை உன் கண்ணுக்குப் புலப்படும்' என்று சாரதாமணி அன்னை சொல்லி இருப்பதாக அவ்வப்போதுகூறுவாள். கோள் உரைப்பது மிகவும் கெட்ட குணம்; அதனால்தான் பல குடும்பங்கள் கலைந்து விடுகின்றன என்பது அவளது அபிப்பிராயம். வேலைக்காரர்கள் கூட ஒருவரைப் பற்றி ஒருவர் புகார் சொன்னால் காது கொடுத்துக் கேட்கமாட் டாள். ஒரு தரம், சந்தியாவைப் பற்றி ஒரு வேலையாள் ஏதோ சொன்னான் என்பதற்காக ரொம்பவும் திட்டினாள். இன்னொரு தரம் இப்படிப் பேசினால் வேலையைவிட்டு நிறுத்தி விடுவதாகக் கூட மிரட்டினாள்.

இவை அனைத்தையும் விடவும், தந்தையின் மறைவி லிருந்து, இப்போதுதான் மீளத் தொடங்கியிருக்கும் அன் னைக்கு, எந்தவிதமான சஞ்சலங்களையும் கொடுக்க மான சாவுக்கு மனம் இல்லாத்தினாலேயே, இந்த வருத்தங்களை எல்லாம் அவள் தன்னுள்ளேயே வைத்துக் கொண்டாள்.

அப்போதும் கூட தாங்கமாட்டாமல் ஒருதரம், 'இந்தப் பாட்டி என்னைக் கண்டாலே கரித்துக் கொட்டுகிறார்கள், அர்ச்சனா மனதையும் கெடுக்கிறார்களம்மா' என்று சொல்லி விட எண்ணி தாயின் அறை வரை மானசா சென்று விட்டாள்.

ஆனால், அவள் முகத்திலிருந்தே அவள் மனதைப் படித்து விட்டவள் போல, மானசாவோடு கூட மீனாட்சியும் ஈசுவரியின் அறைக்குள் சென்று, ''எப்படி இருக்கிறீர்கள், அண்ணி?'' என்று குசலம் விசாரித்து, ''உண்டீர்களா, உறங்கினீர்களா'' என்று உருகி; ''அண்ணா இல்லையே, அண்ணி... என்று கண்ணீர் விட்டு அவளைக் குழைய டித்து விட்டாள்.

கூடவே, ''மானசா மாதிரி அழகா[redacted]துணசாலியான பெண்ணைப் பெற நீங்கள் கொடுக்[redacted]வத்திருக்க வேண் டும் அண்ணி. அவளுக்குக் கூந்த[redacted]வ்வளவு அடர்த்தி யாக என்ன தைலம் தேய்த்தீர்கள்? வாடி, பின்னிவிடுகி றேன் என்றால் அப்..படிக் கூச்சப் படுகிறாளே[redacted]வரவே மாட்டேன் என்று விட்டாளே!'' என்று அவளையே கொஞ் சம் தூக்கிவைத்துப் பேசவும், என்ன சொல்வது என்றே புரியாமல் மானசாவுக்கு வாயடைத்துப் போயிற்று.[redacted]

ஈசுவரிக்கும் உச்சி குளிர்ந்து விட, ''வெறும் தேங்காய் எண்ணெய்தான் அண்ணி. சுத்தமாய் வீட்டிலேயே காய்ச்சி யது'' என்று சம்பந்தியின் தைலக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, ''மானசாவுக்குச் சின்ன வயதிலேயே தலை வாரக் கற்றுக் கொடுத்து விட்டேன் அண்ணி. நாம்தான் இப்படி இருக்கிறோம். திடுமென எதுவும் நேர்ந்து விட் டால், தலைகூட வாரத் தெரியாமல் பரட்டைத் தலையாக நிற்கக் கூடாது பாருங்கள்... நான் போவேன் என்று நினைத்தேன். கடைசியில் அவர் என்னை முந்திக் கொண்டு... என்று, மேலே பேச மாட்டாமல் கண்ணீருகுத் தாள்.

பார்த்துக் கொண்டே நின்ற மானசாவுக்கும் அழுகை வந்துவிட்டது.

அதன் பிறகு, தன் வேதனையை அவள், தாயிடம் காட்டியதே இல்லை. ஏதோ குறை என்று ஊகிக்க இடம் கொடுப்பது கூட இல்லை.

ஆனால் எப்போதும் சலுகை காட்டும் தந்தையின் இழப்பை முன் எப்போதையும் விட மிகுதியாக உணர்ந்து, உள்ளூர வேதனைப்பட்டாள்.

அன்றும் [redacted] தேபோல மனம் நொந்தாள். அந்த நோவையும் யாரும் கண்டுவிடாமல் காப்பதற்காகத் தனியி டம் நாடிப்போனா[redacted]

ஆனால், அப்படி ஒதுங்கியிருக்கவும் முடியாமல், ''எங்கே மானசா? அர்ச்சனா மேடைக்குப் போகவேண்டும். கூடப் போய் நிற்க வேண்டாம்'' என்று தேடிவர, அவசர அவசரமாக முகத்தைச் சீர் செய்து கொண்டு, அண்ணன் மகளின் அருகே சென்று நின்றாள்.

சற்று நேரத்தில், உற்றார் உறவினர் எல்லோரும் வந்து சேர, சடங்குகளும், விருந்தும் சிறப்பாக நிறைவேறின.

கதிரேசன் மகளுக்கு நல்ல விலை கொடுத்து, சிறப்பா கச் சேலை வாங்கியிருந்தான். உடம்பெங்கும் மெல்லிய பொடிச் சரிகைக் கட்டங்களுடன், நீள முந்தானையிலும், கெட்டிக் கரையிலும் ஜரிகை பளபளத்தது.

மாமன் வீட்டுச் சீராக வந்த சேலையில் சற்றுப் பளப ளப்பு அதிகமாகவே இருந்தது. செலவில் பாதி சந்தியாவின் பங்கும் இருந்ததால், 'டிஷ்யூ' சேலையே வாங்கியிருந்தனர்.

சினிமா நடிகைகளுக்கு ஒப்பனை செய்யும் ஒரு பெண்ணை அலங்காரம் செய்வதற்கென்றே வருவித்திருந்த னர்.

அவளது ஒப்பனையின் விளைவாகவும், சேலை கட்டி விட்ட பாங்காலும் அர்ச்சனா ஆண்டு மூத்தவளாய், அழகா கவே தோன்றினாள். பளபளப்பாய்த் தங்க நிறம் கலந்த

'ஐ ஷேடோ', நெற்றியில் கல் இழைத்த பொட்டு, கன்னங்களில் ஜிகினாத்தூள், உதடுகளில் 'லிப்ஸ் க்ளாஸ்' என்று அலங்காரங்களோடு, வீடியோவுக்காக அதிகப்படியான ஒளி விளக்குகளும் சேர்ந்து கொள்ள அர்ச்சனா ஒளியே உருவாய் விளங்கினாள். அவள் அணிந்திருந்த வைரங்கள் வேறு ஒளியை வாரி இறைத்தன.

இவ்வளவு அலங்காரம் செய்த பெண்மணி, நெற்றிச் சுட்டியையும் 'நேராக வைத்து விட்டிருந்தால் எனக்கு இந்த மனவேதனை நேர்ந்திராதே என்று எண்ணினாள் மானசா.

எல்லாம் சற்று நேரம்தான்.

அவளும் சிறு பெண்தானே. வேடிக்கை விநோதங்களில் அந்த வருத்தம் மறந்து விட்டது. அர்ச்சனாவும் அதே போலச் சற்றுமுன் பேசியதை மறந்து எதையோ சொல்லிச் சிரிக்க, மானசாவும் அதில் கலந்து கொண்டாள்.

மகளையும் பேத்தியையும் ஜன்னல் திரையில் பின்னிருந்து பார்த்த ஈசுவரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்து மகிழக் கணவர் இல்லையே என்ற எண்ணம் ஓயாதுதோன்றி அவள் விழிகளில் நீர் பெருகச் செய்து கொண்டே இருக்கவும், தன் கண்ணீரால் மற்றவர் மகிழ்ச்சி கெட்டுவிடக் கூடாது என்று எண்ணி, அங்கங்கே மறைந்து நின்று பேத்தியைக் கண்டு மகிழ்ந்தது தவிர, ஈசுவரி விழாக் கோலங்களில் இருந்து முடிந்த அளவு ஒதுங்கியே இருந்தாள்.

இப்படி ஒதுங்கி, மறைந்து நின்றதே, அவளை ஒரு பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

அப்போதும் இப்படித்தான் பேத்தியைப் பார்த்து ரசித்துவிட்டு, தோட்டத்தில் குத்துச் செடி ஒன்றின் பின்னே அமர்ந்து கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

பின்னே அவள் இருப்பதை அறியாமல் தாயும் பெண்ணுமாக சந்தியாவும், அவளுடைய தாயாரும் அங்கே வந்து, முன்புறமாய் மேடையைப் பார்த்தவாறே அமர்ந்தனர்.

கொஞ்ச நேரம் உட்கார் கண்ணு. காலையில இருந்து வேலை வேலை என்று உன்கால் கடுத்திருக்கும்... உன் தலையெழுத்து! ஏந்திச் செய்கிற மாமியாரையா படைத்திருக்கிறாய்! ஊ...ம்!'' என்று பெருமூச்சு விட்டவள், மகளின் கவனம் அவள் பெண்ணிடத்தில் இருப்பதைக் கண்டு, ''இப்படித் தூர இருந்து பார்த்தால் கூட இப்படி ஜொலிக்குதே! அர்ச்சனா போட்டிருப்பது ஏகப்பட்ட விலை இருக்குமோ?'' என்று மகளிடம் வினவினாள்.

''ஆமாம் அம்மா. இன்றைய விலைக்கு சுமார் முப்பது லட்சம் பெறும் என்று அவர் சொன்னார். என் நாத்தனார் அணிந்திருப்பதும் ஒன்றும் மட்டமில்லை! அதுவும் ஒரு லட்சம் பெறுமாம்!'' என்று பெருமையுடன் உரைத்தவள், ஒரு சிறு அமைதியின்பின், ''ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், ''ஆர்ச்சி திருமணத்துக்கு இதுவே போதும்'' என்று திருப்தியோடு கூறி பின்புறம் இருந்த் மாமியாரை அதிரவைத்தாள்.

மீனாட்சிக்கும் அது அதிர்ச்சிதான் போலும். ''அடியடி சத்தமாய்ப் பேசாதே. யார் காதிலேயாவது விழப் போகிறது... ஆமாம், நீபாட்டில் பெரிதாக மனசுல கோட்டை கட்டுகிறாயே! உன் மாமியார் விடுவார்களா? தன் பெண்ணுக்கு வேண்டும் என்று...

''அவர்கள் யார் விடுவதற்கும் விடாமல் இருப்பதற்கும்? மானசா, தகப்பன் இல்லாத பெண். அவளுக்கு ஓர் ஐம்பது அறுபது பவுன் போட்டு ஏதோ, கிடைத்தவன் தலையில் கட்டி திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் அதுவே பெரிது!'' என்றாள் மகள் வெகு அலட்சியமாக.

''ஆனால் உன் மாமியார்.. அவர்களிடம் இப்போதே நகைகளைத் திருப்பிக் கொடுக்கப் போவது இல்லையா?'' என்று சுவாரசியத்துடன் வம்பு தேடினாள் மீனாட்சி.

''அய்யா! அம்மா! அம்மா! உனக்குப் புத்தியே இல்லையே! இப்போதே நகைகளை வைத்துக் கொண்டால், கிழவி சந்தேகப்படமாட்டாளா? அதைப் பற்றி, ஒன்றுமே இல்லை போல, அத்தனையையும் கொடுத்துவிட வேண்டும். பிறகு... தொழிலில் அந்தம்மா பங்குகளை நகாசாக வாங்கி விடவில்லையா? அதேபோல, வாழைப் பழத்தில் ஊசி இறக்குகிற மாதிரி நடந்து கொள்ள வேண்டும். அத்தோடு... இன்னொன்று அம்மா! கிழவிக்கு இருதயம் எப்போது நிற்கும் என்றே தெரியாது. டாக்டர் கூட ஆறு மாதங்கள் கெடுக் கொடுத்து விட்டார். அந்தம்மா போன பிறகு இந்த நகைகளை இவள் கண்ணில் யார் காட்டப் போகிறார்கள்? ஏதோ, அந்தக் கழுதைக்குக் கல்யாணம் செய்வதே பெரிது. அதற்கு மேல் நக்கைகிகை என்று வாயைத் திறந்தால், திறந்த வாயைத் தைத்து, அனாதையாய் அடித்து விரட்டி விடுவேன்'' என்றாள் அதிகாரக் குரலில் அழுத்தத்தோடு..

''என்ன, அம்மாவும் பொண்ணும் ஆசுவாசமாய் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டீர்கள்! அங்கே பரிசுப் பொருட்களை எடுத்து வைக்க வேண்டும் என்று அத்தான் கத்துகிறார்... என்று சில காலடி ஓசைகளை அடுத்து, சந்தியாவுடைய தம்பியின் குரல் கேட்கவும் மீனாட்சியும் சந்தியாவும் எழுந்து சென்றனர்.

சில வினாடிகள் பொறுத்து, ''ஊ...ம், இவ்வளவு நகை இங்கே இருக்கிறது! லீவுக்கு என்று வந்தால் ஒரு மாதம் அசையாமல் இருந்து கொட்டிக் கொள்கிறாளே, உங்கள் அக்கா! 'இந்தா வைத்துக் கொள்' என்று! ஒரு வைரத் தோடு ஒரு மோதிரம் என்று ஏதேனும் தருகிறாளா?'' என்று அசூயை கொண்ட பெண்குரலும், ''சரி சரி, உரக்கப் பேசாதே வருவதும் கெட்டுவிடப் போகிறது'' என்ற ஆண்

குரலும், அடுத்து இருவரும் செல்லும் அரவமும் கேட்க, அதன்பிறகே ஈசுவரிக்கு அங்கிருந்து நகர முடிந்தது. மெல்ல நகர்ந்து, பெரும் சிரமத்துடன் அவளது அறையை அடைந்து படுக்கையில் விழ முடிந்தது.

அவளுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. கழுதையா? அவள் மகளா? அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதே பெரிதாமா? அதுவும் ஐம்பது அறுபது பவுன் போட்டு, அகப்பட்டவன் தலையில் கட்டுவதா? சொல்வது, அவளுக்குப் பின் பொறுப்பேற்றுச் செய்வாள் என்று நினைத்திருந்த அவளுடைய மருமகளா?

ஈசுவரியின் நெஞ்சு படீர் படீர் என்று பலமாக அடித்துக் கொண்டது. தலையிலிருந்து கால் வரை வியர்த்துக் கொட்டியது. இப்போதே இறந்து விடுவோமோ என்று கூடப் பயம் வந்தது.

சாவதற்கு அவள் பயப்படவில்லை. பல ஆண்டுகளாகவே, தன்னை அதற்குத் தயார் படுத்திக் கொண்டவளும் கூட. ஆனால் இன்று திடீரென்று இறந்து விட்டால், அவளுடைய அருமை மகளின் கதி என்ன ஆகும்?

அதைத்தான் சந்தியா தெளிவாகப் பிட்டுப்பிட்டு வைத்தாளே!

மருமகள் அவளைக் கிழவி என்றதோ, அவளது மரணம் பற்றி அலட்சியமாகப் பேசியதோ ஈசுவரியை அதிகம் வருத்தவில்லை. அவள் மெய்யைத்தான் சொன்னாள்; கொஞ்சம் அநாகரிகமாகச் சொன்னாளே தவிர, சந்தியா சொன்னது உண்மையைத்தான்.

ஆனால் மானசா? அவள் இவளை என்ன செய்தாள்? அண்ணி, அண்ணி என்று...

ஏதேதோ எண்ணி வருந்தத் தொடங்கிய மனதிற்குக் கடிவாளம் இட்டு நிறுத்தினாள் ஈசுவரி. இது பழங்கணக்குப்

பார்க்கிற நேரமில்லை. யோசித்து முடிவு செய்ய வேண்டிய நேரம்!

மறுநாள் முழுவதும் படுக்கையில் இருந்து, தெம்பைத் திரட்டிக் கொண்டு, அதற்கு அடுத்த நாள் 'லாக்'கரில் நகைகளை வைத்து விட்டுக் கொஞ்சம் கடைகண்ணிக்குப் போய் வருவதாகச் சொல்லி விட்டு கிளம்பிய ஈசுவரி திரும்பி வர வெகு நேரம் ஆயிற்று. ஆனால், அவளுக்காக மகள் தவிர யாரும் காத்திராததால் அதை மானசா தவிர யாரும் அறியவில்லை.

அன்றிலிருந்து, தினமும் மகளை அருகே அமர்த்தி, அன்பாகத் தடவிக் கொடுத்தாள்; பல புத்திமதிகளும் உரைத்தாள்.

இரு வாரங்களில் இறந்தும் போனாள்.

தாயாரின் கடைசிக் காரியங்களையும் கதிரேசன் வெகு சிறப்பாகச் செய்தான். சந்தியாவும் ஒத்துழைத்தாள்.

பத்தாம் நாள் வக்கீல் வந்தார். ஈசுவரியின்உயில் என்று ஒன்றைப் படித்தார்.

அதில், தொழிலில் தன் பங்குகளை மகனுக்குக் கொடுத்து விட்டதால் அதன் மீது மகளுக்கு உரிமை இல்லை என்று எழுதியவள், தன் சொந்த நகைகள் அனைத்தும் மகளுக்கே சொந்தம் என்றும், அவள் சிறு பெண் என்பதால் அந்த நகைகளைப் பாதுகாத்து அவளது திருமணத்தின் போது அவளிடம் அளிக்கும் பொறுப்பு வக்கீலது என்றும் எழுதி லாக்கர் சாவியையும் வக்கீல் வசமே ஒப்புவித்திருந் தாள்.

உயிலை வக்கீல் படித்து முடித்ததும், சந்தியா தன் நாத்தனாரைப் பார்த்த பார்வையில் பரிபூரண வெறுப்பு இருந்தது. முழுமையான குரோதமும் இருந்தது. வன்மமும் இருந்தது.

அந்த ஓட்டலுக்கு ஐந்து நட்சத்திரத் தகுதி இல்லை என்பதை அறிய சசிசேகரனுக்குச் சற்று வியப்பாய்தான் இருந்தது. ஏதாவது வெறும் 'டெக்னிகல்' காரணமாக இருக்க வேண்டும். மற்றபடி வசதிகளிலும் அமைப்பிலும் அது ஐந்து நட்சத்திர ஓட்டலை விட மேம்பட்டதாகவே இருந்தது. நல்ல பெரிய அறையும், அறைக்கு அறை கலர் டீவியும், டெலிஃபோனும், மூப்பட்டை கண்ணாடியுடன் டிரஸ்சிங் டேபிளும், மெத்தென்ற படுக்கையும் வெண்ணிறப் போர்வைகளும், சின்ன சிட்-அவுட்டும், குளியல் அறைகள் ஆறடி உயரத்துக்கு நாலு சுவர்களிலும் கூடவே தரையிலும் பதித்திருந்த பிங்க் வண்ணப் பூப்போட்ட வெள்ளை டைல்சும், சுடுநீர், குளிர்நீர்க் குழாய்களும், 'பாத் டப்'பும்... இங்கே அவனுக்கு ஓர் அறை ஏற்பாடு செய்து, பேச அழைக்கும் போது... கிடைக்கும் என்று நம்பத்தான் தோன்றியது. டின்னர் சாப்பிட்டபடி தொழில் விஷயம் பேசுவதும் இயல்புதான்.

ஆனால்... பண விவகாரம் பேசுவதற்கு குடும்பத் தோடு - மனைவி குழந்தைகள் தவிரத் தங்கையோடும் வரப் போவதாகச் சொன்னதுதான் கொஞ்சம் உதைத்தது.

அதிலும், முதல்நாள் டெலிஃபோனிலேயே கிட்டத் தட்ட முடியாது என்று முடித்துவிட்ட மனிதர், மறுநாள் அவராகவே அவனை அழைத்து வரச் சொல்வது என்றால்?

யோசிக்கத் தான் வேண்டும்! ஆனால், பணத்துக்காக வாழ்க்கையைப் பணயம் வைக்கிறவன் இந்த சசிசேகரன் அல்லவே!

அத்தோடு, கடன் கேட்டு வருகிறவனிடமேனும் தள்ளி விடப்பட வேண்டியவள் என்றால், அந்தத் தங்கை எப்படிப் பட்டவளாக இருக்க வேண்டும்?

இதையெல்லாம் யோசிக்கும் போது அதிக நம்பிக்கை வைப்பதும் சரியாகத் தெரியவில்லை.

லாபியில் ஒரு பக்கச் சுவரின் மத்தியில் 'கீதோபதேசக்' காட்சி பெரிதாக வரையப்பட்டிருந்தது. போர்க்களத்தில் இரு புறத்திலுமான வீரர்களும், கொடி பறக்கும் தேர்களும், குதிரை, யானைப் படைகளும் பின்னணியில் தெரிய, காண்டீபனுக்குக் கண்ணபிரான் உபதேசித்துக் கொண்டிருந் தார்.

அழகான கலைநயம் நிரம்பிய படம்தான். ஆனால் சசிசேகரனின் மனம் அதில் பதியவில்லை.

"நீ செய்ததெல்லாம் மடத்தனம்; பிறகு தோற்றுப் போயிற்று என்று புலம்புவதில் என்ன பிரயோசனம்?" என்று யாரோ, யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்ததுதான் காது வழியே கருத்துக்குச் சென்றது.

அப்படி சசிசேகரனின் ஏதாவது ஒரு பிழையினால், ஏதேனும் ஒரு கவனக் குறைவினால் அல்லது ஒரு தப்பு மதிப்பீட்டினால் நட்டப்பட்டிருக்குமானால் ஏதோ ஒரு வகையில் மனம் சமாதானமாகிவிடும். தவறுக்குரிய தண்ட னையை ஏற்பதற்கு அவன் தயங்கியதே கிடையாது.

ஆனால் ஒவ்வொரு சின்ன மூலை முடுக்குகளையும் ஆராய்ந்து, சிறு இணுக்குகூட விடாமல் திட்டமிட்டு, பெரும் சொத்தை விற்று முதலீடு செய்து தொடங்கி, வெற்றிகரமாகவும் இரண்டு ஆண்டுகள் நடத்திய தொழில்!

இந்தச் சிறுவயதிலேயே இவ்வளவு பிரமாதமாய் நடத் திக் காட்டுகிறானே என்று பலர் வியக்கும் வண்ணம் வளர்ந்த வியாபாரம், அண்டை நாட்டைக் கபளீகரம் செய்ய

விரும்பிய அதிகார வர்க்கத்தின் பேராசையினால் அடி யோடு அழிந்து விட்டதே!

ஒரே இரவில் கடல் பொங்கி ஊரை அழித்த மாதிரி, அவனது தொழில் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. உயிர் தப்பியதே அதிசயம்தான்.

இதெல்லாம் அப்பாவுக்குத் தெரிய நேர்ந்திருந்தால் மிகவும் நொந்திருப்பார்! நல்லவேளையாக, மகன் வெற்றி பெற்றுக் கொண்டு இருக்கும்போதே, அந்த திருப்தியுட னேயே அவர் காலம் முடிந்து விட்டது!

தொழில் அழிந்ததை அவனது தவறென்று சொல்ல முடியாது; ஆனால், நஷ்ட ஈட்டுத் தொகை முழுவதாக வரும் என்று இத்தனை காலத்தை விருதாவாகக் கழியவிட் டது ஒருவேளை சசிசேகரனின் பிழையாக இருக்கக் கூடும். இந்த மாதம் வரும் அடுத்த மாதம் வரும் என்று கிட்டத் தட்ட நாலு ஆண்டுகள் காத்திருப்பதிலேயே கழிந்து போயி னவே!

ஆனால், அதையும் தான் பிழையென்று எப்படிக் கூறமுடியும்?

ஒன்றா இரண்டா? ஆயிரமா இரண்டாயிரமா? மூப் பது லட்ச ரூபாய்! இன்றைய மதிப்புக்கு நாற்பது லட்சம்! அது வரக்கூடும் என்கிற வாய்ப்பு இருக்கும் போது அதை எப்படி உதறிவிட்டு வரமுடியும்?

அப்படி வந்து, உடனடியாக வேறு எதையேனும் தொடங்கியிருந்தால் இப்போது தொடங்க முற்படுவது போல முயற்சித்திருந்தால் இந்த நாலு ஆண்டுக் காலம் வீணாகியிராது!

ஆனால் அந்தப் பணம் வரவேவராதென்று அன்று தெரியாது போயிற்றே! அவனுக்கு மட்டுமல்ல; அவனுக்கு

உதவ முயன்ற நண்பர்கள் யாருக்குமே அல்லவா தெரியா மல் போயிற்று!

அவனது கெட்ட நேரமாக, அவனது தொழிற்சாலை தொடர்பான எழுத்து மூலமான ஆதாரங்களும் தொழிற்சா லையோடு சேர்ந்து அழிந்து போய் விடவே, வெறும் வாக்கு மூலத்தை மட்டும் நம்பி எந்தவித உதவியும் செய்வதற்கில்லை என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் முடித் துவிட்டார்கள்!

அப்போதும், 'தோற்றுவிட்டேன் என்று தாயகம் திரும்ப வேண்டாம் சசி. இங்கேயே ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்ளலாம். நாங்கள் அதற்கு ஏற்பாடு செய்ய முடியும்' என்ற நண்பர்களின் பேச்சை அவன் ஒத்துக் கொள்ளவில்லை.

அவனுக்குத் தொழிலில் மோகம். ஒருதரம் தொடங்கி வெற்றிகரமாகவே நடத்திப் பார்த்துவிட்ட படியால் மீண்டும் மனம் அதிலேயே சென்றது.

முதல் தடவை கை முதலுக்கு ஊரில் கிடந்த நிலங்கள் இருந்தன. இப்போது...

அந்த முதல் பணத்துக்காகத்தான் சசிசேகர், ஈசுவரி நிதி உதவி மையத்தை நாடியது.

இதுவரை, பல வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் கேட்டுப் பார்த்து அலுத்ததுதான். எல்லோருமே, பணத் திற்கு ஈடாக எதை அடகு வைக்கிறாய் என்றுதான் கேட்டார் கள்.

ஈட்டுப் பொருளுக்கு எங்கே போவது?

'ஈசுவரி' நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவன் சசிசேகர னுடைய நண்பனுடைய தம்பி "முதலாளியிடம் நேரடியா கக் கேட்டுப் பாருங்கள்" என்றான் அவன்.

ஆளைப் பார்த்ததும் பணம் கொடுப்பாராம் அந்த நிறுவனத்தின் முதலாளி. அப்படித்தான் அவன் சொன்னான்! ஆனால்...

பல்வேறு யோசனைகளுடன் படத்தை வெறித்தவாறு நின்றிருந்தவன், மதிய உணவை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணித் திரும்பத் தொடங்கியவனின் கவனத்தை அந்தப் பெண் ஈர்த்தாள்.

சற்றே மெலிவுற்ற தேகம். அடர்ந்த இமைகளுடன் கூடிய பெரிய விழிகளும், அலையலையாய் இடைவரை தொங்கிய அடர்கூந்தலும் இல்லையென்றால், பத்தோடு பதினொன்று என்று அலட்சியமாய்ச் சென்றுவிடக் கூடிய தோற்றம்தான். அந்த மெல்லிய மேனியை தொள தொளப்பாய் மூடியிருந்த ஆடையும் அப்படி ஒன்றும் அவளை அழகுபடுத்திக் காட்டவில்லைதான். ஆனால் ஒரேயடியாய் ச்சு! என்று ஒதுக்கி விடவும் முடியாது!

ஆகவே அவளது அழகுக்காக என்று சசிசேகரன் அவளைப் பார்க்கவில்லை என்பது நிச்சயம். அவனது பார்வையை அவள் வசம் திருப்பியது அவளது நடவடிக்கையே!

என்ன காரணமோ, 'லிஃப்ட்'ப் பயன்படுத்தாமல், படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தாள் அவள். அதில் பெரிய விசித்திரம் ஒன்றும் இல்லை. பலருக்கு லிஃப்டில் தனியே செல்ல ஒருவித பயம் ஏற்படுவது உண்டு. இவளுக்கும் அந்த அச்சம் இருக்கலாம்.

ஆனால், நேராகப் படியிறங்கி வருவதற்குப் பதிலாக, பாதிப்படி இறங்குவதும், தயங்குவதும், மீண்டும் படியேறி வந்த வழியே செல்வதும், ஒரு புறமாய் அங்கே எட்டிப் பார்ப்பதும், அரைகுறை திருப்தியுடன் மீண்டும் இறங்கி வருவதுமாக மூன்று தரம் தடுமாறியவள், நாலாவது

தடவை ஓர் உறுதியோடு படிகள் முழுவதையும் இறங்கி கீழ்வந்து சேர்ந்தாள்.

அப்போதும் அவளுக்கு ஏதோ சந்தேகம்தான் போலும். திருதிருவெனச் சுற்று முற்றும் விழித்துப் பார்த் தாள்.

அவளது பார்வை, அங்கிருந்த சில பெண்களிடம் வினாடி காலம் கூடத் தயங்காமல், ஆண்கள் அத்தனை பேரையும் வட்டமிடுவதைக் காணவும் அவனுக்குக் கொஞ் சம் வெறுப்பாகிவிட்டது.

அதிலும், மீண்டும் ஒருதரம் மாடிப் பக்கம் கவலை யோடு நோக்கி விட்டுத் திரும்பவும் அவள் பார்வை ஆண்களை நோட்டமிடவும் அவனுக்கு உறுதியே ஆகிவிட் டது.

அறையில் யாரோ; இவளுடைய அசட்டு உறவினர் அது அம்மாவோ, அப்பாவோ - அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்க, அந்த நேரத்தில் இங்கே கொஞ்சம் 'விளை யாடிப் பார்க்க வந்திருக்கிறாள்!' சே! அதுவும் என்ன மாதிரிக் கண்களை வைத்துக் கொண்டு....

ஆனால், எந்தப் பெண் எப்படிப் போனால் அவனுக் கென்ன?

லேசாகத் தோளைக் குலுக்கி, அவளைப் பற்றிய நினைவையும் உலுக்கி உதறிவிட்டு, சாப்பாட்டு அறைப்பக் கம் நோக்கி நடக்கலானான் சசிசேகரன்.

ஆனால், பாதிதூரம் செல்லுமுன், அவன் அருகில் வந்து, ''சா...ர்...'' என்று தயக்கமான குரலில் அந்தப் பெண் அழைக்கவும் அவனுக்கு சிறு எரிச்சல் மூண்டது.

இந்த மாதிரி அழைப்புகள் அவன் ஏற்கனவே அறிந்த வைதான். இவளுக்கு 'காஃபிஷாப்'புக்கு வழி தெரியாது! அல்லது ஓட்டலின் 'ஷாப்பிங்' பகுதிக்கு எப்படிச் செல்ல

வேண்டும் என்பது புரியாததாய் இருக்கும்! 'அழைத்துச் செல்ல அவனால் முடியுமா?' என்பாள். அங்கே போனதும் அடுத்த தேவை ஏதாவது இருக்கும்!

ஆனால், ''என்ன?'' என்று சுருக்கமாக வினவியவனுக்கு, ''இங்கே, பக்கத்தில் கடலை மிட்டாய் எங்கே கிடைக்கும் என்று தெரியுமா?'' என்று சற்றே மெலிந்த குரலில் அவள் கேட்கவும், கொஞ்சம் திகைப்பு உண்டாயிற்று.

இந்த மாதிரி ஓட்டலுக்குக் கடலை மிட்டாய் கொஞ்சம் 'சீப்' அல்லவா? ஆனால் என்ன? ஏதோ ஒரு தொடக்கம்!

லேசாகத் தோளைக் குலுக்கி, ''இதை நீங்கள், அதோ அவர்களிடம் கேட்டால் பயன் இருக்கக் கூடும்!'' என்று, சற்றுத் தொலைவில் சாயம் போன ஜீன்சும், சற்றுத் திமிரான வசனங்களுடன் கூடிய டீசர்ட்டும் அணிந்து, புகைத்துத் தள்ளியபடி அட்டகாசமாய்ப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த சில இளைஞர்களைக் காட்டினான் அவன்.

அந்த அற்புதமான விழிகள் ஒருதரம் அந்த வாலிபர்களின் பக்கம் சென்று மீண்டன.

''அவர்களைப் பார்த்தால் கொ... கொஞ்சம் ஒருமாதிரி இருந்தது. அதனால்தான் உங்களிடம் கேட்டேன்... உங்களுக்குத் தெரியாதா சார்?'' என்று அவள் ஏமாற்றத்தோடு வினவவும் அவன் மேலும் திகைத்துப் போனான்.

கூடவே, ஏன் என்னைப் பார்த்தால்தான் ஏமாளியாகத் தோன்றுகிறதா என்றும் எண்ணமிட்டபடி, ''இந்த மாதிரி ஓட்டல்களில் காட்பரீஸ்தான் கிடைக்கும், கடலை உருண்டை கிடைக்காது மேடம்'' என்றான்.

அவள் முகம் விழுந்து விட்டது. ''ஆனால் காட்பரீஸ் பசி தாங்காதே! அத்தோடு என்னிடம் பத்து ரூபாய்தான்

இருக்கிறது!'' அவள ஏமாற்றத்தோடு இயம்பவும் அவன் மீண்டும் திகைத்தான்.

'காட்பரீஸ்' பசி தாங்காதா?

''உங்களுக்கு எவ்வளவு கடலை மிட்டாய் வேண்டும்?''

''இந்தப் பத்து ரூபாய்க்கு எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவு'' என்றவள்,. அவனது ஆச்சரியப் பார்வையில் முகம் கன்றி, ''பாருங்கள் சார், காலையில் நான் குளித்துக் கொண்டு இருக்கும் போது, அது தெரியாமல் மற்றவர்கள் சிற்றுண்டி சாப்பிடப் போய்விட்டார்கள். இப்போது அண்ணியின் உறவுக்காரர்கள் யாரையோ பார்க்கப் போயிருக்கிறார்கள். இரவு உணவுக்குத்தான் திரும்பி வருவார்கள். அதுவரை எனக்குத் தாங்க வேண்டும். அவ்வளவுதான்.'' என்று உணர்ச்சியற்ற குரலில் வேகமாகக் கூறினாள்.

''அறையில் தங்கியிருப்பவர்கள் என்றால், ரூம் சர்வீசை அழைத்து, அறைக்கே உணவு அனுப்பச் சொல்வது தானே?''

''அண்ணிக்குப் பிடிக்காது,'' என்றாள் அவள் சுருக்கமாக. ''அண்ணிக்குப் பிடிக்காததைச் செய்வதை விடப் பட்டினி கிடப்பது எவ்வளவோ மேல்'' என்று மரத்த குரலில் இயம்பியவள், கையிலிருந்த பத்து ரூபாய்த் தாளைத் திருப்பிப் பார்த்துவிட்டு ''இங்கேதான் கடலைமிட்டாய் கிடைக்காது என்கிறீர்களே!'' என்றவள் ஒரு சிறு பெருமூச்சுடன் மாடிக்குச் செல்லத் திரும்பினாள்.

''சற்றுப் பொறுங்கள்,'' என்றான் சசி சேகர் அவசரமாக. ''நான் இப்போதுதான் சிற்றுண்டி சாப்பிடப் போகிறேன். என்னோடு வந்தீர்களானால்...

யோசியாமல் அழைத்துவிட்ட மடத்தனத்தை அவன் உள்ளூரக் கடிந்து கொள்ளும் போதே, அவள் நின்று

திரும்பினாள். அவனை நேராக நோக்கி, ''நான் அன்னியர் களோடு, அவர்கள் செலவில் சாப்பிடுவது இல்லை!'' என்று அந்தப் பசித்த முகத்திலும் குரலிலும் கூட ஒரு கம்பீரத்து டன் உரைத்தவள், மீண்டும் திரும்பி நடக்கலுற்றாள்.

உள்ளூர மனம் சுட, ''இந்த ஓட்டல் 'காம்ப்ளக்'சில் கடலை மிட்டாய் கிடைக்காதே தவிர, வெளியே அக்கம் பக்கம் கிடைக்கக்கூடும்'' என்றான் சசிசேகர் அவளோடு நடந்தபடி.

ஒருகணம் யோசித்து விட்டு, உச்சுக் கொட்டினாள் அவள். ''அறைச்சாவி என்னிடம் இல்லை. 'லாட்ச்' போட் டுக் கதவைப் பூட்டிவிட்டுப் போனால் மீண்டும் திறக்க முடியாது. அறைக் கதவைச் சும்மா சாத்திவைத்து விட்டு இங்கே இறங்கி வரவே எனக்கு அவ்வளவு பயமாக இருந்தது; இதற்கு மேல் வெளியேவேறு போவது என் றால்... ஊகூம். முடியாத காரியம்... பரவாயில்லை சார். நீங்கள் போங்கள்.'' என்று மாடிப் படி முடிந்து, அறைப் பக்கம் திரும்பினாள் அவள்.

''ஓகே! நீங்கள் போய்வாங்க வேண்டாம். இங்கேயே நில்லுங்கள். நான் போய் வாங்கி வருகிறேன்... வந்து, உங்களுக்கு என்ன மாதிரி 'பிஸ்கட்' பிடிக்கும் சொல்லுங் கள்.'' என்று உதவ முன்வந்தான் அவன்.

''பிஸ்கட் எல்லாம் விலை அதிகம்... என்றவள், லேசாக முறுவலித்து, ''அதாவது, எனக்குப் பிடித்த 'பிஸ் கட்' எல்லாம் விலை அதிகம்தான் சார். அதெல்லாம் பசியும் தாங்காது. அதனால் கடலை உருண்டையே வாங்கி வாருங் கள்'' என்று ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினாள் அவள்.

கடலை உருண்டை கிடைக்கக் கூடிய கடை அக்கம் பக்கம் எங்கே இருக்கிறது என்று சசிசேகரனுக்கும் தெரி யாது! கடையைத் தேடிக் கண்டுபிடித்து, கடலை உருண்

டையை அவன் வாங்கிவரத் தாமதம் ஆனால், இந்தப் பத்து ரூபாயையும் ஓர் ஏமாற்றுக் காரனிடம் இழந்து விட்டோமோ என்று இந்த மெலிந்த பெண் - இந்த மெலிவே இதுபோன்ற பட்டினிகளால் இருக்குமோ பதறிவிடமாட்டாளா?

முறுவலித்து, "கடலை உருண்டையை வாங்கித் தந்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறி, வேகமாகப் படியிறங்கிச் சென்றான்.

மூன்று பாக்கெட் கடலை உருண்டைகளோடு அவன் திரும்பி வந்தபோது படிகளின் உச்சியிலேயே நின்றாள் அவள்.

பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு, நன்றியுரைத்த படி அவள் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு, "இது மதியச் சாப்பாட்டுக்குப் போதுமா?" என்று வினவினான் அவன். போதாதே என்ற எதிர்மறைப் பொருளும், கவலை யும் குரலில் ஒலித்தன.

ஆனால் அவள் அவனை நோக்கி, "இது எனக்குப் பழக்கம் தானே!" என்று வாயில் முறுவலித்தபோது சசிசேக ருக்கு உள்ளூர வலித்தது.

அந்த வலி, அவளை விட்டுப் பிரிந்து வந்து, சாப் பாட்டு அறையில் உணவருந்தும் போதும் தொடர்ந்தது. இரவு 'டின்னர்' என கையில் உணவு கொஞ்சம் அதிகப்படி யாகி விடும் என்று யோசித்து, அதைச் சமனப்படுத்த வென்று அப்போதைக்கு அவன் சிற்றுண்டிதான் வரவழைத் தது.

ஆனால், அதை உண்பதும் சிரமமாகத்தான் இருந்தது. இந்த வேளையில் அந்தப் பெண் வெறும் கடலை உருண் டையைத் தின்று கொண்டு இருப்பாளே!

அவளது கண்கள்! 'இது பழக்கம்தான்' என்றபோது என்ன ஒரு பாவம் அந்த அகன்ற விழிகளில்!

இந்த நிலையிலிருந்து இப்போதைக்கு மீட்சி கிடை யாது என்பதைத் தெளிவாக அறிந்திருந்த நிராசையோடு கூடவே ஆனால், அதற்காக நான் ஒன்றும் ஓய்ந்து ஒடிந்து விடமாட்டேன் என்ற உறுதியையும் சொல்லாமல் சொல்லி னவேவ்!

இந்த நிராசையை நீக்க அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்குமானால்...?

4

"வேறு ஏதாவது வேண்டுமா, சார்?" என்று ஓட்டல் பணியாள் வந்து கேட்டபோதுதான், தான் பாதி உணவில் அப்படியே உட்கார்ந்திருப்பதை சசிசேகரன் உணர்ந்தான். என்ன மடத்தனம்!

"வெறும் டீ மட்டும்." என்று பணியாளை அனுப்பி விட்டு அவன் தன்னையே கடிந்து கொண்டான்.

அந்தப் பெண் யாரோ? எப்படிப்பட்டவளோ? எத னால் அவளுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டதோ? யாருக்குத் தெரியும்?

அத்தோடு, அவளுக்கு அநியாயமே நடந்து கொண்டு இருந்தாலும்தான், அதற்காக அவன் என்ன செய்ய முடி யும்? ஊர் உலகில் எத்தனையோ பெண்களுக்கு, எத்தனை யோவிதமான துன்பங்கள் நேரத்தானே செய்கின்றன! ஒவ் வொருவருக்கும் உதவ அவன் போய் நிற்கமுடியுமா?

சொல்லப் போனால், அவனுக்கே எத்தனையோ பிரச்சினைகள்! அந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று யோசியாமல், யாரோ ஒருத்தியைப் பற்றி யோசித்து நேரத்தை வீணாக்குகிறானே!

அந்த ஒல்லிப் பெண்ணைப் பற்றிய நினைவை அடியோடு ஒதுக்கிவிட்டு, தன் தொழிலைப் பற்றியும், அதை அந்த நிதி நிறுவனத் தலைவரிடம் எப்படி எடுத்துரைப்பது என்பது பற்றியும் யோசிக்கத் தொடங்கினான் அவன்.

அவன் அதை விவரிக்கும் விதத்தில் அவருக்கு பிணைப் பொருள் பற்றிய எண்ணமே மறந்து போய்விட வேண்டும்.

அல்லது, தொழிலில் அவருக்கும் ஒரு பங்கு கொடுக்க லாமா என்று ஓர் எண்ணம் தோன்ற, அதன் சாதக பாதகங்கள் பற்றி ஆராய்வதில் ஈடுபட்டான் அவன்.

சுமார் ஆறுமணியளவில், அந்த நிதி நிறுவனத் தலைவரிடமிருந்து, கீழே லாபியில் சந்திக்குமாறு அழைப்பு வந்தது. ''முதலில், நாம் இருவரும் மட்டுமாகக் கொஞ்சம் தொழில் விஷயம் பேசுவோம். பிறகு வீட்டினர் ஒரு ஆறரை, அல்லது... எப்படியும் ஏழு மணிக்குள் டின்னருக்குத் தயாராகி வந்து விடுவார்கள் என்று நினைக்கிறேன் அப்போது என் குடும்பத்தை - முக்கியமாக என் தங்கையை நீங்கள் பார்த்துப் பேசலாம்'' என்றார் அவர்.

மறுபடியும் தங்கை! இந்தத் தங்கையைப் பற்றி அவர் மறக்கும் அளவுக்கும் அவன் பேசியாக வேண்டும்!

''நான் கதிரேசன்... என்று கைகுலுக்கிய நபரை ஒரு பார்வையில் ஆராய்ந்தான் சசிசேகரன்.

நல்லபடியாகத் தொழில் செய்கிறோம் என்ற தெம்பும், அதே சமயம், அதிக வேலையின் அயர்வும் தெரிந்தது.

நரைத்த சிகையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், வயது முன் நாற்பதுகள் என்று தோன்றியது.

''என்ன தலைமுடி வெளுத்து விட்டதே என்று பார்க்கி றீர்களா? இளைநரை. என் வயது நாற்பத்தி இரண்டுதான்... உங்களுக்கு என்ன வயதாகிறது?'' என்று பேச்சைத் தொடங்கினான் கதிரேசன்.

''இருபத்து ஒன்பது.'' என்ற சசிசேகரன், கதிரேசனை சற்று யோசனையாக நோக்கவும், உள்ளூர நகைத்தான். இவரது முப்பத்தைந்து வயதுத் தங்கைக்கும் எனக்கும் வயதுப் பொருத்தம் சரிவராதே என்று கவலையாய் இருக் கும்!

ஆனால், ''அப்படியென்றால் நீங்கள் முதலில் மிகச் சிறுவயதிலேயே தொழில் தொடங்கியிருக்க வேண்டும்!'' என்று வியந்தான் கதிரேசன். ''தொடங்கியதை வெற்றிகர மாக நடத்தியும் இருக்கிறீர்கள்!'' என்று பாராட்டுதலாகக் கூறவும், 'ஆம்' என்று தலையாட்டினான் சசிசேகரன். மெய்யும்தானே!

''தொடங்கி இரண்டே ஆண்டுகளில் போட்ட முதல் இருமடங்காகப் பெருகியது. உதிரிப் பாகங்களை வாங்கிச் சென்று பொருத்துகிற யூனிட் தொடங்கியது பலவகையில் வசதியாய் இருந்தது. உதிரிப்பாகம் இங்கிருந்து வாங்கிச் சென்றதால், நம் நாட்டில் ஏற்றுமதிச் சலுகைகள் கிடைத்தன. அங்கே தொழிற்சாலைகள் குறைவு. ஒரு தொழிலைத் தொடங்கினேன் என்பதால் அங்கேயும் பல சலுகைகள் கிடைத்தன. நல்ல தரத்தைக் கவனித்ததால் செய்த பொரு ளுக்கு விற்பனையும் நன்றாக இருந்தது... தொழில் அழிந் தது எந்த விதத்திலும் என் பிழை அல்ல. எனவே, முதல் கிடைத்தால், மீண்டும் அதே முன்னேற்றம் அடைய முடியும் என்பது எனக்கு வெகு நிச்சயம்....

சில் கணங்கள் பேசாதிருந்து விட்டு, ''என்னை விடப் பத்தொன்பது வயது சிறியவள் என் தங்கை. அவளுக்கு வயது இருபத்து மூன்றுதான். உங்களுக்குப் பொருத்தமாக...'' என்று தொடங்கிய கதிரேசனை இடைமறித்துப் பேசினான் சசிசேகர்.

''பாருங்கள், மிஸ்டர் கதிரேசன்! தொழில் செய்வது மிகவும் முக்கியம்தான். என் சொந்த வாழ்வைப் பணயம் வைத்து அதைச் செய்வதில் என்ன லாபம் இருக்கும்? நாம், தொழிலை மட்டும் பேசுவது நல்லது என்று நினைக்கிறேன்'' என்றான்.

''அவசரப்பட வேண்டாம், சசிசேகர்! நான் சொல்வதைக் கேட்டு, நிதானமாக யோசித்து அப்புறமாய் முடிவு செய்யுங்கள். முதலில் இந்தப் பேச்சினால் உங்களுக்கு இரட்டை லாபமும் கூட... ப்ளீஸ், கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்... பாருங்கள் சசி, நீங்கள் என்னதான் தொழிலில் கெட்டிக்காரர் என்றாலும், அதை நான் முழு மனதோடு ஒத்துக் கொண்டாலும், கொடுக்கும் பணத்துக்கு அதைவிடவும் பெறுமானம் உள்ள ஒன்றை நீங்கள் ஈடு வைத்தால் ஒழிய உங்களுக்குப் பணம் தருவது என்றால்

என்னால் மட்டுமல்ல; எந்த நிதி நிறுவனத்தினாலுமே இயலாத காரியம். சட்டம் ஒத்துக் கொள்ளாது.''

''உங்கள் தங்கை கணவருக்குக் கொடுப்பதை மட்டும் சட்டம் மூச்சுகாட்டாமல் ஒப்புக் கொண்டு விடுமாக்கும்!'' என்றான் சசிசேகரன் பரிகாசமாக.

''நிச்சயமாக ஒத்துக் கொள்ளாது.'' என்றான் கதிரேசன். ''தங்கை கணவராகட்டும்; சொந்த மைத்துனன் ஆகட்டும்; யாருக்கும் நான் அப்படிக் கொடுக்கவும் மாட்டேன். ஆனால் என் தங்கையை மணந்து கொண்டால் உங்களுக்கு ஈடு வைக்கத் தேவையான நகைகள் கிடைக்கும்!''

''திருமணம் ஆனதுமே தாலிக் கயிறு தவிர மனைவி யின் நகைகளை உருவுகிற வர்க்கம் நான் அல்ல, மிஸ்டர் கதிரேசன்! அத்தோடு நான் கேட்கும் தொகை நாற்பது லட்சம்!''

''நானும் அப்படி ஒட்டு மொத்தமாய் உருவச் சொல்ல வில்லையே! என் தங்கையின் இந்த நகைகள் ஒரு பரம்ப ரைச் சொத்து, சசிசேகர். சாதாரணமாக அணிந்து கொள்ள முடியாத கனமான, பழையகால நகைகள். பெரிய பெரிய வைரங்கள்! பல ஆண்டுகளாக, பாங்க் லாக்கரில் இருப் பவை, இனி என் நிறுவன லாக்கரில் இருக்கும் அவ்வ ளவே! வித்தியாசம்!''

''ஆனாலும் தொழிலையும் வாழ்வையும் இணைத்துப் பேசுவது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை, மிஸ்டர் கதிரேசன் என்றான் சசிசேகரன் சற்றுப் பிடிவாதமான குரலில். கூடவே, ''நீங்கள் வேண்டுமானால், பாருங்கள்! எப்படியும் எனக்குத் தேவைப்படும் பணத்தைத் திரட்டி, இந்தத் தொழிலை நான் வெற்றிகரமாக நடத்தியே தீரு வேன்!'' என்றும் அறிவித்தான்.

''அந்த நம்பிக்கை எனக்கும் இருப்பதால்தான் என் தங்கையை உங்களுக்கு மணமுடிக்க நினைப்பதும். இந்த முதலுக்காக நீங்கள் வேறு எங்கும் போய், அநியாய வட்டியோ, அதிகப்படி சலுகைகளோ கொடுத்துப் பெறு வதை விட இது உங்களுக்கும் நல்லது... எதற்கும் என் தங்கையைப் பார்த்துவிட்டுப் பதில் சொல்லுங்களேன். கொஞ்சம் ஒல்லியாக இருப்பாளே தவிர, அவள் அழகான பெண்தான். கொஞ்சம் சதை போட்டால் ரொம்ப அழகாக இருப்பாள். ஆனால் இந்தக் காலப் பெண்களுக்கு அது புரிவதே இல்லை. ஒல்லியாக இருப்பதுதான் இன்றைய நாகரீகமாம். என் மனைவி எவ்வளவோ போராடிப் பார்த்து விட்டு விட்டாள். இன்று காலையில் கூட அவள் சாப்பி

டவே இல்லை. சாப்பிட வரமாட்டேன் என்று குளியலறை யில் போய் உட்கார்ந்து கொண்டாள். மதியமாவது உண் டாளோ என்னவோ? கட்டாயம் உணவு வரவழைத்துச் சாப்பிடச் சொல்லியிருக்கிறேன் என்றாள் சந்தியா... சந் தியா என் மனைவி'' என்று விளக்கினான் கதிரேசன். ''தங்கை பெயர் மானசா.''

சசிசேகரனுக்குக் காலையில் பார்த்த பெண்ணின் நினைவு வந்தது. அந்தப் பெண் வயிற்றுக்குக் கிடைக்காமல் ஒல்லியாக இருக்கிறாள். இங்கே நாகரீகத்துக்காக வயிற் றைக் காயப் போடுகிறாள் ஒருத்தி. அங்கே பட்டினி போடும் அண்ணி. இங்கே, அண்ணி பரிவு காட்டினாலும் பிடிவாதமாய்ப் பட்டினி கிடக்கும் பெண்!

அந்தப் பெண் மானசாவை அவனுக்குப் பிடிக்கப் போவது இல்லை என்று சசிசேகரனுக்கு உறுதியாயிற்று.

அதற்குமேல் இருவருமே தொழில் விஷயமும் பேச வில்லை; சொந்த வாழ்வு பற்றியும் பேசவில்லை. அரசியல், வானிலை, மற்ற நாட்டு வழக்கங்கள் என்று என்னென்ன முடியுமோ அத்தனையும் பேசித்தீர்த்தார்கள்.

அதன் பிறகும் கதிரேசனுடைய குடும்பம் சாப்பாட்டு அறைக்கு வந்து சேர்ந்தபாடில்லை.

கைக் கடிகாரத்தை நாலுதடவை திருப்பிப் பார்த்து விட்டு, கதிரேசன் எழுந்து, வரவேற்புப் பகுதிக்குச் சென்று, அவன் அறையுடன் தொடர்பு கொண்டு அவசரப்படுத்திய பிறகு, மேலும் ஒரு பத்து நிமிடம் கழித்து ஒருவாறு அவனுடைய குடும்பத்தார் வந்து சேர்ந்தார்கள்.

முன்னே, ஒரு யானையின் மதர்த்த நடையுடனும், குறுக்கே சற்று வளர்ந்து உருண்டையான உடலுடனும் பின்னே வந்த மற்றவளை மறைத்தபடி அசைந்தாடி வந்

தாள், சந்தியா... சாயமிட்ட தலைமுடியிலிருந்து, சிவப்பு நிறம் தீட்டப்பட்டிருந்த கால் நகங்கள் வரை கவனமான ஒப்பனை! இளமையாகக் காட்ட வெகுவாக முயன்றிருப் பது நன்றாகவே தெரிந்தது.

கணவனின் நரைத்த முடி அவனது வயதைக் கூட்டிக் காட்டியது என்றால், மனைவியின் கறும் சாயக் கூந்தல் அவள் முகத்தின் மூப்பை மேலும் அதிகப்படுத்திக் காட்டி யது என்பதைப் பாவம், அவள் அறியவில்லை.

அவளை அடுத்து, அவளது ஜாடையிலேயே, ஓர் இளம் பெண்ணும், சற்று உயரமாக, ஓர் இளைஞனும் வந்தார்கள்.

இவர்கள் இருவரும் கதிரேசன் - சந்தியாவுடைய மகனும் மகளுமாக இருக்க வேண்டும் என்று சசிசேகரன் அனுமானித்தான். அந்த இளம் பெண்ணின் முக அமைப் புக்கு அவள் சந்தியாவின் மகளாகத்தான் இருந்தாக வேண் டும்.

இவர்களுக்கும் பின்னே, ஏதோ அசைவும், துணியும் தெரிந்ததால் வெகு அடக்க ஒடுக்கமாகக் காட்டிக் கொள்ள முயன்றபடி அந்தத் தங்கை வருகிறாளாக்கும் என்று சசிசேக ரன் ஏளனத்துடன் எண்ணினான்.

'இவளை நான் பார்க்கவேறு வேண்டுமா?' என்று எண்ணியபடி, குடும்பத்தினரை அறிமுகம் செய்விப்பதற் காக எழுந்த கதிரேசனுடன், கூட எழுந்தவன் மறுபடியும் திகைத்துப் போனான்.

சசிசேகரன் நல்ல உயரம் என்பதோடு நெருங்கி வந்த நால்வரில் கடைசியாக வந்தவளும் சற்று உயரமாகவே இருந்ததால் அவள் முகத்தை எழுந்த உடனேயே அவனால் பார்க்க முடிந்தது.

அங்கே, மற்றவர் அறியாமல், தன் அழகிய விழிக ளால் அவனை யோசித்தபடி வந்து கொண்டிருந்தவள், அந்தக் 'கடலைமிட்டாய்க் காரி!'

அன்று மதியத்திலிருந்து அவன் யாரை எண்ணிப் பலமுறை பரிதாபப்பட்டானோ, அவளும், கதிரேசனின் திட்டத்தை அறிந்ததிலிருந்து யாரை உள்ளூர எரிச்சலோடு எதிர்பார்த்தானோ, அவளும் ஒருத்தியே!

இரண்டில் எது அவளது மெய்யான முகம்?

எதுவாக இருந்த போதும், அந்த நேரத்தில் அவளை அவனால் காட்டிக் கொடுக்க முடியாமல், கதிரேசனின் அறிமுகப் படலத்தை உரிய விதத்திலேயே சசிசேகரன் ஏற்றுக் கொண்டான்.

உடனேயே அந்த மானசாவின் கண்களில் இருந்த மலக்கம் அகலுவதைக் காணும் போது அவனுக்கும் சற்றே ஆறுதலாகவே இருந்தது.

ஆனாலும் இவளது தன்மை என்ன என்று அவனுக்கு உள்ளே குறு குறுப்பாகவும் இருந்தது.

அந்தக் குறுகுறுப்பு அடங்க அவன் அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை

உடையளவிலேயே, அந்தப் பெண் மானசாவின் ஆடை அணிகலன்களுக்கும், கதிரேசனுடைய மகள் அர்ச் னா அணிந்திருந்தவைக்கும் மிகவும் ஏற்ற தாழ்வு இருந் தது. இருவருமே சுரிதார்தான் அணிந்திருந்தனர். என்றா லும், அர்ச்சனா அணிந்திருந்ததில் மூன்றில் ஒரு பங்கு னிலை கூட மானசாவுடையது இராது என்பதை உடனேயே சிசேகர் கண்டு கொண்டான்.

அர்ச்சனா அழகு நிலையங்களுக்கு வழக்கமாகச் செல் பவள் என்பது அவளது சிகை அலங்காரம், புருவ

அமைப்பு, முகம் கைகளின் மழுமழுப்பிலிருந்து நன்றாகத் தெரிந்தது.

அவளுடைய தாயாருக்கும் அதுவே பழக்கமாக இருக்க வேண்டும்.

ஆனால், மானசாவின் முகத்தில் இதுபோன்ற ஒப்பனைகளின் சாயல்கூட இல்லை. கழுவித் துடைத்த முகத்தில் ஒரு சிறு திலகம் மட்டுமே அவளது அலங்காரம்!

விருந்தாளியின் பார்வையோடு கணவனின் நோக்கும் கணக்கிடுவதை உணர்ந்து, ''இவ்வளவு நேரம் ஏதேதோ அலங்காரம் செய்து பார்த்து விட்டு, எல்லாம் தப்பாய் விடுகிறது என்று முழுவதையும் கழுவி, ஒரு பொட்டோடு வந்து விட்டாள்'' என்று விளக்கம் கூறினாள் சந்தியா.

சிவா நிமிர்ந்து, தாயை ஒருதரம் நோக்கிவிட்டு, மீண்டும் 'சூப்'பை அருந்தலானான்.

மானசா நிமிரவே இல்லை.

ஆனால், இரண்டு கரண்டி சூப்பை அவள் தொடர்ந்து குடிக்க இடமின்றி, ''உப்பை எடு, மிளகுத்தூளை அந்தப் பக்கம் நகர்த்து, இந்தப்பக்கம் சிவாவுக்குக் கொடு... என்று அவளைச் சந்தியா ஏவிக் கொண்டே இருந்தாள்.

கடைசியாக அடுத்த உணவு வகையுடன் பணியாள் வந்தபோது, மானசாவின் கிண்ணத்தில் சூப் பாதி கூடக் காலியாகவில்லை. ஆனால், அதைக் குடித்து முடிக்காமல், அவளும் கிண்ணத்தைத் தள்ளி வைத்து விட்டாள்.

அடுத்த அயிட்டமாக, 'சைனீஸ் ஃப்ரைட் ரைஸ்' மூன்று தட்டும், மூன்று செட் 'நாண்' ரொட்டியும் கொண்டு வரச் சொல்லியிருந்தார்கள். உரிய வியஞ்சனங்களும் சேர்த்துதான்.

குடும்பத் தலைவியாய் சந்தியா, அவரவருக்கு வேண்டியது என்று கேட்டு எல்லோருக்குமே வைத்துக் கொடுத்தாள்.

ஆனால், மானசாவிடம் அவள் எதையும் கேட்கவில்லை என்பதைச் சசிசேகர் கவனித்தான்.

அதுமட்டுமல்ல,

'ஃப்ரைட் ரை'சை முதலில் சசிசேகருக்கும் கதிரேசனுக்கும் எடுத்து வைத்து விட்டு, அடுத்து மகனுக்கும் மகளுக்கும் அளித்தவள், மீதம் இருந்தது முழுவதையும் தன் தட்டில் கொட்டிக் கொண்டாள்.

முகத்தில் எந்தவித பாவனையும் இன்றி அமர்ந்திருந்த நாத்தனாரிடம், ''உனக்குத்தான் சைனீஸ் வகையறாவே பிடிக்காதே. அதனால் நீ 'நாண்'ரொட்டியை எடுத்துச் சாப்பிடு'' என்ற சந்தியா, தன் பக்கம் இருந்த ரொட்டியை மானசாவின் பக்கம் நகர்த்தாமலேயே, மடமடவென்று உண்ணத் தொடங்கிவிட்டாள்.

கதிரேசனுக்கும் அங்கே தங்கை என்று ஒருத்தி இருப்பதாக கண்ணில் பட்டது போலத் தெரியவில்லை.

கதிரேசன் மட்டுமல்ல, அவன் குடும்பம் முழுவதுமே அப்படித்தான் என்பது போல, நால்வரும் உண்ணுவதில் முனைந்து இருந்தார்கள். இவனெல்லாம் ஓர் அண்ணன்!

சசிசேகரனுக்கு உள்ளூர ஓர் ஆத்திரம் உருவாகத் தொடங்கியது.

ஆனால் இந்தப் பெண்ணும்தான் ஏன் இந்த மாதிரி நடத்துவதற்கு இடம் கொடுக்க வேண்டும்? 'ரொட்டியை இங்கே நகர்த்துங்கள் அண்ணி' என்று வாய் திறந்து சொன்னால் இந்த இடத்தில் அவள் அண்ணியால் மறுக்கவா முடியும்?

ஆனால்.. இன்று இந்த வேளை உணவோடு மட்டும் முடிவதல்லவே வாழ்க்கை! அதனால்தான் பொறுத்துப் போகிறாளோ? மூன்றே மூன்று கடலை பாக்கெட் கடலை உருண்டைகள்! பாவம்...

ஆனால் இப்போது இதில் அவன் எப்படித் தலையிட முடியும்? தட்டிலிருந்தது கிட்டத்தட்ட முடிகிறத் தருவாயில் தான் கதிரேசனுக்குத் தங்கை நினைவு வந்தது போலும்! ''நீ இன்னும் சாப்பிடவில்லை?'' என்று கேட்க, தங்கையை ஒரு பார்வை பார்த்து விட்டு, கையை நீட்டி, 'நாண்' ரொட்டிகளில் இரண்டை எடுத்து அத்தையின் தட்டில் வைத்தான் சிவா.

அதேபோல, சிக்கன் குருமாவையும் எடுத்து வைக்க அவன் முனைந்த போது, ''வெறும் குழம்பு மட்டும் அவளுக்கு ஊற்று. 'சிக்கன்' வைத்தால் சாப்பிடாமல் வீணாக்கி விடுவாள்... உனக்குப் பிடிக்காதில்லையா, மானு?'' என்று சந்தியா உரைக்க மானசா தலையாட்ட, குருமாக் கிண்ணத்தை மானசாவின் அருகில் நகர்த்தி வைத்துவிட்டு, எப்படியோ தொலையுங்கள்'' என்பதுபோலத் தன் உணவில் முனைந்தான் சிவா.

மானசா கொஞ்சம் குருமாக் குழம்பை மட்டும் எடுத்துக் கொண்டு உண்ணத் தொடங்கினாள். ஆனால் அதையும் முழுவதாகச் சாப்பிட சந்தியா விட்டாளில்லை.

சும்மாவே 'நாண்'ரொட்டியை சற்றுச் சுவைத்துச் சாப்பிட வேண்டிய அயிட்டம். மானசா ஒரு பிடி எடுத்து வாயில் வைக்க முனையும் போதெல்லாம், சந்தியாவின் ஆணைகளுக்கிணங்க அவள் தண்ணீரையும், 'சா'சையும் பக்கப் பதார்த்தக் கிண்ணங்களையும் அடுத்தவருக்கு எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்க நேர்ந்தது.

கிடைத்த வாய்ப்பில் அள்ளித் திணித்துக் கொள்ளும் அநாகரீகமும் அவள் பயிலவில்லை போலும்!

மீண்டும் எல்லோரும் முடிக்கும் போது, அவள் தட்டில் ஒரே ஒரு ரொட்டித் துண்டு காலியாகியிருந்தது.

மகளுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்த கணவனை அழைத்து, ''இதையெல்லாம் அகற்றிவிட்டு ஐஸ்கிரீம் கொண்டுவரச் சொல்லுங்கள்... மானசாவுக்கு டீ போதும். அவளுக்குக் குளிர்ச்சியே பிடிக்காது'' என்று சந்தியா கூறவும், மனைவி சொல்லே மந்திரமாய்ப் பணியாளை அழைக்க முனைந்த கதிரேசனை, சசிசேகரன் தடுத்தான்.

''பொறுங்கள் சார். உங்கள் தங்கை சாப்பிட்டு முடிக்கட்டும்'' என்றான் குரலில் சிறு அழுத்தத்துடன்.

சட்டென்று நிலவிய ஒரு சிறு அமைதியின் பின் ''இவள் ஒரு சப்பாத்தியை ஒரு மணிநேரம் சாப்பிடுவாள். பொக்குவாய்க் கிழவி மாதிரி மகாராணி குதப்பிக் குதப்பி முழுங்கி முடிக்கும் வரை நான் ஐஸ்கிரீம் இல்லாமல் காத்திருக்க வேண்டுமா?'' என்று முகம் சிவக்கக் கீச்சிட்டாள் அர்ச்சனா.

மகளின் கையைப் பற்றி அழுத்தி விட்டு, கண்கள் இடுங்க மானசாவை நோக்கி, '' என்றைக்குமே அவள் சப்பாத்தி, பரோட்டா, நாண் எல்லாம் ஒன்றுதான் சாப்பிடுவாள். உடம்பு ஒல்லியாக அழகாக இருக்க வேண்டும் என்று, உணவில் அவள் வெகு கணக்கு!'' என்று உதடுகள் காதுவரை இழுத்து இளித்தாள் சந்தியா ''இல்லை, மானு...

ஒரு சின்னப் பெருமூச்சுடன் மானசா தலையாட்ட, ''நான் அப்போதே சொல்லவில்லை?'' என்று மீண்டும் பணியாள் பக்கம் திரும்பிய கதிரேசனை மீண்டும் சசிசேகரன் தடுத்தான்.

''ஒல்லியாகி ஒல்லியாகி உங்கள் தங்கை ஒரேடியாக காணாமல் போய்விட்டால் என்ன செய்வது? இன்றைக்கு இந்த 'நாணை'ச் சாப்பிடாமல் அவர்களை நாம் விடக்கூ

டாது. என்ன சிவா?'' என்று அந்தக் கூட்டத்தில் கொஞ்சம் ஒத்துழைக்கக் கூடிய நபராகத் தோன்றிய சிவாவைத் துணைக்கழைத்தான் சசிசேகரன்.

''ஆமாம், அத்தை இன்றைக்கு நீ இதைச் சாப்பிட்டு முடிக்காமல் யாரும் இந்த இடம் விட்டு அசையவே போவதில்லை!'' என்று இணைந்து முறுவலித்தான் சிவா.

அண்ணியிடம் மன்னிப்புக் கோரும் பார்வையைச் செலுத்திவிட்டு, சற்று வேகமாக உணவை முடித்தாள் மானசா.

சந்தியாவின் இடுங்கிய பார்வையில் ஏளனமும் சேர்ந்து கொண்டது. உன்னிடம் கரிசனம் கொண்டு, உன்னை உண்ணச் சொன்னான் என்று நினைத்தாயா? பைத்தியக்காரி ஐம்பது லட்சம் பெறுமான உன் நகைகளுக்கான நடிப்படி இது... என்று எகத்தாளமாக எண்ணினாள் அவள். ஏனெனில் அதைத் திட்டமிட்டவள் அவள்தானே!

5

மானசா உண்டு முடிப்பதற்காக மற்றவர்களைக் காத்திருக்கச் செய்ததோடு சசிசேகர் விட்டுவிடவில்லை. சந்தியாவின் விருப்பத்தைச் சிரமேற்கொண்டு கதிரேசன் வரவழைத்த ஐந்து ஐஸ்கிரீம், ஒரு டீயில், மானசாவின் பக்கமாய் வைக்கப்பட்ட டீ கோப்பையைக் கையை நீட்டி எடுத்துத் தன் எதிரில் வைத்துக் கொண்டு, தன் ஐஸ்கிரீமை அவளிடம் நகர்த்தினான்.

அவளிடமே நேரடியாக, ''பாருங்கள், மானசா! நீங்கள் கெட்டிக்காரத்தனமாய் இரண்டு ரொட்டியோடு

உணவை முடித்துக் கொண்டீர்கள். வயிறு லேசாக இருக்கும். அந்த 'ஃப்ரைட் ரை'சை வேறு, உங்கள் அண்ணி விருந்தாளியை உபசரிப்பதற்காக என் தட்டில் நிறைய வைத்து விட்டார்கள். இதற்கு மேல் ஐஸ்கிரீம் சாப்பிட்டால், ஒன்று இங்கேயே என் வயிறு வெடித்து விடும். இல்லாவிட்டாலும் வயிற்று வலி நிச்சயம். ஆகவே சௌமானம் காரணமாய் உங்கள் டீயை நான் எடுத்துக் கொள்கிறேன். பிடிக்கிறதோ, இல்லையோ என்று ஒரு நாள் மட்டும் உங்கள் வழக்கமான டீயை விடுத்து, என் ஐஸ்கிரீமை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியவன், அவளது பதிலை எதிர்பாராமலே, மானசா அந்த ஐஸ்கிரீமை உண்ணும்படியும் செய்தான்.

சிறுதவிப்புடன் கூடிய பார்வை அவ்வப்போது அண்ணியிடம் பாய்ந்து மீண்டபோதும், ஐஸ்கிரீமை மானசா ஆவலாகவே உண்டாள் என்பதைக் காண்கையில் உள்ளூர அவனுக்கு மீண்டும் சினம் உண்டாயிற்று.

இவள் ஒன்றும் குளிர் பொருட்கள் பிடிக்காதவள் அல்ல. கல் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருந்த போதும் ஒவ்வொரு கரண்டி ஐஸ்கிரீமையும் நாக்கில் ஒரு கணம் வைத்திருந்து, அதன் குளிர்ச்சியையும், ருசியையும் அனுபவித்து, அதன் பின்னரே அவள் விழுங்குவதை ஊகித்து உணர்கையில், அவள் இதற்காக ஏங்கியிருப்பதை யும் கூற முடிந்தது. என்ன அநியாயம் நடக்கிறது அவளுக்கு!?

எப்படியோ, அன்றைய அளவில், மானசா கூடுதலாக ஒருநாண் ரொட்டியும், ஐஸ்கிரீமும் உண்ணும்படிச் செய்தாயிற்று என்று எதையோ சாதித்து விட்டாற்போல அவனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. உடனேயே, நாளை என்ன செய்வாள் என்ற வேதனையும் கூடவே பிறந்தது. •

ஆனால், இவ்வளவையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறான்; இந்த அண்ணன் மண்டையில் கொஞ்சமேனும் ஏறாமலா... இருக்கும்!''

ஆனால், ஐஸ்கிரீம் முடிந்ததும் முடியாததுமாக 'சாட்டிலைட்' டீவியில் ஏதோ அழகுக் குறிப்பு நிகழ்ச்சி இருப்பதாகச் சொல்லி அர்ச்சனா எழுந்து ஓட, மற்ற பெண்களும் அவளைப் பின் தொடர்ந்து வந்து சென்றுவிட, ஓட்டல் 'காம்ப்ளக்'சின் புத்தகக் கடையைப் பார்க்கப் போவதாகச் சிவாவும் அகன்றுவிட்ட போது, சசிசேகரன் பார்த்த பார்வைக்கு கதிரேசன் வேறு பதில் சொன்னான்.

''நீங்கள் நினைப்பது புரிகிறது, சசிசேகர். ஆனால், அப்படி ஒன்றும் நிலைமை மோசமாக இல்லை. அத்தோடு, இந்த உள்நாட்டு விவகாரங்களில் நான் தலையிட்டால், பிறகு, உள்ளதும் கெட்டுவிடக் கூடும்... அத்தோடு மானசாவுக்கும் தனக்கு வேண்டியதைத் தானே பார்த்துக் கொள்ளத் தெரிந்தாக வேண்டுமில்லையா?'' என்று தன் தலையிடாக் கொள்கையை நியாயம் என்று அவன் விவாதித்தபோது சசிசேகரனுக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று.

பாவம்! மானசாவுக்கு நாளையே பிரச்சனைதான்.

நாளைக்குக் கடலை உருண்டைக்கு அவள் எங்கே போவாள்?

''நான் சொன்னது சரிதானே? கொஞ்சம் சதை போட்டால் மானசா மிகவும் அழகியாகி விடுவாள்தானே? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கதிரேசன் தொடர்ந்து கேட்கவும் தூக்கம் கலைந்தாற்போல சசிசேகர் திடுக்கிட்டான்.

''உங்கள் தங்கை இப்போதே அழகிதான். ஆனால்... என்றவனை மேலே பேசவிடாமல் கதிரேசன் தடுத்தான்.

''பொறுங்கள் அவசரப்பட்டு எதையும் சொல்லிவிட வேண்டாம். இந்தவாரம் முழுவதும் நாங்கள் இங்கேதான் இருப்போம். உங்கள் அறையையும் அதுவரை, இன்னும் மூன்று நாளைக்கு நீட்டித்து விடுகிறேன். அதுவரை நிதான மாக யோசித்துப் பதில் கூறுங்கள் போதும்'' என்று எழுந் தான் கதிரேசன்.

இருவரும் பிரியும்போதும் மீண்டும் சொன்னான் ''உங்களை விட வயதில் பதினைந்து ஆண்டுகள் மூத்தவன் நான். அத்தனை ஆண்டுளுக்குரிய அனுபவத்தின் முதிர்ச்சி யால் சொல்கிறேன், சசிசேகரன் எனக்கென்னவோ உங்கள் பிரச்சினைகள் தீர நல்லவழி நீங்கள் மானசாவை மணப்பது தான் என்றே தோன்றுகிறது. உங்களைப் பொறுத்தவரை யில் அவள் ஒரு தங்கச் சுரங்கம்! அவளுக்கும்... அவளுக் கும் உங்களை மணப்பது ஒரு நல்ல தீர்வு... எல்லாவற்றை யுமே நன்றாய் யோசியுங்கள்'' என்று கூறிச் சென்றான்.

அன்றிரவு சசிசேகரனுக்குச் சரியாகத் தூங்க முடிய வில்லை. கதிரேசன் பேசியது பெரிதாக மனதில் பட வில்லை. ஆனால் அந்தப் பெண் மானசாவின் நினைவு மனதைப் போட்டு அலைக்கழித்துக் கொண்டே இருந்தது.

இரவு உணவிலும் அவளுக்கு வயிறு நிரம்பியிராது தான்.

மானசா நல்ல உயரமான பெண். உணவு சற்று அதிகம் தான் தேவைப்படும். இரண்டே இரண்டு உள்ளங்கை அகல யிலாட்டிகள் எந்த மூலைக்குப் போதும்? அதுவேறு, 'அவ ளுக்குக் கோழி பிடிக்காது; வெறும் குழம்பு போதும்' பாதகி!

எப்படியும் 'ஆர்டர்' செய்து, கொண்டு வந்து மேசை யில் வைத்து விட்ட பதார்த்தம் சாப்பிடாமல் மிச்சப்படும் போது வீணாகித்தானே போகும். அதில் கொஞ்சம் நாத்த னாரின் வயிற்றுக்குள் போவது அந்த ராட்சசிக்குப் பிடிக்க வில்லையே!

அண்ணனாம் அண்ணன்! உடன் பிறந்த தங்கை ஒரே தங்கை வயதில் வேறே அவ்வளவு சின்னவள் - அவளை மனைவி அரைப் பட்டினி போட்டு அணுஅணு வாய்க் கொல்வதை அறியும் புத்தியில்லையே! ஒல்லியாக இருக்க வேண்டும் என்று அவள் உணவை வெறுப்பதாகச் சொன்னானே! தங்கையின் தட்டு காலியாக இருப்பது கண்ணில் படாமலா இருக்கும்? அவன் பாட்டில் முழுங்குகி றான்! இவனெல்லாம் ஓர் அண்ணன்!

இதில் 'உள்நாட்டு விவகார'த்தில் தலையிடுவது தவ றாம்! அப்படி ஒன்றும் நிலைமை மோசமில்லையாம்!

இதைவிட மோசமாய் என்ன நடக்க வேண்டும்? முழுப் பட்டினி போட்டு ஒரேயடியாகக் கொன்றுவிடவில் லையே என்று அதுவே சந்தோஷமாக இருக்கிறதா?!

.என்ன பாவம் அந்தப் பெண்! தாயில்லை; தந்தை யில்லை! தமயனோ அரக்கியான ஒரு மனைவியின்தாசன்!

இல்லை, இந்தத் துன்பத்திலிருந்து அவனால் மீட்க முடியும்! அவளை மணந்து, இந்தக் கொடுமைக்காரக் கும்பலில் இருந்து பிரித்து, தூர தேசத்திற்கே அழைத்துச் சென்று விடலாம்!

ஆனால்...

அவன் மனைவி இப்படி முதுகெலும்பில்லாதவளாக இருந்தால் அவனது வாழ்க்கை முறைக்குக் கொஞ்சமும் சரிவராதே!

தொழில், தொழில் என்று அது ஓர் உயிர் மூச்சு மாதிரி அவனுக்கு. இடையூறற்ற முழுக்கவனத்தை அதில் செலுத்தி னால்தான், பழைய மாதிரி உயர முடியும். அவ்வப்போது அவன் தொழில் நிமித்தம் வெளியே, வெளியூர் செல்லும் போது, அவன் இடத்தில் இருந்து பொறுப்பேற்று நடத்தும்

அளவு திடமும், சாமார்த்தியமும் கூட அவன் மனைவிக்குத் தேவை ஆயிற்றே.

மானசாவுக்குத் தன்னைப் பார்த்துக் கொள்வதே சிரமம்! பசிக்கிறது என்று ஒரு வார்த்தை சொல்லி, உலகத்திலேயே கொடிய பெரும் பிணியான பசிப்பிணியைத் தீர்த்துக் கொள்ளும் தைரியம் கூட இல்லாமல், ஒரு முணுமுணுப்பு கூட இல்லாமல், பட்டினி கிடக்கிறாள்!

இவள் தொழிலைப் பார்ப்பது ஒரு புறம் இருக்கட்டும்; குடும்பத்தைக் கவனிப்பதே கஷ்டமாயிற்றே! பணியாட்களை, பிள்ளைகளை எப்படிச் சமாளிப்பாள்?

அத்தோடு, இந்தப் பணத்துக்காக இவளை மணந்தே தீர வேண்டும் என்கிற கட்டாயம் அவனுக்கும் இல்லை. கூடுதலாகவே வட்டி கொடுத்தால் கிடைக்கும்தான். இல்லாது போனாலும் முதல்போட ஒரு பங்குதாரரைச் சேர்த்துக் கொண்டு இவன் நிர்வாகத்தைக் கவனிக்கும் பங்காளியாக இருந்தும் கூடத் தொழிலைத் தொடங்கி நடத்த முடியும் தான். என்ன, லாபம் குறையும்; தொழிலில் கொஞ்சம் குறுக்கீடு இருக்கும்.

ஆனால் அதற்காகப் பார்த்து, வாழ்க்கை முழுவதும் திண்டாடும்படி ஆகிவிடக் கூடாதே!

இரவில் பெரும் பகுதியை நிம்மதியான உறக்கமின்றி உருண்டு புரண்டே கழித்தபோதும், காலையில் வழக்கம் போல விழித்து எழுந்து, காலை 'ஜாகிங்'குக்கு கிளம்பினான் சசிசேகரன்.

இருபுறத்திலும் வளைவாய் விரிந்து சென்ற வராந்தாவைக் கடந்து, நடுப் பாகத்திலிருந்த 'லிஃப்ட்'யும் படிகளையும் அடைந்தவனுக்கு எதிர்ப்புற வராந்தாவில் ஓர் அபூர்வமான காட்சி கண்ணில் பட்டது.

கீழ்வானம் சிவந்து, உதித்துக் கொண்டிருந்த சூரியனின் செந்நிற கிரணங்களில் செம்பாவையோ எனும் வண்ணம், உதயகால வானத்தை ரசனையுடன் நோக்கியவாறு மானசா நின்று கொண்டிருந்தாள்!

இந்தக் காட்சி தனக்கு வாழ்நாளில் எப்போதும் மறக்காது என்று எண்ணியபடி அவளை நோக்கிச் சென்றான் சசிசேகரன்.

அரவம் உணர்ந்து திரும்பியவளிடம், புன்னகையோடு முகமன் உரைத்து, ''ஜாகிங்' கிளம்பினேன். கடலை மிட்டாய் ஏதும் வாங்க வேண்டுமானால் சொல்லுங்கள்; வாங்கி வருகிறேன்!'' என்று சிரித்தான் அவன்.

மானசாவின் இதழ்களும் எழிலாக வளைந்து முறுவலைச் சிந்தின. ''நேற்று வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்போது, கிடைத்திருக்கும்போது சொல்லிவிடுகிறேன். நேற்று காட்டிக் கொடுத்துவிடாமல் கவனத்துடன் இருந்ததற்கு நன்றி'' என்றாள் தொடர்ந்து.

அவனது புருவங்கள் லேசாக மேலேழும்பின. ''அப்படியானால், நான் உங்களைக் காட்டிக் கொடுத்து விடக்கூடும் என்று மெய்யாகவே சந்தேகப்பட்டீர்களா?'' என்று கொஞ்சம் எடுப்பாகவே வினவினான்.

''வேண்டுமென்று காட்டிக் கொடுப்பீர்கள் என்று நான் எண்ணவில்லை'' என்றாள் மானசா அமைதியாகவே. ''ஆனால் பேச்சு வாக்கில் ஏதேனும் வார்த்தைகளை விட்டு விடலாமில்லையா? அதுகூட இல்லாமல், கவனத்துடன் இருந்து, என்னைக் காப்பாற்றியதற்காகத்தான் நன்றி சொன்னேன்.'' என்றாள் அவள் முறுவல் மாறாத முகத்துடனேயே.

அய்யோ! அண்ணனுக்குத் தெரிந்தவனான இவன், நம் பேச்சைத் தவறாக பொருள்கொண்டு கோபமடைந்து [illegible] பகிர்விடாமல், தான் நினைத்ததை

நிதானமாக அவள் தெளிவுபடுத்திய விதம் அவனைக் கவர்ந்தது. கூடவே, அவளது மெல்லிதழ்களில் நிலைத்திருந்த புன்னகையோடு, அவள் பேசுகையில், அவ்வப்போது பளிச்சிட்ட முத்துப் பற்களும்தான்.

எண்ணிப் பார்த்தால் ரொம்பச் சின்ன விஷயம்தான்.

ஆனால், எதற்கெடுத்தாலும் அஞ்சி நடுங்குகிறவள் என்று அவனால் எண்ணப்பட்டிருந்தவளின் திடமும் அமையியுமான போக்கு அவனுக்கு ஆச்சரியத்தோடு ஆனந்தத்தையும் அளிக்க, நின்று பேச்சுக் கொடுத்தான்.

''இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு இருக்கிறீர்களா? கர்நாடகாவை விடக் கேரளா அதற்குப் பிரசித்தம்'' என்றான்.

''இயற்கைக் காட்சிகள் எங்கேயும் நன்றாய்த்தான் இருக்கும். ஏனென்றால் அவற்றின் அழகை ரசிக்கும் ரசனை யாராலும் குறைக்கமுடியாது'' என்றாள் மானசா, திருப்தியோடு.

''அதெப்படி? இப்போதே, இதோ இந்த உதயத்தை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் உங்க முதுக்கு அழைப்பு வந்தால்?''

''வந்தாலென்ன? இவ்வளவு நேரம் நான் ரசித்தது இல்லையென்றாகி விடுமா? இதை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து மகிழ்வதைத் தடுத்துவிட முடியுமா? நேரமும் காக்கும் புதையலாய் இப்படி எத்தனை அழகிய காட்சிகள் என் ஞாபகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன, தெரியுமா?!'' என்று ஆனந்தத்தோடு அறிவித்தாள் அவள்.

சசிசேகரனின் வாயில் என்னமோ இருந்திருக்க வேண்டும். ஏனெனில், மானசா புன்னகையோடு கூறிக்கொண்டு இருந்தபோதே ''அத்தை...!'' என்று அறையின் உள்ளி

ருந்து அர்ச்சனாவின் தூக்கக் கலக்கத்துடன் கூடிய குரல் ''எனக்கு பிரஷ்சில் பற்பசை எடுத்து வைத்தாயா?'' என்று கேட்டது.

வினாடியில் மானசாவின் முகம் மாறியது.

சற்றுமுன் இருந்த இளஞ்சிரிப்பு மாயமாய் மறைந்தது. கல்போல உணர்ச்சியற்ற பாவனை பரவியது. ''இதோ வருகிறேன்'' என்று உரக்கக் குரல் கொடுத்தவள், சசிசேகரனிடம் மிகவும் லேசான தலையசைப்புடன் உள்ளே விரைந்து சென்று விட்டாள்.

அவள் சென்ற திசையைப் பார்த்தபடி சற்று நேரம் திகைத்து நின்றான் சசிசேகரன்.

இந்த மானசாவுக்குள் இருக்கும் இந்த இரண்டு பேரில் யார் உண்மையானவள்? முதுகெலும்பே இல்லாமல் புழு வாய் அடிபணியும் கோழை மானசாவா, அல்லது அமைதியும் தெளிவுமாகப் பேசும் ரசிகை மானசாவா?

கண்டறிவது மிகவும் முக்கியமானதாகத் தோன்றியது! அவனுக்கு.

6

அர்ச்சனாவுக்கு பற்பசை எடுத்துக் கொடுப்பதற்காக உள்ளே ஓடிச் சென்ற மானசாவுக்கு அதன் பிறகு, தனிப்பட்ட சிந்தனைகளுக்கு அவகாசம் இருக்கவில்லை.

பெரிதாக வெட்டி முறிக்கிற வேலை என்று ஒன்றும் இல்லை; ஆனால், பற்பசை எடுத்துக் கொடுப்பது, டவல் எடுத்து வைப்பது, அர்ச்சனா பல்துலக்கி வந்ததும் பிரஷ்சை வாங்கி உரிய இடத்தில் வைத்து விட்டுக் காபியை ஆற்றி,

அவளுக்குப் பிடித்தமான சூட்டில் கொடுப்பது, கூடவே சேர்த்து சிவாவுக்கும் கொடுத்துவிட்டு, ''எனக்கு நானே எடுத்துக் கொள்ளக்கூடத் தெரியாத முட்டாளா, நான்?'' என்று அவன் எரிந்து விழவும் காஃபி கப்பை வைத்துவிட்டு ஒதுங்கிச் சென்றது, அர்ச்சனா குளிப்பதற்காக வெந்நீர் தண்ணீர்க் குழாய்களைச் சரியான அளவில் திருப்பி வைத்து விட்டு, அவளுக்குத் துணிமணி எடுத்து வைத்து... என்று சிறு சிறு வேலைகளாக இருந்து கொண்டே இருந்தன.

பெரிதாகச் சொல்லிக் கொள்கிற அளவில் இங்கே வேலை எதுவும் கிடையாதுதான். என்றாலும், தனித்து நின்று, நினைத்துப் பார்ப்பதற்குத் தேவைப்பட்ட நேரம் அவளுக்குக் கிடைக்காமலேயே போயிற்று.

அர்ச்சனாவுக்கு எதையும் தானே செய்தால்தான் மானு வுக்கு நிம்மதி என்று சந்தியா கணவனிடம் நியாயமற்றுக் கூறியது கூட அவளை அதிகம் பாதிக்கவில்லை.

முன்தினம் போல முழுப் பட்டினி போட வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று எண்ணி, அன்று மானசா அதிகா லையிலேயே குளித்து விட்டிருந்தாள். ஆனால் அந்த எண்ணமே இல்லாதது போல' சந்தியா அவளையும் 'கிளம்பு கிளம்பு' என்றது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. கூடவே அண்ணியின் முகத்தில் நிலவிய திருப்தியைக் காண அனுபவ ரீதியாக அவளுக்குப் பயமாகக் கூட இருந்திருக்க வேண்டும்.

ஆனால் ஏதோ ஒருவித மனநிறைவு அவளுக்கும் இருக்கவே இதை அவ்வளவாகப் பொருட்படுத்தத் தோன்ற வில்லை.

எனவே, அவளால் இயன்ற அளவு ஆடை, அணிக ளைத் திருத்திக் கொண்டு, அண்ணன் குடும்பத்தோடு கிளம்பிச் சென்றாள்.

அங்கே அண்ணனுடைய விருந்தாளி, சசிசேகரனும் இருந்தான்.

உடன் வந்த மற்றவர்கள் யாரும் இல்லாதது போலப் பாவித்து, அவளைப் பார்த்து அவன் புன்னகை புரியவும், அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

உணவு முடிந்ததும் பங்களூரைச் சுற்றிப் பார்க்க வென்று எல்லோரும் கிளம்பினர்.

சிசிசேகரனையும் உடன் வருமாறு கதிரேசன் அழைக்க, அவனும் ஒத்துக் கொண்டான்.

எல்லோருமாக 'லால்பாக்'கை அடைந்து சற்று நேரம் சுற்றிப் பார்த்தனர்.

கண்ணுக்கெட்டிய தூரம் எல்லாம் பசுமையும் ஊடே வண்ண மலர்க் கூட்டங்களுமாகப் பார்க்கப் பார்க்க மானசா வுக்கு உள்ளூரப் பரவசமாய் இருந்தது.

ஆனால், இதை எவ்வளவு நேரம் ரசிக்க விடப்போகி றார்களோ என்று அவள் அஞ்சியதற்குச் சரியாக, ''எவ்வ ளவு நேரம் நடப்பது? எனக்குக் கால் வலிக்கும்... என்று தொடங்கினாள் அர்ச்சனா.

''என்னது? கால் வலிக்குமா? ஜோசியமா? சும்மா நட. உடம்பில் சேர்ந்து கொண்டு போகும் கொழுப்பு கொஞ்சம் கரையும்'' என்றான் சிவா எரிச்சலோடு.

''அதெல்லாம் நான் 'ஜிம்'முக்குப் போயே சரிப்படுத் திக் கொள்வேன். நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை'' என்று முகம் திருப்பினாள் அவனுடைய தமக்கை. ''இங்கே ஒரு பெரிய சுரிதார் கடை இருக்கிறது. இன்று அங்கே ஷாப்பிங் போகலாம் என்று அம்மா சொன்னார்களே! அதற்குப் போகாமல் இங்கே வெட்டியாக மட்டி மாதிரி எதற்குச் சுற்றுவது? திருப்பித் திருப்பி இலையையும் தழை யையும் பார்த்துக் கொண்டு ''

சந்தியா கணவனைக் குறிப்பாகப் பார்த்தாள். ''அது வும் நிஜம்தான். அந்தக் கடையில் விலையும் குறைவு என்று 'லேடீஸ் கிளப்'பில் பேசிக் கொண்டார்கள். இந்த ஆண்டு கல்லூரிக்கு வேண்டிய அளவு இங்கேயே வாங்கி விடலாம். பக்கத்திலேயே ஜீன்ஸ் கடை வேறு இருக்கிறது. சிவாவுக் கும் இந்த வருஷத்துக்கு நடப்புக்கு வேண்டியதை எல்லாம் மொத்தமாக இங்கேயே வாங்கிக் கொண்டு போய் விட லாம். நீங்கள் 'கிரெடிட் கார்டு' கொண்டு வந்திருக்கிறீர்கள் தானே?'' என்று விழிகளை விரித்துப் பதவிசாய்க் கேட் டாள்.

பாண்ட் பைக்குள்ளிருந்து டோக்கனையும், கார் சாவி யையும் எடுத்து மகனிடம் கொடுத்தான் கதிரேசன். ''போய்க் காரை எடுத்து வாசல் பக்கம் நிறுத்து. நாங்கள் இதோ வருகிறோம்'' என்று பணிக்கவும், பேசாமல் சாவி யையும் டோக்கனையும் வாங்கிக் கொண்டு முன்னே நடந்தான் சிவா.

சசிசேகரனிடம் திரும்பினான் கதிரேசன். ''பாருங்கள் சசிசேகரன், எங்கள் மானசாவுக்கு இயற்கையை ரசிப்பதில் ஆசை அதிகம். இந்தப் பூங்காவை அவள் இதற்கு முன் சரியாகப் பார்த்ததும் இல்லை. அவளுக்குத் துணையிருந்து, கொஞ்சம் சுற்றிக் காட்டுகிறீர்களா? நாங்கள் இந்த ஷாப் பிங்கை முடித்துக் கொண்டு முடிந்த அளவு சீக்கிரமாகத் திரும்பி வந்து விடுகிறோம்'' என்று கேட்டான்.

''பரவாயில்லை, அண்ணா... என்று ஓர் எட்டு முன்னே வந்த மானசா, அண்ணியின் பார்வையில் அப்ப டியே நின்றாள்.

''உனக்குத்தான் கடை-கண்ணிக்குப் போவது என்றால் பிடிக்காதே, விருப்பம் போல இலை தழைகளை ரசித்துக் கொண்டு நீ இங்கேயே இரு. நாங்கள் நாலுபேரும் போய் விட்டு வருகிறோம். அத்தோடு, மிஸ்டர் சசிசேகரன் என்ன

அன்னியரா? ரொம்பவும் வேண்டியவர்தானே? உன் ரசனையை அவருக்கும் கற்றுக்கொடு. என்று ஒருமாதிரிச் சிரித்து விட்டு, ''வா, அச்சும்மா நாம் போகலாம்'' என்று கிளம்பினாள்.

''கொஞ்சம் பொறு, சந்தியா'' என்று மனைவியை நிறுத்திய கதிரேசன் தங்கையிடம் திரும்பினான். ''மானாவுக்கு என்ன நிறம், மாடல் பிடிக்கும் என்று கேட்டுக் கொள். அவளுக்கும் வாங்கி வரலாமே!'' என்று கூறிவிட்டு சசிசேகரை ஒரு பார்வை பார்த்தான்.

'என் தங்கையை நான் ஒன்றும் அடியோடு ஒதுக்கிவிடவில்லை, பார்' என்றது அந்தப் பார்வை.

''சொல்லேன்... என்று அரைமனதாய்க் கேட்ட அண்ணியிடம் அடர்சிவப்பு, மஞ்சள், கிளிப்பச்சை இதெல்லாம் வேண்டாம் அண்ணி. சாம்பல் வண்ணம், மூயல் நிறம், மிளகாய்ச் சிவப்பு இப்படி ஏதாவது இருந்தால் நன்றாய் இருக்கும். அ...அப்புறம் பூ எதுவும் தைத்தது வேண்டாம். வெறும் 'பிளெயின்' என்றால் என்னை ஒல்லியாக அழகாகக் காட்டும் என்று நினைக்கிறேன்'' என்று அவசரமாகக் கூறி முடித்தாள் மானசா.

''சரி சரி. கிளம்புங்க, அம்மா. விட்டால் இவள் இன்று முழுவதும் சொல்லுவாள்...'' என்று எரிச்சலுடன் தாயின் கையைப் பற்றி அர்ச்சனா இழுக்க, அந்தக் கும்பல் அங்கிருந்து அகன்று சென்றது.

சற்று விசித்திரமாய் மானசாவை நோக்கி விட்டு, ''தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் வேண்டும் என்று சொன்ன நிறங்களை விட வேண்டாம் என்றவைதான் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. அத்தோடு, சும்மாவே நீங்கள் ஒல்லி என்று , ஏதாவது உள்ள சுரிதார் இன்னமும் நன்றாயிராதா?'' என்று தன் மனதில் பட்டதை எடுத்துச் சொல்லிக்

கொண்டு இருந்தவன், அவள் முகம் மாறிய வித்தில் திகைத்துப் பேச்சைப் பாதியில் நிறுத்தினான்.

குறும்பு கூத்தாட, மானசாவின் அழகிய கண்கள் பளிச்சிட்டன. ''அதுதான் வரும்'' என்றபோது அவளது முத்துப் பற்களும் பளீரிட்டன.

''எது...?'' என்றவன் சட்டெனப் புரிந்து கொண்டு, ''ஒகோ! இப்போது புரிகிறது'' என்று தானும் நகைத்தான். உடனேயே பார்வைகனிய, ''இப்படித்தான் - பிடித்தமானதைப் பிடிக்காதது போலக் காட்டித்தான் எப்போதும், உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதா?'' என்று விசாரித்தான்.

''ஊகூம்.'' என்று தலையாட்டினாள் அவள். ''அடிக்கடி செய்தால் கண்டு கொள்வார்களே! அதனால் எப்போதாவது - இப்படி அபூர்வமாய் எனக்கும் துணிமணி வாங்கும் போது...'' என்றவள் முகம் கன்ற மவுனமானாள்.

ஒரே ஒரு நாள் - வெறும் இருபத்து நாலு மணிநேரமே பழக்கமான ஓர் அன்னியன்! இவனிடம் போய் வீட்டு அவலங்களை எல்லாம் அளப்பதா?

ஆனால் சசிசேகரனை அன்னியனாகப் பாவிப்பதும் மானசாவுக்குச் சற்று சிரம்மாகவே இருந்தது. முன் பின் அறியாத போதும் முதலிலேயே அவனிடம் தான் சென்று உதவி கேட்கத் தோன்றியது.

ஆனால் அவனோ, அவள் தன்னை அன்னியனாக்கி ஒதுக்கும்படி விட்டுவிடக் கூடாது என்று எண்ணினான் போலும். அவளது தயக்கத்தைப் பாராட்டுகிறவன் போலக் கைதட்டி ''நல்ல வேளை! சரியான இடத்தில் பேச்சை நிறுத்தி விட்டீர்கள. இல்லை என்றால் உங்கள் அண்ணி வந்ததும் வராததுமாய் முதல் காரியமாக நீங்கள் சொன்

னதை எல்லாம் அவர்களிடம் ஒப்புவித்திருக்கமாட் டேனா?'' என்று பாவனையுடன் அவன் கூற, அவள் தன்னை மீறி நகைத்தாள்.

சிலநேரங்கள் அவள் சிரிப்பதை ரசனையுடன் பார்த் துக் கொண்டு இருந்தான் சசிசேகர். இந்தச் சிரிப்பு அவள் முகத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டியது அல்லவா?

''இன்றைய நிலைமையில் நான் சில விவரங்களை அறிய விரும்பினால், அதுபற்றித் தவறாக எடுத்துக் கொள் வதற்கு இல்லை என்று நினைக்கிறேன். ஏன் மானசா, உங்கள் அண்ணிக்கு... அண்ணன் மகளுக்கு நீங்கள் ஏன் இப்படி அடிபணிந்து போக வேண்டும்? துணிந்து நிமிர்ந்து நிற்பதற்கென்ன? எதையும் மிஸ்டர் கதிரேசனிடம் நேரடியா கப் பேசலாமே! அவர் உங்கள் உடன்பிறந்த அண்ணனல் லவா?'' என்று கேட்டான் சசிசேகரன்.

முதல் நாள், கடலை உருண்டைக்காக முன்பின் அறி யாத இவனை அணுகியது தவறா என்று ஒருகணம் மானசாவுக்குத் தோன்றி விட்டது. அப்போது உதவி செய்த காரணத்தினால் அல்லவா இப்படி ஓர் உரிமை எடுத்துக் கேட்கிறான்?

ஆனால், அவன் அப்போது மட்டும் உதவி புரிய வில்லை. இரவு உண்ணும் போது கூட அவன் உதவியினால் தான் முக்கால் வயிறேனும் நிரம்பியது. அதைவிடவும், இவனை நம்பிப் பலமணி நேரம் - அர்ச்சனாவும் அண்ணி யும் 'ஷாப்பிங்' போனால் அது முடியப் பல மணிநேரம் ஆவது சர்வநிச்சயம். அவ்வளவு நேரம் இவன் துணை யில் விட்டு விட்டுப் போவதானால் இவன் அண்ணனுக்கு வேண்டியவனாக - நெருங்கியவனாகவே இருக்க வேண்டு மல்லவா? அதனாலும் உரிமை எடுத்துக் கொண்டிருக்க

லாமே என்று தோன்றவே அவனை ஏறிட்டு நோக்கினாள் மோனசா.

அண்ணனுக்கு வேண்டியவன் என்றால் இவனிடம் எந்த அளவு சொல்லலாம்?

ஆனால், சசிசேகரனின் கண்களில் இருந்த உண்மை மோன அக்கறையினால் அவனை வேறுபாடாக எண்ணத் தோன்றாமல், ஏதோ சொந்தம் போன்ற உணர்வை ஏற்படுத்தவும், மெல்லிய குரலில், ''முதலில் ஓரிரண்டு முறை முயற்சித்தேன்... என்றவளுக்குப் பழைய நினைவில் விழிகளில் நீர்த்திரையிட்டது.

ஒருதரம், இப்படித்தான் ஓர் அழகிய சுரிதார் செட்டை காட்டி அண்ணனிடம் அவள் கேட்கக் கதிரேசனும் தங்கைக்கு அதை வாங்கிக் கொடுத்து விட்டான்.

ஆனால் அதைத் தாயார் படத்தின் முன் வைத்து வணங்கி விட்டு மறுநாள் அணிந்து கொள்ள எடுத்த போது மோனசா அடைந்த அதிர்ச்சி!

சுரிதாரில் முக்கியமான இடங்களில் நைந்து கிழிந்திருந்தது சொரசொரப்பான கல்லால் அடித்துத் தேய்த்துக் கிழிக்கப்பட்டிருக்க வேண்டும். இதைத் தைப்பது மிகவும் கடினம். மறுத்து அணிந்தாலும் அசிங்கமாகத் தோன்றும்.

விக்கித்துப் போய் வேறு அணிந்து கொண்டு சென்றாள், ''சொல்லச் சொல்ல வாங்கிக் கொடுத்தீர்களே, அவருக்கு ஒழுங்காகத் தேர்ந்தெடுக்கவே தெரியாது. அணிந்து பார்த்துவிட்டு அசிங்கமாக இருக்கிறது என்று கழற்றிப் போட்டிருப்பாள். இப்படி ஊறுகாய் போட ஆயிரம் ரூபாய் செலவு!'' என்று கணவனிடம் மூட்டிக் கொண்டே இருந்தாள் சந்தியா.

பொறுக்கமாட்டாமல் போனபோதும், அது கிழிந்திருந்த இடத்தால் அதை அண்ணனிடம் காட்டக் கூசி,

அண்ணியிடம் எடுத்து நீட்டிப் ''பாருங்கள் இதை எப்படி அணிவது?'' என்று ஆத்திரத்துடன் முறைத்தாள். அண்ணியை நேரடியாக விசாரித்துத் தலைகுனிய வைப்பதாக அவளுக்கு எண்ணம்.

ஆனால், ''இந்த இடத்தில் இப்படி எப்படியடி கிழித்தாய்? ஏதாவது நினைவில் எங்கேனும் போய் உரசிக் கொண்டு நின்றாயா?'' என்று அவள் ஒருமாதிரிப் பார்க்க, மானசாவுக்கு உடல் கூசிக் குறுகி விட்டது. கூச்ச நாச்சமெல்லாம் அவற்றை உடையவர்களுக்குத்தானே?

இன்னொரு தரம், வீட்டில் 'பட்டர் சிக்கன் மசாலா' செய்து மானசாவுக்கு இல்லாமல் உண்டு முடித்து விட்டார்கள் என்ற குமுறலில், அண்ணனிடம் 'பட்டர் சிக்கன் மசாலா' வாங்கி வரச் சொன்னாள் அவள்.

கதிரேசன் மறுக்காது வாங்கி வந்ததை ''தட்டில் வைத்துத் தருகிறேன்'' என்று பிரியம் போல நடித்து இடையில் வாங்கி, மானசா மட்டும் பார்க்கும் விதமாய் அதில் எச்சியைத் துப்பிப் புரட்டி, சாப்பாட்டு மேஜையில் மானசா முன் வைத்து, 'சாப்பிடு சாப்பிடு' என்று உபசரித்தாள் சந்தியா.

எப்படி உண்பது? அண்ணனிடம் நடந்ததைச் சொன்னால் கூட, அண்ணியின் உபசாரத்தில் மானசா சொல்வது தான் பொய் போலத் தோன்றும்.

விக்கித்துக் கண்கலங்க நின்றவளுக்கு, மறைவதற்குச் சில தினங்கள் முன்பாகத் தாயார் சொன்னவை ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன.

அப்போது அர்த்தமற்றதாகத் தோன்றிய அன்னையின் வார்த்தைகள் அத்தனையும் ஓராயிரம் அர்த்தங்களை அடக்கி வைத்திருப்பதாக இப்போது தோன்றின.

கடைசியாக அன்னை திருப்பித் திருப்பிச் சொன்ன புத்திமதியை நினைவுற்று, அண்ணனின் வசவையும்

சேர்த்து வாங்கிக் கொண்டபோதும், வாயே திறக்காமல் பேசாதிருந்து விட்டாள்.

இந்த இரு நிகழ்ச்சிகளின் விளைவாக, மானசா அவ ருடைய அண்ணனிடம் எதையும் கேட்பதே இல்லை; அவள் அண்ணனும் அவளுக்கென்று எதையும் வாங்கிக் கொடுப்பதும் இல்லை என்று ஆயிற்று.

அப்படி ஓர் உறுதிமொழியைக் கணவனிடம் பெற்றுக் கொண்டு விட்டாள் சந்தியா.

இதை எல்லாம் சசிசேகரனிடம் முழுக்கச் சொல்ல மனம் கூசி, சொல்ல விருப்பமும் இன்றி, "அண்ணனிடம் நேரடியாக நான் ஏதாவது கேட்டு வாங்கினால் அது பாழாகிவிடும்! துணி என்றால் கிழிந்து விடும் உணவுப் பண்டங்கள் என்றால்... எப்படியாவது கெட்டுவிடும்" என்றாள் அவள் சுருக்கமாக.

முன்தினத்து மரத்த குரல் நினைவு வர, "மிஸ்டர் சுதிரேசனிடம் நீங்கள் முறைப்படி சொல்லலாமே!" என் றான் அவன்.

விழியகல அவனை வெறித்து நோக்கினாள் மானசா.

அண்ணியைப் பற்றி இவனுக்குத் தெரியவில்லை; தெரிந்தால் பிறகு இப்படிப் பேசமாட்டான் என்றது அவள் மனம்.

ஆனால், சந்தியாவின் குணம் புரிந்து, சர்வ ஜாக்கிர தையாக நடந்து கொள்கிறோம் என்று எண்ணியிருந்த அவளும், அப்படி ஒன்றும் சரியாகத் தெரிந்து கொண்டி ருக்க வில்லை என்பதைக் கிட்டத்தட்டத் தன் வாழ்வையே தோற்று விட்ட பிறகுதான் மானசாவும் அறிந்து கொள்ள நேர்ந்தது.

7

மானசாவை, அவளுடைய அண்ணி சந்தியாவுக்கு அடியோடு பிடிக்கவில்லை என்பதைச் சசிசேகரன் முதல் சந்திப்பின் தொடக்கத்திலேயே ஊகித்து விட்டான்.

அதை இதைச் சொல்லிக் கணவனை ஏமாற்றி, நாத்தனாரை அவள் கொடுமைப் படுத்துவதையும் உணர்ந்து கொண்டிருந்தான்.

அழகில் குறைந்த மகளைப் பெற்றவள், கிட்டத்தட்ட மகள் வயதிலான அழகிய நாத்தியிடம் பொறாமையும் வெறுப்பும் கொள்வது இயற்கையே! அத்தோடு. மானசாவின் பெற்றோர் இருந்தவரையில் அவள் அவர்களது கண்ணின் கருமணியாகவும் இருந்திருப்பாள். இதுவும் சந்தியாவிடம் வெறுப்போடு ஆத்திரத்தையும் அதிகப் படுத்தியிருக்கும் என்பதும் அவனது அனுமானம்.

இரத்த சம்பந்தம் அற்ற சந்தியா எந்தவிதக் கொடுமைக்கும் துணியக் கூடும்தான்.

ஆனால் கூடப்பிறந்த அண்ணன்? இந்த அழகிய முகஅமைப்புகள் சிறு வயதிலும் மனதைக் கொள்ளை கொள்ளுவனவாகவே இருந்திருக்கும். இந்த அண்ணனும் அதைப் பெருமையுடன் போற்றியிருப்பான் தானே? அந்தப் பாசம் எங்கே போய்விடும்? ஒரே ரத்தம் வேறு?

அந்தப் பாசம் அடியோடு வற்றிவிட வில்லை என்பதே சசிசேகரனின் கணிப்பு. மனைவியின் சாமர்த்தியத்தினால் வெகுவாக மறைக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பாசம் மறையவில்லை என்பதைக் கதிரேசனின் சில நடவடிக்கை

கள் காட்டியதாகவே அவனுக்குத் தோன்றவும், அந்த அண்ணனை அணுகித் தன் அல்லலை நீக்கிக் கொள்ளாமல், இந்தப் பெண் ஏன் வீணாக அவதிப்பட வேண்டும்.

குடும்பத்தின் தலைவன் மானசாவுடைய அண்ணன். வெளியே தொழிலை நடத்தி, வீட்டின் தேவைகளை நிறை வேற்றுவதே அவனது தலையாய கடமை. அதைத்தான் அவனால் முழுமையாகக் கவனிக்க முடியும். வீட்டு நிலவ ரங்களில் தகராறு இருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் அதை அவனிடம் கொண்டு சென்றால்தானே அவனால் அதைச் சரியான வகையில் தீர்த்து வைக்க முடியும்? இதுவே அவனது கேள்வியாக இருந்தது.

ஒரு வினாடிச் சறுக்கலாக அண்ணியைப் பற்றி இவனி டம் வாயை விட்ட கணத்தை உள்ளூர நொந்தபடி, "அண் ணியைப் பற்றி அண்ணனிடம் கோள்மூட்டுவதா? கணவன் மனைவிக்குள் கலகமூட்டுகிறவர்கள் இருபத்தியொரு பிற விகள் பால்ய விதவையின் பாடுபட நேரும் என்று மனுதர் மம் கூறுகிறது தெரியுமா?" என்று புருவம் உயர்த்திப் பாவனையுடன் உரைத்தாள் மானசா.

"உண்மைக் காரணம் அதுவல்ல என்பது தெளிவா கவே தெரிகிறது. சொல்ல விருப்பம் இல்லையென்றால்... என்று தோளைக் குலுக்கிவிட்டுத் திரும்பினான் சசிசேகரன்.

அதுவும் தாங்காமல், "காரணம் என் அம்மா." என் றாள் மானசா.

"அம்மா?!" என்றான் அவன் வியப்பும் கேள்வியு மாக.

"ஆமாம். என் அம்மாவேதான்." என்ற மானசாவுக் குத் தொண்டை அடைத்தது. எத்தனை மன நோவை உள்ளே அடக்கிக் கொண்டு, இரண்டும் கெட்டான் வயது மகளிடம், அதுவும் அன்று வரை துன்பத்தின் சாயையைக் கூட - துன்பத்தின் சாயை மட்டுமல்ல; பொய் புரட்டு கள்ளத்

தனத்தின் சாயை கூட அறியாது வளர்ந்த செல்ல மகளுக்குப் புரியும் விதத்தில் எப்படிச் சொல்வது என்று புரியாமல் திகைத்துத் திணறி எப்படி எப்படியோ யோசித்து என்னென்னவோ சொன்னவள் அப்போதும் மகள் தாயின் புத்திமதியை எந்த அளவு உணர்ந்தாளோ? எந்த அளவு ஏற்றாளோ என்ற கவலையில் திருப்பித் திருப்பி உரைத்து உரு ஏற்றிய முக்கியமான விஷயம் இதுதான்.

சந்தியா என்ன சொன்னாலும், எத்தனைவிதமாகச் சீண்டினாலும் அத்தனையையும் மானசா பொறுத்துப் போய் விட வேண்டும். அண்ணன் கதிரேசனைச் சுற்றி சந்தியா, அவளுடைய உறவினர் என்று ஒரு வியூகமே இருக்கிறது. அதைத் தாண்டி அண்ணனை நெருங்கி மானசா வெற்றி பெறுவது கடினம்.

அண்ணியோடு நேருக்கு நேர் எதிர் நின்றால் கடைசியாக மானசா அனாதையாக அந்த வீட்டை விட்டே வெளியேற நேரக்கூடும். வேறு போக்கிடம் இல்லாததால், அந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்படாது தவிர்ப்பதுதான் மானசாவின் தலையாயபொறுப்பு. அதற்காக அவள் மிகவும் பொறுமையோடு, எந்த அவமதிப்பையும் கொடுமையையும் சகித்துப் போய்விட வேண்டும்...

இதைத் தாயார் திருப்பித் திருப்பிச் சொல்லியிருந்தபோதும் அனுபவமின்மையும் சிறுவயதும் காரணமாக, மானசா இருமுறை அண்ணியை எதிரிட்டு அண்ணனை அணுகி, பலமான சூடுபட்டுக் கொண்டாள்.

ஆனால், அவள் புத்திசாலிப் பெண் என்பதால், அந்த இரண்டே அனுபவங்களில், தாயின் தவிப்பும் பேச்சும் புரிந்து போய்விட அப்படியே தன்னுள்ளே ஒடுங்கி ஒதுங்கி விட்டாள்.

இன்றுவரை அவள் தன்னுள்ளே வைத்திருந்ததுதான். ஆனால் இப்போது, நேற்றுத்தான் அறிமுகமான ஒருவன்,

முகம் திருப்பியது தாங்காமல் அவனிடம் தன் வேத னையை, அவள் கூறும்படி ஆயிற்று.

மறுக்காமல் உண்மை உரைத்தபோதும், அவள் முன் போலவே அதை ரத்தினச் சுருக்கமாக உரைத்த விதமும், முகத்தின் கன்றலும் அவள் மனதைச் சசிசேகரனுக்கு உணர்த்திவிட, என்னிடம் இவளுக்கு ஏன் இந்தத் தயக்கம் என்று எண்ணி விட்டு உடனே திடுக்கிட்டான்.

அன்றைய நிலையில் அவன் அவளுக்கு அன்னியன் தானே. திருமணப் பேச்சு இருக்கிறது என்பதால் மட்டும் அவள் மனதில் இருப்பதை எல்லாம் அவனிடம் கொட்டி விட வேண்டும் என்று அவனால் எப்படி எதிர்பார்க்க முடிந்தது?

கூடவே, இந்தப் பெண் கேட்டால் மறைப்பதற்கு அவனிடமும் ஒன்றுமில்லை போலவும் தோன்றியது முத லில் வியப்பூட்டிய போதும், உடனேயே ஓர் உவகையும் உண்டாயிற்று.

இந்த எதிர்பார்ப்பும், உவகையும் விளக்கிய சேதியை முதலில் அவனால் நம்பக்கூட முடியவில்லை.

இந்த ஒல்லியான, உலகமறியாத பெண்...!

வியப்புடன் அவன் அவளை ஏற இறங்கப் பார்க்கவும் அவளுக்கு ஊகித்து, ''உண்மையும் பொய்யும் அதைப் பெரி தாக நினைப்பவர்களுக்குத்தானே? தன் விருப்பமே பெரி தென்று நினைக்கிறவர்கள் பொய்யை காரியம் சாதிக்கும் கருவியாகக் கருதுகிறார்களே தவிர, அதை ஒரு குற்றமாக பஞ்சமா பாதகங்களில் ஒன்றாக எண்ணுவதே இல்லை'' என்று தன் அண்ணியின் செயல்களை அவள் ஊகித்தவித மாய் விளக்கினாள்.

சந்தியா விஷயத்தை அப்படியே விடுத்து, சசிசேகரன் மானசாவைப் பற்றி அறிய விழைந்தான்.

பெற்றோரை இழந்து விட்ட பதினாறு வயதுப் பெண் - போக்கற்றவள் என்கிற திமிரில் திடுமெனக் கொடுமைக்காரியாக மாறிவிட்ட அண்ணியால் எவ்வளவு துன்புற்றிருக்க வேண்டும்?

முதலில் திகைத்து மலைத்துத் திணறியிருப்பாள் பாவம்!

எவ்வளவு அழுதாளோ என்று அவன் மனம் கசிந்தது.

அல்லது...

''அண்ணி இப்படி அநியாயமாய்க் கொடுமை புரியும் போதெல்லாம் நீ எப்படிச் சகித்தாய், மானசா? உன்னைப் பார்த்தால் அடுத்தவர்முன் அழுகிற வகையாய்த் தெரிய வில்லை...?''

சட்டென அவளது விழிகள் பளிச்சிட்டன.

''நன்றாகத் திட்டி விடுவேனாக்கும்!''

அவனது பார்வை கேள்வியும் வியப்புமாய் நோக்கவும், சட்டென முகத்தில் குறும்பு நகை மிளிரத், ''தனியாக இருக்கும்போது அறைக்குள் உள்ளே பூட்டிக் கொண்டு அண்ணியை அர்ச்சனாவை எல்லாரையும் நன்றாகத் திட்டி விடுவேன்!'' என்று அவள் விளக்க, அவன் விழுந்து விழுந்து நகைக்க, கூடவே மெல்லருவியாய் அவளது சிரிப்பொலியும் இணைந்து ஒலிக்கலாயிற்று.

இந்தச் சிரிப்பை வாடவிடாமல் அவனால் காப்பாற்ற இயலும்! நிச்சயமாக முடியும்!

''குளியல் அறைப் பாடகி மாதிரியா? உங்கள் துணிச்சல் வேறு யாருக்கு வரும்?''

சிரித்துக் கொண்டு இருந்த போதே, ''வாருங்கள், பூங்காவைச் சுற்றிப் பார்க்கலாம்.'' என்று சசிசேகரன் கூற, இருவரும் மேலே நடந்தார்கள்.

நல்ல குண்டாகச் சதை மலைபோல இருந்த ஒருவர் அங்கே 'ஜாகிங்' செய்து கொண்டு இருந்தார்.

அவரைக் குறிப்பால் காட்டி, ''இவரது காலை உணவு, பத்து முட்டை, இரண்டு கோழி, ஒரே ஒரு கிலோ மட்டன் மட்டும்தான் என்கிறேன். என்ன சொல்கிறாய்?'' என்று சிரியாமல் கேட்க அவள் அடக்கமாட்டாமல் நகைத்து விட்டு, ''ஒருகிலோ பாதாம், பிஸ்தாப் பருப்பும் சேர்த்து என்கிறேன். என்ன பந்தயம்?'' என்று சவால் விட அவனும் சிரிக்கலானான். ''தோற்பதற்காக ஒரு பந்தயமா?'' அம்பேல் தாயே!''

சற்று நேரம் சிரித்து முடித்து விட்டு, ''பாவம்! உடம்பு மெலிய, இந்த பெங்களூர் மிதக் குளிரில் கூட வியர்த்துக் கொட்டும்படி இந்தப் பாடுபடுகிறார்! அவரைப் பார்த்து சிரிப்பது நியாயமே ஆகாது!'' என்று இரங்கினாள் மானசா.

''அதிகம் உண்பானேன்? அவதிப் படுவானேன்? உண்ணும் போதே கொஞ்சம் பெல்ட்டை இறுக்கிக் கட்டிக் கொண்டால் இந்தப்பாடு ஏன்?'' என்று அவன் வாதிடவும், சற்றுத் திரும்பி, பக்கவாட்டில் பார்வையைச் செலுத்திய மானசா பிரமித்தாள்.

செதுக்கி வைத்தாற்போல, என்ன ஓர் உடல்கட்டு இந்த சசிசேகரனுக்கு!

வைரம்பாய்ந்த தேக்கிலே செய்த மாதிரி உறுதியே உருவாக ஒரு தோற்றம். அளவான உணவு, கூடவே தேவையான உடல் பயிற்சி என்று பறைசாற்றின.

தன் ஒல்லி உடலைச் சிறு குறையோடு மானசா நோக்கியபோது, தூரத்தில் சென்று கொண்டிருந்த ஒரு ஜோடியைக் காட்டி, ''கொத்தவரங்காயும் குண்டு கத்தரிக்காயும் போலக் கனபொருத்தம்!'' என்று வர்ணித்தான் சசிசேகரன்.

முறுவலித்தபடி, அவனோடு அந்த வேடிக்கை பேச்சில் தானும் இணைந்து, ''அந்த ஜோடி பார்த்தீர்களா? ஒரே மாதிரி அசைந்து அசைந்து நடக்கிறார்கள்! முன்பிறவியில் யானையாக இருந்திருப்பார்கள்!'' என்றாள்.

இது ஒரு நல்ல விளையாட்டு போல இருவருமே மிகுந்த ஈடுபாட்டுடன் கண்ணில் பட்ட ஜோடிகளை எல்லாம் கண்டபடி விமரிசிக்கலாயினர்.

இது சதம் போட்ட ஜோடி; இது தள்ளிக் கொண்டு வந்தது; இது வீட்டிலேயே சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள், இங்கேயும் தொடர்ந்து ஜமாய்க்கிறார்கள்! இவர்கள் நவக்கிரக ஜோடி, ஆளுக்கு ஒரு பக்கம் பார்க்கிறார்களே!... என்று ஏதாவது வர்ணனைகளை இருவரும் போட்டிபோட்டுக் கொண்டு கூறி மகிழ்ந்தார்கள்.

இப்படியே பேசிக் கொண்டு இருந்தவர்களுக்குத் திடுமென, நாமும் ஆணும் பெண்ணுமாய்த்தான் வந்திருக்கிறோம்; நம்மையும் யாரும் ஏதும் எண்ணியிருப்பார்களோ என்று தோன்றவும் சட்டெனப் பேச்சு நின்றது.

அதற்கு ஏற்றாற்போல, ''இவர்கள் இரண்டு பேரும் நல்ல பொருத்தம்; பெண்தான் கொஞ்சம் மெலிவாய்த் தெரிகிறாள். 'உண்டாயிருக்கிறாளோ என்னமோ?'' என்று சற்றுத் தெளிவாகவே யாரோ கூறவும் மானசாவின் முகம் குங்கும நிறமே கொண்டு விட்டது.

சசிசேகரனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் மானசா திணறிக் கொண்டிருந்த வேளையில் நல்ல வேளையாகக் கடைக்குச் சென்றிருந்த குடும்பம் திரும்பியது. அர்ச்சனாவுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையாம். எல்லாம் ரொம்பவும் மலிவு தினுசாம்.

''இதோ, உனக்கென்று அண்ணி தேர்ந்தெடுத்தது,'' என்று இரண்டு பாக்கெட்டுகளைத் தங்கையிடம் கதிரேசன் கொடுத்தான்.

மஞ்சளும், கிளிப்பச்சையும்!

இருவரின் பார்வையும் சங்கேதமாய்ச் சந்தித்துப் பிரிந்தன.

அன்றிரவு கதிரேசனிடம் அவனுடைய தங்கையை மணக்கத் தன் ஒப்புதலைச் சசிசேகரன் தெரிவித்தான். ''உங்கள் தங்கையை அவளுக்காகவே மணந்து கொள்ள விரும்புகிறேன், மிஸ்டர் கதிரேசன் அவளது நகைகளுக்காக அல்ல. அது ஒரு கூடுதல் நன்மை அவ்வளவே!'' என்றான் அவன்.

8

கதிரேசனுக்கும் மிகுந்த மகிழ்ச்சியே!

அதை மறையாமல் சசிசேகரனிடம் வெளிப்படுத்திய வன் உடனேயே, சசிசேகரனின் 'கூடுதல்' நன்மை பற்றிய விவரம் உரைத்தான்.

''எங்கள் தாயார் அதை வக்கீல் வசம் ஒப்படைத்த போதே அந்த நகையின் மதிப்பு இருபத்தைந்து முப்பது லட்சம் பெறுமானம் உடையவை. இப்போது எழுபதிலி ருந்து எண்பது லட்சங்கள் பெறும் என்பது நிச்சயம். அதனால் ஐம்பது லட்சம் வரை என்னால் நிதி உதவ முடியும்'' என்றான் விளக்கமாக.

''எனக்கு நாற்பது போதும்'' என்றான் சசிசேகரன் சுருக்கமாக.

அவனுக்கு உள்ளூர ஓர் உறுத்தல். பொதுவாக ஒரு பெண்ணோடு வரக்கூடிய செல்வத்தைக் கணக்கிட்டு வரப் போகும் மனைவியைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது

அவனது அபிப்பிராயம். இப்போதும் அந்தக் கொள்கையில் அவன் மாறுபடவில்லைதான். ஆயினும் மானசாவின் நகைகளுக்காக மட்டிலுமாக அவளை மணக்க அவன் முடிவு செய்யவில்லை என்றபோதும், அவளுடன் வரக்கூடிய அந்த நகைகளை மதிப்பிடுவது, அவற்றின் மேல் கிடைக்கக் கூடிய பணம் பற்றிப் பேசுவது எல்லாவற்றுக்கும் அவன் மனம் முரண்டியது.

ஆனால் இதற்கு மானசாவும் அவளுடைய குடும்பமுமே சம்மதிக்கும் போது - சம்மதிப்பது என்ன? இந்த யோசனையைக் கூறியதே மானசாவுடைய அண்ணன் தானே? அப்படியிருக்கும்போது, சசிசேகரன் இதுபற்றிக் கவலைப்படத் தேவையே கிடையாதுதான். அத்தோடு...

''புதிய தொழிலில் மானசாவுக்குச் சமபங்கு கொடுக்கப் போகிறேன்; ஆனால் கடன் பொறுப்பு என்னதே'' என்றான் திடுமென.

''நல்லது'' என்றான் கதிரேசன். கூடவே தொடர்ந்து, ''இன்னும் ஒன்று, மானசாவின் நகைகள் அவளது திருமணத்தன்றுதான், திருமணம் முடிந்த பிறகுதான் அவள் கைக்குக் கிடைக்கும். அதன்பிறகு நகைகளை மறுமதிப்பீடு செய்து, மீண்டும் மத்தியஸ்தத்தில் மதிப்பிட்டு பத்திர வேலைகள் முடிந்து உங்களுக்குப் பணம் கைக்கு வர, மேலும் ஒரு வாரம் - பத்து நாட்கள் ஆகும். அதற்குள்ளாக நீங்கள் தேனிலவை முடித்துக் கொண்டு வந்து விடலாம்'' என்று யோசனை சொன்னான்.

''மானசாவுக்குப் 'பாஸ்போர்ட்' இருக்கிறதா? இல்லையென்றால் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். திருமணத்தை ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் என்னோடு அழைத்துப் போவது சிரமமாகிவிடும்... அதற்குள் நானும் எங்கள் ஊர்வரை சென்று வருகிறேன். சேலை, தாலி எல்லாம் வாங்க வேண்டுமே..''

''அதற்காக நீங்கள் சிரமப்பட வேண்டாம். திருமணச் செலவோடு சேர்த்து நானே... உதவுவதாக எண்ணிப் பேசிய கதிரேசனின் பேச்சு மற்றவனின் முகம் மாறிய விதத்தில் தடைபட்டு நின்றது... ''வந்து, இந்த நிலைமை யில் உங்களுக்கு ஏன் வீண் செலவு என்று... '' என்று சமாளிக்க முயன்றான்.

''என்னை என்ன, வெறும் 'பாப்பா' என்று எண்ணி விட்டீர்களா? நாற்பது லட்சம் போட்டுத் தொழில் தொடங்க சக்தியில்லாமல் நான் கடன் வாங்க இருப்பது உண்மை தான். ஆனால் மனைவிக்குத் திருமணச் சேலை, திருமாங் கல்யம் வாங்கக் கூட வகையில்லாதவன் என்றா என்னை நினைத்தீர்கள்? அப்படி மதிப்பிட்டும் உங்கள் தங்கையை எனக்குத் தர முன்வருகிறீர்கள் என்றால் அது மிகவும் ஆச்சர்யம்தானே!'' என்று, குரலை உயர்த்தாமலே கோபம் காட்டினான் சசிசேகரன்.

ஒரு சிறு சங்கடமான அமைதியின் பின், ''அது அப்படியில்லை, மா... மாப்பிள்ளை. நீங்கள் கடன் வாங்கு வதும் திருப்புவதும் தொழில் விஷயம். வட்டி வாங்கிக் கொள்கிறேன் இல்லையா? ஆனால், வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும்போது சில பல செலவுக ளைப் பெண் வீட்டார் ஏற்றுச் செய்வதுதானே வழக்கம்? அந்த முறையில்தான் நான் செலவேற்க முன்வந்தது... என்று அவனைச் சமாதானம் செய்யக் கதிரேசன் முயன் றான்.

மாப்பிள்ளை முறுக்கிக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது என்று எண்ணினாரோ, என்னவோ! வயதிலும் செல்வத்திலும் அவனது உயர் நிலைக்கு கதிரே சன், சசிசேகரனிடம் மிகவும் பணிந்தே பேசினான்.

உள் விளக்கத்தை நான் ஒத்துக் கொள்ளவில்லை என்று காட்டுவது போல ஒரு சிறு இடைவெளி விட்டு,

''ஊரில் எனக்கு இன்னமும் கொஞ்சம் நிலபுலன்கள் இருக்கின்றன. இடையே பண்ணை வீடும் இருக்கிறது. நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பவரிடமே வீட்டையும் வாடகைக்கு விட்டிருக்கிறேன். குத்தகைப் பணம், வாடகைப் பணம் என்று அது தனியே சேர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அது என் தேவைக்கு மிச்சமாகத்தான் இருக்கிறது. அதனால் இதுபோன்ற என் செலவுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றான் தெளிவாக.

''ஓகே! உங்கள் விருப்பம்!'' என்று கதிரேசன் ஒத்துக் கொண்டுவிட, தொடர்ந்து பேசிய சசிசேகரனின் குரலில் சற்று முன் இருந்த அழுத்தம் மறைந்து மீண்டும் சாதாரணமாயிற்று.

அந்தச் சாதாரணமான குரலும் கூட மென்மையுற, ''நீங்கள், உங்கள் தங்கையிடம் எல்லாவற்றையும் விளக்கமாகவே பேசி அவளது சம்மதம் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். இன்றைய அளவில் என் வீட்டில் என் அன்பு அவளுக்கு மிகுதியாகக் கிடைக்குமே தவிர, உங்கள் வீட்டளவு வளத்தை அவள் எதிர்பார்க்க முடியாது. ஓரிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் என்னால் பார்த்துக் கொள்ள முடியும் என்றாலும், இன்றைய நிலைமையையும் அவள் நன்றாக அறிந்து கொண்டு அதன் பின் அவள் முடிவு செய்வதே நல்லது. அதை நீங்கள் சொன்னால் அவளுக்கு நம்புவதற்கு எளிதாக இருக்கும்...'' என்று பேச்சை முடிக்காமலே எதிரில் இருந்தவனைப் பார்த்தான்.

''மானசாவின் விருப்பத்தை நானே கேட்டு விடுகிறேன்'' என்று பதிலிறுத்தான் கதிரேசன். ''ஆனால், அவள் உங்களை மறுக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை. நேற்று திரும்பிவரும்போது பூங்காவில் முதல் வளைவின் தொடக்கத்திலேயே நான் உங்களைப் பார்த்தேனே! என் தங்கை இப்படி ஒருவரிடம் பேசிச் சிரித்து நான் கண்டதே கிடையாது!''

பூங்காப் பேச்சை நினைக்கையில் சசிசேகரனுக்கு இப் போதும் முகத்தில் முறுவல் அரும்பியது. கூடவே கதிரேசன் தவறாக எண்ணுவது பிடிக்காமல், ''அது வருகிறவர்கள் போகிறவர்களைப் பற்றிச் சும்மா வர்ணித்துக் கொண்டிருந் தோம்... என்றான்.

''அதைத்தான் சொல்லுகிறேன். அந்த அளவு கூட மானசா யாரிடமும் கலந்து பழகியது இல்லை. உங்களிடம் ஏதோ ஒருபிடிப்பு ஏற்பட்டு விட்டதாலேயே இப்படிப் பேசிச் சிரித்திருக்கிறாள்'' என்று மீண்டும் தான் முன்பு சொன்னதையே கதிரேசன் வலியுறுத்திப் பேசினான்.

லேசாகத் தோளைக் குலுக்கி, ''அப்படியிருந்தால் மிகவும் நல்லதுதான். ஆனாலும் அவளிடம் விவரம் சொல் லியே ஒப்புதல் கேளுங்கள். மேலும்... என்று ஒன்று சொல்ல வாயெடுத்துவிட்டு நிறுத்திக் கொண்டான் சசிசேக ரன். மானசாவை அவன் வீட்டில் யாரும் பட்டினி போடா மாட்டார்கள் என்று சொல்லும்படி அவள் அண்ணனிடமே எப்படிக் கூறுவது? இருக்கட்டும். அதையெல்லாம் அவன் வீட்டுக்கு வந்தபின் அவள் அனுபவித்தே அறிந்து கொள் ளட்டும்.

''மேலும் அவளை நான் மணக்க விரும்புவதாகவும் சொல்லுங்கள். அவளும் சம்மதப்பட்டால் என்றால் திடு மென வேலைகளை உடனே தொடங்கிவிடுங்கள். நான் ஒரே வாரத்திற்குள் சென்னை திரும்பி வந்து, அவளோடு பேசுகிறேன். அதற்கு முன் அவளது சம்மதம் பற்றி நீங்கள் எனக்குத் தெரிவித்து விடுங்கள்'' என்று கூறி, ஊரில் அவனோடு தொடர்பு கொள்ளக்கூடிய டெலிஃபோன் எண் ணைக் கதிரேசனுக்குக் கொடுத்துவிட்டு, ''நாளைக் காலை யில் நீங்கள் விழித்து எழுமுன் நான் கிளம்பிவிடுவேன் என்று நினைக்கிறேன். எனவே 'குட்பை!'' என்று கூறிக் கிளம்பினான்.

மறுநாள் காலையில், மெல்லிய மஸ்லின் துணிபோலப் போர்த்தியிருந்த பனி விலகுவதையும், சிலு சிலுவென்ற குளிர்காற்று உடம்பில் மோதுவதையும் ரசித்தபடி வராந்தாவில் நின்றிருந்த மானசாவின் பார்வை அவ்வப்போது அவளையும் மீறிப் பக்கவாட்டில் பாய்ந்து மீண்டது.

இந்தப் பக்கமிருந்து தானே முன்தினம் சசிசேகரன் வந்தான்?!

நாலைந்து தரம் இப்படி அலைந்த பார்வை, தேடியதைக் காணாமல் திரும்பவும், ஓர் ஆண் மகனை - அதுவும் இளைஞனை இந்த மாதிரித் தேடுவது - அது பார்வையால் மட்டுமே என்றாலும் தவறு என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு மீண்டும் சூழ இருந்த இயற்கை எழிலில் மனதை முழுமையாகச் செலுத்த முயன்றாள் மானசா.

ஆனாலும் அவன்தான் எவ்வளவு நகைச்சுவையோடு பேசுகிறான்!

''குட்மார்னிங்!'' என்று அருகில் கேட்ட குரலில் உள்ளம் துள்ளத் திரும்பியவள் அவன் கையில் இருந்த பெட்டியைக் காணவும் திகைத்தாள்.

''எ... என்ன?''

ஒரு ரகசிய முறுவலோடு, ''வந்த வேலை முடிந்தது; ஊருக்குக் கிளம்புகிறேன்.'' என்றான் சசிசேகரன் இலகுவாக.

''ஓ!'' தன் ஏமாற்றத்தை மறைக்க முயன்றபடி, வலுக்கட்டாயமாய் ஒரு புன்னகையை இதழ்களில் பூசிக் கொண்டு, ''அ... அப்படியானால் இது... இப்போது விடை பெற வந்தீர்களா? ந.. நலமாகச் சென்றுவாருங்கள்.'' என்று முடிந்த அளவு சமாளித்து, கம்பீரமாகவே விடை கொடுத்தாள் மானசா.

முறுவல் மேலும் விரிவடைய, ''ஓ! கட்டாயமாய்! நிச்சயமாய்ச் சென்று, சர்வநிச்சயமாய்த் திரும்பி

வருவேன்!'' என்று உற்சாகத்துடன் உரைத்து, விடைபெற லாய்த் தலையசைத்து தன் வேக நடையுடனே திரும்பிச் சென்று, லிஃப்டினுள் மறைந்தான் சசிசேகரன்.

இதற்கு மேல் இங்கிருந்து அவனைப் பார்க்க முடியாது!

இந்த ஓட்டலின் வரவேற்பு அறை, அங்கிருந்து வெளியே செல்லும் வழி எல்லாம் மறுபுறம்தான்!

ஒன்று தோன்றவும், அறையினுள் சென்று, எதிர்ப்பக கம் இருந்த 'சிட்அவுட்'டின் கதவை ஓசையின்றி திறந்து, அங்கே சென்று சுவர் ஓரமாய் நின்று எட்டிப் பார்த்தாள் மானசா.

அதற்குள் தன் வேக நடையுடன் ஓட்டலின் பெரிய நுழைவு வாயிலைச் சசிசேகரன் அடைந்திருந்தான்.

வாயிலை அடைந்ததும் நின்று திரும்பி இந்த அறைப் பக்கமாய் அவன் பார்ப்பது போலத் தோன்றவும்; சட்டெனச் சுவரோடு ஒட்டி மறைந்து கொண்டாள் அவள்.

அவள் இந்த மாதிரி வந்து நிற்பதைக் கண்டால் அவளைப் பற்றி என்ன நினைப்பான்? ஏதோ மரியாதைக்கு விடைபெற வந்தால் பின்னாலேயே துர்த்துவதாக எண்ண மாட்டானா?

மீண்டும் மானசா வெளியே எட்டிப் பார்த்தபோது, ஓர் ஆட்டோவில் ஏறி அமர்ந்து கொண்டிருந்த சசிசேகர னின் கால்தான் அவள் கண்ணில் பட்டது.

மறையாமல் நின்றிருந்தால் இன்னும் சில விநாடிகள் அவனைப் பார்த்திருக்கலாமோ?

காரணமின்றிக் கனத்த இதயத்துடன், மீண்டும் பழைய இடத்துக்கு வந்து நின்று வெளியே வெறித்தாள்.

சென்னையில், சாந்தோமில் அவர்கள் வீட்டு மாடியில் இருந்து பார்த்தால் கடலிலிருந்து சூரியன் உதிப்பது மிக அழகாகத் தெரியும்.

இந்த பங்களூர் என்ன ஊர்? ஒரு கடலும் இல்லை; மண்ணுமில்லை! திருப்பித்திருப்பி வெறும் பச்சை பச்சை யாய் இலையும் செடியும் கொடியுமாக... பார்க்கச் சகிக்க வில்லை...!

அலுப்புடன் உச்சுக் கொட்டிவிட்டு, உள்ளே சென்று உட்கார்ந்தாள் மானசா.

அன்று முழுவதுமே அவளுக்கு மிகவும் சோர்வாகவே இருந்தது. இது என்ன வாழ்க்கை? அண்ணிக்குப் பயந்து கொண்டு, அர்ச்சனாவின் ஏவல்களைச் செய்து கொண்டு, இப்படியே எவ்வளவு காலம் வாழ்வது?

ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டு இங்கி ருந்து வெளியேறிச் சென்று விடலாம் என்றாலோ, உருப்ப டியாக எந்தக் கல்வி கற்கவும் அண்ணி அவளுக்கு வழிவிட வில்லை!

குற்றேவல் என்றாலும் உழைத்துப் பிழைக்கலாம் என் றாலோ அன்னை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொன்ன வார்த்தைகளை மீறவும் முடியவில்லை! அண்ணன் வீட்டை விட்டு அவள் வெளியேறும்படி ஆகிவிடக் கூடாது: கூடாது என்று திருப்பித் திருப்பிக் கூறினார்களே!

உலகமே சோகமயமாகிவிடக் கடனே என்று தன் வேலைகளைச் செய்தபடி ஒளிமயமான மனதுடன் மானசா சுற்றிக் கொண்டிருந்தாள்.

அன்றே சென்னைக்குக் கிளம்பி விட்டார்கள்.

அப்பாடி என்று ஒருக்ணம் உணர்ந்தபோதும், 'சர்வ நிச்சயமாய்த் திரும்பி வருவேன்' என்றானே, அப்படித்

திரும்பி வந்து அவளைத் தேடினால்...? என்று உள்ளூரத் தவிப்பாகவும் இருந்தது.

ஆனால் இதை என்னவென்று யாரிடம் அவ... வெளியே சொல்ல முடியும்? சசிசேகரன் சும்மா ஒரு பேச்சுக்குக் கூட அப்படிச் சொல்லியிருக்கலாம். பேசாமல் பதுமைபோலக் காரில் ஏறி அமர்ந்தாள் அவள்.

என்றுமே பேசா மடந்தை என்பதால் அவளது குமைச்சல் யாருக்கும் தெரியாமலே போயிற்று.

சென்னை சேர்ந்த மறுநாள் கதிரேசன் தங்கையைத் தன் அலுவல் அறைக்கு அழைத்துப் பேசினான்.

பொதுவாக அவளை எதற்காகவேனும் மனைவியின் பொய்ப் புகார்களை நம்பித்தான். வேறென்ன கதிரேசன் கண்டிப்பது என்றால் அது அங்கே வைத்துத்தான்.

இப்போது என்ன என்று உள்ளூரத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டபடியே அண்ணனின் முன் சென்று நின்றாள் மானசா.

''உட்கார்,'' எனறவன் விஷயத்தைச் சொன்னான். ''பங்களூரில் பார்த்தோமே, சசிசேகரன் என்று. அவருக்கு உன்னைத் திருமணம் செய்யலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். என்ன சொல்லுகிறாய்?''

விடுதலை!!! இந்த வீட்டிலிருந்து, அண்ணியிடமிருந்து, அரைப்பட்டினியிலிருந்து விடுதலை! துள்ளிக் குதித்துத் தட்டாமாலை சுற்ற வேண்டும் போல இருந்தது மானசாவுக்கு.

அண்ணன் தன் பார்வையில் இருந்து மனதை அறிந்து கொள்வானோ என்று அஞ்சி விழிகளைத் திருப்பியபோது, அந்த அறையின் பக்கவாட்டுக் கண்ணாடித் தடுப்பில்

அவளது உருவம் வரிவடிவாய் அவளது பார்வையில் பட்டது.

குச்சி குச்சியாய்க் கைகளும், மெலிந்த உடலும் எலும்பு எடுத்த முகம்.

சசிசேகரனின் செதுக்கினாற் போலான கட்டான உடல மைப்பு அணுப் பிசகாமல் நினைவு வந்தது.

தன் உடலை அப்படிப் பேணிக் காக்கிறவனுக்கு இந்த 'என்புதோல் போர்த்த உடம்'பை எப்படிப் பிடிக்கும்?

மனம் ஓய்ந்துவிட, ''நான் என்ன சொல்கிறேன் என் பதை விட, அவர் என்ன விரும்புகிறார் என்பதுதானே முக்கியம், அண்ணா?'' என்றாள், அவள் மெலிந்து விட்ட குரலில்.

''அவரா?'' என்று புன்னகை புரிந்தான் அண்ணன். ''உன்னை உனக்காகவே அவருக்குப் பிடிக்கிறதாம். உனக் குச் சம்மதம் என்றால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத் திருமண நாளை நிச்சயிக்கச் சொன் னார்!''

கூடை ரோஜா மலர்களைக் கொண்டு வந்து தூவினாற் போல மானசா மனதில் உணர்ந்தாள்.

''உனக்காகவே உன்னைப் பிடிக்கிறதாம்!''

அடுத்து வந்த சில தினங்கள் இந்த மூன்று வார்த்தை களை எண்ணி எண்ணி மனம் பூரித்தாள் மானசா. ஒரு பெண்ணை, ஒருவன் அவளோடு வரக்கூடிய மற்ற வளங்

கள், வசதிகள் எதையும் எதிர்நோக்காமல் அவளுக்காகவே மணப்பது என்றால், அது அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு பெரிய பேறு!

எண்ணி மகிழும்போதே, திடுமென அவளுக்குச் சந்தேகமும் வந்துவிடும். அவளை எதற்காக அவனுக்குப் பிடிக்க வேண்டும்? இதற்குமுன் யாருக்கும் அப்படி அவளைப் பிடித்தது இல்லையே!

மானசாவுக்கு இதுதான் முதல் திருமணப் பேச்சு என்று சொல்வதற்கில்லை. இதற்கு முன்பும் பலமுறை இந்தப் பேச்சு எழுந்துதான் இருக்கிறது.

ஒரு நல்ல நிதி நிறுவனத்துக் குடும்பப் பெண் என்று பலரும் பெண்கேட்டு வரத்தான் செய்தார்கள்.

ஆனால் அந்த வீட்டுப் பெண் அர்ச்சனாதான்; மானசாவுக்கு அந்த வீட்டின் 'ஒன்றுமில்லா உறவுக்காரப் பெண்' நிலைதான் என்று அண்ணி சந்தியா சொல்லாமல் சொல்லிப் புரியவைத்தபின் அவர்கள் எல்லோரும் கண்காணாமல் மறைந்து போய் விட்டார்கள்.

இன்னும் ஒருசிலர் அர்ச்சனாவையே கட்டிக் கொடுப்பீர்களா என்று கூடக் கேட்டார்களே தவிர, மானசா என்ற பெண்ணுக்காக அவளை மணமுடிக்க வந்ததாக யாரும் சொன்னதில்லை.

சசிசேகரன் மட்டும் அப்படிச் சொல்கிறானே!!!

ஏன்?

இது கண்டதும் காதல் அல்ல என்று மட்டும் அவளுக்கு நிச்சயம்.

ஏனெனில், முதல் முதலாக அவள் அவனை அழைத்துப் பேசிய போது அவளுக்குப் பதில் கூறக்கூட அவனுக்கு அவ்வளவாய்ப் பிடிக்கவில்லையே! இதை அவள் முதலில்

உணரவில்லை என்றாலும், பிறகு புரிந்து கொண்டாள் தானே!

ஏனோ சசிசேகரனைப் பற்றிய எண்ணம் அடிக்கடி எழுந்தது. அவனது ஒவ்வொரு முகபாவனையும் பேச்சை யும் ஆராயத் தோன்றிவிட, அப்படி ஆராய்ந்து, அவனது முதல் முகம் திருப்பலை உணர்ந்து, 'பின்னே, திடுமென இவ்வளவு பெரிய ஓட்டலில் இருந்து கொண்டு, முன் பின் தெரியாத ஒருவனை அழைத்து ஒருத்தி கடலை மிட்டாய் கேட்டால் தப்பாகத்தானே நினைக்கத் தோன்றும்?' என்று அவளே அதற்குச் சமாதானமும் கூறிக் கொண்டாளே!

எனவே அவன் மானசாவைக் கண்டதும் காதல் கொண்டு அவளை மணக்க விழையவில்லை என்பது நிச்சயம். பின்னே?

பரிதாபப் பட்டுவிட்டானா?

மானசாவின் மனதில், அணுப்பிசகாமல், இம்மி மற வாது பதிந்து விட்டிருந்த சசிசேகரனோடு நேர்ந்த சந்திப்புக ளைப் புரட்டிப் பார்க்கையில் அவளுக்கு அப்படித்தான் எண்ணத் தோன்றியது.

அண்ணிக்காரியின் சூழ்ச்சியினால் அரைப் பட்டினி கிடக்கும் இந்தப் பெண்ணுக்கு வயிறாரச் சோறு போடுவதே புண்ணியம் என்று கருதிவிட்டானா... என்று எண்ணம் ஓடவும் அவள் முகம் அவமானத்தில் கன்றிச் சிவந்து போயிற்று. அய்யோ பாவம் என்றா அவளை ஒருவர் மணப்பது?

சற்று நேரம் மனம் குன்றிக் கிடந்தவளுக்கு, மறுநாள் பூங்காவின் நினைவு தொடரவும் ஒருவாறு கொஞ்சம் தென்பு உண்டாயிற்று.

அத்தோடு அவளது சம்மதத்தையும் கேட்டிருக்கி றானே!

சந்தோஷமும் சஞ்சலமுமாக இரண்டு தினங்கள் எப்ப டியோ சென்று மறைய மூன்றாம் நாள் வீட்டில் டெலிஃபோன் மணி அடித்தது.

எடுத்துப் பேசிவிட்டு, ''இந்தாடி மானசா, உனக்குத் தான்'' என்று கூறி, அவளை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு சென்றாள் சந்தியா.

அண்ணியின் பல்வேறு பார்வைகளுக்குப் பழக்கப்பட் டிருந்த மானசாவுக்கும் புரிந்து கொள்ளமாட்டாத புதிராக இருந்தது அந்தப் பார்வை.

ஏதோ ஒருவகை திருப்தியும், கூடவே எதிர்பார்ப் பும்... ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஒரு... மகிழ்ச்சியும்... அவளுண்டைய விஷயத்தில் அண்ணிக்காவது... மகிழ்ச்சியா வது...

யோசித்தபடியே ரிசீவரைக் கையில் எடுத்து 'ஹலோ' என்றவளுக்கு அதற்கு மேல் அண்ணியைப் பற்றி அடி யோடு மறந்துபோயிற்று.

ஏனெனில் தொலைபேசியின் மறுமுனையிலிருந்து பேசிக் கொண்டிருந்தவன் சசிசேகரன்! ''என்ன மானசா, யார் என்று குரல் கண்டுபிடிக்க முடிகிறதா?'' என்று குரலில் சிறு சலுகை தொனிக்கக் கேட்டான் அவன்.

மறக்கக்கூடிய குரலா அது என்று எண்ணியபடியே, ''இம்!'' என்றவள், மேலே என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்தாள்.

ஆனால், அவளுக்கு அந்த சிரமம் கொடாமல், சசிசே கரன், ''நீ சம்மதித்து விட்டதாக உன் அண்ணன் சொன்னார். ஆனால்... நன்றாக யோசித்துச் சொல், உனக்கு ஏதும் உனக்கு வருத்தம் ஒன்றும் இல்லையே?'' என்று சிறு கவலையுடன் கூடிய குரலில் கேட்கவும் மானசா வியப்ப டைந்தாள்.

வருத்தமா? இவனை மணப்பதில் வருத்தமா? எப்படி ஏற்படும்? ஒருவேளை பிறந்த வீட்டை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடுமே அதுவும் வெளிநாட்டுக்கு என்று அண்ணன் சொன்னார்; அதற்காக அவள் வருந்தக் கூடும் என்று எண்ணுகிறானோ? ஆனால் எப்படியும் இது அவளுக்கு விடுதலை அல்லவா?

மானசா யோசித்த அந்தச் சிறு பொழுதிற்குள் ''என்னம்மா, சொல்லு. உன் மனதில் இருப்பதை மறையாமல் சொல்லு. உனக்குப் பிடிக்காத எதையும் நான் செய்வதாக இல்லை. என்று சிறு பதட்டத்துடன் அவன் மீண்டும் கேட்கவும், மனம் குளிர்ந்து விட, ''எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. என்று உரைத்தாள் மானசா

''நிச்சயமாக?''

அவன் இன்னமும் உறுதிவேண்ட, ''நிச்சயமாகத் தான்!'' என்று குரலில் திடத்துடன் பதிலளித்தாள் அவள்.

மானசாவுக்குச் சசிசேகரனை மணப்பதில் வருத்தம் என்பது கொஞ்சம் கூட அணுவளவு கூட இல்லைதான். ஆனால் அவனுக்கு? ஒருவேளை, அவன் அவளிடம் இரக்கப்பட்டு மணப்பது என்றால், இவளைவிட மேலான பெண்ணை மணந்திருக்கலாமே என்ற குறை அவ்வப் போது தோன்றத்தானே செய்யும்?

ஆனால், தன்னை மணப்பது குறித்து அவளிடம் இவ்வளவு உறுதி தேடுகிறவனிடம், 'நீ எதற்காக என்னை மணக்கிறாய்' என்று எப்படிக் கேட்பது என்று மானசாவுக்கு மிகவும் தயக்கமாகிவிட்டது.

இதைப் பிறகு எப்போதேனும் வேறுவிதமாக... முடிந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்! அது, ''பி... ற. கு

மீண்டும் சசிசேகரனின் கம்பீரமான குரல் காதில் விழ, அவள் கவனம் அதில் ஒருமித்தது ''மிக்க மகிழ்ச்சி,

மானசா. சொல்லப் போனால் இப்போதுதான் உன் வாயால் இதைக் கேட்ட பிறகுதான் எனக்கு முழு நிம்மதி உண்டாகி யிருக்கிறது. ஓகே! இந்த விஷயம் தெளிவாகிவிட்டதால், இனி அடுத்த கட்டத்தைத் திட்டமிடலாமா? இன்னமும் பதினைந்து நாட்களில் ஒரு நல்ல முகூர்த்தம் இருப்பதாக மிஸ்டர் கதிரேசன் சொன்னார். ஒரு பெரிய ஓட்டலில் திருமணம், விருந்து எல்லாம் ஏற்பாடு செய்து விடப் போகிறாராம்.

''திருமணச் சேலை உனக்கு பிடித்தமாக இருக்கவேண் டும் என்பது என் ஆசை. அதைத் தேர்ந்தெடுக்க இன்று மாலை என்னோடு வருகிறாயா?''

சுரிதார் விஷயம் நினைவு வைத்து, அவளுக்குப் பிரியமானதை அவளே தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கி றான்!

மகிழ்ச்சியோடு வருகிறேன் என்று சொல்லப் போன வள், சற்று நிதானித்து, ''அண்ணனிடம் கேட்டுக் கொண்டு வருகிறேன்'' என்றாள்.

''ஊ... ம்! இன்னும் பதினைந்து நாட்களில் மனைவியா கிவிடப் போகிறவள்! பட்டப் பகலில் என்னோடு வெளியே வர, அவளுடைய அண்ணனின் அனுமதி வேண்டுமாம்! கடவுளே! சரியான பட்டிக்காடு போல் இருக்கிறதே!... என்று உரக்க ஒரு பெருமூச்சு விட்டான் சசிசேகரன்.

அவன் குரலிலேயே பாவனையை உணர்ந்து, ''என்ன செய்வது? இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசி கடைசி... காலகட்டத்தில் போய், ஒரு பெண்ணை மணக்க அவளு டைய அண்ணனிடம் அனுமதி கேட்கிற பழங்காலத்துக்குப் பொருத்தமாய் நானும் பட்டிக்காடாகத்தானே நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது!'' என்று அவனைப் போலவே பேசி, அவளும் உரக்கப் பெருமூச்சு விடவும் இருவருக்குமே சிரிப்பு வந்தது.

சிரித்துவிட்டு, ''ஆனால், உன்னைப் போலவே எனக்கும் புரிந்து கொள்ளும் சக்தி இருக்கிறது. மிஸ்டர் கதிரேசனிடம் நானே கேட்டுவிடுகிறேன். மறுப்பதற்குக் காரணம் இல்லை என்பதால்... சுமார் நாலரை மணிக்கு வந்து உன்னை அழைத்துப் போகிறேன். தயாராக இரு.'' என்று கூறிப் பேச்சை முடித்தான் சசிசேகரன்.

அவனே கதிரேசனிடம் பேசவும் செய்தான் என்பதன் அறிகுறியாக, மதியம் வீடுவந்த கதிரேசன் தங்கையை அழைத்து, அவளிடம் ஒரு கவரைக் கொடுத்தான். ''இதில் ஒரு பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது. சசிசேகர் வாங்கியது போக உனக்கு வேறு ஏதாவது வாங்க வேண்டும் போல இருந்தால் வாங்கிக் கொள் ஆனால் ஒன்று நினைவில் இருக்கட்டும். உனக்காக எதையும் தேர்ந்தெடுக்கத் தெரியாது. அதனால் எதிலும் அவரது அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு அதன்படி முடிவு செய். என்றான்.

மனைவியின் நாடகங்களை நம்பி அண்ணன் பேசுகிறான் என்பதை உணர்ந்திருந்ததால், மறு பேச்சின்றி பேசாமல் தலையை ஆட்டி வைத்தாள் தங்கை.

சசிசேகரன் வருகிற நேரம் தெரிந்து விட்டிருந்தபடியால், சமையல்கார அம்மாளிடம் அவனுக்கு காபி, டிபனுக்குச் சொல்லிவிட்டு, சந்தியா இதையும் கெடுத்துவிடக் கூடாதே என்று உள்ளூர வேண்டிக் கொண்டே, அவனோடு வெளியே செல்ல மானசா தயாரானாள்.

ஆனால்,

குறித்த நேரத்தில் வந்து நின்ற சசிசேகரனை, ''வாருங்கள்'' என்று வரவேற்று, அவனுக்குச் சிற்றுண்டியையும் பானமும் கொண்டு வருமாறு, சந்தியா வேலையாளை ஏவவும் அதிசயம் தாங்காமல் மானசாவுக்குத் தலைசுற்றி விட்டது!

என்ன மர்மம் இது? ஒரு புதியவன் முன்னிலையில் நல்லபடியாக நடந்து கொள்வோம் என்று சந்தியா நினைத்

தாளோ என்றால், பங்களூரில் அந்த மாதிரி எண்ணமே வரவில்லையே! ஒருவேளை, இன்னும் சில நாளில் இந்த வீட்டை விட்டு, இந்த நாட்டை விட்டே பிரிந்து சென்றுவிடப் போகிற நாத்தனாரிடம் பரிவு பிறந்து விட்டதோ என்று எண்ணி, அதெல்லாம் இராது என்று முடிவு செய்தாள் மானசா.

ஆனால் இவள் குழம்பி யோசித்து முடிக்குமுன், பழச்சாறை மட்டும் அருந்தி, சிற்றுண்டியை மறுத்து சசிசேகரன் எழுந்து விடைபெற்றுக் கிளம்பிவிட, அவனுடன் செல்கையில் அண்ணியின் நினைவு மீண்டும் மானசாவுக்கு மறந்து போயிற்று.

சசிசேகரனுடன் வெளியே செல்வதும் ஓர் இனிய, புதுமையான அனுபவமாக மானசாவின் மனதில் பதிந்தது.

முதலாவதாக, எப்போதும் ஒரு வேண்டாத விருந்தாளியாகக் கிடைத்த இடத்தில், அண்ணியின் நக்கலுடன் ஏறி, வசதியில்லாத நிலையில் ஒடுங்கி அமர்ந்து சென்று பழகிய வள் அவள்.

சசிசேகரன் கொண்டு வந்திருந்தது ஒரு டாக்சிதான். அதிலும், அவளுக்காகக் கதவு திறந்து, அவள் ஏறி வசதியாக அமர்ந்தபின் கதவு மூடி, இறங்கும் போதும் அதே மரியாதைகள் நடக்கும்படி அவன் பார்த்துக் கொள்ளவும், கடைக்குள் செல்லுமுன்பே , மானசா இதமான ஒரு கத கதப்பை உணரத் தொடங்கினாள்.

சேலை வாங்கும் போதும் அவளது அபிப்பிராயத்துக்கு அவன் முழு மதிப்பு கொடுத்தது அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. கூடவே, கதிரேசன் கொடுத்த பணத்தில் அவள் வாங்கியவற்றையும் அவன் பாராட்டிப் பேசவும், இப்படி ஒருவன் அவளுக்குக் கணவன் ஆகப்போவது குறித்து உள்ளூர மிகவும் பெருமைப்பட்டாள்.

வாங்குகிற வேலை முடிந்ததும் வீட்டிற்கு நேரே செல்லாமல், உயர்தர ஓட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று,

அவளுக்கு விருப்பமான உணவைக் கேட்டு, கொண்டுவரச் சொன்னான்.

ருசித்து உண்டவளுக்குப் பாதியில் ஒன்று தோன்றவும், உணவின் சுவை மங்கிப் போயிற்று. எதிரே இருந்த சசிசேகரனின் கனிவான முகத் தோற்றம் அவளது ஐயத்தை உறுதிப் படுத்தவும், ''நீங்கள் என்மேல் இரக்கப்பட்டு என்னை மணக்கிறீர்களா?'' என்று வாய்விட்டுத் தன் சந்தேகத்தைக் கேட்டு விட்டாள்.

''இரக்கப்பட்டா?!'' என்றான் சசிசேகரன் ஆச்சரியமாய். ''இப்படி வெட்டுகிறவளுக்கும் சாப்பாடு போடப் பணத்துக்கு எங்கே போவது என்று நான் பயப்பட அல்லவா வேண்டும்?!'' என்று கேலியும் பேசினான். ஆனால், அவள் உண்மையாகவே கலங்கியிருக்கிறாள் என்பதை உடனே உணர்ந்து,'' கவனி, மானும்மா உன்னைப் பார்க்கு முன்பே நம் திருமணம் பற்றி உன் அண்ணன் என்னிடம் பேசியிருந்தார். அப்படி இரக்கம் காரணமாக உன்னை மணப்பது என்றால் அன்றிரவே உன் அண்ணனிடம் 'சரி' யென்று சொல்லியிருப்பேன் அல்லவா? எனக்கு, அந்தமாதிரிச் சூழ்நிலையிலும் சமாளித்து நீ நிமிர்ந்து நின்ற பாங்கு, உன் தேவைகளை இயன்றவரை நிறைவேற்றிக் கொண்டவிதம், ரசிகத்தன்மை, நகைச்சுவை உணர்வு, கம்பீரம்... எல்லாமே எனக்குப் பிடித்தது. இவை அனைத்துக்கும் மேலாக, உன் சிரிப்பு! அதை வாழ்நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல அளவிட முடியாத ஆசை வெறு உண்டாகிவிட்டது. ஆயினும் உறுதியான இறுதி முடிவு எடுத்தது எப்போது தெரியுமா?'' என்று, தன் ஆழ்ந்த குரலில், அவளை நேராக நோக்கியபடி பேசிக் கொண்டே போனவன் விரிந்த விழிகளுடன் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவளிடம் கடைசியில் கேள்விக் குரிய பதிலை எதிர்பாராமலே மேலும் தொடர்ந்தான்

''அன்று பூங்காவில் நம் இருவரையும் கணவன் மனைவியாய்க் கருதி ஓர் அம்மா ஒன்று சொல்ல, அதைக் கேட்டு நீ முகம் சிவந்தாய் பார், அப்போது, எனக்கு ஒன்று தெளிவாய்த் தெரிந்து போயிற்று. இந்தப் பிறவியில், எனக்கு என்றேனும் குழந்தைகள் பிறக்கக் கூடுமானால், அந்தக் குழந்தைகளுடைய தாயாக நீதான் - நீ மட்டும்தான் இருக்க முடியும் என்று ஐயம் திரிபற அந்த வினாடியில் அறிந்து கொண்டேன்...''

சற்றுத் தணிந்து விட்டிருந்த குரல் வெல்வெட்டின் மென்மையுடன் மிருதுவாய் அவளது காதுகளில் ஒலிக்க, அன்று போலவே மானசா இன்றும் செக்கச் சிவந்தாள்!

இந்தத் திருமண விவரம் தெரிந்ததும் அசூயையும் ஆத்திரமுமாகக் குதித்தாள் அர்ச்சனா. ''இந்த எலும்புக் குச்சிக்கு இவ்வளவு அழகான மாப்பிள்ளையா? கூடாது'' என்று பொறாமையுடன் காந்தினாள்.

குறிப்பாய், ஜாடையாய் அடக்க முயன்று, அது முடியாது போகவே, மகளின் கையைப் பற்றி அறைக்குள் இழுத்துச் சென்று கதவைத் தாளிட்டாள் சந்தியா.

''அம்மா, அவன் ஆள் ஜம்மென்று இருக்கிறானே! அவன் போய் இவளுக்கான? என்னால் தாங்க முடியவில்லையே!'' என்று குமுறிய மகளைத் தட்டிக் கொடுத்து, ''ஆள் அழகாயிருந்து என்னடி பிரயோசனம். வெறும் அன்னக்காவடி அவன்!'' என்று ஆறுதல் சொன்னாள்.

''அன்னக் காவடியா?! அய்யோ..!''

''ஆமாம். அப்பாவிடம் பணம் வாங்க வந்த கடன்காரன். பார், அர்ச்சி, உன்னை வைரத்தால் இழைத்து யாராவது கோடீசுவரனுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது என் நெடுநாளைய ஆசை. அதற்காக நான் போட்ட

திட்டத்தின்படிதான் இந்தப் பிச்சைக்காரனோடு மானசாவுக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. எனவே, இந்தக் கல்யாணம் நடந்து முடியும் வரை, அதை இதைச் சொல்லி எதையும் கெடுத்து விடாமல், பேசாமல் வாயை மூடிக் கொண்டு இரு.'' என்று மகளை எச்சரித்தாள் சந்தியா.

10

சசிசேகரன் மானசாவுக்கு டெலிஃபோன் செய்த தினத்திலிருந்து, அவர்களது திருமண நாள்வரை இடையில் பதினைந்து நாட்கள் இருந்தன.

அந்தப் பதினைந்து நாட்களில், மேலும் மேலும் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல, மானசா நாளுக்கு நாள் புது மெருகு பெற்று ஜொலித்தாள்.

யாருக்கும் நீ தேவையில்லை என்று நன்றாக உணர்த்தப் பெற்று, அந்த வீட்டில் கிடந்த எத்தனையோ உபயோக மற்ற பொருட்களுள் தானும் ஒருத்தியென வளைய வந்தவளுக்கு, 'நீதான் எல்லாம்' என்பது போல சசிசேகரனின் போக்கு ஜீவசக்தி ஊட்டும் தேவலோகத்து அமுதமாய் இருந்தது.

பாலைவனைப் பகுதிகளில் மழை பெய்வது அபூர்வம். அப்படிப் பெய்யும்போது, வெகு காலமாக நீரின்றிக் காய்ந்து உலர்ந்த சருகாகிக் கிடக்கும் பூண்டு வகைத் தாவரங்கள், மழை பெய்த ஓர் இரவுக்குள்ளாகத் தளிர்த்து மொட்டுவிட்டு அலர்ந்து, தரையெங்கும் பூக்காடாய் மலர்ந்து விடுமாம்.

அதுபோல, அன்னை இறந்தபின், அன்புக்கு ஏங்கிக் கிடந்த மானசாவும் இப்போது தழைத்துச் செழித்து மலர்ந்த பூங்கொடி போலானாள்.

சசிசேகரன் அவளுக்குத் தினமும் டெலிஃபோன் செய்தான்.

அதுபோக மாலை வேளைகளில் வெளியே அழைத்துச் சென்றான்.

சின்னச் சின்னப் பொருட்கள் என்றாலும் அவள் விரும்பியது போலத் தோன்றினாலே வாங்கிக் கொடுத்தான். வாங்கும் போது அவள் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்த்தி குறித்துப் பாராட்டினான்.

மற்றவர் கண்காண அவளோடு செல்வதில் மகிழ்ச்சி காட்டினான். மானசா மானுவாகி, அதுவும் சுருங்கி 'மனு' ஆயிற்று. மனுவிடம் ஒரு 'மனு' போட்டலாமா என்றால் இருவரும் சிரிப்பார்கள். அவன் 'சசி'யானான். அர்த்தமற்ற ஏதேதோ பேச்சுகள் இருவருமே பேசினார்கள். அர்த்தமுள்ள பேச்சுகளும் அவ்வப்போது நடந்தன.

அப்படி ஒருதரம் பேசும்போதுதான் சசிசேகரன் தன் எதிர்காலத் திட்டம் குறித்து மானசாவிடம் கூறினான்.

''முதலில் இங்கே முழுவதாய் தயாரிக்கப்பட்டவற்றை தான் அங்கே கொண்டு சென்று விற்றேன். அதில் அவ்வளவு லாபமில்லை, மனு. மேற்கத்திய நாட்டுப் பொருட்களின் போட்டியும் அதிகம். பிறகுதான் ஓர் ஐடியா வந்தது. இங்கே இருந்து உதிரிப் பாகங்களை அங்கே இறக்குமதி செய்து, அதை அங்கேயே இணைத்து முழுசாக்கி விற்பது. விகிதாசாரப்படி பார்த்தால், அங்கே ஆட்களுக்குக் கூலி மிக அதிகம் தான். ஆனாலும், செலவு எல்லாம் போக

ஐம்பது சதவீதம் லாபம்!'' என்று அவன் கூறிய போது மானசாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவளது முறுவலுக்குப் பதிலாக அவன் முகத்தில் தோன்றிய புன்னகை உடனேயே மறைய, ''விரைவில் திருப்பி விடலாம் என்றாலும் நம் வாழ்வைத் தொடங்கும் போது நீ, ஒரு நாற்பது லட்ச ரூபாய்க் கடன்காரனைத்தான் மணக்க நேரிடும். இதில்... இது பற்றி உனக்கு ஒன்றும் பயமில்லையே, மானசா?'' என்று தீவிரமான குரலில் சசிசேகரன் கேட்டான்.

''கடன் பணத்தை நீங்கள் என்ன உல்லாசச் செலவா செய்கிறீர்கள்? தொழிலில்தானே போடுகிறீர்கள்? இதில் பயப்பட என்ன இருக்கிறது? நிச்சயமான லாபம் வேறு இருப்பதாகச் சொல்கிறீர்கள்!'' என்றாள் அவள் ஆதரவாக.

''லாபம் சர்வநிச்சயம், மனு.'' என்று அடித்துச் சொன்னான் சசிசேகரன். ''ஆனால் சொந்தப் பணத்தை முதலீடு செய்ய முடியாமல் கடன் வாங்கும்படி...

''தொழிலில் முதலீடு பண்ணக் கடன் படும்போது, சொந்தப் பணத்தைச் செலவு செய்கிறவன் முட்டாள் என்று எதிலோ படித்திருக்.... ம்! ஹெரால்ட் ராபின்சின் பண விவகாரக் கதை ஒன்றில் படித்திருக்கிறேன். அவரது பணம் பற்றிய நெடுங் கதைகள் உலக நடப்புக்குச் சரியானவை களே என்று சொல்லுவார்களே!''

அவனது நெருடல் நீக்கவென்று அவள் ஆதாரம் காட்டிச் சொல்லும் போதே சசிசேகரனின் புருவங்கள் உச்சி மேட்டுக்கு உயர்ந்து போயின. வெறும் ''மில்ஸ் அண்டு பூன்' கதைகள் படிப்பாளென்று பார்த்தால், ஹெரால்ட் ராபின்சா? நிதிக் கல்வியோடு வேறுவிதமான பாடங்களும் புதிதாக மணந்து கொள்ளப் போகிறவர்களுக்கு உதவி

யாக நிறைய இருக்குமே!'' என்று அவன் சிரிக்க அவளது கன்னங்களில் ரோஜாக்கள் எட்டிப் பார்த்தன.

வெட்கச் சிரிப்புடன், ''நான் ஒன்றும் அதையெல்லாம் விலாவாரியாகப் படிப்பதில்லை. அந்த மாதிரி வந்தாலே, பக்கங்களைப் புரட்டி, அதைப் படிக்காமல் தாண்டிப் போய் விடுவேன்.'' என்று அவள் விளக்குகையில் குறுக்கிட்டு, ''அப்புறம்,''அந்...த' மாதிரி விஷயம் எப்போது முடிகிறது என்று எப்படிக் கண்டுபிடிப்பாயாம்? ஒருவேளை முடிகிற இடம் தெரிவதற்காக மீண்டும் ஒருதரம் தெளிவாகப் படித்து விடுவாயோ?'' என்று அவன் அப்பாவி போலக் கேட்கவும் ''அதெல்லாம் இல்லை'' என்று அவசரமாக மறுக்க முயன்ற போதே, அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அவனும் சிரிக்க, இருவரும் சிரித்து முடிந்தபின், ''பெரிதாகச் சொல்கிறீர்களே! உங்கள் 'மில்ஸ் அண்டு பூன்' மட்டும் என்ன வாழுகிறதாம்? ஒரேயடியாகப் பச்சையடிப்ப தாகக் கேள்வி'' என்றாள் மானசா.

வெறும் கேள்வி ஞானம் மட்டுமல்ல. அர்ச்சனா கண்களை விரித்து, அந்தப் புத்தகத்தினுள்ளேயே புதைந்து விடுவாள் போல அவ்வளவு ஈடுபாட்டுடன் திரும்பத் திரும்ப படித்த சில புத்தகங்களை எடுத்துப் படித்துப் பார்த்துவிட்டு, 'என்ன இந்தப் பெண்!' என்று தூக்கிப் போட்டு விட்டுப் போயிருக்கிறாள்.

ஆனால் அர்ச்சனாவைப் பற்றி மட்டமாக அவனிடம் சொல்ல மனமற்று, ''அதனால் நான் அவைகளைப் படிப் பதே இல்லை.'' என்று முடித்தாள்.

''அது மிகவும் நல்லதே!'' என்று உடனடியாகப் பாராட்டினான் சசிசேகரன்.

அவள் புரியாது நோக்கவும், ''அதெல்லாம் படித்தால் அப்...புறமாய் நான் கற்றுத்தர ஒன்றுமில்லாமல் போய் விடுமே!'' என்று கூறி அவன் கண்ணால் சிரிக்கவும், மீண்டும் மானசாவின் கன்னங்களில் செம்மை படிந்தது.

ரசனையுடன் நோக்கிவிட்டு, ''ஆனால் ஒன்று மட்டும் யோசித்துச் சொல்லு, மானசா; இந்த நாற்பது லட்சம் கடன் பற்றி மெய்யாகவே உனக்கு வருத்தமில்லையே?'' மீண்டும் கவலையுடன் சசிசேகரன் விசாரித்தான்.

இரவு சாப்பாட்டு அறையில் கதிரேசன் சில தொழில் விவரங்கள் குறித்து மனைவியிடம் கூறுவதுண்டு.

அந்தப் பேச்சுகளில் பல கோடி ரூபாய்க் கடன்கள் எல்லாம் அடிபடும். தொழிலுக்காகக் கோடிக் கணக்கில் கடன் வாங்குகிறார்கள்; இவன் லட்சக் கணக்குக் கடனுக் காக இந்தக் கவலைப் படுகிறானே! கடன் வாங்கிப் பழக்கம் இல்லைபோல் இருக்கிறது! இவனுக்குத் திடம் கொடுப்பது முக்கியம்!

''இல்லவே இல்லை!'' என்று ஜிமிக்கி குலுங்கத் தலை யசைத்தாள் மானசா.

அவன் வங்கிக் கொடுத்ததுதான். வெறும் தங்க ஜிமிக்கி. தொழில் திட்டப்படி வளர்ந்து விட்டால் விட் டால் என்ன? தொழில் வளர்ந்தேதான் தீரும். இவ்வளவு கணக்குப் போட்டு வைத்திருக்கிறான், இது எப்படித் தோற்க முடியும்? அனாவசியமான அர்த்தமற்ற கவலை! - தொழில் வளர்ந்ததும் இன்னும் மூன்றே ஆண்டுகளில் அவளுக்கு சசிசேகரன் வைர ஜிமிக்கி செய்துபோடுவானாம்!

உச்சி குளிர்ந்து போயிற்று மானசாவுக்கு.

இப்படிப் பேச்சும் சிரிப்பும் திட்டங்களுமாகத் திருமண நாள் நெருங்கிக் கொண்டே வந்தது.

திருமணத்தில் கலந்து கொள்ள வந்த உறவினரால் வீடு நிறைந்தது.

எல்லோரும் சந்தியாவுடைய உறவினர்தான். அந்த வீட்டுக்கு வந்து, உட்கார்ந்து உண்ணும் உரிமை அவர்களுக்கு மட்டும்தானே உண்டு. ஈசுவரி, லிங்கம் வழி உறவினர்களைச் சந்தியா நடத்திய விதத்தில், அவர்கள் வருவது மெல்லக் குறைந்து நாளடைவில் நின்றே போயும் பல காலம் ஆகிவிட்டது!

ஆனால் ஒன்று. நாய்க்கு எலும்புத் துண்டை எறிந்தால் அது நன்றியோடு வாலாட்டிக் கொண்டே இருக்கக் கூடும்: உறவினர் விஷயம் அப்படியல்ல. எலும்புத் துண்டிலிருந்து, இறைச்சிக்கு அடிபோடும். அப்புறம் பிரியாணியே கேட்கும். தராவிட்டால், எப்படித் தராமல் இருக்கலாம் என்று ஆத்திரப்படும். எல்லாமே கொடுத்துக் கொண்டே இருந்தாலும், கொடுக்கும் அளவு இவளிடம் இருக்கிறதே.. என்று வயிறு எரியும்!

சந்தியாவின் பிறந்த வீட்டிலும் அதுவே நிகழ்ந்திருந்தது. சந்தியாவுடைய தாயார் இறந்து சில ஆண்டுகள் சென்றிருந்தன. சந்தியாவுடைய தம்பிமார், தங்கை எல்லோரும் அவரவர் வாழ்க்கைப் பாட்டை அவரவரே நடத்திக் கொண்டு இருந்தனர்.

சந்தியாவை விடப் பொருளாதார நிலையில் பல படிகள் கீழே இருந்தபோதும், சந்தியா போட்டுத்தான் புசிக்கவேண்டும் என்கிற நிலை அங்கே யாருக்கும் இல்லை.

எனவே, இந்தப் பொறாமை, பொச்சரிப்புகளை அவ்வப்போது காட்டிக் கொள்ள யாரும் அவ்வளவாக அந்தஸ்து இல்லை.

அதிலும், அர்ச்சனாவின் திமிரான போக்கு அவர்களிடையே வெறுப்பையே வளர்த்திருந்ததால் அவளை மட்டம் தட்டும் விருப்பமும் பலர் மனதில் வளர்த்திருந்தது.

மானசாவைப் பாராட்டும் சாக்கில் பலர் அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

மானசாவுக்குத் திருமண அழகு வந்திருக்கிறது என்று சந்தியாவுடைய தங்கை விந்தியா சொன்னபோது அதை அவளுடைய சகோதரர்களுடைய மனைவிகள் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை.

''மானசா சின்னப்... மிகவும் அழகுதான். இடையில் கொஞ்சம் ரொம்ப ஒல்லியாய் இருந்ததால் கொஞ்சம் ஒய்ந்து தெரிந்தாள். இப்போது பழைய அழகுதான் ஒளிவி டுகிறது'' என்று ஒற்றுமையாய் மறுத்தார்கள்.

சின்னத் தம்பியுடைய மனைவி, இன்னும் ஒருபடி மேலே போய், ''இந்த அர்ச்சனா கொஞ்சமேனும் தன் அத்தையைக் கொண்டு பிறந்திருக்கக் கூடாதோ? அவள் அழகில் கால் பங்கு இவளுக்கு இருந்திருந்தால் கூடப் பார்வைக்குப் பளிச்சென்று இருந்திருப்பாள். ஊம்... பாவம்'' என்று பரிதாபம் காட்டி உச்சுக் கொட்டவும் அர்ச்சனாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

என்னதான் அன்னக் காவடி என்று அன்னை சொன் னாலும், அத்தையுடைய வருங்காலக் கணவனின் தோற்றம் அவள் மனதில் ஏற்கனவே பொறாமையை மூட்டியிருந்தது.

மானசாவின் இயற்கை அழகு பரிமளித்ததும் அவளுக் குக் காந்தலை ஏற்படுத்தியிருந்தது. கூடவே, முன்போல இருக்கும் அழகை மட்டுப்படுத்திக் காட்டாமல், சசிசேகர னுக்காக மானசா அலங்காரம் வேறு செய்து கொண்டு பேரெழிலுடன் திகழவும் அவளால் தாங்கவே முடிய வில்லை.

எனவே, பெற்றவளின் போதனையை மறந்து, ''இந்த முண்டைக் கண்ணுக்கு மைவேறே போட்டு பூதம் மாதிரி நிற்கிறாயே!'' என்று பழைய வழக்கத்தில் தொடங்கி விட்டு, அவசரமாகக் கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள்.

அந்த வீட்டில் யாரையும், எதையும் பேசவும் அர்ச்சனாவுக்குப் பூரண சுதந்திரம் இருந்தது. அதிலும் மானசாவை அவள் என்ன சொன்னாலும் யாருமே தலையிடமாட்டார்கள். எனவே, மானசாவை மட்டம் தட்டவென்று ஒன்றைத் தொடங்கிவிட்டு, அதை அர்ச்சனா இடையில் நிறுத்தியது, அதிலும் தப்பை ஒத்துக் கொள்கிறாள் போல வாயைப் பொத்திக் கொண்டு ஓடியது மானசாவுக்கு வியப்பை அளித்தது.

ஆனால், அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க வழியின்றி, ''சின்னம்மா, உங்கள் அய்யா வந்திருக்கிறாங்கம்மா'' என்று பணியாள் வந்து சேதி சொல்லவும், அர்ச்சனாவை அடியோடு மறந்து, ''அவருக்குக் குளிர்பானம் ஏதாவது கொடுத்தாயா... அல்லது காஃபி'' என்று பரபரத்தபடி சசிசேகரனிடம் ஓடிச் சென்றாள் அவள்.

வருங்காலக் கணவன் நினைவில் ஓடிச் சென்றவள் எதிரே வந்து கொண்டிருந்த சந்தியாவைக் கவனிக்கவே இல்லை.

கண்ணீருடன் வந்து, ''எல்லாம் உங்களால்தான். அவளைத் திட்டக்கூட முடியவில்லையே... என்று பொருமி விட்டுக் கதவை உள்ளே தாளிட்டு கொண்ட மகளைத் தேற்ற வழியின்றி, ஏற்கனவே ஆத்திரத்துடன் வந்து கொண்டிருந்தவள் அவள். நாத்தனாரின் பெருகிவரும் அழகு, அவளுக்கு ஆனந்தம் தரும் என்றும் எதிர்பார்க்க முடியாதுதான்.

ஆனால், எப்போதும் அண்ணி அறையினுள் வந்தாலே மரியாதையுடன் எழுந்து தலை குனிந்து நிற்கிற பெண், அவளை ஒரு பொருட்டாக மதியாமல், ஏதோ மரம் மட்டை எதிரில் வருவது போல அவள் பாட்டில் சுற்றிக் கொண்டு போகவும், அவளாலும் பொறுக்க முடியாது போயிற்று.

துர்வாச மாமுனிவரைக் கவனியாமல் கணவன் நினைவில் ஆழ்ந்திருந்த சகுந்தலை, அதற்காக அடைந்த சாபம் அவளைக் கண்வனிடமிருந்து பிரித்து படாத பாடு படுத்தியது.

ஆனால், சாபம் கொடுக்கும் சக்தி பெற, ஒழுக்கம், தவம் என்றெல்லாம் சில பெரிய விஷயங்கள் தேவைப்படும். அதற்குச் சந்தியா எங்கே போவாள்?

அவளால் முடிந்ததாய், சதி செய்து, சந்தேகத்தைக் கிளப்பி, சதிபதியைப் பிரித்தாள்.

11

சந்தியாவுக்குத் தன் நாத்தனாரிடம் முதலில் இருந்தே வெறுப்பு என்று ஒன்றும் கிடையாது.

பெரிய கண்களை உருட்டி விழித்தபடி, 'தத்தக்காபித் தக்கா' என்று மழலையும் தளர் நடையுமாக வரும் இரண்டு வயதுக் குழந்தையைக் காட்டி, இவள்தான் நாத்தனார் என்றால் சிரிப்பு வருமே தவிர வெறுப்பு எப்படித் தோன்றும்?

ஆனால் இயற்கையிலேயே சற்று இறுகிய - கொஞ்சம் குறுகியதுமான மனம் படைத்தவள் என்பதால், அந்தக் குழந்தை நாத்தனாரிடம் அவளுக்கு விருப்பும் ஏற்பட்டுவிடவில்லை.

சிறு வயதிலும் மானசா சதை போடுகிற ரகம் அல்ல. ஆனால், அழுகை, தொந்திரவு என்று இல்லாமல், மூக்கும் விழியுமாகத் தலை கொள்ளாத முடியுடன் அழகாகவே

வளைய வருவாள். 'அண்ணி... அண்ணி' என்று அழைத்த படி அவள் காலைச் சுற்றும்போது, அந்தக் குட்டி நாத்த னாரை, சந்தியா அவ்வப்போது புன்னகையோடு தட்டிக் கொடுப்பது உண்டு.

சந்தியாவுக்கு எப்போதுமே, தான், தன்னது என்று உரிமை உணர்ச்சி சற்று அதிகம் உண்டு. தன் விருப்பத்துக்கு மாறு நேர்ந்தால் சகிக்கவும் மாட்டாள். ஒரே குறியாக நின்று தன் விருப்பத்தை எப்படியும் நிறைவேற்றிக் கொள்வாள். அவளுடைய தாய்வீடு பம்பாயில் இருக்க, அவள் மட்டும் சென்னையில் தங்கிப் படித்தது கூட அப்படித்தான்.

சந்தியாவுடைய சிங்கப்பூர்த் தோழி, அவளுடைய உறவினர் சென்னையில் குடியேறுவதால் அவர்கள் வீட்டிலி ருந்து படிக்கப் போவதாக ஆனதும், பிடிவாதம் பிடித்துத் தானும் சென்னை வந்து விட்டாள். லீவுக்குச் சென்று வரும் போதெல்லாம், அவள் மூலம் வரவாயிருந்த வெளிநாட்டுச் சேலை, சென்ட், பவுடர் வகையறாவை விடப் பிடிக்காதது தான் இந்த இடமாறுதலின் முக்கிய காரணம்.

வந்ததற்குக் கதிரேசனின் அறிமுகம் ஏற்பட்டுக் காதல் தொடங்கி அது கல்யாணத்தில் வந்து முடிந்தது.

திருமணத்தில் கதிரேசனுடைய பெற்றோரின் தயக்கம் சந்தியா அறிந்ததே. எனவே ஓரளவு வெறுப்பை எதிர்பார்த் துத்தான் புகுந்த வீட்டில் அவள் வலதுகாலை எடுத்து வைத்தாள்.

ஆனால், அவள் எண்ணி வந்ததற்கு நேர்மாறாக மாமியார்காரி மருமகளிடம் மிகவும் பிரியமாக இருந்தாள். அர்ச்சனாவை உண்டானபோது, பெற்றவளைக் காட்டிலும் மேலாக அவள் சந்தியாவைத் தாங்கிப் பராமரித்தாள்.

அர்ச்சனா அந்த வீட்டின் முதல் 'பேரக் குழந்தை' என்பதால், வீட்டில் எல்லோருமே அவளிடமும், அவளைப் பெற்றுத் தந்தவளிடமும் மிகுந்த அன்பைப் பொழிந்தார்கள்.

அந்த வீட்டின் தகுதிக்கேற்ப நகை, பட்டு என்று பரிசுகள் வேறு. அவளுக்கென்று ஒரு வீட்டை அமைத்துக் கொடுத்துவிட்டு, அவளது போக்கில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டும் விடவே, சந்தியா மிகவும் சந்தோஷமாகத் தான் இருந்தாள்.

சிறு வயதிலிருந்தே அர்ச்சனா குண்டுதான்.

ஆனால் குழந்தைப் பருவத்தில், சிறுமிப் ப்ருவத்தில் கூட மெத்து மெத்தென்று பிள்ளைகள் குண்டாக இருப்பதே தனி அழகுதானே. கூடவே காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுபோல, மகளிடம் இல்லாத அழகும் இருப்பது போலான கற்பனை வேறு சந்தியாவுக்கு.

எனவே, மானசாவுக்கும், அர்ச்சனாவுக்கும் இடையே அவள் அதிக வேறுபாடு ஒன்றும் காணாமல் போனதால், அப்போதும் நாத்தியிடம் அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது இல்லை.

அந்தக் கால கட்டத்தில், அவளுடைய பிறந்த வீட்டில் சந்தியாவுக்கும் பெருமதிப்பு இருந்தது. அவளுடைய தாயார் மீனாட்சியின் சாமர்த்தியத்தால், குடும்ப முழுமையும் சந்தியாவைக் குளிப்பாட்டி, அதற்கு ஏற்ப 'சன்மானங்களும்' பெற்று வந்தது. நெய்க்குத் தொன்னையும், தொன்னைக்கு நெய்யும் போல, இந்தச் சன்மானங்களுக்காகக் குளிப்பாட்டலும், குளிப்பாட்டலுக்காகச் சன்மானங்களும் என்று அந்த அம்மாள் இருந்தவரை திறமையாகத் தொடர்ந்து நடந்தன.

ஆனால், இந்தக் குளிப்பாட்டல்களின் விளைவாக, சந்தியாவுக்கும் புகுந்த வீட்டினரிடம் பாசம் என்று ஒன்று திடமாக ஏற்படாமலே போயிற்று.

அப்படியிருந்த போதும், லிங்கம் மறைந்த பிறகும் கூட, மானசாவை அடியோடு ஒதுக்கிவிட சந்தியா எண்ணவில்லை; அதே சமயம், அந்த வீட்டுப் பெண்ணாகவும் அவளைக் கருதவில்லை.

அவளைப் பொறுத்த வரையில், அந்த வீட்டுத் தலை வன் கதிரேசன்; தலைவி அவள்; வீட்டுப் பெண் அர்ச்சனா. பிள்ளை சிவா. உரிமைக்காரர்கள் அவர்களே!

கூடப் பிறந்த கடமைக்காக, மானசாவுக்கு ஓரளவு நகை, தொகை, என்று கொடுத்துத் திருமணம் செய்து வைப்பது போதுமானது என்பது அவள் முடிவு.

ஆனால், அந்த வைர நகைகளைக் குடும்பச் சொத் தாக, தனக்கும் மகளுக்கும் உரியதாக எண்ணியவள், அவை ஒட்டுமொத்தமாக நாத்தனாருக்கு என்று ஆகிவிட வும் அடியோடு மாறிவிட்டாள்.

அவளுக்கு உரியதைத் தட்டிப்பறித்த மாமியார் வஞ் சகி ஆனாள்; அந்த வஞ்சகி பெற்ற மகள் நசுக்கப்பட வேண்டிய விரோதி ஆனாள்.

சமையல்காரி, அவளுக்கு உதவியாள், எடுபிடி, துப்பு ரவு வேலைக்காரர்கள், சலவையாள், தோட்டக்காரன், கூர்க்கா என்று எழு வேலையாட்கள் மூன்று வேளை முட்ட உண்ணுகிற இடத்தில் வீட்டுப் பெண்ணின் வயிற்றில் விதம் விதமாய் அடித்தாள். நல்ல துணி, மணி, அணிகள் கிட்டாது செய்தாள். பெற்றோரை இழந்த பெண், உடன் பிறந்தானை யும் அனுக வழியின்றி விலக்கி வைத்தாள்.

கொஞ்சமும் கருணையற்று, இதற்கெல்லாம் மூட்டிக் கொடுத்து உதவி செய்த மீனாட்சி அம்மாள் இறந்தது முதலில் சந்தியாவுக்கு ஒரு கை ஒடிந்தாற்போல இருந்த போதும், அதற்குள் அவளுக்கு இந்த குரூரங்கள் எல்லாம் நன்றாகவே கைவந்துவிட்டபடியால், அதை விடாமல் தொடர்ந்தாள்.

இதனால் திகைத்து, மலைத்து, ஆத்திரப்பட்டபோதும், கண்ணீருடன் தாயை நினைத்து ஏங்கிய மானசா, தாயார் படித்துப் படித்துச் சொன்னதையும் நினைவு கூர்ந்து, சந்தியா என்ன செய்தாலும், சொன்னாலும் வாய்மூடிச் சகித்து ஒதுங்கிப் போனாள்.

ஆனால், இத்துடன் சந்தியாவால் திருப்தி அடைய முடியவில்லை.

அந்த நகைகள்?!

அவை மானசாவின் உடைமையாகாமல் தடுத்தால் அல்லவா மாமியாரைப் பழிவாங்குவதில் அவளுக்கு முழு வெற்றி கிடைக்கும்?

மானசாவுக்கு ஒரு நல்ல இடத்தில் திருமணம் முடிந்தால், மணமான மறுநாளே நகைகள் அவள் கைக்குப் போய் விடும்!

லிங்கத்துடைய மகள் என்பதாலேயே பல நல்ல இடங்களிலிருந்து பெண் கேட்டு வந்த போது, இந்த ஒரு காரணத்திற்காகவே இது சொத்தை, அது சொள்ளை என்று கலைத்து விட்டு விட்டு, 'இவளை யாருக்கும் பிடிக்கவில்லை' என்று சந்தியா பறை சாற்றினாள்.

சுற்றிச் சுற்றி அவள் மனம் அந்த நகைகளைப் பற்றியே உழன்று கொண்டு இருந்த போதுதான் ஒருநாள் கதிரேசன், அவனிடம் கடன் கேட்டு வந்த இளைஞன் சசிசேகரனைப் பற்றி அவளிடம் கூறினான்.

''சொந்தமென்று கிராமத்தில் ஒரு வீடும், கொஞ்சம் நிலங்களும் மட்டும்தான். இவன் நாற்பது லட்சம் கடன் கேட்டால் எப்படிக் கொடுப்பது? சின்ன வயது. திருமணம் கூட ஆகவில்லை. கெட்டிக்காரனாகத்தான் தெரிகிறான். ஆனால் ஏற்கனவே ஒருதரம் எல்லாவற்றையும் தோற்றிருக்கிறான்.... ஊகூம்.'' என்று கணவன் சொல்லவும், சட்டெனச் சந்தியாவின் மூளைக்குள் மின்னல் வெட்டியது.

இவனுக்கு நாத்தனாரைக் காட்டிக் கொடுத்து விட்டால்? திருமணத்தின் போது தாய்வழிச் சொத்தாய் அவன் மனைவிக்கு வரப் போகும் நகைகளை ஈடாக வைத்து, அவற்றின் மீது பணத்தைக் கொடுப்பது! வக்கீல் வசம்

இருக்கும் நகைகளை மானசாவின் கைக்கு வந்ததுமே மீண்டும் பறிக்கப்பட்டு நிதி நிறுவனத்துப் பெட்டகத்துக்கு வந்து சேர்ந்து விடும். பிறகு... நாற்..பது லட்சம்! வட்டி கட்டவே முடியாமல் நகை விரைவிலேயே முழுகிப் போகும்! அப்புறம், நோட்டீஸ் அனுப்பி, ஏலம் போடுவது போலப் போட்டு அப்படியே அமுக்கி விடலாம்!

மானசாவுக்கு நகை போய்ச் சேராதது மட்டுமின்றி, குடும்ப நகை மீண்டும் அவள் கைக்கே வந்து சேர்ந்து விடும்! மகனைக் கூட நம்பாமல் வக்கீலின் வசம் நகைகளை ஒப்படைத்த மாமியாரின் திட்டம் அடியோடு அழிந்து விடும்.

இதை இப்படியே கணவனிடம் சொல்ல முடியாது... ஆனால், கதிரேசனை எப்படி ஆட்டுவிப்பது என்பதைத் தான் சந்தியா அறிவாளே!

கணவனுக்குப் பிடித்த வகையில் கைகால் அமுக்கி விட்டபடி, உரக்க யோசிப்பது போலப் பேசினாள். ''பை யன் கெட்டிக்காரன் என்று நீங்கள் ஒரு வார்த்தை சொன் னால், அவன் மெய்யாகவே மிகுந்த கெட்டிக்காரனாகத் தான் இருக்க வேண்டும். ஒருவரைப் பார்த்ததுமே மிகவும் சரியாக மதிப்பிடுகிறவர் நீங்கள். உங்கள் அபிப்பிராயம் அணுப்பிசகாது. அதனால் இவன் எப்படியும் முன்னுக்கு வந்து விடுவான். ''ம்... இப்படிச் செய்தால் என்ன?'' என்று தொடங்கி, தன் திட்டத்தை விவரித்தாள்.

மானசாவுக்கு வர இருக்கும் நகைகளின் மீது பணம் கடன் கொடுப்பது. பையன் கெட்டிக்காரன் என்பதால் இந்தப் பணத்தை முதலாக வைத்து நிச்சயம் நிறையச் சம்பாதித்து விடுவான். சம்பாதித்ததும் லாபத்தைக் கொண்டு நகைகளைத் திருப்புவதோ, அல்லது இந்தப் பழைய பாணி நகைகள் வேண்டாமென்று விட்டு விட்டுப் புது நாகரீக தினுசாய் வாங்கி மானசாவுக்கு மாட்டி விடு

வதோ அந்தக் கணவன் மனைவி பாடு! இப்போதைக்கு அவனையும் கைதூக்கி விட்டமாதிரி இருக்கும்; கூடவே மானசாவையும் ஓர் அருமையான பையனுக்குத் திருமணம் செய்து வைத்தமாதிரியும் இருக்கும்! இதிலே இன்னொரு கூடுதல் நன்மையும் இருக்கிறது. அண்ணனிடம் கடன் படுவதால் மாப்பிள்ளை எப்படியும் தங்கையை நன்றாக வைத்துக் கொள்வாரில்லையா?

மனைவியின் பேச்சு எப்போதும் போலவே கதிரேச னுக்கு மிகவும் பிடித்துப் போனது. சும்மாவே அவனுக்கு, சசிசேகரனுக்கு உதவ வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அத்தோடு நாலு ஆண்டுகளாக மானசாவைப் பலர் பெண் கேட்டு வந்த போதும் அது திருமணம் வரை வராமல் இடையிலேயே நின்று விடுவது இடையில் தட்டிவிடுவது மனைவியென்பது தெரியாமல் அவனுக்குக் கொஞ்சம் கவலையை உண்டாக்கியிருந்தது. எனவே இது இருவகைப் பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வு என்று எண்ணி, அதைச் சொன்ன மனைவியைப் பாராட்டினான்.

பிற்பாடு கிட்டத்தட்டக் கோடி ரூபாய் பெறுமான நகை வர்ப் போகிறது என்பதால் மானசாவுக்கு இப்போது வேறு நகை வேண்டாம்; திருமணத்தின் போது அணிய ஒரு 'செட்' மட்டும் போதும் என்று திருமணம் நிச்சயமானபின் சந்தியா ஓதினாள்.

அதுகூட நாத்தனாருக்குச் செய்ய அவளுக்கு விருப் பம் இல்லைதான். ஆனால் ரொம்பவும் வெளிப்படையாக நாலுபேர் பழிக்கும்படியாக விடவும் அவளுக்கு மனம் வராததால்தான் இந்த ஒரு செட் நகையே.

ஆனால் கதிரேசன் யோசிக்கவும், ''பாருங்கள் கதிர், நமக்கு அர்ச்சனா மானசா இருவரும் ஒன்றுதான். ஒருத் திக்கு ஒரு கோடி ரூபாய் நகை கொடுத்துவிட்டு அடுத்தவ ளுக்குக் குறைக்க முடியுமா? அல்லது, உடனே ஒரு கோடி

ரூபாய் உங்கள் மகளுக்காக எடுக்கத்தான் இப்போது உங்களால் முடியுமா? ஏற்கனவே ஆர்ச்சியை நல்ல நல்ல இடங்களில் கேட்பது உங்களுக்கே தெரியும்; வருகிறவர்கள் யாராக இருந்தாலும் மானசாவுக்குக் கொடுப்பதை இவளிடமும் எதிர்பார்ப்பார்கள் இல்லையா?'' என்று அவள் நயமாகப் பேசியபோது, அதுவும், கதிரேசனுக்கு நியாயமாகவே பட்டது.

இது, சந்தியா அடிக்கடி நினைவு படுத்துகிற விஷயம்தான். அது உண்மையும்தானே? இதைச் சொல்லிச் சொல்லி, மகளுக்கு ஓரளவு நகைகள் செய்தும் வைத்திருக்கிறாள்தான் என்றாலும், அவை அத்தனையும் சேர்ந்தாலும் மானசாவின் நகைகளில் பாதிப் பெறுமானம் வராது என்பதும் அவன் அறிந்ததே. எனவே வழக்கம் போலவே மனைவிக்குத் தலையாட்டி வைத்தான்.

எல்லாமே அவளது விருப்பம் போல நடப்பதை எண்ணி சந்தியா மனம் பூரிக்கையில் அவள் எதிர்பாராததும் நடந்தது.

நகை கைக்கு வந்து சேரும் வரை, சசிசேகரன் மானசாவிடம் நைச்சியமாக நடந்து கொள்வான் என்பது அவள் எதிர்பார்த்ததுதான்.

ஆனால், நிஜமான காதலன் போல, அன்றாடம் வந்து, நின்று, அவன் மானசாவை அகமகிழச் செய்ததும், அந்த மகிழ்ச்சியில் மானசா அழகு கொடுத்ததும் அவள் எதிர்பாராததே.

வீட்டில் ஓரளவு தடையற்று உண்ண இடம் கொடுத்ததும், வெளியே செல்லும் போது, அவன் வாங்கி கொடுத்தது மாக வயிறு நிறைந்து வேண்டிய இடத்தில் கொஞ்சம் சதை பிடித்ததும் அழகூட்டியிருக்கலாம்.

அல்லது வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், உள்ளூரத் திருமணத்திற்கு ஏங்கியிருப்பாள் போல; இப்

போது கல்யாணம் கூடி விட்டதும் திருமண அழகு வந்திருக் கிறது என்று அதை அலட்சியப்படுத்திவிட சந்தியா தயார் தான்.

ஆனால் மானசாவுக்கு வெறும் அழகு மட்டும் கூடியி ருக்கவில்லை. உடலில் ஒரு நிமிர்வு, நடையில் ஒரு மிடுக்கு, அங்க அசைவுகளில் ஓர் ஒயில், கண்களில் ஒரு மின்னல்... கூடவே அண்ணன் கொடுத்த பணத்தை யோசித் துச் செலவிட்டு அவள் வாங்கி அணிந்த, அவளுக்கு மிகமிகப் பொருத்தமான அணிமணிகள், எல்லாமே அவ ளைப் பேரெழில் தேவதையாக்கிக் காட்டின.

கதிரேசன் அந்தப் பணம் தங்கைக்குக் கொடுத்தது சந்தியாவுக்கும் தெரியும்தான். அந்தப் பணத்துக்கு பக்கி மாதிரி ஏதேனும் ஒன்றோ இரண்டோ பட்டுச் சேலைகள் வாங்குவாள் என்று அவள் எண்ணியிருந்ததற்கு மாறாக, அழகிய வண்ணங்களில் சில்க் கோட்டா, ஆர்கான்சா சேலைகளும், பொருத்தமாய்ச் சற்று உயர்ரக பிளாஸ்டிக், வெள்ளி அணிகளுமாக வாங்கி அவள் அணிந்த பாங்கு சந்தியாவுக்கு ஒரு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந் தது. அவளுக்கு என்ன மாதிரி வேண்டும் என்று ஒப்புக்காக அவளைக் கேட்கும் போதெல்லாம் பிடிக்காததையும், பொருந்தாததையுமே விரும்பியது என்று கூறி வந்திருக்கி றாள். அண்ணி, அவளது விருப்பத்துக்கு நேர்மாறாகத்தான் செய்வாள் என்று ஊகித்து, பிடித்ததைப் பிடிக்காதது போலக் காட்டி ஏமாற்றியிருக்கிறாள். சந்தியாவும் மானசா வின் திருட்டுத்தனம் அறியாமல் நன்றாக ஏமாந்து கொண்டே இருந்திருக்கிறாள்! ஒவ்வொரு தடவையும், இப்படித் தனக்குப் பிடித்தமானதே கைக்கு வந்து சேரச்சேர மானசா உள்ளூர எப்படிச் சிரித்திருப்பாள்! சரியான நய வஞ்சகி! இதற்குச் சரியான தண்டனை கொடுக்காமல் அவளைச் சும்மா விடலாமா?

கூடவே மகளின் பரிதவிப்பும் கொதிப்பும் காணவும், அதைச் சகிக்கமாட்டாமல், இந்த வேதனையின் காரணகர்த்தாவான மானசாவின் மகிழ்ச்சியைக் குலைத்தே ஆகவேண்டும் என்று உறுதி கொண்டாள் சந்தியா.

சசிசேகரன் ஒழுக்கம் கெட்டவன் என்று கூறலாமா என்று யோசித்து, உடனே அந்த யோசனையைக் கைவிட்டாள்.

காரணம் ஒன்று, இதில் சந்தியாவின் வாய்மொழியை மானசா நம்பமாட்டாள். அடுத்து, இதை நம்பினாள் என்றால் உடனே திருமணத்தை நிறுத்தி விடுவாள். ஏனெனில் ஒழுக்கக் கேட்டை அவள் சகிக்கமாட்டாள். நேர்மை சீர்மை என்று சில கிறுக்குத்தனங்கள் அவளுக்கு உண்டு. ஒரு மாதிரிப் பிடிவாதமும் உண்டு. என்ன பட்டினி போட்டாலும், திருடியோ, வேலையாட்கள் தயவிலோ உண்ணமாட்டாளே!

இந்தத் திருமணம் நின்று போய், வேறே பணக்கார இடத்தில் வாழ்க்கைப் பட்டால் அப்புறம் இந்த நகைகளும் அவளோடு போய்விடக்கூடும்.

அர்ச்சனாவின் பொறாமையைத் தூண்டுவதற்காக விலை உயர்ந்த ஆடைகள், நகைகள் அணிவித்து, அவற்றின் விலை பற்றி மானசாவிடமே பெருமை பேசினாள். 'அப்படியா!' என்றதற்கு மேல் மானசா அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

வசதியில்லாதவன், சொந்தமாய் ஒரு கார் கூட இல்லை என்று மானசாவின் மனம் நோகவென்று, அவள் காது கேட்கச் சொல்லிப் பார்த்தாள். ஆனால் அதைப் பற்றிய அக்கறையே இல்லாததுபோல, ஆட்டோ ரிக்ஷாவில் கூட ஆனந்தமாகவே வந்து இறங்கினாள்.

இருக்கட்டும்: கழுத்தில் தாலி ஏறட்டும்; பிறகு இந்தச் சிரிப்புக்கு வைக்கிறேன் ஒரு வேட்டு என்று உள்ளூரக் கறுவிக் கொண்டாள் சந்தியா.

அண்ணியின் ஆங்கார மனதையோ, அது தீட்டிய சதியையோ அறியா மானசா தன்னளவில் மிகுந்த மகிழ்ச்சி யோடு இருந்தாள். அண்ணி சொன்ன 'ஏழைபாழை' அவள் காதில் விழத்தான் செய்தது. ஆனால் அவளைக் கைப்பிடிக் கப் போகிறவன் புத்திசாலி; உழைக்க அஞ்சாதவனும் கூட என்பதால் முன்னேற்றம் நிச்சயம் என்ற உறுதி அவளுக்கு இருக்கவே, அவளது உற்சாகம் சற்றும் மட்டுப்படவில்லை. மற்றபடி, இந்த ஏழு ஆண்டு நடைமுறையால், அர்ச்சனா போல நமக்கு நகையில்லையே, நல்ல துணிமணியில் லேயே என்று ஏங்கக்கூட அவளுக்குத் தோன்றாது போகவே, அவள் சந்தோஷமாகவே இருந்தாள்.

கண் சிமிட்டும் நேரமாய்ப் பதினைந்து நாட்களும் பறந்து விட, திருமண நாள் அழகாக விடிந்தது, திருமண நேரமும் வந்தது. சிவப்பில் பட்டும் சரிகையும் பின்னிய சேலையில் எழிலே உருவாய் அமர்ந்திருந்தவளைக் கண் ணால் விழுங்கியவாறே சசிசேகரன் அவள் கழுத்தில் தாலி அணிவித்தான். மணமக்கள் இருவர் முகத்திலும் இருந்த மலர்ச்சி, எல்லோருடைய முகங்களிலும் புன்னகையை வரவழைத்தது இருவர்தவிர.

திருமண விழாவும் விருந்தும் முடிவடைந்ததும், கதி ரேசன் தனியறை ஒன்றிற்கு மணமக்களை அழைத்துச் சென்றான்.

ஏற்கனவே அங்கே அவர்களுக்காகக் காத்திருந்த வக்கீல், மணமக்களை ஆசீர்வதித்துவிட்டு, மேஜை மீதி ருந்த பெட்டியை முத்திரை உடைத்துத் திறந்து காட்டி, பட்டியல் படித்தார்.

கதிரேசனும், சசிசேகரனும் நகைகளைச் சரிபார்த்து விட்டு, பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்திட்டுக் கொடுக் கும்படி மானசாவிடம் கூற, அவளும் அதுபோலவே செய்தாள்.

சசிசேகரனிடம் சிறு இறுக்கம் காணவும், அம்மா இந்தப் பழம் பாடாவதி டிசைன் நகைகளைத் தனக்குத் தராமலே இருந்திருக்கலாம் என்று எண்ணினாள் மானசா. இப்போது அவள் அணியக் கூடியதாக ஒன்றுகூட இல்லை என்று நினைக்கிறானோ!

மணமக்களை வாழ்த்திவிட்டு வக்கீல் சென்றதும், நகைப் பெட்டியை மூடி எடுத்து, கதிரேசனிடம் கொடுத்து விட்டு, சசிசேகரன், மனைவியை நோக்க, அவள் புன்னகை புரியவும், அவன் முகத்திலும் முறுவல் மலர்ந்தது.

இரவிற்காக மானசா தயாராகிக் கொண்டு இருந்தாள். லேசான ஒப்பனைதான். கூடவே நாணமும் பூரிப்பும் பேரெழில் ஊட்டின.

சந்தியாவுடைய தம்பியர் மனைவிகள், கூட நின்று ஏதோ கேலி பேச, மானசாவின் கன்னங்களில் செம்மை பூத்தவண்ணம் இருந்தது.

அந்த வேளையில் உள்ளே வந்த சந்தியா ''ஒரேயடி யாய்க் குழப்பியடிக்காமல், அவளைத் தனியே விட்டுப் போங்கள்'' என்று உத்தரவிட, அந்த இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி உதட்டைப் பிதுக்கியபடியே வெளியேறி னர்.

நம்மிடம் யாராவது சிரித்துப் பேசினால் இந்த அண் ணிக்கு ஆகாதே என்று எண்ணியபடி மானசா கண்ணாடி யில் ஒப்பனையை ஒருதரம் சரிபார்த்துக் கொண்டாள்.

நாத்தனாரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''அலங்கா ரத்திற்கு அதிகமாய் சிரமப்படாதே. நாற்பது லட்சம் ரூபாய்க்காக மணக்கிறவன், அப்படி ஒன்றும் அழகை எதிர்பார்க்க மாட்டான்'' என்றாள் சந்தியா ஏளனமாக.

அண்ணியின் பேச்சை ஒதுக்கி, சற்றுமுன் அவிழ்த்துப் போட்டிருந்த சேலையை எடுத்து மடிக்கத் தொடங்கிய

மானசாவுக்குச் சிறு துணுக்கம் உண்டாயிற்று. சசிசேகரனும் 'நாற்பது லட்சம் கடன்காரன்' என்றானே!

அதற்கும் இதற்கும் ஒன்றுமிராது என்று தனக்குள் கூறியபடியே, ''என்ன 'நாற்பது லட்சம்?'' என்று வேலையிலேயே கவனமாக, அசட்டையாக வினவினாள்.

'அவ்வளவு அகம்பாவமாடி உனக்கு' என்று தனக்குள் கூறியபடியே, ''அடேயப்பா! ஒன்றுமே தெரியாதது போலக் கேட்கிறாயே! அதுதானடி, உன்னை மணப்பதற்காக, உன் புருஷனுக்கு என் கணவர் கொடுக்கிற கடன் பணம். உனக்கு வரப்போகிற நகைகளைப் பற்றி விளக்கி, அவைகளை ஈடாக எடுத்துக் கொண்டு அவர் கேட்ட நாற்பது லட்ச ரூபாய்க் கடனைத் தருவதாகக் கதிர் கூறிய பிறகுதானே, உன்னை மணக்க சசிசேகரன் ஒருவாறு ஒத்துக் கொண்டார்! மற்றபடி, இந்த வற்றல் முகத்திலும், தொத்தல் உடம்பிலும் மயங்கி அவன் உனக்குத் தாலிகட்டினான் என்றா எண்ணினாய்?! நல்ல வேடிக்கைதான்போ!'' என்று கல்லென்று சந்தியா சிரிக்க, மானசாவுக்கு உள்ளே சில்லிட்டது.

பதினைந்து நாட்களாக, சசிசேகரனின் பார்வையிலும் பேச்சிலுமாக உள்ளே வளர்ந்திருந்த தன்னம்பிக்கை ஆட்டம் காண, ''பொய். நான் நம்பமாட்டேன்!'' என்று அடித்துச் சொன்ன போது, அவள் என்னதான் முயன்றும், அவள் குரல் நலிந்து விட்டிருந்தது.

போதாதா மற்றவளுக்கு?

''பொய்யா? நான் சொல்வது பொய்யென்று கூற என்ன திண்ணக்கமடி உனக்கு? இருக்கட்டும். என்னை நம்பா விட்டால் போயேன். அதோ, வெளியே உன் அண்ணன் குரல் கேட்கிறது. அவரிடமே நேரிலேயே கேளேன்? உனக்குத் தயக்கமாயிருந்தால் இதோ, நானே கேட்கிறேன்'' என்று கதவைத் திறந்தவள், அந்தப் பக்க

மாய்ச் சென்று கொண்டிருந்த கணவனை அழைத்து, ''ஒரே அலைச்சல் உங்களுக்கு. பாதாம் கீர் அனுப்புகிறேன்; அதையாவது குடியுங்கள்'' என்று கரிசனம் காட்டிவிட்டு, ''ஏன் டார்லிங், நம்ம மானு கணவருக்கு அந்த நாற்பது லட்ச ரூபாய்க் கடனைக் கொடுத்து விட்டீர்களா? ஈட்டு நகை தான் உங்கள் கைக்கு வந்து விட்டதே?'' என்று வினவினாள்.

''நகை வந்து விட்டால் ஆயிற்றா? இத்தனை ஆண்டு கள் கழித்து, இந்தத் தொழில் நடைமுறை அறியாதவள் போலக் கேட்கிறாயே! இந்த நகைகளை மத்தியஸ்தத்துக்கு அனுப்பி மதிப்பு போட வேண்டாமா? கொடுப்பது சிறு தொகை அல்ல; நாற்பது லட்சம்! ஆடிட்டர் ஒப்புதல், ஈட்டுப் பத்திரம், கடன் பத்திரம் என்று எத்தனைவேலை இருக்கிறது? மாப்பிள்ளையின் அவசரத்திற்காக எவ்வளவு சீக்கிரம், சீக்கிரம் என்று பார்த்தாலும் குறைந்தது பத்து நாட்களாவது ஆகுமே! அதற்குள் இவர்களும் தேனிலவு என்று கொடைக்கானல் வரை போய் விட்டு வரட்டும். வந்ததும் கொடுத்து விடலாம்... என்னது?'' என்று அடுத்து வேறு யாரிடமோ ஏதோ பேசிவிட்டு, ''சந்தியா, மீந்த உணவை எடுத்துச் சென்று ஏழைகளுக்கு வினியோகிக்கும் நிறுவனத்திலிருந்து வந்திருக்கிறார்களாம். நான் போகி றேன்... பாதாம்கீரை அங்கே அனுப்பு... என்று கூறிச் சென்று விட்டான் கதிரேசன்.

உள்ளே, அவன் தங்கை இடிந்து நொறுங்கிப் போனாள். சந்தியாவின் பேச்சைக் கதிரேசன் உறுதி செய்து விட்டானே!

சசிசேகரன் அவள் மேல் பரிதாபப்பட்டு மணப்ப தையே அவமானமாய்க் கருதியவள் மானசா. இப்போது, வெறும் கடன் பணத்துக்காக அவளை மணந்தான் என்றால் இந்த அநியாயத்தை எப்படிச் சகிப்பது? அதற்கும் மேலாக என்னென்ன பொய்கள்! இவனோடு எப்படி வாழ்வது?

முடியாது. நிச்சயமாக, ஒருக்காலும் அவளால் அது முடியவே முடியாது!

12

சந்தியா, சதிரேசனிடம் பேசப் பேச உள்ளே மானசா வேரோடி விட்டாற்போல அசைவற்று நின்றாள்.

அனுபவம் காரணமாகச் சந்தியாவின் சொற்களை மானசா பொதுவாக நம்புவது இல்லை. ஆனால், இன்று அவள் சொன்னது அத்தனையும் உண்மையே என்று அவள் அண்ணனே கூறிவிட்டானே!

அதுவும் என்னமாதிரிக் கொடூரமான உண்மைகள்... இதைச் சொல்வதற்குப் பதிலாகச் சந்தியா அவளைக் குத்திக் கொன்றிருக்கலாமே! பாதகி!

இல்லை. உண்மை அவளுக்கு வேதனை தருவதால் அதைச் சொல்பவளைப் 'பாதகி' என்று கூறுவது தவ்று. சொல்லப்போனால், இங்கு பாதகம் புரிந்தவன் சசிசேக ரனே. குற்றமோ குறையோ கூறுவதென்றால் அவனைத் தான் சொல்ல வேண்டும்.

அதிலும் என்னென்ன அநியாயம் செய்து விட்டான்! பணத்துக்காக அவளை மணந்தது; அதை மறைத்து பொய் யும் புனைந்துரையுமாக அள்ளி வீசியது... என்னவோ, அவளிடம் மெய்க்காதல் கொண்டவன் போல் நடித்தானே!

நம்புகிற முட்டாள்கள் இருக்கிறவரை, ஏமாற்றுகிறவர் கள் ஏமாற்றிக் கொண்டேதான் இருப்பார்கள். நல்லவேளை. இப்போதேனும் தெரிந்ததே. இந்த ஏமாற்றுக்காரனோடு

குடும்பம் நடத்தி, குழந்தை குட்டியென்று பெற்றபின் தெரி யாமல்...

குழந்தை பற்றிக்கூட ஏதோ சொன்னானல்லவா? அவ னுடைய குழந்தைக்குத் தாய் அவளாகத்தான் இருக்க முடியும் என்று புளுகினானே! அன்று அவன் சொல் கேட்டுப் பூரித்த உடல் முழுவதும் இன்று தீயாய் எரிந்தது! குழந்தையாவது, தாயாவது? இவனோடு ஒன்று சேர்ந்து வாழ்ந்து குடும்பம் நடத்தினாலல்லவா குழந்தை வருவதற்கு?

கதிரேசன் அந்தப் பக்கம் சென்றதுமே அவனுக்கு அனுப்புவதாய் சொன்ன பாதாம் கீரை அடியோடு மறந்து விட்டு அவசரமாக மீண்டும் அறையினுள் சென்றாள் சந்தியா.

அங்கே மரண காயம் பட்ட பெண் ஒருத்தி இருக்கி றாளே! அவளுக்கு மிச்சமீதி உயிர் ஏதும் ஒட்டிக் கொண்டு இருந்தால், அதையும் போக்கி விடவேண்டாமா?

உள்ளே வந்தவள், அவளது இல்லாத இடுப்பில் கைவைத்து நாட்டிய பாவனையில் நின்றபடி, நாத்தனாரை எகத்தாளமாக நோக்கின்னாள். ''இப்போது என்னடி சொல்கி றாய்? நான் என்னமோ புளுகுவதாகத் திமிராகப் பேசுகி றாயே! உன் அண்ணனே பிட்டுப் பிட்டு வைத்தாரே; காது குளிரக் கேட்டாயல்லவா? உண்மை என்னவென்று இப் போதேனும் உறைத்ததா? அல்லது, இன்னமும் இந்தக் குச்சி உடம்புக்கு அவன் ஏங்குவதாகத்தான் கற்பனை செய்து கொண்டு இருக்கிறாயா?

விதி மிகவும் கொடியதாக மானசாவுக்குத் தோன்றி யது. ஏழு ஆண்டுகளாக இவளிடம் படாதபாடு பட்டு, இன்றிலிருந்து நிம்மதி என்று இருந்தால், முன்னைவிடப்

பலமாகப் பெரும் பாறையை அவள் தலையில் போட இறைவன் விட்டுவிட்டானே!

அவசரமாக யோசித்து, யோசித்ததில் ஒரு துரும்பு கிடைக்க, அதை விடாமல் பற்றி, ''இல்லை... கற்பனை இல்லை. என்னை எனக்காகவே மணக்க விரும்புவதாக அவர் அண்ணனிடம் சொல்லியிருக்கிறார். அண்ணனே ன்னிடம் சொன்னாரே!'' என்று வேகமாக உரைத்தாள் மானசா.

''ஆமாம்! அப்படிச் சொன்னால்தானே நீயும் தலை யாட்டுவாய்? உன் நகை மூலம் வருகிற பணத்துக்காக உன்னை மணக்க விரும்புகிறேன் என்று எந்த மடையன் வெளிப்படையாகக் கூறுவான்? அப்படிச் சொல்லிக் கேட் டால், உப்புப் போட்டு சாப்பிடுகிற எவளாவது அந்த மாதிரி ஒரு திருமணத்துக்கு ஒத்துக் கொள்வாளா? அதனால்தான் அந்தப் பொய் சொன்னார். என்று மீண்டும் ஓங்கி அடித் தாள் சந்தியா.

பதில் சொல்ல வகையற்று நின்றவளை அலட்சியமாக நோக்கி, ''அடியம்மா, மானசாதேவி ஓர் உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள். 'டீனாஃபாக்டர்' என்பார் களே, தெரியுமா? நம் லேவாதேவித் தொழில் வளர்வதே அதனால்தான். 'தேர் இஸ் நோ அதர் வேறு என்ற ஆங்கிலச் சொற்களின் சுருக்கம் அது. இது தவிர வேறு வழி ஒன்றும் காணாத நிலை. உன் சசிசேகரனுக்கும் அதே கதிதான். ஊரில் சொத்து கித்து என்று உருப்படியாக ஒன்றும் கிடை யாது. ஈடு வைக்க ஒன்றும் இல்லாதவனுக்குத் தொழிலுக்கு யார் கடன் கொடுப்பார்கள்? கதிரிடம் கையேந்தி வந்து நின்றான்.

''நான்தான் பார்த்து விட்டு உன் அண்ணனிடம சொன் னேன். உங்கள் தங்கையையும் எவனும் மணக்க முன்வரக்

காணோம். திருமணம் தட்டித் தட்டி முகம் முதிர்ந்து கிழடாகி விட்டது. இந்தப் பையனுக்கும் பிழைக்க ஒரு வழியும் இருப்பதாகக் காணவில்லை. மானுவுக்கு வரப்போ கிற நகைகளைப் பற்றிச் சொல்லி, அதை அடமானம் வைத்துப் பணம் தருகிறேன்; அவளைக் கட்டிக் கொள் என்றால் சலாம் போட்டுத் தாலி கட்டுவான். கேட்டுப் பாருங்கள் என்றேன்...

''நான் சொன்னது சரியாகிவிட்டது பார். சசிசேகர னுக்கு ஒரே சந்தோஷமாகி விட்டது. 'பணம் கிடைப்பது ரொம்ப முக்கியம். கூடவே வாரிசுகளைப் பெற்றுப் போட ஒரு பெண்ணும் கிடைப்பது ஊக்க போனஸ் மாதிரி ஒரு கூடுதல் நன்மை' என்று ஒரே ஆனந்தமாய்த் தலையாட்டி ஷிட்டார் தெரிந்து கொள்.

''அவர் சொன்னது இதே வார்த்தைகள்தான். சந்தேக மாய் இருந்தால் கூடுதல் நன்மை என்பதெல்லாம் அவர் சொன்னாரா இல்லையா என்று உன் அண்ணனையே நேரே கேட்டுத் தெரிந்து கொள். என் பேச்சைத்தான் நீ நம்...பமாட் டாயே!'' என்று அந்தச் சின்னப் பெண்ணின் மனதை மேலும் மேலும் குத்தி ரணமாக்கினாள்.

அப்போதும் பிடிவாதமாய் நிமிர்ந்து ''இவ்வளவு நாள் இதை நீங்கள் சொல்லாமல் இருப்பானேன்?'' என்று விடா மல் மானசா கேட்டாள்.

''சொல்லிவிட்டு, நீ உடனே கல்யாணத்தை நிறுத்தி விட்டால் என்ன செய்வது? இந்த எலும்புக் குச்சி உடம் புக்கு எவனோ ராஜகுமாரன் வருவான் வருவான் என்று நீ பாட்டில் கனவு காணத் தொடங்கி விடுவாய்! நீ எப்படி யோபோ! உன்னை விட மூன்று வயது சின்னவள் எங்கள் ஆர்ச்சி. இருபது வயது. இன்றைக்கு ஆயிரம் பேர் அவ ளைக் கேட்கிறார்கள். அவள் திருமணம் நடக்க வேண்

டாமா! உனக்கு செய்யாமல் அவளுக்குப் பண்ணினால் ஊர் உலகம் என்ன சொல்லும்? உன் குச்சி உடம்பை நீ எப்படி எப்படிக் காட்டினாலும் வேறு எவன்தான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன் வருவான்? நீயே சொல்லு?'' என்று திருப்பி அடித்தாள் அண்ணிக்காரி.

சசிசேகரன் மானசாவின் அழகில் மோகம் கொண்டு அவளை மணக்கவில்லை என்று நிலைநாட்டுவதே குறியாகச் சந்தியா இருந்தாள்.

அது மானசாவுக்கும் புரிபட்டது. கூடவே, பெரும்பாலும் அது உண்மையாக இருக்கக் கூடும் என்ற எண்ணம் தோன்றி அது நிச்சயம் என்று கூடத் தோன்றிவிட்டது.

ஆனால், அவளது மெல்லிவின் காரணம் யார்? செய்வதையும் செய்து விட்டு இந்தப் பேச்சு பேசுகிறாளே!

சந்தியாவை நேராக நோக்கி, ''என் உடம்பு ஏன் அண்ணி ஒல்லியாக - உங்கள் மொழியில் குச்சியாகிப் போயிற்று?'' என்று ஒருமாதிரிக் குரலில் வினவினாள் மானசா.

ஒருகணம் முகம் இருண்ட சந்தியா உடனே இரு மடங்கு ஆங்காரத்துடன் பதில் சொன்னாள். ''பின்னே? எவ்வளவு உயர்ந்த வைரங்கள்! அவையெல்லாம் உனக்கு, என் மகளுக்கு ஒன்றுமே இல்லை என்று சும்மா என் வயிற்றில் அடித்தால் நான் சும்மா பொறுத்துக் கொண்டு இருப்பேன் என்று நினைத்தாயா? நன்...றாகப் பழிவாங்கி னேன்! நிஜமாகவே அந்தப் பழிகாரியுடைய மகளின் வயிற்றில் அடித்தேன். என்னை யார் என்று நினைத்தாள் அந்த ராட்சசி?''

ராட்சசியா? பெற்ற தாய்க்கும் மேலாக அவளைப் போற்றிப் பாதுகாத்த மாமியாரை நாக்கூசாமல் ராட்சசி

என்கிறாளே! மனச்சாட்சியே இல்லாமல் இப்படி ஒருத்தியா இந்த வீட்டு மருமகளாக வரவேண்டும்?

சந்தியாவின் வன்மக் குரல் மேலும் ஒலித்தது. ''அன்றைக்கே தீர்மானித்து விட்டேனடி, இந்த நகைகளில் ஒன்றைக்கூட நீ ஒருநாளும் அணிய விடக்கூடாது என்று! நினைத்ததை நிறைவேற்றியும் முடித்து விட்டேன் பார்!'' என்று கொக்கரித்தது.

அண்ணியைக் கூர்ந்து நோக்கினாள் மானசா. அவளும் ஒன்றும் முட்டாள் அல்லவே! சட்டென எல்லாம் புரிபட்டுப் போயிற்று. ''அப்படியானால் முன்பு வந்த திருமணப் பேச்சுகளை எல்லாம் முறித்தது உங்கள் கைங்கரியம் தானா?'' என்ற தன்னை மீறிக் கேட்டுவிட்டாள்.

பஞ்சமாபாதகங்களில் ஒன்று பொய். அப்படிப்பட்ட பொய்யில் ஆயிரம் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தி வைத்தால் அதுவும் புண்ணியம்தான் என்பார்கள். இவள் பொய் மேல், பொய் சொல்லி மானசாவிற்குத் திருமணம் நடக்காமல் தடுத்து வந்திருக்கிறாளே! அதைவிடக் கொடுமையாக 'உன்னைப் பிடிக்காததால் திருமணப் பேச்சு நின்றுபோயிற்று' என்று சொல்லிச் சொல்லி மானசாவின் தன்னம்பிக்கையைப் பெருமளவு குலைத்தாளே! மனம் கூசிக் குன்றி, எத்தனை நாட்கள் மானசா வேதனைப்பட்டிருக்கிறாள்! அவசியமற்ற அந்த வேதனையின் காரணம் இந்த அண்ணியின் அநியாயமான வன்மம்.

சசிசேகரன் பற்றிய உண்மை அறிந்ததால் உள்ளூர நிலை குலைந்திருந்ததாலோ என்னவோ, சந்தியாவின் முன்னிலையில் எப்போதும் கடைப்பிடிக்கும் நாவடக்கம் மறந்து மனதில் தோன்றியதை மானசா பேசிவிட்டாள்.

ஆனால், ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது போலக் கழுதை உடனே கண்டு பிடித்து விட்டதே என்று அது வேறு

சந்தியாவுக்கு அதிக ஆத்திரம் வந்தது. இதற்குமேல் எதை யும் பேச்சில் விட்டுவிடக் கூடாது என்று எண்ணியவள், மிகுந்த வெறுப்புடன் நாத்தனாரை நோக்கி, ''இல்லாவிட் டால், தாய் தகப்பன் இல்லாத அனாதைக்கு மாப்பிள்ளை கள் 'க்யூ'வில் வந்து காத்துக் கிடப்பார்கள் என்றா நினைத் தாய்? எப்படியோ அனாதைக்கேற்ற அனாதை ஒருவன் கிடைத்தானே, கிடைத்தவனை விட்டுவிடக் கூடாதே என்று அன் காலைக் கையைப் பிடித்து அவனோடு நல்லபடியாகக் குடும்பம் நடத்துகிற வழியைப் பார்!'' என்று அதிகாரக் குரலில் உத்திரவிட்டுவிட்டு, அதற்குமேல் நில்லாமல் திரும்பி நடந்து வெளியே சென்று விட்டாள்.

சந்தியா அறையில் இருந்தவரையும், அவளது பேச்சு, அது பற்றிய யோசனை, பதில் பேச்சு என்று எப்படியோ சமாளிக்க முடிந்தது. ஆனால், அவளும் வெளியேறிவிட்ட பிறகு, மானசாவுக்கு விம்மி வெடித்துக் கொண்டு, 'ஓ' வென்று கதற வேண்டும் போல அடைத்துக் கொண்டு வந்தது. ஒரு மூச்சு அழுதுவிட்டால் இந்த அடைப்பும் வலியும் குறையக் கூடுமோ?

கண்ணைக் கரித்துக் கொண்டுவந்த அழுகையைப் பிடிவாதமாக அடக்கினாள்.

அழுவதற்கு இப்போது அவகாசம் இல்லை. இதோ, முதல் இரவுக்கென்று அழைத்துச் செல்ல யாராவது வந்து விடுவார்கள். அதற்குள் அவள் யோசிக்க வேண்டும். இனி என்ன செய்வது, எப்படி வாழ்வது என்று யோசித்தே ஆக வேண்டும்.

இந்த நாட்டில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும்போது, கப்பம் கட்டுகிற மாதிரி அவளோடு கூடவே, பணம் பொருள் என்று கொடுப்பது ஒன்றும் அதிசயம் அல்ல. ஏலம் போடுகிற மாதிரி, எந்தப் பெண்

அதிகப் பணம் கொண்டு வருகிறாளோ அவளையே மணமு டிப்பதும் பலவீடுகளில் சர்வ சாதாரணமாக நடப்பதுதான்.

ஆனால் அதைச் சசிசேகரன் வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாமே என்பதுதான் மானசாவின் வேதனை.

'பாரம்மா, நான் தொழில் செய்ய இவ்வளவு பணம் தேவைப்படுகிறது; அந்தப் பணத்தை உன் நகைகளைக் கொண்டுதான் பெறமுடியும். நம் இருவரின் பிற்கால வாழ் வின் மேம்பாட்டுக்காக உன் நகைகளைப் பயன்படுத்திக் கொள் - 'பயன்படுத்திக் கொள்ளலாமா' என்று சசிசேகரன் அவளிடம் அனுமதி கூடக் கேட்க வேண்டாம். நகைகளைப் பயன்படுத்திக் கொள்கிறேன்' என்று கூறியிருந்தால் கூடப் பரவாயில்லையே!

யோசிக்கும் போதே மனம் முரண்டியது. எத்தனை காலமானாலும் அவளுக்கென்று பிறந்திருக்கும் ஒருவன் அவளைத் தேடி வரும்வரை காத்திருப்பதாகத்தானே மானசா உறுதி கொண்டிருந்தாள்! இப்படிக் கேட்டால் மறுத்திருக்க மாட்டாளா?

ஆனால் அது சசிசேகரனுக்குத் தெரியாதல்லவா? எப்படியும் மணக்கப் போகும் பெண்ணிடம் உண்மை கூறுவதுதானே கடமை? நேர்மாறாக, என்னவோ அவ ளைக் காதலிப்பவன் போல நாடகம் நடத்துவானேன்? அதென்ன... 'அவளுக்காகவே அவளை விரும்புவதாக:... அந்தப் பொய் ஏன்? ஒருவேளை, இப்படி மறுத்து விடு வாளோ என்று ஐயம் தோன்றித்தான் மறைத்து நாடகமாடி விட்டானோ?

தன்னோடு கூட வரும் சொத்து சுகத்துக்காக என்று இல்லாமல் ஒருவன் தனக்காகவே தன்னை மணக்கிறான்

என்றால், எந்தப் பெண்ணுக்குமே அதைவிடப் பெரிதாக எதுவும் இருக்க முடியாது.

என்னவோ, அவளது விருப்பங்கள்தான் அவனுக்கு உலகத்திலேயே முக்கியம்போல சசிசேகரன் நாடகம் ஆடினானே! சின்னச் சின்ன நியாயமான ஆசைகள் கூட நசுக்கப்பட்டு ஒடுங்கிக் கிடந்த பெண், நம்மை மதிக்கிற கணவன் கிடைத்தான் என்று எவ்வளவு மணம் பூரித்தாள் என்று அவன் அறிவானா?

கோபுர உச்சியில் நின்று எல்லோரையும் குனிந்து பார்ப்பது போலப் பெருமிதமாய் உணர்ந்தாளே! அங்கிருந்து நேராகக் குப்பைக் குழியிலேயே தள்ளி விட்டானே!

இதை எப்படி மன்னிப்பது? எப்படி ஒப்புவது? இரண்டுமே முடியாத காரியம்.

வேறு என்ன செய்வது?

அந்த நகைகளை அடகு வைக்கத் தரமுடியாது என்று கத்தி, கலாட்டா பண்ணலாமா என்று ஒருதரம் யோசித்தாள். ஆனால் எதற்கும் அலறி ஆர்ப்பாட்டம் செய்வது அவளுக்குப் பழக்கமல்ல என்பதோடு, ஏற்கனவே நகைகள் கதிரேசனின் இரும்புப் பெட்டிக்குள் போய்விட்டன; இனி அவை யானைவாய்க்குக் கரும்புதான். ஒருகால் அண்ணனாகத் தரமுன் வந்தாலும் அண்ணி அதை எப்படியும் தடுத்து விடுவாள். இது பயனற்ற யோசனை!

அண்ணி, என்றைக்குமே விரோதி. அண்ணன்... மனைவியை மீறாதவன். அடுத்து, சசிசேகரனையும் இழக்க நேரும். அப்புறம் எங்கே போய் எப்படி வாழ்வது?

'எந்த நிலையிலும் நிமிர்ந்து நின்ற பாங்கு' என்றானே; இப்போது முதுகெலும்பு என்று ஒன்று இல்லவே இல்லாதது

போலத் தோன்றுகையில் எப்படி நிமிர்ந்து நிற்பது என்று மானசா கலங்கிக் கொண்டு இருக்கும் போதே யாரோ வந்து அவளை அழைத்துச் சென்று, சசிசேகரன் இருந்த அறையி னுள் விட்டு கதவைச் சார்த்திக் கொண்டு சென்றார்கள்.

அந்தக் கதவுதான் ஆதாரம் போல அதன் மேல் முதுகைச் சாத்தி நின்றபடி எதிரே வெறித்தாள் மானசா.

அவளது வெறித்த பார்வை வட்டத்துள் சசிசேகரன் வந்து நின்றான். மனைவியின் பார்வையில் வேறுபாடு உணர்ந்து, "என்னடா?" என்று பரிவுடன் கேட்டு அவள் கன்னத்தைத் தொட்டான்.

தீச் சுட்டாற் போல விலகினாள் அவள்.

13

இந்தத் திருமண நாளுக்கு முன்னதாகச் சசிசேகரனின் விரல் நுனி கூட மானசாவின் மேல் பட்டதே கிடையாது' என்கிற மாதிரியெல்லாம் சொல்ல முடியாது. இந்தப் பதி னைந்து நாட்களில் எத்தனையோ தடவை, வேண்டுமென்று அலைகிற மாதிரி இல்லாவிட்டாலும் தற்செயலாகவேனும் பலமுறை அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பட்டார்கள்தான்.

ஆட்டோவில் ஏறும்போது, இறங்கும் போது, நெளிந்து வளைந்து ஆட்டோ செல்லும் போது பலமுறை உராய நேர்ந்தது உண்டுதான். கூட்டத்தில் செல்லும்போது மானசாவுக்குப் பாதுகாப்பாய் அவன் அவளை ஒட்டி நின்றிருக்கிறான். கைப்பற்றி வழிநடத்திச் செல்வது இயல் பாகவே நடந்தவைதான்.

அப்போதெல்லாம், மிகவும் இதமான ஓர் இனிய பரவசம் மானசாவின் உடலெங்கும் பரவுவதை அவள் உணர்ந்திருக்கிறாள். இன்னமும் கூட சசிசேகரனோடு நெருக்கமாய் நிற்க வேண்டும், ஒட்டிக் கொண்டு உட்கார வேண்டும் என்று ஆசைவரும்.

அப்படி உரிமையோடு அணுகியிருக்க இன்னமும் பத்து நாட்கள், ஒன்பது நாட்கள்... இரண்டே நாட்கள், நாளை... என்று நாட்களை இழுத்துப் பிடித்த பொறுமை யோடு எண்ணிக் கொண்டு இருந்தவளும் இதே மானசா தான்.

ஆனால், இன்று அதற்குரிய முழு உரிமையையும் இருவருமே பெற்று விட்டபோதோ, கணவனாகிவிட்ட சசிசேகரனின் கைபட்ட இடம், தீக்கங்கு பட்டது போல மானசாவுக்குக் காந்தலெடுத்துச் சட்டென அவன் கைக்கு எட்டாத தூரம் விலகி நின்றாள்.

ஆனால் அது அந்த வினாடி மட்டுமே. கையெட்டாத தூரம், இரண்டு எட்டு எடுத்து வைத்தால் மீண்டும் அவனுக் குக் கையெட்டும் தூரம்தான்.:. அப்படிப் பார்த்தால் அந்த அறை முழுவதுமே சசிசேகரனின் கை எட்டக்கூடிய இடம் தான்.

இந்த அறையை விட்டு வெளியே சென்று விட்டால்... அங்கே அவளைப் பார்த்து, கெக்கலி கொட்டிச் சிரிக்க அவளுடைய அண்ணி தயாராக இருப்பாளே!

ஆனால் அதற்காக இந்த வேடதாரிக் கணவனின் காதல் நடிப்பை ஏற்பதும் முடியாத ஒன்றே!

பின்னே, என்ன செய்வது? என்ன... செய்வது?

''மானு?!'' என்று கேள்வியும் கனிவுமாய் மேலும் ஓர் அடி எடுத்து வைத்த சசிசேகரன், அவள் வெறித்த பார்வை யுடன் மேலும் பின்னடையவும் நின்று விட்டான்.

மனைவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவனுக்கு, அங்கு தென்பட்ட திகைப்பும், மிரட்சியும் வியப்பூட்டின. புருவம் சுருக்கி சில வினாடி யோசித்தவனின் முகம் விரைவிலேயே தெளிந்தது. ''இருபத்து மூன்று வயதுக்கு நீ மிகவும் சின்னப் பாப்பாவாகத்தான் இருக்கிறாய்! கட வுளே! அரிச்சுவடியிலிருந்து பாடம் கற்றுத் தர வேண்டியி ருக்கும் போல் தெரிகிறதே!'' என்று உல்லாசமாகப் பரிகசித் துச் சிரித்தான் அவன்.

சிரிப்பு வேறு வருகிறதா என்று உள்ளூரப் புகைந்த போதும், ஒருவழியும் கண்டு கொண்டவளாய், மானசா மேலும் பின் நகர்ந்து போனாள்.

சிரிப்பு நின்றுவிட, ''மானசா?'' என்றான் சசிசேகரன் கேள்வியாக. ''என்னம்மா, என்னிடம் என்ன பயம் உனக் கு?'' என்று கனிவுடன் கேட்டான்.

அந்தக் குரலிலேயே கண்ணைக் கரித்தது அவளுக்கு ஆனால், இந்தக் குரலையும் பேச்சையும் நம்பித்தானே இப்படி ஏமாந்து நிற்கிறாள்! மீண்டும் நெஞ்சை அடைத்துக் கொண்டு அழுகை வந்தது. ''எனக்கு... எனக்கு.. என்ற வள் முகத்தை மூடிக் கொண்டு தன்னை மீறி விசும்பினாள்.

''மானு! என்னடா! என்ன?... என்று ஓர் எட்டில் அவளை அணுகி, அணைத்துக் கொண்டான் சசிசேகரன்.

இந்த அணைப்பினுள், பத்திரமாய், பாதுகாப்பாய், மற்றதை எல்லாம் மறந்து இருந்து விட்டால் என்ன என்று கூட ஒரு கணம் மானசாவுக்குத் தோன்றிவிட்டது.

மணம்பேசி முடித்த நாளிலிருந்து சசிசேகரன் ஏற்ற பாத்திரத்திற்குரிய நடிப்பாகவே இது இருந்து விட்டுப் போகட்டும்; அவளுக்கு விவரம் எதுவும் தெரியாததாக,

தெரியாதது போலவே இருந்து விடட்டுமே என்று மனம் ஏங்கியது.

ஆனால், அவள் அறிவாள் என்பது அவனுக்குத் தெரியாது என்றாலும், 'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க' அல்லவா? சில கணநேர மயக்கத்துக்கு அடிமையாகிப் போனால் காலமெல்லாம் அவள் மனமே அவளைச் சுடுமே!

அப்போதும், கணவனை விலக்கும் தென்பற்று, ''வே... வேண்டாம்'' என்று விசித்தபடியே, மூடிய கைக ளுக்கிடையே முணுமுணுத்தாள்.

''என்ன வேண்டாம்?''

''எ எதுவும்...

சிலகண நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

அதன் பின், மானசா தன்னை விடுவித்துக் கொள்ள மெதுவாக முயன்றபோது அவன் அவளைத் தடுக்க வில்லை. அவள் கையை மட்டும் பற்றி, ''இங்கே வா, மானசா.'' என்று கட்டிலை நோக்கி அவளை அழைத்துச் சென்றான்.

அவளது நடை தயங்கவும், ''சில விஷயம் பேச வேண்டும், மானசா: அதை நின்று கொண்டே பேசுவதை விட, வசதியாக உட்கார்ந்து கொண்டு பேசலாமில் லையா?'' என்று வினவவும் அவள் மேலே மறுப்பு காட்டாமல் நடந்து சென்று கட்டிலின் ஓர் ஓரத்தில் அமர்ந் தாள்.

பற்றியிருந்த கையைக் கூட விலக்கிக் கொண்டு சென்று, கட்டிலின் ஓர் ஓரமாய்ப் பட்டும் படாமலுமாய் மானசா விலகி அமர்ந்திருப்பதைப் பார்த்து சசிசேகரன் லேசாகப் புன்னகை செய்தான். ''மானசா, நீ சிறுபெண் அல்ல. உன் அண்ணி வீட்டில் நீ வளர்ந்த விதம் உன்னைப்

பல வகையிலும் பாதித்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அண்ணியின் கெடுபிடியில், உனக்குப் பேச்சு சுதந்திரமே இல்லாமல், எதையும் வாய்விட்டுச் சொல்லக் கூட வழியில்லாமல் இறுகிப் போயிருந்தாய். ஆனால், இப்போது நிலைமைவேறு. நான் உன் கணவன். என்னிடம் நீ மனம் திறந்து பேசலாம். எந்தச் சிக்கலையும் நாம் இருவரும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்... அதனால் உன் பிரச்சினை என்ன, சொல்லு'' என்று கேட்டான்.

மனம் திறந்து பேசுவதாம்! பேசித் தீர்த்துக் கொள்வ தாம்! இனி எதைப் பேசி என்ன பிரயோசனம்? அத்தோடு, பிரச்சினையே - அடி முதல் நுனிவரை மொத்தமும் அவன்தானே?

''பேசுவதற்கு ஒன்றும் இல்லை.'' என்றாள் வரண்ட குரலில் அவள்.

''மனு, இதோ என்னைப்பார்.. என்ற சசிசேகரன், மனைவியின் பார்வை பிடிவாதமாய்த் தரையிலேயே பதிந் திருக்கக் கண்டு, ''பார் மானசா, இன்றையச் சடங்குகளி னால் நீ மிகவும் உடல் களைத்திருப்பாய். மனமும் அலுத்தி ருப்பாய். உனக்குச் சாப்பிடக்கூட யாராவது தந்தார்களோ என்னவோ? பசிக்கிறதா, சொல்லு?'' என்று கேட்டவன், அவள் இல்லை என்பது போலத் தலையசைக்கவும், ''சரி, வேறு ஒன்றும் வேண்டாம் என்றாலும், இந்த பாலையாவது கொஞ்சம் குடித்து விட்டுப் பேசாமல் படுத்துத் தூங்கு. மற்றதைக் காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

இவனிடம் மறுத்துப் பேசி வாதாடுவதைக் காட்டிலும் அவன் சொன்னது போலச் செய்து விடுவது மேல் என்று தீர்மானித்து, கட்டிலை விட்டிறங்கிச் சென்று, அங்கே வெள்ளி சொம்பில் இருந்த பாலை இரு தம்ளர்களில் ஊற்றி ஒன்றை அவனிடம் நீட்டினாள் மானசா.

தன்க்கும் ஒன்றை எடுத்து மடமடவென்று மருந்தாய்க் குடித்து முடித்தாள்.

தம்ளர்களை 'வாஷ் பேசி'னில் அலசிக் கொண்டுவந்து வைத்தாள்.

அதற்குள், கட்டிலில் இருந்த ஒரு தலையணை, போர் வையை எடுத்து, அவன் விரித்துக் கொண்டு இருக்கக் கண்டு, ''நான் தரையில் படுத்துக் கொள்கிறேன்'' என்று சின்னக் குரலில் இயம்பினாள்.

''கூடாதம்மா. நீ மிகவும் அலுத்துக் களைத்திருக்கி றாய். நீ கட்டிலில் படுப்பதுதான் உத்தமம்... என்னைப் பற்றிக் கவ்லைப்படாதே. முன்பு அரபு நாடுகளில், நஷ்ட ஈட்டுத் தொகைக்காகக் காத்து கிடந்தபோது மூன்று நண்பர்க ளோடு ஒரே அறையில் வசித்திருக்கிறேன். இரவானால் ஒரே வரிசையாகப் போர்வையில்தான் படுக்கை. எனக்குப் பழகியதுதான். அதனால் என்னைப் பற்றிக் கவலைப்பட தேவையே இல்லை.''

கவலைப்படாமல் இருக்க அவளால் முடியவில்லை. கணவன் வெறும் தரையில் படுத்து உறங்கும்போது தான் மட்டும் நல்ல பஞ்சு மெத்தையில் படுத்துத் தூங்குவது தப்பு போல மனதில் உறுத்தியது.

கூடவே, தரையில் வெறும் விரிப்பில் படுப்பது எப்படி சசிசேகரனுக்குப் பழக்கமோ, அதுபோலவே மானசாவும் அந்த ருசியும் அறிந்தவள்தானே? அவ்வப்போது, கதிரே சன் குடும்பத்தோடு வெளியூர் செல்லும் போதெல்லாம் ஓட்டல்களில் இரண்டு இரட்டை அறைகள் எடுப்பது வழக் கம். ஒன்று கணவன் மனைவிக்கு, மற்றது பிள்ளைகளுக்கு. பிள்ளைகள் அறையில், இன்னொரு படுக்கைக்கு ஏற்பாடு செய்ய ஏன் இன்னுமொரு தலையணை கொண்டுவரும்படி கூறக் கூட யாருக்கும் தோன்றியதில்லை. ஒரு சோபா

குஷனைத் தலைக்கு வைத்துக் கொண்டு தரையில் தூங்குவது எப்போதும் மானசாவின் கடமை.

அவள் யோசித்துக் கொண்டு நிற்கையிலேயே, சசிசேகரன் குளியலறையிலிருந்து திரும்பி வந்தான்.

மீண்டும் மனைவியை நெருங்கி, ''நீயும் சீக்கிரமாகப் படுத்துத் தூங்கு மனு. நல்ல ஓய்வுக்குப்பின், இந்த அலுப்பெல்லாம் மாறி, நாளைக்கு எல்லாமே வித்தியாசமாகத் தோன்றும், பார். இப்போதைக்கு எதையும் எண்ணி மனதைக் குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாக உறங்கு'' என்றவன் அவளது கையைப் பற்றி, லேசாக முத்தமிட்டு விட்டு, அவனது படுக்கைக்குச் சென்று படுத்தான். ''நீ படுக்கும் போது விளக்கை அணைத்துவிடம்மா.''

அவளைச் சொன்னது போல, சசிசேகரனுக்கும் உடலும் மனமும் களைத்திருந்ததோ? அதற்குமேல் அவனிடம் சலனம் இல்லை.

இதற்கு மேல் நின்று கொண்டிருந்தால் வேறு மாதிரி அர்த்தம் தோன்றும் என்று, மானசாவும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டு விட்டாள்.

ஆனால், அவனைப் போல எளிதாக உறங்க அவளால் முடியவில்லை. எளிதாக என்ன? சிரமப்பட்டு முயன்றும் கூட முடியவில்லை.

இந்த இரவைப் பற்றி அவள் என்னென்ன கற்பனைகள் செய்து வைத்திருந்தாள்! செக்ஸ் விஷயம் இருக்கட்டும்; ஆடு மாடு கூடத்தான் அதைச் செய்கிறது.

ஆனால், உரிமையும் பிரியமுமாகக் கணவன் தோளில் சாய்ந்தபடி பேசி மகிழவேண்டும்; அவரவர் ஆசைகள், எண்ணங்கள் எல்லாம் அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ள

வேண்டும்; அது இது என்று - என்னென்ன நினைத்திருந் தாள்! கடைசியில்...

ஆனால், சசிசேகரனுக்கு அதுபோல ஆசைகள் எது வுமே தோன்றியிருக்கவில்லை போல. தோன்றியிருந்தால் இப்படி நிம்மதியாகத் தூங்க முடியுமா... என்று அதற்கு வேறு ஒரு மூச்சு அழுகை வந்தது. விசும்பினால்கூட அவன் விழித்து என்னவென்று கேட்கப் போகிறானே என்று ஓசையற்றுக் கண்ணீர் வடித்தாள்.

கண்ணீருக்கிடையே, சூறாவளிக் காலத்துக் கடலாய் மனம் மட்டும் கொந்தளித்துக் கொண்டே இருந்தது.

சசிசேகரன் மனதில் காதல் அணுவளவும் இல்லை என்பதற்கு, அவனது இந்த ஆழ்ந்த உறக்கமே உறுதியான சான்று!

மானசாவின் மூடமதி மட்டும் சசிசேகரனிடம் மயங்கி, நிலையிழக்காமல் இருந்திருந்தால் இந்த உண்மையை அவள் அறிய அண்ணியின் பேச்சோ, அதற்கு அண்ண னின் முத்திரையோ கூட அவசியம் இல்லை.

பங்களூரில் 'வந்த வேலை முடிந்தது; கிளம்புகிறேன்' என்றானே! வந்தது பணத்திற்காக மட்டுமே என்பதால் தானே திருமணப் பேச்சும் அண்ணனிடம் நடந்து முடிந்தி ருக்கிறது! அவனிடம் ஆசை என்றால் முதலில் அவளிடமல் லவா சம்மதம் கேட்டிருப்பான்? திருமணம் பற்றி அண்ணன் கூறியதுமே இதை அவள் யோசித்திருக்க வேண்டாமா?

நகைகள் வந்ததும் எப்படி இறுகிப் போனான்! நகைக ளின் அமைப்பு பிடிக்கவில்லைபோல என்று வருத்தப்பட் டாளே! அவற்றின் பெறுமானம் பற்றிய கவலையாக இருந் திருக்கும் என்று இப்போதல்லவா புரிகிறது!

அண்ணனிடம் பத்திரமாக வைக்கக் கொடுக்கிறான் என்று நினைத்தது மடத்தனத்தின் சிகரம் அல்லவா? மற்ற படி சொத்து சுகம் என்று பெரிதாக இல்லாத இவனுக்கு நாற்பது லட்சம் ரூபாய் யார், எப்படிக் கடன் கொடுப்பார் கள் என்று அன்றே அவள் யோசித்திருக்க வேண்டாமோ?

எங்கே யோசிப்பது? அவள்தான் புத்தி மயங்கிக் கிறங்கிக் கிடந்தாளே!

கிறக்கம் தெளிகிறவேளை காலம் கடந்ததாகிவிட்டது!

அந்தக் கடன் பணத்தோடு சேர்ந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக் கருதி சசிசேகரன் சாதாரணமாகவே இந்தத் திருமணத்தை ஏற்க முன்வரலாம்.

ஆனால், ஒன்றும் இல்லாததற்கு அரைரொட்டி மேல் என்று அவனோடு வாழ்வது அவளால் முடியாத காரியம்.

இந்த ஏழு ஆண்டுகளாகச் சந்தியாவிடம் சொல்லொ ணாக் கொடுமைகள் அனுபவித்த போதெல்லாம், மானசா வின் ஒரே ஆறுதல், அவளது இல்லற வாழ்வைப் பற்றிய கற்பனைகள்தான். என்றேனும் ஒருநாள் அவளுக்கும் திரு மணம் ஆகித்தான் தீரும்; அப்போது கணவனோடு காத லால் கருத்தொருமித்து, ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து என்று... மனதால் ஒரு மாளிகையே கட்டியிருந்தாள்.

சசிசேகரனை அந்தக் காதல் நாயகனாக உருவகித்தி ருந்தவளுக்கு, இந்த ஏமாற்றம் சற்றும் சகிக்க மாட்டாததாகத் தோன்றியது. ஆனால், அதற்காக அவனைக் குற்றம்சாட்டி, சண்டை போட்டு ரகளை செய்வதற்கும் அசுசியாக இருந் தது.

எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விடாது. பணம் முக்கியம் மற்றது கூடுதல் நன்மை என்றவன் பணம்

கிடைத்த அளவில் திருப்தி அடைய வேண்டியதுதான். அவளுக்கு... அவளுக்கும் அண்ணியிடமிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது என்று வைத்துக் கொள்ள வேண்டியது தான். எப்படியும் மானசாவைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் சந்தியாவுக்கு இனிக் கிடையாதுதானே?

தூக்கமே இல்லாதபோது விழிப்பது பிரச்சினை அல்ல.

விடியுமுன்பே குளிர் நீரில், குளிரக் குளிரக் குளித்து முடித்துவிட்டு, மானசா 'சிட் அவுட்'டில் கிடந்த சோபாவில் அமர்ந்து வெளியே வெறித்தாள்.

''குட்மார்னிங்!'' என்ற கணவனின் குதூகலக் குரல் கேட்டுத் திரும்பியவள், ''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்று அவனது வாழ்த்தைத் திருப்பாமலே விஷயத்தைத் தொடங்கினாள்.

கேள்வியாய் நோக்கியவனிடம், ''நான் என் அண்ணி யிடமிருந்து தப்பிப்பதற்காகவே உங்களை மணந்தேன். ஆனால். ஆனால் எனக்கு இந்தத் திருமண உறவு பிடிக்க வில்லை. அதனால் என்னால் உங்களோடு ஒருநாளும் இணைந்து வாழமுடியாது'' என்றாள் மானசா, உறுதியான குரலில்.

14

கண்ணீரின் வேகம் கொஞ்சம் குறைந்தபின், அன்று இரவு முழுவதும் தூக்கமற்று மானசா ஏதேதோ யோசித்துக் கொண்டே இருந்தாள்.

பணம், பொருள், கார், பங்களா என்று எதையும் பெரிதாக எண்ணாமல், உண்மையான அன்புள்ள கண

வனை மட்டுமே வேண்டியிருந்தேனே; என் விதி இப்படியா ஆகவேண்டும் என்று அவ்வப்போது அவளைப் பிடித்து உலுக்கிய தன்னிரக்கத்தை சிரமப்பட்டு விலக்கி ஒதுக்கி விட்டு, வருங்காலத்தைப் பற்றித் தீவிரமாக யோசித்தாள்.

கனிவும் காதலுமே உருவாய் உருகி வழியும் இந்தக் கணவனிடம், 'பணத்துக்காக மணந்து விட்டுக் காதலிப்பது போல நடிக்கும் உன்னோடு வாழமுடியாது' என்று நேரடியாக அறிவிப்பது நடக்காத, நடக்க முடியாத ஒன்றாக அவளுக்குத் தோன்றியது.

அந்த அளவு ஒருவரிடம், அதுவும் இன்றுவரை புன்னகையும் பிரியமுமாகவே பேசிப் பழகியவனிடம் முகத்தில் அடித்தாற்போலப் பேசும் திடம் அவளுக்கு இல்லாதது ஒரு காரணம். அடுத்ததாக, அப்படியெல்லாம் இல்லை என்று அவன் இன்னமும் பொய் சொன்னால் அவளால் தாங்க முடியாது என்பதோடு, குற்றத்தை ஒப்புக் கொண்டு, அவன் தலைகுனிந்து தாழ்ந்து நின்றால் அதையும், அவளது பேதை மனம் பொறுக்காது என்பதும் காரணமே.

ஏன் இப்படி ஏழைமனதாக இருக்கிறோம் என்று தன் மீதே மானசாவுக்குக் கோபம் வந்தபோதும், உண்மை நிலை அதுதான், என்கையில் என்ன செய்ய முடியும்?

சரி. எப்படியோ நடக்கட்டும் என்று அவனோடு வாழலாம் என்றால், 'இந்த நிலையிலும் நிமிர்வு' என்று சசிசேகரனே கண்டு சொன்ன அவளது தன்மான உணர்வு அதற்கும் படிய மறுத்தது.

கூடவே, சசிசேகரனை அடி.யோடு பிரியவும் முடியும் போலவும் அவளுக்குத் தோன்றவில்லை: பின் என்ன செய்வது!

வெறும் அறியாத்தனத்தினால் மானசா மணஉறவை மறுப்பதாக சசிசேகரன் எண்ணுகிறான் என்பது அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

அப்படியே நினைத்துக் கொண்டு இருக்கட்டுமே என்று விட்டுவிட்டால்?

இந்த நாடகத்தை வாழ்நாள் முழுவதும் நடத்த முடியாதுதான். ஆனால் இன்னமும் சிலகாலம்... சசிசேகரனை அடியோடு பிரிவதற்கு அவள் மனதைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் வரை? அதுவரை முடியும்தானே?

ஆனால், இப்படி ஓர் ஏமாற்று வேலையின் மூலம் கணவனோடு ஒட்டிக் கொண்டிருப்பதை அவளது நியாய புத்தி ஒத்துக் கொள்வதாகவும் இல்லை.

முடிந்த அளவு சொல்ல வேண்டியதைச் சொல்லு வோம், அதற்குமேல் அவனே முடிவு செய்யட்டும் என்று தீர்மானித்தவளாய்த்தான், 'அண்ணிக்குத் தப்பவே உன்னை மணந்தேன். ஆனால் திருமண வாழ்வு முடியாத காரியம்' என்று கணவனிடம் அறிவித்தாள். தொடர்ந்து, ''அதனால்... உ...உங்களுக்கு வேண்டுமானால் நாம் இப்போதே பிரிந்து விடலாம்'' என்றும் கூறி முடித்தாள்.

அவளை விசித்திரமாய் நோக்கிவிட்டு, நிதானமாக வந்து அவள் எதிரே அமர்ந்தான் சசிசேகரன். ''உன் கண்களைப் பார்த்தால் தேவைப்பட்ட ஓய்வு எடுத்தது போலவே தெரியவில்லையே! கொஞ்சமாவது தூங்கினாயா, இல்லையா?'' என்று அக்கறையோடு விசாரித்தான்.

''இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கும் விஷயம் அது அல்ல'' என்றாள் மானசா, இழுத்துப் பிடித்த பொறுமையுடன்.

''அதுவும்தான், மானு'' என்றான் அவன். ''பசியும் தூக்கமின்மையும் ஒருவரின் உடலோடு மனதையும் எவ்வ ளவு பாதித்து விடக்கூடியவை என்று உனக்குத் தெரியாது. இங்கே காலைக் காஃபி எத்தனை மணிக்கு? அல்லது இந்தப் பழங்கள், பலகாரங்கள் எல்லாம் இருக்கின்றனவே, ஏதாவது சாப்பிடுகிறாயா? ம்...

கரிசனத்தோடு கணவன் பேசப்பேச மானசாவுக்கு ஒருபுறம் தொண்டையை அடைத்தாலும் ஆத்திரமாகவும் வந்தது. கழுத்தை அறுத்துக் கொன்றுவிட்டுக் காயத்துக்கு மருந்து தேடுகிறானே!

அந்த ஆத்திரமே ஒரு சக்தியைத் தர, ''பாருங்கள், என் மனம், உடம்பு எல்லாம் முழுக்க முழுக்க - நூற்றுக்கு நூறு போல முழு ஆரோக்கியத்துடன்தான் இருக்கின்றன. நான் நன்றாக யோசித்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கி றேன்'' என்றாள் அவள்.

''உன் ஆரோக்கியம், யோசனை எதையும் ஒத்துக் கொள்வதற்கில்லை, மனு. ஏனெனில் உனக்கு என்மேல் பிரியம் இருக்கும்போது...

''பிரச்சினையே அதுதானே? உங்கள் மேல் எனக்குக் கொஞ்சம் கூடப் பிரியமே கிடையாது. நான் என் அண்ணிக் கும், அரைப்பட்டினிக்கும் பயந்து, கைக்குக் கிடைத்த கொம்பாய் உங்களைப் பற்றி விட்டேன்... சா... ரி'' என்று ஒருவாறு கோவையாகவே விளக்கமும் கொடுத்து முடித்து விட்டாள்.

ஆனால், சற்றும் அசையால், ''இதையும் நம்புவதற் கில்லை!'' என்று உதட்டைப் பிதுக்கினான் சசிசேகரன்.

சொன்னதை ஒத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினை யைச் சுருக்கமாக, சுமூகமாக முடிக்க விடமாட்டேன் என்கி

றானே என்ற தவிப்புடன் அவள் பார்க்கும் போதே, ''இந்த ஆண்டு எனக்கு இருபத்தொன்பது வயது முடிந்துவிடும் மனு. இவ்வளவு நாளில் பெண்களைப் பற்றி நானும் சற்று அறிந்து கொண்டிருக்கிறேன். அதனாலேயே சொல்லுகி றேன், என்னைப் பார்க்கும்போது உன் முகத்தில் காணும் மலர்ச்சி, என்னோடு வரும்போது நடையில் ஒரு பெருமி தம், நம்மைச் சேர்த்து யாராவது பேசும்போது கன்னங்களில் தோன்றும் செம்மை... எல்லாமே நேசத்தை பறையறைந்து கூறும்போது பிரியமே இல்லை என்றால் எப்படி ஒப்புவது? தினமும், நான் இங்கே வரும்போது அந்தக் கண்களின் ஜொலிப்பு ஒன்றே போதுமே!'' என்றான் அவன் ரசனை யோடு.

''ஆமாம். அதுதான் கண் கூசும்படி, ஆயிரம் வாட் பல்பு போட்டிருந்ததே ஜொலிப்பதற்கென்ன?'' என்று கசப் பும் எரிச்சலுமாக முணுமுணுத்தாள் மானசா. காதலனை எதிர்கொள்ளும் குதூகலமல்லவா அப்போது அவள் கண்க ளில் ஒளிவிட்டது? ஆனாலும் என்ன மாதிரி ஏமாளியாக இருந்திருக்கிறாள்!

''என்னது? என்ன சொல்கிறாய்?'' என்று கணவன் கேட்கவும் சுதாரித்து, ''எல்லாப் பெண்களும் உங்களிடம் மயங்கி நின்றே பழக்கம் போலும். அதையே என்னிடமும் எதிர்பார்த்து விட்டீர்கள் போலத் தெரிகிறது'' என்றாள், குரலில் அலட்சியத்தைக் காட்டி.

''எல்லாப் பெண்களும் என்னிடம் மயங்கினார்கள் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. அதை எதிர் பார்க்கவும் இல்லை. ஆனால், ஒரே ஒரு பெண் — நீ என்னிடம் அப்படி ஒன்றும் அலட்சியமாய் இருக்கவில்லை; அன்பு இருந்தது; இருக்கிறது என்கிறேன் அவ்வளவுதான்'' என்றான் அவன் அழுத்தத்துடன்.

''காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் என்பார்கள். நீங்கள் விரும்பியதை என்னிடம் கண்டதாக எண்ணி விட்டீர்கள். அவ்வளவுதான்... ஆனால் ஒன்று. உங்களைப் பார்க்கும்போது எனக்கு ஓரளவு உற்சாகம் இருந்தது, உண்மைதான். காரணம், என் அண்ணியிடமி ருந்து என்னைக் காப்பாற்றப் போகும் ஆதிமூலமாய் உங்களை நான் நினைத்ததுதான். மற்றபடி, நீங்கள் சொல்லு கிற நேசம், காதல் இதெல்லாம் என்னவென்றுகூட எனக்குத் தெரியாது; தெரியாது; தெரியவே தெரியாது!'' என்றாள் அவனுக்கு மேல் அழுத்தம் திருத்தமாக.

ஆனால் இப்போதும் சசிசேகரன் ஒன்றும் அசைந்தது போலத் தோற்றமளிக்கவில்லை. ''அதுதான் பிரச்சினை என்பது நன்றாகவே தெரிகிறது'' என்று பூடகமாக உரைத்த வன், ''எதைச் சொல்கிறீர்கள்?'' என்று மானசா கேட்டதை அலட்சியம் செய்து, ''இப்போது என்ன செய்யவேண்டும் என்கிறாய்?'' என்று அமைதியாகவே வினவினான்.

பிரிவு பற்றித் தன் வாயால் மீண்டும் கூற மனமற்று, ''அதுதான் முதலிலேயே சொன்னேனே!'' என்று வெளியே பார்த்தாள் மானசா.

''ஆ...மாம். பிரமாதமாய் சொன்னாய். நேற்று திரும ணம், இன்று பிரிவா? அப்படிப் பிரிந்தால் பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? இங்கே உன் அண்ணனோடேயே இருப்பாயா? ஒன்று நினைவில் வை. நீ என் மனைவி. உன் அண்ணியிடம் இடி சோறு உண்ண இனி நான் விடமாட்டேன்'' என்றான் சசிசேகரன் உரிமையோடு.

கேட்க எவ்வளவோ நன்றாகத்தான் இருக்கிறது. வேடத்தை நன்றாகவேதான் போடுகிறான்! ஆனால் அண்ணி போடுவது இடிசோறு என்றால், இவன் வீட்டில் உண்பது சசோறு அல்லவா?

''ஏதாவது பெண்கள் விடுதியில்...

''திருமணமான மறுநாளே கணவன் பிடிக்கவில்லை என்று வருகிறவர்களுக்கு எந்தப் பெண்கள் விடுதியிலும் இடம் கொடுக்க மாட்டார்கள். அதற்கும் சில தகுதிகள் வேண்டும்...''

மானசா சற்றுத் திகைத்துப் போனாள். மனம் சற்று திடப்பட்டபிறகு, இப்படிப் பெண்கள் விடுதி எதிலாவது சேர்ந்து விடவேண்டும் என்றுதான் அவள் யோசித்து வைத்திருந்தாள். அது இயலாது போகுமோ என்ற கவலை தோன்றவும், 'என்ன தகுதிகள்?' என்று விசாரித்தாள்.

ஆனால் பொறுமையிழந்த மூச்சுடன், ''உனக்கு இல் லாத எத்தனையோ தகுதிகள்!'' என்றான் சசிசேகரன் சுள்ளென்று. ''அத்தோடு, சற்றும் யோசனையே இல்லாமல் இது என்ன பேச்சு மானசா? நான் உன்னை எவ்வளவோ புத்திசாலி என்று நினைத்தேனே! கல்யாணமான மறுநாளே பிரிவு பற்றிப் பேசுவதா? கேட்க அசிங்கமாக இல்லை? யார் காதிலாவது விழுந்தால் என்ன நினைப்பார்கள்?'' என்றான் அதட்டலாக.

பிரிவு பற்றிப் பேசியதே அவள்தான் என்பதை மறந்து, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதுதானே பெரிதா கத் தெரிகிறது; பிரிவு பற்றி நினைக்கவே என்மனம் துடிப்பது பற்றிக் கவலையே இல்லையே என்று வந்தது அவளுக்கு. ''மனம் பொருந்தவில்லை எனும்போதும் வேறு என்ன செய்வது?'' என்றாள் எரிச்சலோடு.

''அது ஒரேநாளில் தெரிந்துவிடுமா?'' என்று பதிலுக் குக் கேட்டான் சசிசேகரன். ''இதோபார் மானசா, வாங்கிய பொருள் பிடிக்கவில்லை என்றால் திருப்பிக் கொடுப்பது போல உடனே மாற்றுவதற்குத் திருமணம் வியாபாரம் அல்ல. கொஞ்சநாள் ஆகட்டும்...''

அவள் கழுத்தில் தாலி கட்ட நாற்பது லட்ச ரூபாய் பேரம் பேசித் திருமணத்தை வியாபாரமாக ஆக்கியவன் வாயிலிருந்து உதிரும் பொன் மொழியா? கொதிப்புடன், ''எவ்வளவு காலம் ஆனாலும் என் மனம் மாறப் போவது இல்லை'' என்று பிடிவாதமான குரலில் அறிவித்தாள் மானசா.

''அதை ஓர் ஆறுமாதம் கழித்து முடிவு செய்யலாம். அதுவரையிலும் இந்த மாதிரிப் பிரிவது, விலகுவது என்று இந்தப் பேச்சு எதுவும் வேண்டாம். கூடாது'' என்றவன் எழுந்து அவள் அருகே வந்து அவள் கைகளைப் பற்றி எழுப்பி நிறுத்தினான். அவளையே ஆழநோக்கி, ''என் முகத்தைப் பார்த்துச் சொல்லு, மானசா. உனக்கு என்னை மெய்யாகவே பிடிக்கவில்லையா?'' என்று தணிந்த குரலில் தெளிவாகக் கேட்டான்.

எப்படி சொல்வது? காசுக்காக மட்டுமே அவளுக்குத் தாலி கட்டினான் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பிறகும், அவன் மார்பில் ஒண்டிக் கொள்ள, அவளது உடம்பின் ஒவ்வோர் அணுவும் துடிக்கும்போது, அவனைப் பிடிக்கவில்லை என்று ஒரு முழுப் பொய்யை எப்படிச் சொல்ல முடியும்? அந்த மாதிரிப் புளுகுவது எல்லாம் அண்ணி, இவன் போன்றோரின் ஏகபோக உரிமை அல்லவா? மானசா வகை முட்டாள்களுக்கு அதில் பங்கு ஏது?

மனம் கசந்து வழிந்தபோதும், கணவனின் முகம் பார்த்துப் பொய் சொல்ல முடியாமல், ''உங்களைப் பிடிக்க வில்லை என்று நான் சொல்லவில்லையே. திருமண உறவு பிடிக்கவில்லை என்றேன். அவ்வளவே'' என்று கூறிப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

முகம் மலர, ''இப்போதைக்கு இதுபோதும்'' என்றான் சசிசேகரன். ''நேற்றைய இரவுக்குப்பின், நான் ஒன்றும்

காய்ந்தமாடு போல உன் மீது பாய்ந்து விடமாட்டேன் என்ற நம்பிக்கை உனக்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்படியே இருப்போம். ஓர் ஆறுமாதம் போகட்டும். அதன் பிறகும் உன் மனம் மாறவில்லை என்றால் அதன்பிறகு உன் விருப்பம் பற்றி யோசிப்போம். அதுவரை இந்த விஷயம் நமக்குள் மட்டுமாக இருக்கட்டும். வெளி உலகத் தைப் பொறுத்தவரை, எல்லோரையும் போல நாமும் ஒரு சாதாரணப் புதுமணத் தம்பதியர்.''

அவளது இவ்வளவு நேர வாதாடலுக்கு நேர் விரோத மாக, அப்பாடா, இப்போதைக்கு அவனைப் பிரிய வேண்டி யது இல்லை என்று மானசாவின் மனம் பெருமளவு நிம்மதியுற்றது.

ஆனால், அவளே தன் வாயால், சசிசேகரனிடம் மணவிலக்கு தந்தே ஆகவேண்டும் என்று கேட்கும் நாள் விரைவிலேயே வரப்போகிறது என்று அப்போது அவளுக் குத் தெரியாது!

15

காலையில் அறையை விட்டு வெளியே வரும் போது, உலகில் தனக்கென யாருமே இல்லாதது போல ஓர் உணர்வு மானசாவைப் பற்றிச் சோர்வுறச் செய்தது. கிட்டத்தட்ட அவளுடைய அன்னை இறந்த சமயத்து மனோநிலை! அதை விடவும் மோசம் என்றும்கூடச் சொல் லலாம். ஏனெனில், அவளுடைய அன்பற்ற உறவினர் பட்டியலில், அவளது வாழ்வுக்கு ஒளிவிளக்காகத் திகழ வேண்டிய கணவனும் இப்போது சேர்ந்து கொண்டிருக்கி றானே!

சந்தியாவுடைய இரு தம்பிகளுடைய மனைவியரும், அவளிடம் பிரியமாகவே சிரிப்பும் கேலியுமாகப் பேசியது கூட அவளுக்குச் சிறிதும் உற்சாகமூட்டவில்லை. அர்ச்சனாவோ, அவள் தாயோ இவர்களிடம் கடுமையாக ஏதாவது கூறியிருப்பார்கள்; எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற ரீதியில் நம்மிடம் பிரியம் காட்டுகிறார்கள் என்று அதுவும் அலுப்பாகவே இருந்தது.

ஆயினும், தன் சொந்த வாழ்வு மகிழ்ச்சியற்றுப் போனதால் மற்றவர்கள் பேச்சில் சலிப்புத் தட்டுகிறது என்பதை அறிந்திருந்ததாலும், பண்பாடு காரணமாகவும், தன் மனநிலையை மறைத்து மற்றவர்களிடம் இன்முகமாகவே மானசா பேசினாள்.

திருமண வேலைகளின் அலுப்பு தீர என்று காரணம் காட்டி, நன்றாக உறங்கி முடித்து, காலை உணவை அறைக்கே வரவழைத்து உண்டுவிட்டு, மீண்டும் ஒரு குட்டித் தூக்கத்தின் பின் ஒருவாறு எழுந்துவந்த சந்தியாவின் பார்வை தன்னை அளவெடுப்பதை அறிந்து, வேண்டுமென்றே அந்தப் பெண்களோடு சிரித்துச் சிரித்துக் கலகலத்தாள் மானசா.

கண்ணகற்ற முடியாமல் நாத்தனாரையே சந்தியா வெறித்து நோக்கினாள்.

இவ்வளவு சிரிக்கிறாளே! அப்படியானால்... என்ற யோசனையில் அவளுக்கு வயிறு காந்தியது. மானசாவின் தூக்கமற்றுச் சிவந்த கண்கள் அவளது நோண்டும் பார்வைக்குத் தப்பவில்லை. அதற்கான விளக்கமாய் அவள் கற்பனை செய்ததும் அவளுக்கு கொதிப்பையே ஊட்டியது. கூடவே, பொறாமையும் சினமுமாக அர்ச்சனாவின் விழிகளில் அரும்பிய நீர் வேறு அவளுக்கு வெறியூட்டியது.

மானசாவின் அருகில் வந்து, அவளைத் தன்புறம் திருப்பி, ''என்னடி, எப்படியோ ஒருத்தன், ஒருவழியாகக் கிடைத்தானே என்று, முருங்கைக் கொம்பிலே கம்பளிப் பூச்சிபோல ஒட்டிக் கொண்டாயா?'' என்று ஏளனமாக வினவினாள்.

மானசாவும், இப்படி ஏதாவது ஒரு தாக்குதலுக்குத் தயாராகவே இருந்தாள். கணவன், 'இனி உன் அண்ணியிடம் இடிசோறு உண்ண விடமாட்டேன்' என்றது வேறு மனதில் இருக்கவே நிமிர்ந்து, தன்னைவிடக் குள்ளமான சந்தியாவைக் கீழ்ப்பார்வையால் தளராமல் நோக்கி, ''நகை பற்றிக் குறிப்புக் காட்டி நாசூக்காக... பேசுகிறீர்களா, அண்ணி? நம் திருமணங்களில் இது ஒன்றும் அதிசயம் இல்லையே! ஏன், அர்ச்சனாவை ஆயிரம் பேர் பெண் கேட்பதாகச் சொன்னீர்களே! அந்த ஆயிரம் பேரில், ஆர்ச்சியைப் பொட்டுத் தங்கம் கூட இல்லாமல், எவன் கட்டிக் கொள்கிறான் என்று நானும் பார்க்கத்தானே போகிறேன்!'' என்று திருப்பிக் கொடுத்தாள்.

பிள்ளைப்பூச்சியைப் போலத் துன்புறுத்த துன்புறுத்த ஒதுங்கி ஓடிக்கொண்டு இருந்தவள் திடுமெனத் தேளாகக் கொட்டியதில் சந்தியா பிரமித்துப் போனாள். அப்படிக் கொட்டியவளுக்குச் சரியான பதிலாகக் 'கட்டிக் கொள்கிறானா இல்லையா, பாரேன்' என்று எதிர்ச்சவால் விட இயலாமல் அவள் மனம் குமுறியது. ஏனெனில், என்னதான் 'என் பெண்' என்று கொண்டாடிக் கொண்டாலும், அர்ச்சனாவுக்கு அழகோ குணமோ பெரிதாக பிறரைக் கவரக்கூடியதாக எதுவும் இல்லை என்பதைச் சந்தியாவும் அறிவாள்தானே? எல்லாவற்றையும் விட, இந்தப் பேச்சு வார்த்தையை என்னமோ மிகவும் சுவாரசியமான நாடகம் போல ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த தன் உறவுப் பெண்களைப் பார்க்கும்போது அவளுக்கு அவமானம் தாங்கவே முடியவில்லை.

'இந்தக் கழுதைகளுக்கு எவ்வளவு செய்திருப்பேன். பெரியவர்களிடம் பேசுகிற முறையா இது?' என்று மான சாவை திட்டி அதட்டி ஒடுக்காமல், அவ்ளைத் தட்டிக் கொடுப்பது போல இளிக்க வேறு செய்கிறார்களே என்று உள்ளூரக் கொதித்தபோதும், சந்தியாவால் அவர்களையும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதட்டி விரட்டுவது என்றாலும், அல்லலைக் காட்டி முறையிடுவது என்றாலும் இரண்டுமே, சந்தியா, தன்னைத்தானே இன்னமும் அதிகமாகத் தாழ்த்திக் கொள்வதாகத்தானே முடியும்?

யாரிடமும் காட்டமுடியாமல் உள்ளே பொங்கிய கோபம் எல்லாம், அறை வாயிலில் சும்மா நின்று இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மகன் சிவா மேல் பாய்ந்தது.

''என்னடா, ஆந்தை மாதிரி அப்படி ஒரு முழி முழித்துக் கொண்டு நிற்கிறாய்? இங்கே உனக்கு என்ன வேலை?'' என்று உறுமினாள்.

பெற்றவளுக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை, சிவா. மாறாக மானசாவிடம் திரும்பி, ''அத்தை, நீ தயாராகி விட்டாயா என்று மாமா கேட்டு வரச் சொன்னார்... இதோ, இந்த இரண்டு பெட்டிகளும்தானா? சரி சரி வா. கிளம்பு'' என்று இரு கைகளிலுமாகப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு முன்னே சென்றான்.

எல்லோரிடமும், பொதுவான ஒரு 'வருகிறே'னுடன் தலையசைத்து விடைபெற்றுக் கொண்டு, அண்ணன் மகனை மானசா பின்தொடர்ந்தாள்.

சற்று தூரம் சென்றதும், ''மாமா, என்ன மந்திரம் போட்டார்; அத்தை? ஒரேநாளில் மண்புழுவுக்கெல்லாம் முதுகெலும்பு முளைத்து விட்டிருக்கிறதே!... ஆனால் ஒன்று. இதை நீ சில ஆண்டுகள் முன்னதாகவே செய்திருக்க

வேண்டும்... என்று, மானசாவுக்குப் புத்தியுரைத்தான் அவளுடைய அண்ணன் மகன்.

எதிரே வந்த கதிரேசனிடம், ''அத்தையுடையது இந்த இரண்டு பெட்டிகள் மட்டும்தானாம், அப்பா. அதனால் நானே தூக்கிக் கொண்டு, அத்தையையும் கூட்டி வந்து விட்டேன்'' என்று விவரம் உரைத்தான்.

மாப்பிள்ளை உபசாரமாகவோ என்னவோ, தன் கார்க ளில் ஒன்றை, மணமக்களின் உபயோகத்துக்காகத் தரக் கதிரேசன் முன்வந்தான்தான்.

ஆனால் சசிசேகரன் அதை ஏற்கவில்லை. ரயிலில் மதுரை சென்று, அங்கிருந்து டாக்சி பிடித்துக் கொடைக்கா னல் செல்வதாக முதலிலேயே கூறிமுடித்து விட்டான்.

கொடைக்கானலின் இயற்கை அழகை அப்படியே ரசிக்க வேண்டுமானால், அதற்கு 'நடராஜா சர்வீஸ்'தான் நல்லது. அங்கே சுற்றுவதற்கு என்று இங்கிருந்து காரை எடுத்துப் போகத் தேவையில்லை என்றான், மைத்துனனி டம்.

''இன்றைக்குப் புதுமாப்பிள்ளை உபசாரமாகக் கார் தருகிறேன் என்கிறார், கதிரேசன். இதை எப்போதும் செய்ய முடியுமா? ஒரு தரம் ஓசி சுகத்துக்குப் பழக்கப்பட்டு விட்டால், தொடர்ந்து இந்த சுகத்தை எதிர்பார்க்கவும், எதிர்பார்த்தது கிடைக்காவிட்டால் குறைப்படவும் தோன் றும். எதற்கு வீண் வம்பு'' என்று மனைவிக்கு வேறு ஒரு விளக்கம் கொடுத்தான்.

அவனை மடக்கிப் பேச ஒன்றைக் கண்டுபிடித்து, ''கொடைக்கானலில் மட்டும் அண்ணன் வீட்டில் தங்குகிறீர் களே?'' என்று கேட்டாள் மானசா.

''தங்குகிறோம் என்று சொல்'' என்று மனைவியைத் திருத்தினான் சசிசேகரன். ''இப்போது அங்கே தங்கப் போவது தேனிலவுக்காக. தேனிலவுக்குத் திரும்பத் திரும் பப் போக முடியாது இல்லையா? அதனால், மறுபடி அதை எதிர்பார்க்கவும் தோன்றாதுதானே?'' என்று அவள் வாயை அடைத்துவிட்டு மேலும் சொன்னான். ''நான் காரை மறுத்த தன் காரணம் இந்த ஒன்று மட்டுமல்ல. உன் அண்ணன் நமக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தரஇருந்த கார், இந்தக் கொடை வீடு மாதிரி இப்போதைக்கு அவருக்கு சும்மா கிடப்பது அல்ல. மூன்று கார்களில் ஒன்று என்றா லும், அதற்கும் அவசியம் இருப்பதால்தானே வாங்கி வைத்திருக்கிறார்கள்? அதன் தேவை நேரும்போது கட்டா யம் உன் அண்ணி சொல்லிக் காட்டுவாள் அல்லவா? அத்தோடு, மிஸ்டர் கதிரேசனோடு நம் உறவை முடிந்த அளவு தொழில் ரீதியில் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன். எனவே அவர்க ளிடம் அதிகப்படி உதவிகளைப் பெற்று அதிகப்படியாக நன்றிக் கடன் படவேண்டாம் என்பது என் எண்ணம். எப்படியும் ஒருநாள் அதற்கும் ஈடு செய்தாக வேண்டும் இல்லையா?''

நன்றிக் கடனா? அவன் பெறப்போகும் நாற்பது லட்சம் ரூபாய்க் கடனுக்காக, முள்ளங்கிப் பத்தைபோல, மொத்தமாக நகைகளைக் கொடுத்திருக்கிறாளே; அதற்கான நன்றிக் கடனைச் சசிசேகரன் எப்போது, எப்படி மானசாவுக் குச் செலுத்தி முடிக்கப் போகிறான்? ஒருவேளை, அவள் கழுத்தில் அணிவித்திருக்கிறானே, அந்தத் தாலிக்கே இதெல்லாம் ஈடாகிட் போயிற்றா? அப்படித்தான் என்று எண்ணித்தானே, பணம்தான் முக்கியம் என்று அண்ண னோடு பேரம் பேசியிருக்கிறான். பணவிஷயம் திருப்திகர மாக முடிவானதும், வாரிசுகளைப் பெற்றுப் போட ஒரு

பெண் கிடைப்பது கூட நன்மை என்று பெரிய தயவாளன் மாதிரிப் பேசியிருக்கிறான்? இந்த அழகில் ரொம்பவும் நியாயவான் மாதிரி என்ன பெரிய பேச்சு?

மனம் குமுறியதை வெளிக்காட்டாமல், மும்முரமாகப் பெட்டி அடுக்குவது போலப் பாவனை செய்தாள் மான்சா.

பில் நிலையம் வரை வழியனுப்பவென்று வந்திருந்த சிவாவிடம் கையாட்டி, விடைபெற்று, இருக்கையில் ஒழுங்காக அமர்ந்து, இனி அவனும் அவளுந்தான் என்று ஆனபோது, மானசாவுக்கு அன்று காலையில் நடந்த இந்தப் பேச்சு நினைவு வந்தது.

பெரிய ராஜபரம்பரை! வாரிசு இல்லாமல் குலம் நசித்துப் போனால் இந்த மாபெரும் அரசைக் கட்டிக் காப்பது எப்படியாம்? என்று எண்ணம் ஓடியது.

மேலே மேலே ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டிருக்க வழியின்றி, ''சற்று ஜன்னலை ஒட்டி அமர்ந்து கொள், மானு'' என்ற சசிசேகரன், தானும் அவளை ஒட்டினாற் போல நெருங்கி உட்கார்ந்தான்.

என்னவென்று பார்த்தால், சற்றும் யோசியாமல், சற்று தாட்டியான ஒரு பெரியவரை, இரண்டு பேர் அமரும் அந்த சீட்டில் அவர்களோடு கூட உட்காரச் சொல்லிக் கொண்டிருந்தான் அவள் கணவன்!

இப்போது இடித்துக் கொண்டல்லவா உட்கார்ந்தாக வேண்டும்.

ஒருவேளை அதுதான் ஐடியாவா? அவனது தொடு உணர்ச்சியைப் பழக்கி, இயற்கையின் ரசவாதத்தைத் தோற்றுவிப்பதாகத் திட்டமா?

இறுகிப்போய், ஒடுங்கி அமர்ந்திருந்தாள் அவள் ஆனால் கணவன் இந்த நெருக்கத்தை வேறுமாதிரிப் பாவன்

படுத்தாமல் இயல்பாகவே நடந்து கொள்ளவும், மெல்ல மெல்ல அந்த இறுக்கம் தளர்ந்து போயிற்று.

அந்தப் பெரியவர் தனியாகப் பயணம் செய்வது தெரியவும், சசிசேகரன் அவருக்குப் பல வகையிலும் உதவினான். ஓரளவு கை, கால் நடுங்கத் தொடங்கிவிட்ட பிராயம் அவருக்கு. எனவே, அவர் கொண்டு வந்திருந்த உணவு வகைகள், தண்ணீர் எல்லாம் எடுத்துக் கொடுத்த தோடு, வைத்து உண்ணத் தன் இடத்தையும் கொடுத்து விட்டு, எழுந்து நின்றான். அவர் உணவருந்தியபோது சிந்தியதைச் சுத்தம் செய்ய அவன் முன்வருவதைக் கண்டு, மானசா அவனை முந்திக் கொள்ளவும், மகிழ்ச்சியோடு முறுவலித்தான்.

பெரியவரும், இருவருக்கும் மனமாந்த ஆசி கூற, என்னவோ, மானசாவுக்கு மிகவும் இதமாக இருந்தது. அவரது ஆசியைவிட, கணவனிடம் ஒரு நல்லதைக் காண முடிந்ததில் மகிழ்ச்சி அதிகமாயிருந்தது அவளுக்கு. அந்த மகிழ்ச்சியின் ஒருபகுதி, அவனைத் தோளோடு தோள் உராய அமர்ந்திருந்ததால் உண்டானது என்பதை அவள் தனக்குத்தானே கூட ஒப்புவதாக இல்லை.

இயற்கை அழகை மிகவும் ரசிக்கிறவள் மானசா. கொடைக்கானலில் மட்டுமின்றி, அங்கே செல்லும் வழி யெல்லாம் கூட அதற்குக் குறைவு ஏது? அவற்றை நல்ல வெளிச்சத்தில் கண்டு களிக்க வேண்டும் என்பதற்காகவே, இரவு மதுரையில் தங்கிவிட்டுக் காலையில்தான் கொடைக் கானல் பயணத்துக்கு சசிசேகரன் ஏற்பாடு செய்திருந்தான்.

மதுரையில் தங்கியதையும் பயன்படுத்தி, மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றான். தாயாரின் அருள் பொலிந்த முகம், மானசாவின் அலைபாய்ந்த மனதைப் பெரிதும் அமைதிப்படுத்தியது.

விடிகாலையிலேயே மதுரையிலிருந்து கிளம்பி விட்டனர். அங்கங்கே பாறை மீது கசியும் நீரும், ஓரமாய்ச் சிற்றோடையும், பசேலென்ற மலைச்சாரலும், கச்சிதமான தோற்றத்துடன் கணவனும்... பல சமயங்களில் மானசாவுக்கு அவளது மனக்குறை மறந்தே போயிற்று.

பூரீநகர் போன்ற இடங்களில் தீவிரவாதிகளின் தகராறு தொடங்கிய பிறகு, ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்கள்தான் தேனிலவு சொர்க்கங்கள் போலும். அங்கங்கே பல இளம் ஜோடிகள், இடையணைப்பும், தோள் சாய்தலுமாக... குறைந்தபட்சமாய்க் கைகளையேனும் கோர்த்துக் கொண்டுதான் திரிந்தார்கள்.

இப்படியெல்லாம் ஒட்டிக் கொண்டு அலையாவிட்டால், இவர்கள் கணவன் மனைவி என்று தெரியாதாக்கும் என்று எரிச்சல்பட்டாள் மானசா. சசிசேகரன் சிரித்தாமேன தவிர ஒன்றும் சொல்லவில்லை.

ஆனால், பெரிய சிரிப்பு என்று பொருமிய மானசா, மற்றவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று ஏங்கவும் செய்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக இந்த ஏக்கம் பெருகிக் கொண்டே போய் ஓவென்று அழவேண்டும் போல, கையில் அகப்பட்டதை எல்லாம் எடுத்து வீசி எறிந்து 'காச் பூச்'சென்று கத்த வேண்டும் போல... அழுகை ஆத்திரம் எல்லாம் பொங்கிக் கொண்டு வந்தது.

அவளும் இப்படிக் கணவனோடு கைகோத்துக் கொண்டு உல்லாசமாகத் திரிய வேண்டியவள்தானே? ஜோடிப் பறவைகள் போல, ஜோடி மான்கள் போல என்று எத்தனை கனவுகள் கண்டாள். அவளுக்கு மட்டும் ஏன் எதுவுமே கிட்டாமல் போய் விடுகிறது?

கிட்டும்! இதெல்லாம் கிடைக்கக்கூடும். அவளது தன் மானத்தை மட்டும் தூக்கியெறிந்து விட்டால் போதும். ஒரு கூடுதல் நன்மையாக அவளை மனைவியாக ஏற்பது சசிசேகரன் ஏற்கனவே சம்மதப்பட்ட விஷயம்தானே?

ஆனால் எத்தனையோ கொடுமைகளுக்கு இடையிலும், அன்பற்ற சூழ்நிலையிலும் அரைப்பட்டினியிலும் கூட அவள் போற்றிக் காத்த தன்மானம் (அது இல்லாமல் இருந்திருந்தால் தான் திருடித் தின்றேனும் வயிறு வளர்த்திருப்பாளோ!) — அதை இப்போதும் அவளால் கொஞ்சமும் விடமுடியவில்லைதான்.

நாலு ஆண்டுகளாக அவளது பத்தொன்பதாவது வயதில் முதன்முதலாக அவளைப் பெண்கேட்டு வந்த நாளிலிருந்து ஒத்தமனம், ஒத்த குணம் என்று அவள் ஆசையோடு கண்ட கனவுகளை அடியோடு சிதைத்து விட்டானே என்று அதிலேயே உழன்று தவித்தது மானசாவின் உள்ளம்.

16

மனைவியின் வாடிய முகம் க்ண்டு, ''கால் வலிக்கிறதா, மானசா? ஒரு டாக்சியே ஏற்பாடு செய்து விடட்டுமா?'' என்று பரிவுடன் வினவினான் சசிசேகரன்.

மதுரையிலிருந்து வந்த டாக்சிக்கு அவன் எவ்வளவு கொடுத்தான் என்பதைக் கவனித்திருந்த மானசா, ''வேண்டாம். வீண் செலவு...'' என்று தடுத்தாள். நாற்பது லட்சத்தோடு இன்னமும் எவ்வளவு?

லேசாக முறுவலித்து, ''டாக்சி எல்லாம் பெரிய செலவு என்று இல்லை, மானு. நம்மால் முடியும். உன் கால்வலியை

விடக் காசு பெரிதில்லை'' என்று அன்புக் கணவனாய்ப் பேசினான் அவன்.

மனம் வலிக்கிற வலிக்கு கால் வலி எம்மாத்திரம் என்று எண்ணியபடி, ''இல்லை. எனக்குக் கால்வலியே கிடையாது. மேலும் எனக்கு இப்படி இடங்களில் நடப்பது தான் பிடிக்கும்'' என்றாள் மானசா பிடிவாதக் குரலில்.

ஒருகணம் பேசாதிருந்து விட்டு, ''இந்த மலைக்காற்று சீக்கிரம் பசியெடுக்க வைத்து விடுகிறது என்று நினைக்கி றேன். நடந்தது வேறு காலை உணவு சீக்கிரமாய்ச் செரிமா னம் ஆகியிருக்கும். வா, ஏதாவது முதலில் சாப்பிடலாம்'' என்று அவளை உணவருந்த அழைத்துச் சென்றான்.

ஆமாம். சாப்பாடு! அதுதான் பதினைந்து நாட்களாகப் போடுகிறானே! கசாப்புக் கடைக்காரன் ஆட்டைக் கொழுக்க வைப்பதுபோல... என்று கொடூரமாய் எண்ணி விட்டு அந்த நியாயமற்ற எண்ணத்துக்காகத் தன்னைத் தானே கண்டித்துக் கொண்டாள்.

உணவு முடிந்ததும், ஒரு மரத்தடியில் சற்று நேரம் ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் அதே நடை தொடர்ந்தது.

மீண்டும் ஆங்காங்கே அதேபோலக் காதல் சிட்டுகள்! அவர்களின் அதே காதல் சேட்டைகள்.

இவர்கள் இருவரையும் விட, அழகில் குறைந்தவர்கள், வசதியில் குறைந்தவர்கள் — வெள்ளிக் கம்பியில் கோத்த கருகமணி தவிர வேறு நகை இல்லாமல், ஒரே ஒரு நாளையேனும் இந்த சொர்க்கத்தில் கழித்துவிட வேண்டும். பஸ்சிலும் லாரியிலுமாக வந்தவர்கள் கூட, மிகவும் மகிழ்ச் சியோடு இருக்கிறார்களே என்று மானசா பொறாமைப்பட் டாள்.

நல்லவேளையாக, மலையில் சீக்கிரமாகவே மாலை வெயில் மங்கத் தொடங்கி விடவும், அவர்களும் வீடு திரும்பினர்.

அவனும் அவளுமாக இருந்த அந்தத் தனிமையும் மானசாவுக்குத் துன்பமாய்த்தான் இருந்தது.

சசிசேக்ரனோடு சாதாரணமாய் பேசிக் கொண்டிருக்க, வார்த்தைகளைத் தேடி அலுத்தவள், இந்தப் பதினைந்து நாட்களாக, மூச்சுவிடாமல் இவனோடு என்ன பேசினோம் என்று ஆச்சரியப்பட்டாள்.

கடைசியாக, ''அந்த அலமாரியில் புத்தகங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் எடுத்துப் படியுங்கள். நா... நானும் ஒரு முக்கியமான புத்தகம் படிக்கவேண்டும்... என்று கையில் புத்தகத்துடன், அதில் ஒரு பக்கம் கூடப் புரட்டாமல் அரைமணிநேரம் உட்கார்ந்திருந்து விட்டு, ''நேற்று உட்கார்ந்தே ரயிலில் வந்தது, முதுகு லேசாக வலிக்கிறது. அறையில் போய் படுத்துக் கொண்டே படிக்கப் போகிறேன். குட்நைட்'' என்று அவன் பேச இடமே கொடுக்காமல் விரைந்தோடி விட்டாள்.

நல்லவேளையாகத் திரும்பிப் பாராமலும் சென்றாள். பார்த்திருந்தால், சசிசேகரன் மவுனச் சிரிப்பில் குலுங்கியது கண்டு கொதித்துப் போயிருப்பாள்.

மறுநாள் சற்று தொலைவில் உள்ள இடங்களுக்குச் சென்று வருவது என்று வாடகைக்கு சைக்கிள் எடுத்தார்கள்.

டாக்சியில் போகலாம் என்றுதான் சசிசேகரன் கூறினான். ஆனால், முடிந்த அளவு கணவனுக்குச் செலவு வைக்கக்கூடாது என்று உறுதி கொண்டிருந்த மானசாதான் சைக்கிள் யோசனை சொன்னது. ஓரளவு வேகமாகவும் போகலாம். சுற்றிலும் பார்த்துக் கொண்டும் போகலாம் என்றாள்.

அவளுக்கு சைக்கிள் ஓட்டத் தெரிந்திருப்பது குறித்து, சசிசேகரன் ஆச்சரியப்படவும், பள்ளியில் ஒரு சினேகிதி

கற்றுத் தந்ததையும், விழுந்து அடிபட்டுக் கொண்டதையும் அண்ணிக்குத் தெரிந்தால் திட்டுவாளே என்று மறைத்து வைத்ததையும் அவள் கூற, அவன் சிரித்தான்.

''இரண்டு சக்கர வண்டிகளில் ஒரு தரமாவது விழுந்து எழாமல் யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு தரம், நல்ல போக்குவரத்து நெரிசலில், பள்ளிக்கு சைக்கிளில் போய்க் கொண்டு இருந்தேன். அப்போது திடீரென்று, இந்த மெல்லிய இரண்டு சக்கரங்களில் சரிந்து விழாமல் எப்படித்தான் போகிறோமோ, சுற்றிலும் இத்தனை கார், பஸ் போகிறதே என்று நினைத்தேனா, அதற்குமேல் சைக்கிளை ஓட்டவே முடியவில்லை. இறங்கித் தள்ளிக் கொண்டே பள்ளிக்குப் போனேன். அந்த பயத்தை அடக்கி மீண்டும் சைக்கிள் ஓட்ட எனக்கு ஒருவாரம் பிடித்தது!'' என்று சசிசேகரன் தன் விவரம் உரைக்க, மானசாவுக்கும் சிரிப்பு வந்தது.

''உனக்குச் சினேகிதிகள் நிறைய உண்டா?'' என்று அவன் விசாரிக்க, ''அம்மா இருந்தபோது உண்டு. பிறகு.. உங்களுக்குத்தான் அண்ணியைப் பற்றித் தெரியுமே; ஒவ்வொரு தோழியையும் ஒவ்வொரு விதமாய் விலக்கி விட்டார்கள்'' என்று மானசா பெருமூச்செறிந்தாள்.

''அதனால்தான் உன் அண்ணன் உறவைத் தொழிலோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றேன்'' என்றான் அவன்.

பேசிக் கொண்டே, மிதிவண்டி நிலையத்தை அடைந்து, இரு சைக்கிள்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டு இருவரும் கிளம்பினர். அவளுக்கான பெண்கள் சைக்கிளை, தான் ஒரு தரம் ஏறி ஓட்டி, பிரேக் போன்றவைகளைச் சரிபார்த்த பிறகே மனைவியை அதில் ஏற விட்டான், சசிசேகரன்.

''சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது போன்றவை எல்லாம், வாழ்வில் ஒரேதரம் கற்றுக் கொண்டாலும் மறக்காது என்றா

லும், முதலில் கொஞ்ச நேரம் நிதானமாகவே போகலாம், மானசா. அதிவேகமும் வேண்டாம். ரொம்ப மெதுவும் வேண்டாம்'' என்றான், மனைவியிடம்.

இதுபோலச் சின்னச் சின்ன விஷயங்களை அவன் கவனித்தது மானசாவுக்கு ஆறுதலைத் தர, அன்றையப் பொழுது ஓரளவு நல்லபடியாகவே தொடங்கி நடந்தது.

முன்தினம் போலவே அன்றும், பல தேனிலவுத் தம்பதிகள் அங்கங்கே பலவிதமாய்க் காட்சி கொடுக்கத் தான் செய்தார்கள். ஆனால் நடக்கும்போது, மானசாவின் பார்வை அவர்கள் மீது அதிகம் நிலைத்து விடாமல் அவளால் சமாளிக்க முடிந்தது. ஒருமாதிரி நிலையில் யாரையாவது பார்க்க நேர்ந்தால், பெடலை அழுத்தி, சர்ரென்று விரைந்து தாண்டிச் செல்ல முடிந்தது. சாலையி லும் கவனம் வைக்க வேண்டியிருந்ததும் அவளுக்கு நல்லதாகிவிட, முன்தினத்தின் அளவு அதிகப் பாதிப்பின்றி, ஓரளவு இலகுவாகவே இருப்பது அவளுக்குச் சாத்தியமா யிற்று.

ஆனால், இதுவும் பூத்துக் குலுங்கிய ஒரு புதர் அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த இருவரால் கெட்டுப் போயிற்று.

மனைவியை மட்டும் ஒரொரு 'போ'சில் படம் எடுத் துக் கொண்டிருந்த இளைஞன், இவர்களைக் கண்டதும், கைகாட்டி நிறுத்தி, ஒரு சிறு உதவி செய்யும்படிக் கேட்டுக் கொண்டான்.

மெய்யாகவே மிகவும் சின்ன உதவிதான். அவர்கள் இருவரையும் சேர்த்து, அவர்கள் காமராவினால் சில படங் கள் எடுத்துத் தரவேண்டுமாம்.

முறுவலித்தபடியே ஒத்துக் கொண்டான் சசிசேகரன். சைக்கிள்களின் அருகே நின்று வேடிக்கை பார்த்த மானசா முகத்திலும் புன்னகைதான்.

ஆனால் அவர்கள் படம்பிடித்துக் கொண்ட நிலைகள்! ஒருவரை ஒருவர் இடையோடு அணைத்து, தோளோடு அணைத்து, முன்னும் பின்னுமாய் நின்று கட்டிப்பிடித்துத் தோளில் முகம் பதித்து... இவர்கள் சென்ற சைக்கிள்களைக் கூட விடவில்லை. அதில் ஏறி அமர்ந்து தோளோடு தோள் ஒட்டி ஒன்று எடுத்துக் கொண்டார்கள். கடைசியாக, நன்றாக முத்தமிடும் 'போ'சில் ஒன்று. வெகு நெருக்கம்!

இவர்கள் இருவர் முகத்திலும் திகைப்பைக் காணவும், ''என்னிடமே ஒரு 'டார்க் ரூம்' இருக்கிறது, சார். நானே கழுவி 'பிரிண்ட்' போட்டு விடுவேன். இது என் 'ஹாபி' இனி நீங்கள் இருவரும் நில்லுங்கள். நாலைந்து படம் தட்டுகிறேன்'' என்றான் அந்த இளைஞன்.

''வேண்டாம்!'' என்று மானசாவும், ''எதற்கு...?'' என்று சசிசேகரனும் தயங்கியபோது, ''நீங்கள் செய்த உதவிக்குப் பதிலாக ஏதாவது செய்யாமல் எனக்குத் தீராது, சார். நீங்களும் புதுமணத் தம்பதிகள்தான் என்று தெரிகிறது. இதெல்லாம், பிற்பாடு பார்த்து ரசிக்க வேண்டிய நினைவுச் சின்னங்கள், சார். வாருங்கள். இருவரும் நில்லுங்கள். போட்டோ எடுத்தபின் உங்கள் முகவரியையும் தாருங்கள். பிரிண்ட் போட்டு அனுப்பி வைக்கிறேன். வாருங்கள், சார்'' என்று மீண்டும் அழைத்தான் அவன்.

''இதற்குமேல் தயங்கினால், தள்ளிக் கொண்டு வந்த கேஸ் என்று நினைத்துவிடப் போகிறார்கள். வா, சும்மா வெறும் 'போஸ்' தானே?'' என்று சசிசேகரன் தணிந்த குரலில் உரைக்கவும், அரைமனதாய் அவனோடு சென்று நின்றாள் மானசா.

படம் எடுக்குமுன், அவர்களைப் பாடாய்ப்படுத்தி விட்டார்கள் அந்தத் தம்பதியர், பிரசாத், ப்ரீதி இருவருமே.

இன்னும் கொஞ்சம் ஒட்டி, கையை இடுப்பில் வையுங்கள், கழுத்தில்... நாங்கள் நின்ற மாதிரி... இதோ இப்படி

என்று இதுதான் சாக்கென்று மீண்டும் ஒட்டி. ஒட்டி நின்று காட்டினார்கள்.

மானசாவின் முகம் கன்றிச் சிவப்பதைக் கண்டு, ''என் மனைவிக்குக் கூச்சம் அதிகம். இன்னும் விரட்டினீர்களோ, அவள் படமே வேண்டாம் என்று போய் விடுவாள்!'' என்று சசிசேகரன் வேடிக்கை போல மிரட்டியபிறகுதான் ஒருவாறு விட்டார்கள்.

அதற்குமேல் மானசாவின் மனநிலை பெரிதும் மாறி விட்டது. சசிசேகரனும் ஏதோ யோசனையில் மூழ்கி அதி கம் பேசினான் இல்லை.

மாலை வீடு திரும்பி, கணப்பின் முன் அமர்ந்திருந்த போது, சசிசேகரன் திடுமெனச் சிரித்தான்.

நிமிர்ந்து பார்த்தவளிடம், ''பாரேன், வெளியே கொடுக்காமல், அவனே 'பிரிண்ட்' போட்டு வைத்துக். கொள்வானாம்! ஆனால், படத்தை எடுத்த நாமும் அன்னி, யர்தானே என்று அந்த இருவருமே யோசிக்கவில்லையே!'' என்றான். உடனடியாக, ''ஒருவேளை, நாமும் புதுமணமக் கள்தான் என்பதால், ஒத்தமனமாய், இதே ஆசைகள் நமக் கும் இருக்கும் என்று ,எண்ணிக் கூச்சப்படவில்லையோ?'' என்று தானே விளக்கமும் கொடுத்தான். ''ஆனால் அதுவும் சரிதானே?''

சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

அதன்பின் தரையிலேயே பார்வையைப் பதித்தபடி இந்த மாதிரி வாழ அவளுக்கு அடியோடு பிடிக்கவில்லை என்று கூறிக் கணவனிடம் விவாகரத்து கேட்டாள் மானசா.

மானசா கூறியதைச் சசிசேகரனால் நம்ப முடியவில் லையோ, அல்லது அதைச் சொல்லும்போது மானசாவின் தொண்டை இறுகிப் போனதால் வார்த்தைகள்தான் சரியாக உச்சரிக்கப்படவில்லையோ, பிரமிப்புடன் மனைவியை

நோக்கி, ''நீ இப்போது என்ன சொன்னாய்?'' என்று வினவினான் அவன்.

இதை இன்னொரு தரம் வேறு சொல்லியாக வேண்டுமா?

தொண்டையைச் செருமிச் சரிப்படுத்திக் கொண்டு, ''இப்படி வாழ எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் எனக்கு விவாகரத்து வேண்டும்'' என்று ஒப்பித்தாள் மானசா.

''இப்படி வாழத் தேவையும் இல்லையே! நல்லபடியாக, நாலு பேரைப் போல நாமும்...''

''அதுதான் பிடிக்கவில்லை என்கிறேன்'' என்று கிறிச்சிட்டாள் மனைவி.

''என்ன அசட்டுத்தனம்!'' என்று வியந்தான் சசிசேகரன்.

ரோஷமாக, ''நான் ஒன்றும் முட்டாள் அல்ல'' என்றாள் அவள்.

''முட்டாள் என்று நானும் சொல்லவில்லையே! பூச்சாண்டிக்குப் பயப்படும் சிறுபிள்ளைத்தனம் கதவுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று தெரியாமலே திறக்க மறுக்கும் பேதமை! அங்கே சொர்க்கம் இருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்க்கக் கூடாதா? பெண்ணுக்குப் பேதை என்றும் ஒரு பெயர் வைத்தது சரிதான் போலும்!''

கணவன் பேசத் தொடங்கியதும் முதலில் திகைத்த மானசா, உடனே புரிந்து கொண்டாள். பழைய எண்ணத்திலேயே அவள் அறியாச் சிறுமி என்ற நினைப்பிலேயே பேசுகிறான். ஆனால் இதில் குளிர் காய்வது இனி முடியாத காரியம். இது தீயாய் அவளை எரித்து விடுமுன் அவள் முடிவு எடுத்தே ஆகவேண்டும்.

ஒன்று, தன் சுயகவுரவத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, கணவனோடு ஒன்றி வாழவேண்டும். அல்லது இவனை அடியோடு பிரிந்து, இவன் வாடையே படாத இடத்துக்கு விலகிச் சென்றே தீரவேண்டும். இடையில் ஊசலாடும் இந்தத் திரிசங்கு சொர்க்கம் அவளுக்குச் சற்றும் பொருந்தாத ஒன்று.

ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு, ''எனக்கு வயது இருபத்து மூன்று!'' என்றாள் அவள் வரண்ட குரலில்.

''ஆனால் கற்றுக் கொடுக்க உறவு, நட்பென்று யாரும் இல்லாத குழந்தை!''

சற்று யோசித்து, ''ஹெரால்ட் ராபின்ஸ்' நாவல்க ளைப் படித்திருக்கிறேன் தெரியுமல்லவா?'' என்று நினை வூட்டினாள் அவள்.

''அதில்தான் 'பலான' சமாச்சாரங்களை ஒதுக்கி விட் டுப் படிக்கும் சத்புத்திரி ஆயிற்றே!'' என்று பதிலுக்கு அவள் பேச்சையே நினைவுபடுத்தி மடக்கினான் அவன்.

இவனிடம் என்ன சொல்லி எப்படி ஏற்கவைப்பது என்று புரியாமல் திகைத்தாள் மானசா. பணத்துக்காக மணந்தவனோடு வாழமுடியாது என்று உண்மையைச் சொல்லி விடலாமா என்று கூட யோசித்தாள். சொன்னால், அவளது பிரச்சினை அவனுக்குப் புரியுமா? இதுதானே நம்நாட்டில் வழமை, இதில் என்ன இருக்கிறது என்று கேட்கக்கூடும். அதைவிட மோசமாய், உன் அண்ணன்தான் இப்படிச் செய்யும்படித் தூண்டினார் என்று பொய்யும் சொல்லக்கூடும். அது இன்னமும் வெறுப்பேற்றும்.

அவளது யோசனை புரியாமல் அவன் பேசலானான். ''ஆங்கிலத்தில் 'கோல்ட் வுமன்' என்பார்கள். அன்பு, காதல், ரசனை எதுவும் இல்லாத இளக்கமற்ற பனிப்பாறை

போன்ற பிறவிகள். நீ அப்படிப்பட்ட பெண்ணாக இருந்தி ருந்தால் உன் விருப்பத்துக்கு நான் தலையாட்டி இருப் பேன். ஆனால் உன்னிடம் அன்பு இருக்கிறது; ரசனை இருக்கிறது... சொல்லப் போனால், உன்னளவு ரசனை எனக்கே கிடையாதுதான்... இந்த மாதிரி மனதில் காதல் மட்டும் இல்லை என்றால் எப்படி ஒப்புவது? இருக்கிறது. நிறையவே இருக்கிறது. நீறுபூத்த நெருப்பை மறைத்திருக் கும் சாம்பல் போலப் பத்து மடங்கு அதிகமாகப் பயமும் இருக்கிறது. அவ்வளவே. ஒரு காற்றடித்தால் சாம்பல் விலகிவிடும். உன் பயமும் மறைந்து விடும்.

நம்பிக்கையோடு சசிசேகரன் பேசப்பேச, மானசாவுக் குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது. ''உங்களுக்குப் புரியவில்லையே!'' என்றாள் சலிப்புடன். வீண் ரசாபாசம் இல்லாமல், நல்லவிதமாகப் பிரிந்து விட லாம் என்று பார்த்தால், இவன் விடமாட்டான் போல் இருக்கிறதே!

''உனக்குத்தான் புரியவில்லை'' என்று தன் நிலையி லேயே நின்று மேலும் விளக்கலானான் சசிசேகரன். ''சற்று யோசித்துப் பார், மானசா. காதல் என்பது புலியோ சிங்கமோ அல்ல; அதை எண்ணி அச்சமோ, அசுசியோ அடைவதற்கு. சிங்கம், புலிக்கும் கூடக் காதல் உண்டுதான். அதில்லாமல் உலகம் இயங்குவது ஏது? நம் பெற்றோர் காதலைக் கண்டு அஞ்சி ஒதுங்கியிருந்தால் நாம் பிறந்திருப் போமா? காதலிப்பது இயற்கையின் தத்துவம் மனு. வழிவ ழியாய் நடப்பது. நம் பெற்றோர், நாம், நம் பிள்ளைகள் என்று தொடர்வது. அதில்...''

சட்டென முகம் கடினமுற, ''உங்கள் வாரிசுகளைப் பெற வேறு யாரையாவது கட்டிக் கொள்ளுங்கள்'' என்று உரைத்தபடி, ஓரக்கண்ணால் கணவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் மானசா. ஒருவேளை...

சட்டென, சசிசேகரனின் முகம் சிவக்கவும், அவளுக்குச் சொத்தென்று மனம் சோர்ந்து போயிற்று. அண்ணி சொன்னது மெய்யேதான். தான் சொன்ன அதே வார்த்தைகளைக் கேட்டதும் குற்றக் குறுகுறுப்பில், அவன் முகம் கன்றிக் கறுக்கிறது! ஒருவேளை இல்லாமல் இருக்குமோ என்று பைத்தியக்காரி மாதிரி இன்னமும் ஆசைப்பட்டாளே! அதுதான் அண்ணனே சொல்லி விட்டாரே...

''உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்து உண்மையாகவே இப்போது உன்மேல் எனக்கு மிகுந்த கோபம் வருகிறது!'' என்றான் அவன் கடுமையான குரலில். ''திருமணமான மறுநாளே பிரிவு என்றாய்! எண்ணி மூன்று நாட்கள் ஆகவில்லை, மணவிலக்கு என்கிறாய்! கடைசியாக 'வேறு பெண்ணா? இதென்ன விளையாட்டா? திருமண மந்திரம் சொன்னபோது வாழ்நாள் முழுமைக்கும் என்றேனே, என்னைப் பொறுத்த வரையில் அது சத்திய வாக்கு. இந்தப் பிறவியில் என் வாழ்வு முழுமைக்கும் நீதான் என் மனைவி. நீ மட்டுமேதான். வேறு எவளும் எனக்குத் தேவையில்லை. புரிகிறதா?'' என்றான் அதட்டலாக.

பேசாமல் தலைகுனிந்து அமர்ந்திருந்தவளுக்குப் புண்ணுக்குப் புணுகு தடவினாற்போல உள்ளூர ஓர் இதமான உணர்ச்சி பரவியது. 'வாழ்நாள் முழுமைக்கும் நீதான்' என்கிறானே! ஆனால்...

''ஒன்றை எப்போதும் நினைவில் வை, மானசா. இந்தப் பிரிவு, விவாகரத்து என்கிற பேச்செல்லாம் இனி ஒருபோதும் நம்மிடையே வேண்டாம். வரக்கூடாது. திருமணத்துக்கு முன்பு நாம் நல்ல நண்பர்களாக இருந்தோம். இனியும் அப்படியே இருப்போம். உன் அர்த்தமற்ற அச்சங்கள், தவறான கருத்துகள் எல்லாம் ஒருநாள் நிச்சயமாக மாறும். அப்படி மாறுகிற வரை அது ஆண்டுக்கணக்காக என்றாலும் என்னால் காத்திருக்க முடியும். அதுவரை,

என்னை உன் அன்பனாக ஏற்க முடியா விட்டாலும், முன்போல நண்பனாக மதித்து நட. அதுபோதும்'' என்று கறார் குரலில் கூறியவன், அற்குமேல் அவள் எதுவும் பேச இடம் கொடாமல், எழுந்து, ''குட் நைட்'' சொல்லிவிட்டுப் படுக்கச் சென்று விட்டான்.

மூன்று இரவுகளுக்குப் பிறகு, அன்று, மானசா சற்று அமைதியாக உறங்கினாள் எனலாம்.

வாழ்வு முழுமைக்கும் நீதான் என்று சசிசேகரன் கூறியது, விசித்திரமான வகையில் அவளுக்கு மிகுந்த ஆறுதலைத் தந்திருந்தது.

இதுவும் கூடப் பொய்த்துப் போகலாம். ஏற்கனவே காதலிப்பவன் போல நடித்துக் காசுக்காக மணந்து அவளை ஏமாற்றவில்லையா?

ஆனாலும் கூட, அவ்வளவு உறுதியோடு கணவன் சொன்ன விதம் ஆண்டுக்கணக்கிலும் காத்திருக்கத் தயார் என்றது, அவளைப் பெரிதும் அமைதிப்படுத்த, நிம்மதி யோடு உறங்கினாள். ஒருவேளை, சிலபல ஆண்டுகளின் பின்னர், அவனது அன்பில் உறுதி உண்டானால் ஊரானைப் போல நாமும் வாழ வழி இருக்கிறது என்று ஒரு சிறு நம்பிக்கையும் அவளுள் தலைதூக்கியதோ, என்னவோ?

17

மறுநாள் காலைக் காபியின்போது, சசிசேகரன், மனைவியிடம், ''இந்தக் காதல் சிட்டுகளைப் பார்க்கும் போதெல்லாம் உன் மனம் கலங்கித் தவிப்பது போல எனக்குத் தோன்றுகிறது, மானசா. பேசாம்ல் இன்று இங்கி

ருந்து கிளம்பி விடலாம். நேரே, சென்னைக்குப் போனா லும், என்ன ஏது என்று கேள்விகள் வரக்கூடும். அதைவிட, இங்கிருந்து பழனி பக்கம்தானே? முதலில் அங்கே போவோம். அங்கிருந்து வரிசையாக அறுபடை வீடுகள் அத்தனையும் தரிசனம் செய்து விட்டுத் திரும்பலாம்'' என்றான்.

மதுரையில் கோயிலுக்குப் போனது இதமாக இருந்தது நினைவு வரவே, மானசாவும், மறுப்பின்றித் தலையாட்டி னாள்.

ஆனால், உடனேயே இன்னொரு கவலையும் உண்டா யிற்று.

இங்கே, கொடைக்கானலில் என்றால் அண்ணன் வீடு. தங்கும் இடத்துக்குச் செலவு இல்லை. போக்குவரத்திலும் இதுவரை, குறிப்பிடும்படியான விரயம் கிடையாது. ஆனால், இவன் சொல்வது போல ஊரூராகச் சுற்றுவது என்றால் பயங்கரமாகப் பணம் வீணாகுமே!

தன் கவலையை மெதுவாக அவள் வெளிப்படுத்த வும், அவ்வளவு நேரம் இருந்த உணர்ச்சியற்ற பாவனை மாறி, சசிசேகரன் வாய்விட்டுச் சிரித்தான். ''பரவாயில் லையே! வீட்டம்மாவுக்கு வரவு செலவு பற்றிய அக்கறை ரொம்பவும் வந்து விட்டாற் போலத் தெரிகிறதே!'' என்று வேடிக்கை பேசினான். பிறகு, ''இதெல்லாம் அப்படி ஒன்றும் பெரிய செலவில்லை, மானு. அப்பா, கோயில் டிரஸ்டியாக இருந்தவர். ஏற்கனவே நாலு படை வீடுகளில் கோயில் 'காட்டே'ஜிற்குப் பணம் கொடுத்திருந்தார். நான் சம்பாதித்து அனுப்பியதில் மீதி இரண்டு இடங்களிலும் கட்டினார். எல்லா தலங்களிலும் அப்பா பெயர் பிரசித்தம். அதனால் தங்குமிடம் பிரச்சினையில்லை. உணவுக்குக் கோயில் பிரசாதம்! அப்புறம் போக்குவரத்துக்கு மெள்ள மெள்ளப் பொடி நடையாகப் போய்விட முடியாதா

என்ன?'' என்று கூறவும், அவனது கடைசி வாக்கியத்தில் மானசா திகைப்புற்று நோக்க, அவன் மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தான்.

தன்னை மீறி முறுவலித்தபடி, ''எல்லாம் பொய்யா?'' என்றாள் அவள்.

தலையசைத்து, ''கோயில் காட்டேஜ் விஷயம் உண்மை. இல்லாவிட்டாலும் இந்தச் செலவுகள் எல்லாம் நமக்கு முடியாத்து இல்லை, மனு. அதனால், இந்த அழகான பட்டுத் தலைக்குள், இதுபோலச் செலவுக் கணக்குகளை எல்லாம் போட்டுப் பார்த்துக் குழப்பிக் கொள்ள வேண்டாம். சரிதானா?'' எனவும் அவள் சம்மதமாய்த் தலையாட்டினாள்.

திருத்தலங்களும், அங்கே ஒலித்த பக்திப் பாடல்களும், தெய்வ தரிசனங்களும், மானசாவின் அலைபாய்ந்த மனதை மெய்யாகவே அமைதிப்படுத்தின. சசிசேகரனின் கரிசனமும், கலகலப்புமான பேச்சு வேறு சேர்ந்து கொள்ளக் கொஞ்சம் உற்சாகமாகவே உணரத் தொடங்கினாள்.

இப்படியாக, மேலும் ஆறு நாட்களைக் கழித்துவிட்டு, மீண்டும் திரும்பிச் சென்னை வந்து சேர்ந்தபோது அவர்கள் கிளம்பிப் பத்து நாட்கள் முடிவடைந்திருந்தன.

சென்னையிலும், சசிசேகரன் மனைவியர் நேராக அவளுடைய அண்ணன் வீட்டுக்கு அழைத்துச் செல்லவில்லை. நண்பனின் வீடு, என்று சாந்தோம் பக்கமாக ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

''நண்பன் வெளிநாட்டில் இருக்கிறான், மானு. மாடியில் வேறு குடும்பம் குடியிருக்கிறது. கீழ்ப்பகுதியை, அவனுடைய பெற்றோர் வசிப்பதற்காக. டி.வி. சோபா செட், கட்டில், சமையலறையில் காஸ், கிரைண்டர், என்று எல்லாம் வாங்கிப் போட்டு வைத்தான். கடைசியில், அவன் தம்பி, அமெரிக்காவில் இருப்பவன், உதவிக்கு அழைத்

தான் என்று அங்கே போய் விட்டார்கள். தம்பி மனைவிக்குப் பிரசவ சமயமாம். அவளைப் பெற்றவர்கள் இப்போது இல்லை எனும்போது இவர்கள் அங்கே செல்வதுதான் நியாயமும் கூட இல்லையா?'' என்றபடி வீட்டைச் சுற்றிக் காட்டினான்.

மவுனமாக எல்லாவற்றையும் பார்வையிட்டவள், ''பாவம், உங்கள் நண்பர். பெற்றவர்களுக்கு என்று ஆசையாக வாங்கி வைத்துவிட்டு, இப்போது அவர் மனதுக்குக் கஷ்டமாக இருக்கும்!'' என்று இரங்கினாள்.

''கொஞ்சம் வருத்தம்தான். ஆனால், 'சும்மா கிடந்து துருப்பிடிக்காமல் நீயாவது பயன்படுத்துவது கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறதடா' என்றான். அடடே! இத்தனையும் இருக்கிறது; ஆனால் உனக்கு இவைகளைப் பயன்படுத்திச் சமைக்கத் தெரியுமா? உன் பணக்கார அண்ணன் வீட்டில் எதையாவது எடுத்து உண்டு விடுவாயோ என்று சமையல றைக்குள் புகவே உன் அண்ணி உன்னை அனுமதித்திருக்க மாட்டாளே!''

அது உண்மைதான். ஆனால் திருமணம் நிச்சயமான பிறகு, மாலையில் சசிசேகரன் அழைத்துச் செல்ல வரும் வரை, சமையல்கார அம்மாளிடம் அது இது என்று கற்றுக் கொள்ள அவள் முனைந்த போது சந்தியா தடுக்கவும் இல்லை. சமையல்கார அம்மாளும் கல்யாணப் பெண் என்கிற கனிவுடன் நன்றாகத்தான் கற்றுத் தந்தாள். சந்தியாவுடைய தம்பி மனைவியர் கூடச் சில பக்குவங்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆனால், எல்லாம் ஒரு பனிரண்டு நாட்களில் பயின்றதுதான்.

தன் நளபாகத்தைக் காட்டிச் சசிசேகரனைப் பூரிக்கச் செய்து விடவேண்டும் என்று மானசா மாய்ந்து மாய்ந்து

கற்றதைப் பார்த்து சந்தியா எப்படி எள்ளி நகையாடியிருப் பாள்.

வேண்டாம்! வேண்டாம்!! இப்போது இந்த நினைவு கள் கூடவே கூடாது!

அவசரமாகச் சீர்ப்படுத்திக் கொள்ளுமுன், மானசா வின் முகமாறுதலைக் கண்டுவிட்டு, ''என்ன மானு, சமை யல் தெரியாது என்பதற்கா இவ்வளவு வருத்தம்? பரவா யில்லை விடு. எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். இரண்டு சமையல் புத்தகங்களை வாங்கி வந்து சமாளித்துக் கொள்ளலாம். கவலைப்படாதே'' என்று தேற்றினான் சசிசே கரன்.

அதற்குள் சுதாரித்து, ''கொஞ்சம் கொஞ்சம் என்றால் அது எனக்கும்தான் தெரியும்'' என்று அவன் பேச்சில் சேர்ந்து கொண்டாள் மானசா.

மானசாவின் பிறந்த வீட்டுக்குச் செல்வதற்கு இருவ ருமே அவசரப்படவில்லை.

''இங்கே வீட்டில் சாமான் அடுக்கிக் கொண்டு இருக்கி றோம்; இரண்டுநாள் கழித்து வருகிறோம் என்று உன் அண்ணனுக்கு டெலிஃபோனில் சொல்லி விட்டேன். மற்ற படி, தொழில் விவகாரம் பற்றி நான் அவ்வப்போது அவரை அலுவலகத்தில் சந்தித்துப் பார்த்துக் கொள்கி றேன்'' என்று மானசாவிடம் சசிசேகரன் கூறியபோது, இந்தக் கடன் விவரம் இப்போதாவது கூறுவானா என்று மானசா காத்திருக்க, அவள் கணவன் அப்போதும் எதுவும் குறிப்பு கூடக் காட்டினானில்லை.

நம் தலைவிதி, இப்படி ஓர் ஏமாற்றுக்காரக் கணவ னோடு வாழவேண்டும் என்பது, என்று வெறுப்போடு எண்ணினாள் மானசா.

நாலு நாட்கள் சென்ற பின்னர், இனியும் நேரில் போகாதிருந்தால் நன்றாயிராது என்று, சென்ற இடங்களில் அங்கங்கே வாங்கிய பரிசுப் பொருட்களுடன், கதிரேசனின் வீட்டுக்கு இருவரும் சென்றார்கள்.

பரிசுப் பொருட்களைப் பார்த்ததும், ''வெல்லப் பிள் ளையாரைக் கிள்ளி அவருக்கே நிவேதனமா?'' என்றாள் சந்தியா ஏளனமாக.

''அவர் இன்னமும் கடன் பணம் எதையும் வாங்கவில் லை'' என்றாள் மானசா ரோஷத்துடன்.

''அவசர்த்துக்கு முன்பணம் கொஞ்சம் வாங்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியுமாம்? அவ்வளவு பெரிய தொகையைப் பெறுவதையே மறைத்தவர் இதைச் சொல் லவா போகிறார்?'' என்று நெத்தியடி அடித்தாள் அண்ணிக் காரி. அத்தோடு முழுப் பணத்துக்கான செக்கை வாங்கி மூன்று நாளாகிறது, தெரியுமா?''

இது மெய்யாகவே நெற்றியடிதான். அப்படியில்லை என்று உறுதியோடு 'மறுத்துக் கூறும் திடம் மானசாவுக்கு இல்லை.

பெருமளவு ஒளிவு மறைவின்றிப் பேசவது போலத் தோன்றினாலும்கூட முக்கியமான பண விவரம் என்று அவன் அவளிடம் எதைச் சொன்னான்? சந்தியா கூறுவது மெய்யாகவே இருக்கலாமே!

ஆனால், அண்ணியிடம் தோல்வியை ஒத்துக் கொள்ள மனமின்றி, ''நீங்கள் என்னதான் சொன்னாலும் சசிக்கு என் மேல் உண்மையான அன்புதான். 'வாழ்வு முழுமைக்கும் நீதான். நமக்குள், வி... பிரிவென்ற பேச்சே கிடையாது' என்றிருக்கிறார், தெரியுமா?'' என்று தன் முழு உயரத்துக் கும் நிமிர்ந்து நின்று அறிவித்தாள்.

''மெள்ளடி மெள்ள. தலை போய் விட்டதில் முட்டிக் கொள்ளப் போகிறது! அதென்னது? வாழ்வு முழுமைக்கும் நீதானாமா? வேறு என்னதான் சொல்ல முடியும், பாவம்! இடையிலே பிரிந்தால், இந்தக் கடன் முழுவதையும் அடைத்து நகையைத் திருப்பித் தந்தாக வேண்டுமே! நாற்பது லட்சமடி! நாற்பது ஆண்டுகள் உருண்டு புரண்டா லும் உன் புருஷனால் திருப்பித் தரமுடியுமா? அதனால் தான், வாழ்வு முழுவதும் 'விட்டுப் பிரியேனடி, கண்ணே... என்று உன் தலையில் மிளகாய் அரைத்திருக்கிறான். இதைப் போய்ப் பெரிதாகப் பீற்றிக் கொள்ள வந்துவிட் டாயே! சரியான முட்டாள் நீ!''

சில கணங்கள், மானசாவின் கண்கள் முன் பூச்சி பறந்தது. உச்சந்தலையில் ஓங்கி விழுந்த இந்த அடியில் சற்று நேரம் அவளுக்குப் பொறி கலங்கிப் போயிற்று.

இந்த விளக்கம், அவளுக்கு ஏன் தெரியவில்லை? மற்றபடி, ஆசை கொண்ட மனிதனால் ஆண்டுக் கணக்கில் காத்திருப்பது சாத்தியமாகுமா? அன்றைக்கே மானசாவுக் குப் புரிந்திருக்க வேண்டாமா?

நல்லவேளையாக, சந்தியா கெக்கலி கொட்டிக் கூத் தாடு முன்பாக, சிவா வந்து சேர்ந்தான். ''அத்தை, மாமா வும் நீயும் வாங்கி வந்த ஸ்வெட்டர் எனக்குச் சரியான அளவுதான். எப்படி இருக்கிறது பார்!'' என்று, அவர்கள் வாங்கி வந்ததை உடனே அணிந்து வந்து காட்டியது மனதிற்குச் சிறு ஆறுதலைத் தர, மானசா தன் அண்ணன் மகனிடம் திரும்பினாள்.

அதற்கு மேல் அண்ணியோடு ஒரு கணம் கூடத் தனிமையில் இருக்க நேராமல் பார்த்துக் கொண்டவள், அதிகநேரம் நில்லாமல் விரைவிலேயே வீட்டுக்குத் திரும் பிச் சென்றும் விட்டாள்.

தனியாகத்தான்.

தொழில் வேலைகள் தொடங்கி விட்டால், பழங்காலப் பேதையருக்குப் போல, கூட்டிச் செல்ல, கொண்டு வந்து விட என்று கூடவே அலையத் தனக்கு நேரம் இராதென்றும், எங்கேயும் தனியாகவே சென்று வந்து மானசா பழகிக் கொள்ள வேண்டும் என்றும் ஏற்கனவே சசிசேகரன் மனை வியிடம் சொல்லியிருந்தான். அதற்கு ஏற்ப, காலையில் மைத்துனன் வீடுவரை கூட வந்தவன், ''நீயாகத்தான் திரும்பிப் போய்விடு. நான் வர நேரமாகும்'' என்று கூறிச் சென்று விட்டான்.

என்ன பெரிய தொழில்? அதுதான் மூன்று நாளாகிற தாமே, அண்ணனிடம் பணம் பெற்று, அதை வேட்டு வைக்கப் போயிருப்பான்!

கணவன் சொன்ன எல்லாவற்றிலும் மனம் நம்பிக்கை இழந்தது. மணவிலக்கு கூடாது என்று முழு மூச்சாய் எதிர்த்ததின் அடிப்படைக் காரணம் இது என்று புரிந்து கொள்ளவில்லையே! அன்பு என்று எண்ணி மீண்டும் ஏமாந்தோமே! என்று அவள் மனம் மறுகியது.

அன்று எப்படித்தான் வீடுவந்து சேர்ந்தாள் என்பதை மானசா அறியாள். வந்து சேர்ந்து வீட்டின் தனிமை கிட்டியதும் அவளுக்கு விம்மி வெடித்துக் கொண்டு வந்தது. கைப்பையை ஒருபுறம் வீசிவிட்டுக் கட்டிலில் குப்புற விழுந்தவள் கதறிக் கதறி அழலானாள். அவளது வாழ்வில் இழந்தவை அனைத்தும் அப்போதுதான் நிகழ்ந்தவை போல அழுதாள்.

சிறுவயதில் மாண்ட தந்தைக்காக அழுதாள்.

இரண்டும்கெட்டான் வயதில் மாண்ட தாயை நினைத்து விம்மினாள்.

அண்ணியின் கொடுமைகளையும் அவளிடம் பட்ட சிறுமைகளையும் எண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

கடைசியில், மீட்கவந்த ரட்சகனாகக் கருதியவனும் அடியோடு பொய்த்துப் போன கொடுமையைப் பார்த்து ஏங்கி அழுதாள்.

எவ்வளவு நேரம் அழுதாளோ; அழுது அழுது சோர்ந்து, அப்படியே தூங்கி விட்டிருக்க வேண்டும். அயர்வும் சோர்வுமாக அடித்துப் போட்ட மாதிரி உறங்கினாள் அவள்.

தன் பழைய தொழில் தொடர்புகளை எல்லாம் நேரில் கண்டு பேசிவிட்டு, அரசாங்க அனுமதியையும் புதுப்பித்துக் கொண்டு, அரபு தேசத்து நண்பர்களோடு பேசி சில முதல்கட்ட வேலைகளைச் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, உள்ளூரத் திருப்தியோடு சசிசேகரன் வீட்டை அடைந்தால் வீடு இருளில் மூழ்கி இருந்தது.

மானசா இன்னமுமா வரவில்லை என்று எண்ணியபடியே தன் சாவி கொண்டு கதவைத் திறந்தான். சோபாவில் அவளது கைப்பை கிடந்தது.

உள்ளே சென்று பார்த்தால், அவனுடைய அருமை மனைவி கட்டிலில் — அன்றுவரை அவன் காணப்படுத்திராத கட்டிலில் லேசாகத் திரும்பினாற் போல கிடந்தாள். வெளியே இருந்துவந்த தெருவிளக்கின் அரைவெளிச்சத்தில் மானசாவின் எழில் வடிவம் அழகுறத் தெரிந்தது.

சற்று நேரம் மனைவியையே பார்த்துக் கொண்டு நின்றவன், மெல்ல அவளை நோக்கி நடந்தான்.

கட்டிலின் ஒருபுறமாய் அமர்ந்து, மனைவியின் கையைப் பற்றி, ''மனு... என்று மெல்ல அழைத்தான்.

பதிலாக, அவளிடம் சிறு அசைவுகூட இல்லாது போகவும், அவசரமாக அவள் முகத்தைத் திருப்பி, '''மானசா!'' என்றான் சற்றுப் பதறிய குரலில்.

அந்தக் குரல் எப்படியோ லேசாக அவளை எட்ட, ''ம்... என்று முனகியபடி கணவன் புறமாய்த் திரும்பி அவனை ஒட்டிச் சுருண்டபடி மானசா மீண்டும் துயிலில் ஆழ்ந்தாள்.

அன்றுவரை, அறிந்திராத அந்த நெருக்கம் சசிசேகரனை என்ன செய்ததோ, ''மனு...'' என்று மிருதுவாய் அழைத்து, தூக்கத்தினாலும் புரண்டதினாலும் கலைந்திருந்த மானசாவின் கூந்தலை, அவள் முகத்திலிருந்து விலக்கி, மென்மையாய் நீவி விடலானான்.

பழக்கமற்ற இந்தத் தொடு உணர்ச்சியில் மானசா விரைவிலேயே விழித்து விட்டாள்தான். ஆனால் சோர்வும், தூக்கக் கலக்கமும் முழுமையாக அகலாத அந்த நிலையில், கணவனின் வருடல் தேவ சுகமாக இருக்கவே, அப்படியே அசையாமல் படுத்துக் கிடந்தாள்.

மனைவி விழித்து விட்டதை உணர்ந்து, மீண்டும் 'மனு'வென்று அழைத்து, அவள் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான் சசிசேகரன்.

மானசாவின் தூக்கம் முழுமையாகக் கலைந்துவிட, பட்டெனத் திறந்த விழிகளில், கணவனின் தாகம் நிறைந்த முகம் தென்படவும், ''சீ!'' என்று அவனை உதறிக் கொண்டு எழுந்தாள்.

மனைவியின் கையைப் பற்றி, அவள் கட்டிலை விட்டு இறங்க முடியாமல் தடுத்து, ''என்ன சீ? இவ்வளவு நேரம் இனிப்பாகத்தானே இருந்தது? இப்போது மட்டும் என்ன வந்தது?'' என்றான் சசிசேகரன் அதட்டலாக.

''சப்பாத்திக் கள்ளிப் பழம்கூட இனிப்பாகத்தான் இருக்குமாம். அந்த இனிப்புக்கு ஆசைப்பட்டால் தொண்டையில் முள் சிக்கி உயிர்தான் போகும்'' என்று கையை உ ~]த் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள் மானசா.

அந்த முயற்சியில் தோற்று, அவள் அலுப்புற்ற போது, தானாகவே அவளை விடுவித்து விட்டு, ''நம் உறவில் முள்ளாகத் தைப்பது எதுவோ?'' என்று விசாரணை செய் தான் அவன்.

அவனது தோரணை எரிச்சலூட்ட, ''உங்கள் பணத் தாசை!'' என்று உண்மையைப் போட்டு உடைத்தாள் மானசா. ''காதலிப்பது போல் நடித்து என்னை ஏமாற்றி விட்டுப் பணத்துக்காக என்னை மணந்த உங்கள் கபடம்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

அன்று சந்தியாவிடம் பட்ட அவமானம் நினைவுக்கு வர, ''பணத்துக்காக எந்த அளவுக்கும் இறங்குவது உங்க ளுக்கு எளிதாக இருக்கலாம். ஆனால், ஏமாந்து கழுத்தை நீட்டி விட்ட காரணத்துக்காக, ஒரு நீசன் என்னைத் தொடு வதை நான் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உங்க ளுக்கு வேண்டிய பணம் கிடைத்துவிட்டதல்லவா? அத் தோடு திருப்தி அடையுங்கள். அதற்குமேல் என்னிடம் எதையும் எதிர்பாராதீர்கள்'' என்று ஊசிப் பட்டாசாய்ப் படபடவென்று வெடித்து முடித்தாள் அவள்.

18

அந்த மாதிரிப் போட்டு உடைக்க வேண்டும் என்று மானசா ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. ஆனால் தாயின் இழப்பு, அண்ணியின் கொடுமை என்று அத்தனை வேதனைகளையும் தாங்கிக் கொண்டு, உள்ளூர அவள் வளர்த்து வைத்திருந்த ஒரே ஒரு பெரிய ஆசை மண்ணாகிப் போனதே அவளுக்குப் பெரும் துயரம். அதன்பிறகும், இலுப்பைப் பூ இனிப்பாய் அவள் பத்திரப்படுத்தி வைத்தி

ருந்த சிறு ஆறுதலும் எட்டிக்காய்க் கசப்பு என்று அறிந்தது வேறு அவளால் தாங்கமாட்டாத துன்பம்.

பணத்துக்காக மணந்தவன் என்றபோதும், கணவன் மனதில் சிறு பிரியமேனும் இருக்கத்தான் செய்கிறது என்று சற்றே ஆறுதல் கொண்டிருந்தவள், அதுவும் பொய் என்று அறிந்து வந்த வேதனையோடு அவள் சோர்ந்து கிடந்த நிலையை அந்தக் கணவன் பயன்படுத்திக் கொள்ள முயன்ற விதத்தில், விளைந்த சினத்தில் வெடித்தே விட்டாள்.

அவள் அப்படிக் கொட்டி முடித்த பிறகு, அந்த வீட்டில் சற்று நேரம் முழு அமைதி நிலவியது.

பிறகு, ''நீசனா? நீசன் என்றால் அர்த்தம் தெரியுமா உனக்கு?'' என்று கேட்ட சசிசேகரன், அவளது பதிலை எதிர்பாராமலே, ''அங்கே வா. நாம் இருவரும் கொஞ்சம் பேசவேண்டும்'' என்று கூறிவிட்டு, முன்னறைக்கு சென் றான்.

மானசா அசையாமல் நிற்கவும், ''இங்கிருந்தே பேச லாம். ஆனால், இங்கே உட்கார்ந்து பேசுவதைக் காட்டிலும் முன் அறை சோஃபாவில் அமர்ந்து பேசுவது உனக்குப் பிடித்தமாக இருக்கக்கூடும் என்றுதான் அங்கே போகலாம் என்றேன்'' என்று அவன் அதே வரண்ட குரலில் கூறிக் கட்டிலைக் காட்டவும், மடமடவென்று அவளும் கணவ னைத் தொடர்ந்து சென்றாள்.

பெரிதாக என்ன பேசிவிடப் போகிறான்? கடைசி வரை கடன் பணமும், பணத்துக்காக நகையும் வேண்டுமல் லவா? அதனால் மன்னிப்புக் கேட்பான். கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டுப் பிணத்திடம் மன்னிப்புக் கேட்பதினால் என்ன பயன் என்று சூடாகக் குட்டு விடுகிறேன். அவ்வளவு தானே, என்று தனக்குத்தானே வாதப் பிரதிவாதங்களை அடுக்கிக் கொண்டு போகையில் அவளுக்கு ஒன்று உறுத்தி யது.

இவன் மன்னிப்புக் கேட்கிற தோரணையில் பேசவில்லையே!

சசிசேகரன் மன்னிப்புக் கேட்பதாகவும் இல்லை.

அவள் சோஃபாவில் அமரும்வரை பொறுத்திருந்து, ''இப்போது சொல். என்ன விஷயம்?'' என்று மனைவியிடம் வினவினான்.

செய்வதெல்லாம் செய்துவிட்டு, என்னவோ அவள் தான் குற்றவாளி மாதிரி விளக்கம் கேட்கிறானே என்ற ஆத்திரம் ஒருபுறமும், அவள் சொல்லச் சொல்ல அதற்குச் சமாதானமாக இல்லாத பொல்லாத கதைகள் கட்டுவதைக் கேட்க மனமில்லாமை ஒருபுறமாக அவள் பேசப் பிரிய மற்று சும்மாவே உட்கார்ந்திருந்தாள்.

''இப்படிப் பேசாமல் உட்கார்ந்திருந்தால் எப்படி மானசா? என்மேல் என்னென்ன குற்றங்களைச் சுமத்தினாய். நடித்ததாக, ஏமாற்றி கபடம் செய்ததாக... ரொம்பவும் தரம் இறங்கியதாக... கடைசியாக 'நீசன்' என்றே என்னைக் குறிப்பிட்டு விட்டாய். ஒருவரைக் குற்றம் சாட்டும்போது, அது ஏன் என்று காரணமும் சொல்லியாக வேண்டுமில்லையா?''

லேசான புருவச் சுளிப்புடன், கண்டிப்பான குரலில் அவன் கேட்கவும், நிமிர்ந்து, ''உண்மையைச் சொல்லும் போதுகூட அதற்குக் காரணம் கூறி விளக்கியாக வேண்டுமா?'' என்று துடுக்காகக் கேட்டாள் மானசா.

''எது உண்மை?'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில். ''எது உண்மை! என்ன நடந்தது என்று உனக்கு என்ன தெரியும்?''

''உங்களுக்கு நாற்பது லட்ச ரூபாய்ப் பணம் தேவைப் பட்டது என்பதுதான் உண்மை! அதைப் பெற்றுத் தரக்கூடிய என் நகைகளுக்காக நீங்கள் என்னை மணந்து கொண்டீர்

கள் என்பதுதான் நடந்தது. இப்படி ஒரு காரணத்துக்காகத் திருமணம் என்றால் நான் சம்மதிக்க மாட்டேன் என்பதை உணர்ந்து, என் மேல் நேசம் போல நடித்து என்னை ஏமாற்றினீர்கள் என்பதும் நடந்த விஷயம்தான்!'' என்றாள் அவள் குத்தலும் கோபமுமாக.

அவள் ஒரு சமயத்தில் முட்டாளாக இருந்து சசிசேக ரனை நம்பியது மெய்தான். ஆனால் அதற்காக, எப்போது மேயா முட்டாளாக இருப்பாள்?

''எனக்கு அந்தப் பணம் தேவைப்பட்டது உண்மை தான். ஆனால், அதைப் பெறுவதற்காகவே உன்னை மணந்து கொண்டேன் என்பது பொய். காதலிப்பது போல நடித்தேன் என்பதும் முழுப் பொய். உன்னை முதலில் பார்த்ததில் இருந்தே என் மனதில் ஒரு பாதிப்பு இருந்தது. அதிலும் பூங்காவில் அந்தப் பெண்மணியின் பேச்சுக்குப் பிறகு, உன்னையே மணந்தே ஆகவேண்டும் என்ற விருப் பம்... வைராக்கியம் கூட எனக்குத் தோன்றிவிட்டது என்ப தும் மெய்யே'' என்று அவன் பொறுமையுடன் விளக்கி னான்.

''பொய்! இதை நான் நம்பமாட்டேன்!'' என்று அறி வித்தாள் மானசா.

''ஏனோ?''

''நீங்கள் சொல்வது — என்மேல் அன்பு கொண்டு விட்டதாக; நீங்கள் கூறுவது மெய் என்றால், என்னிடம் எதையும் மறைத்திருக்க மாட்டீர்கள். உண்மையைக் கூறி ஒப்புதல் கேட்டிருப்பீர்கள்!'' என்றாள் அவள் ஆத்திரத்து டன்.

''அப்படி எண்ணித்தான் எல்லா விவரங்களையும் உன்னிடம் சொல்லிவிடுமாறு உன் அண்ணனிடம் வலியுறுத்

தினேன்'' என்றவன், மனைவியின் முகத்தில் நம்பாத தன்மையைக் கண்டு, ''வேண்டுமானால் உன் அண்ணனையே கேட்டுப் பார்'' என்று ஒரு வழி சொன்னான்.

''நம் இருவருக்கும் திருமணமாகி விட்டது. இப்போது, இந்தப் பண விஷயத்தினால் மன வேறுபாடு என்று போனால், அண்ணன் என்ன சொல்லக்கூடும் என்று எதிர் பார்க்கிறீர்கள்?.. என்று வினவியவள், அவன் தலைய சைக்கவும், ''இதை ஊகித்துத் தானே அண்ணனிடம் கேட்கச் சொன்னீர்கள்?'' என்று ஏளனம் செய்தாள்.

இப்போது சசிசேகரன் மறுப்பாய்த் தலையசைக்கவும், சினமுற்று, ''ஏன் உங்களுக்காக என் அண்ணன் என்னிடம் சொல்ல வேண்டும்? உங்களுக்கென்ன வாயில்லையா? பேசும் மொழி தெரியாதா? நேரடியாக அப்படிக் கேட்க வெட்கமாக இருந்தால், ஜாடைமாடையாகக் குறிப்பாகவேனும் சொல்லியிருக்கலாமே!'' என்று அவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அடுக்கினாள்.

ஆனால், ''சொன்னேனே!'' என்றான் கணவன். ''மானசா, இது நம் இருவரின் வாழ்க்கைப் பிரச்சினை. இதில், குத்தலும் கேலியுமாக அடுத்தவர் மனதை வருத்துவதை விட அமைதியாக இந்தச் சிக்கலை அவிழ்க்கும் விதம் பற்றி யோசித்துச் செயல்பட்டால் இருவருக்கும் நல்லதாக முடியும்'' என்றவன் தொடர்ந்து, ''சற்றுப் பொறுமையோடு நினைவுபடுத்திப் பார், மானு, நான் முதல் தடவை உனக்கு டெலிஃபோன் செய்த போது என்ன சொன்னேன்? உனக்கு வருத்தம் இல்லையே என்று கேட்டேனா இல்லையா? உனக்குப் பிடிக்காத எதையும் செய்வதாக இல்லை என்று கூடச் சொன்னேனே! நீ ஒரு வருத்தமும் இல்லை என்று பதில் கூறினாயே, நினைவில்லையா?'' என்று வினவினாள்.

நினைவில்லாமல் போவானேன்? இந்தப் பைத்தியக் கார மனதுதான், சசிசேகரனோடு பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கல்லில் பொறித்து வைத்திருக்கிறதே! பேசிய ஒவ்வொரு வார்த்தையும், சந்தித்த ஒவ்வொரு சம்பவமும் பூதம் காத்த சுரங்கம் போல நினைவுப் பெட்ட கத்தில் அடுக்கி வைத்து, எடுத்து எடுத்துப் பார்த்து மகிழ்ந்த அவளது வைர வைடூரியங்கள்!

ஒரு பெருமூச்சு விட்டாள் மானசா. எல்லாம் கண்ணா டிக் கற்கள்! தூக்கித் தூர எறியப்பட வேண்டியவை!

ஆனாலும் எவ்வளவு சாமர்த்தியம்! திருமணமாகப் போகிற ஒரு பெண்ணிடம் 'வருத்தமா' என்று கேட்டால், பிறந்த வீட்டுப் பாசத்தை நினைத்துக் கேட்பதாக நினைப் பார்களா, பணக் கணக்கு பற்றி யோசிப்பார்களா? அதுவும், அப்படி ஒரு பேரம் நடந்திருக்கக் கூடும் என்றே அறியாத ஒரு பேதை?

இவன் நேர்மையானவன் என்றால், அந்தப் பண விவரம் தெரிவித்து விட்டல்லவா வருத்தம் பற்றி விசாரித்தி ருக்க வேண்டும்?

இதை அவள் கேட்டபோது, ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ''உனக்குத் தெரியும் என்றே நினைத்துவிட்டேன், மானசா!'' என்றான் சசிசேகரன், சற்று வருத்தமான குரலில். உடனேயே, ''உன்னிடம் நான் இந்தக் கடன் பற்றிச் சொல்லவே இல்லை என்றும் கூற முடியாது, மானசா. நாற்பது லட்ச ரூபாய் கடன்காரனுடைய மனைவியாகப் போகிறோமே என்று இருக்கிறதா என்று கூட உன்னிடம் நான் கேட்டிருக்கிறேனே. எனக்கு நன்றாக நினைவிருக்கி றது!'' என்றான் சசிசேகரன்.

''எனக்கும் கூடத்தான் நன்றாகவே நினைவிருக்கிறது. நாற்பது லட்ச ரூபாய்க் கடனைப் பற்றிச் சொன்னவர், அந்தக் கடனை எப்படி, யாரிடம் பெறப் போகிறீர்கள்

என்பதைக் கவனமாக மறைத்து நீங்கள் பேசிய விதம்கூட மிக மிக நன்றாக நினைவு வருகிறது!'' என்றாள் அவள் மீண்டும் ஏளனமாகவே.

தலையசைத்து விட்டு, ''மறைக்க வேண்டும் என்று செய்யவில்லை, மானு. ஆனால்... பணத்துக்காக ஒரு பெண்ணை மணப்பது எனக்குக் கொஞ்சமும் மனம் ஒவ்வாத விஷயம். அதை உன் அண்ணனிடம் நான் முதலிலேயே தெளிவுபடுத்தி விட்டேன். ஆனால், என்னதான் இதுவும் அதுவும் வேறு வேறு என்ற போதும், உன் நகைகளை வைத்துப் பணம் பெற்றது எனக்கு உள்ளூர நெருடல்தான். அது பற்றிய பேச்சு இலகுவாக என் வாயில் வரவில்லை. அவ்வளவே! ஆனால், உன் அண்ணன் மூலம் உனக்கு முழு விவரமும் தெரியும் என்றே, நான் எண்ணியிருந்ததால், அதை நானும் ஒருதரம் சொல்லியாக வேண்டிய அவசியம் இருப்பதாகவும் எண்ணவில்லை. அதுவே, உன் அண்ணியின் கலகத்துக்கு வழிவகுக்கும் என்றும் அறியவில்லை. மானசா, என் வார்த்தையில் நம்பிக்கை வைத்து ஒரே ஒரு தரம், உன் அண்ணனிடம் இதுபற்றிக் கேட்டுப் பார்? முதலில், திருமணத்தையும், கடன் விவரத்தையும் இணைத்துப் பேசவேண்டாம் என்று கூறினேனா இல்லையா என்று... பிறகும், 'உங்கள் தங்கையை அவளுக்காகவே மணந்து கொள்ள விரும்புகிறேன். இந்த நகைகள் ஒரு கூடுதல் நன்மை' என்று சொன்னேனா இல்லையா, என்று உன் அண்ணனைக் கேட்டுத்தான் பாரேன்'' என்றான் சசிசேகரன் அலுப்பும் மன்றாடலுமாக.

ஆனால், அவனது பேச்சின் கடைசிப் பகுதி, மானசாவின் சினத்தை மேலும் கிளப்பிவிட, ''உங்கள் வசனத்தின் வாசகம் அதுவல்லவே. பணம் முக்கியம்; வாரிசுகளைப் பெற்றுப் போட ஒரு பெண்ணும் கிடைப்பது கூடுதல் நன்மை என்பது அல்லவா?'' என்றாள் வெடுக்கென்று.

முகத்தில் சிறு அருவருப்புடன் மனைவியை நேராக நோக்கி, ''இந்த விவரத்தை இப்படித் திரித்து, இவ்வளவு மெனக்கெட்டு உன்னிடம் எடுத்து வந்து சொன்ன புண்ணிய வான் யாரோ? ....அல்லது புண்ணியவதி என்று குறிப்பிட வேண்டுமோ?'' என்று சற்று ஏளனமாக வினவினான் கணவன்.

இவனுடன் ஒத்திட்டுப் பார்த்தால் அண்ணி புண்ணிய வதிதான். கணவன் பிள்ளைகளிடமேனும் உண்மை அன்பு இருக்கிறதே என்று எண்ணியபடி ''என் அண்ணிதான்'' என்றாள் சவால் விடுவதுபோல.

''நினைத்தேன்!'' என்றான் சசிசேகரன். ''ஒரு விஷயம் தான் கொஞ்சமும் புரியவில்லை! உன் அண்ணி எப்போதி ருந்து அரிச்சந்திரிணி ஆனாள்?'' என்று எகத்தாளமாகக் கேட்டவன், உடனே குரல் மாறி, ''யோசி கண்மணி. உன் அண்ணியின் குணம் நீ அறியாததா? அவள் உன்னை நோகடிக்க எதுவும் செய்யக் கூடியவள். இப்போதும் அவள் பொய் சொல்லியிருந்தால்?'' என்று மீண்டும் அவளி டம் மன்றாடினான்.

ஆனால், ''உண்மையே நோகடிக்கும் என்று தெரிந்த பின் அனாவசியமாக புனைந்துரைத்து சிரமப்படத் தேவை யில்லையே!'' என்றாள் அவள் வெறுத்த குரலில்.

என்ன சொன்னாலும் உன்னை நம்பமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த மனைவியைச் செய்கையற்று வெறித் தான் சசிசேகரன். ஒரு பெருமூச்சுடன், ''இந்த விவரம் நம் திருமணத்தன்று இரவு நீ என்னிடம் வருமுன் உன் அண்ணி உன்னிடம் சொல்லியிருக்க வேண்டும்! அப்படித்தானா?'' என்று வினவினான்.

அன்றையத் தவிப்பு அப்படியே நினைவு வர, உதட் டைக் கடித்துக் கொண்டு ஒப்புதலாய்த் தலையாட்டினாள் மனைவி.

உடனே ''நாம் இருவரும் மகிழ்ச்சியாய் இருந்து விடக்கூடாது என்றுதானே அப்போது பார்த்துச் சொல்லியி ருக்கிறாள்? உன்னை வருத்தவென்றே சொன்னது அது. உனக்குப் புரியவில்லையா மானு?'' என்று அவன் மீண்டும் ஒரு வழியை அவளுக்கு உணர்த்த முயன்றான்.

நிராசையுற்ற விழிகளால் அவனை நோக்கி, ''வருத்த வென்று சொன்னதுதான். ஆனால் அது உண்மையும் தானே? அன்று அண்ணனும் அண்ணியும் பேசிய பேச்சிலி ருந்தும் அதுவே உண்மையென்று அறிந்து கொண்டேன். அதனால் இன்னமும் என்னை ஏமாற்ற முயற்சிக்க வேண் டாம்'' என்றாள் மானசா வெறுப்பும் உறுதியுமான குரலில்.

ஒரு சிறு அமைதியின்பின், ''அதாவது, எந்த வகையி லும் நீ என் விளக்கத்தை ஒத்துக் கொள்ள மாட்டாய். அப்படித்தானே?'' என்று கணவன் கேட்க, ''ஆமாம்'' என்று அதே உறுதியோடு பதிலிறுத்தாள் மனைவி.

சில கணப்பொழுது அவளை வெறித்து நோக்கிவிட்டு, ''நல்லது. இனி நம்முடைய இந்தப் பேச்சு வேண்டாம். இரவுக்கு உணவு ஏதாவது வீட்டில் இருக்கிறதா? இல்லை யென்றால் இனி அடுப்படியில் சிரமப்பட வேண்டாம். இருவருக்கும் வாங்கி வந்து விடுகிறேன். உனக்கு என்ன வேண்டும்?'' என்று சசிசேகரன், வேறு பேச்சுக்கு மாறி வினவினான்.

''எனக்குப் பசியில்லை. ஒன்றும் வேண்டாம்... என்று மானசா முணுமுணுத்தாள்.

''மனம் ஆயிரம் அலைபாயும். அது உடம்பை அவ்வ ளவாகப் பாதிக்காது. ஆனால், அதற்காக வயிற்றைப் பட்டினி போட்டால் உடம்பு கெட்டுவிடும். அதனால் சாப்பிடாமல் படுக்க வேண்டாம். ஏதாவது லேசானதாக வாங்கி வருகிறேன்'' என்று சசிசேகரன் மீண்டும் வெளியே சென்று விட்டான்.

அன்றிலிருந்து ஒரு சாதாரண நண்பனைப் போலச் சசிசேகரன் மானசாவோடு பழகினானே தவிர, சொந்த விஷயமாக அவளிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவள் மனதை மாற்றவோ, சமாதானப்படுத்தவோ முயற்சிக்கவும் இல்லை.

இப்படியே நாலு தினங்கள் சென்றபின், ஐந்தாவது நாள் அவளிடம் வந்து, "நான் இரண்டு நாட்கள் வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது. நீ உன் அண்ணன் வீட்டில் போய் இருக்கிறாயா?" என்று வினவினான்.

19

அண்ணன் வீட்டில் போய் இருக்கிறாயா என்று சசிசேகரன் கேட்டது மானசாவுக்கு ஆச்சரியத்தோடு எரிச்சலையும் மூட்டியது.

நாலுநாள் முன்னதாகத்தான் அண்ணி சந்தியாவைப் பற்றி அவ்வளவு மோசமாகப் பேசினான். அதுவும், நாத்தனாரை நோகடிக்க அவள் எவ்வளவோ தூரம் இறங்கி விட்டதாக அளந்தான்; இன்று அவள் வீட்டில் தனியாக விட்டு விட்டுக் கிளம்புகிறேன் என்கிறானே! இப்போது மட்டும் சந்தியா, திடீரென்று பாசத்திருவுரு, நேர்மைத் திலகம் ஆகிவிட்டாளா!

அண்ணன் வீட்டில் இரண்டு நாட்கள் இருக்கச் சொல்வதற்குப் பதில் என்னைக் கொன்று போட்டுவிட்டே போங்களேன் என்று துடுக்காகச் சொல்லத் துடித்த அவளது நாவை, இந்த நாலு நாட்களாகச் சசிசேகரன் நடந்துகொண்ட விதம் தடுத்தது.

ஒரு சீராக, எந்தவித உணர்ச்சியையும் காட்டாத குரலும், முகமும், அவளையும் எதையும் காட்டிக் கொள்ள முடியாதவண்ணம் ஒரு கட்டுக்குள் அடக்கி விட்டிருந்தன. சீறிச் சிதைக்கவோ, சிரித்து மகிழவோ முடியாதபடி வெறும் எந்திரகதியில் தான் இருவரும் நடமாடிக் கொண்டு இருந்தனர். எந்திரங்களுக்கு ஏது உணர்ச்சியும் உறவும்?

இன்றும், சசிசேகரனின் குரலிலோ முகத்திலோ மாற்றமில்லைதான்.

இப்படித்தான் என்று வார்த்தைகளால் சொல்லாமலே கணவன் விதித்திருந்ததை மாற்ற மாட்டாமல், மானசாவும், ''வெளியூர் என்றால்... எங்கே என்று சொல்ல முடியுமா?'' என்று சாதாரணமாகவே தான் கேட்க நேர்ந்தது.

''என் சொந்த ஊருக்கு'' என்று சுருக்கமாக பதில் வந்தது.

'நம்' ஊர், 'என்' ஊர் ஆனதை உள்ளூர வலியுடன் உணர்ந்து, ''நான்.... நானும் அங்கேயே வருகிறேனே... என்று கேட்டபோது, அவளையும் மீறி மானசாவின் குரலில் லேசாகக் கெஞ்சல் கலந்திருந்தது.

ஒருகணம் தயங்கிவிட்டு, ''இப்போதைக்கு அங்கே நாம் இருவருமாய்த் தங்குவதற்கு வசதி கிடையாது... வீடு வாடகைக்கு விட்டிருப்பது தெரியுமல்லவா? அங்கே ஓட்டல் அறை.. அப்படி எல்லாம் கிடைக்காது. என்றான் சசிசேகரன்.

''பின்னே, நீங்கள் மட்டும் எங்கே தங்குவீர்களாம்?''

மடக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலே சட்டென மானசா கேட்டுவிட, அவனும் சுணக்கம் இல்லாமல், உடனே பதில் சொன்னான். ''ஊர் மணியகாரர் வீட்டில் பணம் கொடுத்தால் சாப்பாடு செய்து கொடுப்பார்கள்

அங்கேயே திண்ணையில் இரவு படுத்துக் கொள்ள என்னால் முடியும்''

''அதே சாப்பாட்டை நானும் சாப்பிட்டு, அதே திண்ணையில் நானும் படுத்துக் கொள்ள முடியும்தானே?''

பொறுமை இழந்த தலையசைப்புடன், ''நீ... என்று தொடங்கியவனை இடைமறித்து, ''ப்ளீஸ், நானும் வருகிறேனே? எனக்கும் கிராமத்தைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. ப்ளீஸ்....'' என்று வெளிப்படையாகவே கெஞ்சினாள் மானசா.

ஒரு சிறு நெடுமூச்சுடன், ''சரி வா. ஆனால் அங்கே பல வசதிகளை நீ எதிர்பார்க்க முடியாது. எனக்கும் வேறு வேலை இருக்கிறது'' என்று அங்குள்ள அசவுகரியங்களை எடுத்துச் சொன்னபோதும், மனைவியை உடனழைத்துச் செல்ல சசிசேகர் ஒத்துக் கொண்டான்.

நீர் வளமுள்ள எல்லா கிராமங்களையும் போலவே, சசிசேகரனின் சொந்த ஊரும் பசேலென்று தென்றலில் ஒய்யாரமாய் அசைந்தாடும் நெற்பயிரும், சலசலவென்ற சத்தத்தோடு தண்ணீர் ஓடும் சிறுவாய்க்காலும், பச்சைக் கிளிகள் பறந்து சென்று மறையும் தென்னந்தோப்புகளும், மாமரத்துக் குயிலோசையுமாக மானசாவின் உள்ளத்தைக் கவர்ந்தது.

எப்படி இவனால் இந்த ஊரில் இருந்த பெருமளவு நிலங்களை விற்று, வறண்ட அரபு தேசத்துக்குப் போய் தொழில் நடத்த முடிந்தது என்று அவளுக்கு கூடத் தோன்றியது.

அதுபற்றிக் கணவனிடம் மானசா குறிப்பிட்டபோது, ''இந்த ஒரு சமயத்தை மட்டும் வைத்து மதிப்பிடாதே. புயலும் மழையுமாக வந்து வாழைத் தோட்டங்கள் சரிந்து கிடப்பதைப் பார்த்தால் பத்து நாட்கள் வயிற்றுக்குள் உணவு

இறங்காது. மானம் பொய்த்துப் பயிர் வரண்டு கிடக்கும் போது நெஞ்சே எரியும்'' என்றான் கணவன்.

''ஆனால்... அதற்காக...

''அதற்காக எல்லோரும் வேளாண்மைத் தொழிலையே விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இதையும் வெற்றிகரமாக நடத்தி லட்சாதிபதிகளாக எத்தனையோ பேர் வாழத்தான் செய்கிறார்கள். என் தந்தை அப்படி வாழ்ந்தவர்தான். எனக்குத்தான், கஷ்டப்பட்டு உழுது பயிரிட்டு நட்டு, மழையையும் வெய்யிலையும் பார்த்தபடி காத்துக் கிடப்பதில் அவ்வளவாக மன ஈடுபாடு இல்லாது போயிற்று. அதைவிட, பல உதிரிப் பாகங்களைச் சேர்த்துப் பெரிய எந்திரத்தைச் செய்வதில் அதிகப் பிரியம் உண்டாயிற்று. அதுவும் ஒரு கலைதான், மானசா. சின்னக் சின்னக் கம்பிகளும் தகடுகளுமாகக் கிடப்பதை இணைத்து ஒரு முழு எந்திரமாகப் பார்க்கும் போது எப்படி இருக்கும் தெரியுமா? அந்தப் பிரம்மனுக்குச் சமமாகிவிட்ட பெருமை வரும்...

கண்கள் பளபளக்க சசிசேகரன் சொல்லிக் கொண்டே போக, அவன் முகத்தைப் பார்த்து மானசா பிரமித்தாள்.

இவனது தொழில் இவனுக்கு உயிர்மூச்சு மாதிரி! அவ்வளவு ஈடுபாடு இருந்ததால்தான் வெற்றியும் பெற்றிருக்கிறான்.

அந்த வெற்றியை மண்ணோடு மண்ணாக்கிய ஆதிக்க வெறியனைச் சபித்தபடி கணவனோடு கூட நடந்தாள் மானசா. அதன் பாதிப்பல்லவா இவனுக்கு இப்போதும் பெருமூச்சு வருகிறது.

பெருமளவுப் பயணம் பஸ்சில் முடிந்து விட்டபிறகு, முக்கியச் சாலையிலிருந்து வயல் வரப்பினூடே குறுக்கு வழியில் நடந்து, சசிசேகரனின் கிராமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர் கணவனும் மனைவியும்.

அவ்வளவு தொழில் பெருமை பேசியபோதும், ''வ யல் அன்னலட்சுமி, மானசா. செருப்புப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது. கழற்றிக் கையில் எடுத்துக் கொள்'' என்று கிராமத்து வழக்கத்தைக் காரணத்தோடு கூறிக் கடைப்பிடிக் கவும் வைத்தான்; அவனும் கடைப்பிடித்தான்.

சசிசேகரன் உள்ளூர எதிர்பார்த்திருந்தது போலவே, அந்தப் பூம்பொழில் கிராமத்து மணியக்காரர் வீட்டிலேயே கணவன் மனைவி இருவருக்கும் உணவோடு, தங்குவதற் குத் தேவையான இடமும் கிடைத்தது.

பகலெல்லாம், ஊர்க்கோவிலையும் அதன் சுற்று வட் டாரத்தையும் சுற்றிப் பார்க்கும்படி கூறி, மானசாவைக் கோவில் அருகே விட்டுவிட்டு, சசிசேகரன் தன் வேலை யைப் பார்க்கக் கிளம்பினான். மதிய உணவை, மணியக்கா ரர் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு மீண்டும் அவள் விருப்பம்போல வெளியிலோ; வீட்டிலோ பொழுதைக் கழிக்கும்படி கூறியவனைச் சற்றுத் திகைப்புடன் நோக்கி, ''உங்களுக்கு இங்கே நிறைய வேலை இருக்கும் என்று தெரியாது. நான் உடன் வந்தது தொல்லையாக இருக்கி றதோ?'' என்று மன்னிப்புக் கோரும் குரலில் மானசா வினவினாள்.

''அப்படி ஒன்றும் இல்லை. சொல்லப் போனால் செய்ய வந்த வேலையை முழுமையாகச் செய்து முடிக்க உந்துபவளே நீதான்'' என்று கூறி, குரலின் வறட்சியை மறைக்க உதட்டால் மட்டுமாய் முறுவலித்தவன், ''எங்கே யும் வழிதவறி விட இந்தச் சிறு ஊரில் வாய்ப்பில்லை. அப்படியே தவறினாலும், என் அப்பாவின் பெயரைச் சொல்லி, அவருடைய மருமகள்; மணியக்காரர் வீட்டிற்குப் போகவேண்டும் என்று சொன்னால் மரியாதையுடன் கொண்டு வந்து விடுவார்கள்... நான் வருகிறேன்'' என்று கிளம்பிச் சென்று விட்டான்.

செய்யப் போகும் வேலை அப்படி ஒன்றும் சசிசேகரனுக்குப் பிரியமானது அல்ல என்பதை அவளால் இலகுவாக ஊகிக்க முடிந்தது. 'அப்படி மனமற்று ஒரு காரியம் செய்ய நான் எப்படிக் காரணமாவேன்' என்று யோசித்தவளுக்கு, அது என்ன வேலை என்று அறிய நேர்ந்தபோது மிகவும் வேதனை உண்டாயிற்று.

அம்மன் கோயில் அது. உள்ளே சென்று அன்னையைத் தரிசித்து விட்டு, அந்தச் சிறு கோயிலிலும் தென்பட்ட கலைநயத்தை வியந்துவிட்டு, அவளுக்குப் புதிதான கிராமக் காட்சிகளையும் சுவாரசியத்தோடு கவனித்தவாறு இங்கும் அங்குமாகச் சுற்றியபடி மானசா பொழுதைப் போக்கினாள்.

இருள் கவியத் தொடங்கியபோது திரும்பி வந்த சசிசேகரன், இரவில் அந்த ஊரில் சினிமா பார்க்க அவளை அழைத்துச் சென்றான்.

ஐந்தாறு இடைவேளைகளுடன் ஓலைக் கொட்டாயில் காட்டப்பட்ட திரைப்படத்தில் கூட கிராமிய மணம் கமழ்ந்ததாக மானசா கூறவும், சில நாட்களுக்குப் பிறகு சசிசேகரன் வாய்விட்டுச் சிரித்தான். ஏனெனில் ஹெலிகாப்டரில் சண்டை, கார் சேசிங் என்று அது ஓர் 'அல்ட்ரா மாடர்ன்' படம்!

மறுநாள், 'உற்வினர் ஒருவர் வீட்டுக்குச் சாப்பிடப் போக வேண்டும்; ஒரு மணி அளவில் தயாராக இரு' என்று கூறிப் போனவன் அதற்கேற்றபடி திரும்பிவந்து, உடம்பு கழுவித் தயாராகி, அவளை அழைத்துச் சென்றான்.

''பத்து நிமிட நடைதான்'' என்று நடந்தே கூட்டிச் சென்றவன், வழியில் ஒரு பெட்டிக்கடையில் இரண்டு பழங்களை வாங்கி, ஒன்றை அவளிடம் கொடுத்து உண்ணச் சொல்லி விட்டு மற்றதன் தோலை உரித்தான்.

கைக்கடிகாரத்தை நீட்டிக் காட்டியவளிடம், ''கிராமத்து விருந்து எல்லாம் வேறுவிதம், மானசா. போன உடனே சாப்பிட உட்கார வைப்பார்கள் என்று எண்ணாதே. அது பாட்டில் இரண்டு மூன்று என்று மணியாகும். அதுவும் பெண்கள் பந்தி எப்போது தொடங்குமோ தெரியாது'' என்று சசிசேகரன் கூறவும், பேசாமல் அவளும் பழத்தைத் தின்று முடித்தாள்.

பட்டணத்துத் தம்பிக்கும், அவன் மனைவிக்கும் ஏகப் பட்ட வரவேற்பு அங்கே. உற்றார், உறவினர் பற்றி ஏகப் பட்ட குசல விசாரிப்புகள்.

அதுமுடிந்து, ஆண்கள் பந்தி முடிந்து — சசிசேகரன், அவன் சித்தப்பா என்று அழைத்த அந்த வீட்டுப் பெரியவர், மணியக்காரர் மூவரும் உணவருந்தி முடித்து, மானசாவும் வீட்டுக்கார அம்மாவும் சாப்பிட உட்கார்ந்த போது மணி இரண்டரை தாண்டிவிட்டது.

உணவு முடியவும், மணியக்காரரை டவுனில் கொண்டு விட்டு வருவதற்காக அங்கிருந்த மோட்டார் சைக்கினில் சசிசேகரன் கிளம்பிச் சென்றுவிட, வீட்டுப் பெரியவர் மானசாவை அழைத்தார்.

அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''அந்த மகாலட்சுமி மாதிரியே லட்சணமாக இருக்கிறாய். வீட்டுக்கு வந்ததும் வராததுமாக எல்லாவற்றையும் விற்கவேண்டும் என்று வந்து நிற்கிறானே, என்னம்மா இது?'' என்று அவர் கேட்கவும் மானசா விழித்தாள்.

அவள் விழிப்பதைப் பார்த்துவிட்டு, அவரே தொடர்ந்து பேசினார். ''ஏன், சசி உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா? மிச்சமுள்ள நிலம், தோப்பு, இந்த வீடு....

''இந்த வீடா?'' என்றாள் மானசா திகைப்புற்று. இந்த வீடு சசிசேகரனின் வீடா? ஒரு வார்த்தை அவளிடம்

மூச்சுவிடவில்லையே என்று எண்ணியபோது உள்ளூர மிகவும் கஷ்டமாக இருந்தது அவளுக்கு.

''ஆமாம். இந்த வீடு வழி வழி அவன் குடும்பத்தினது தான். அவனுடைய தாத்தா, அப்பா வாழ்ந்த வீடு. சசி பிறந்தது கூட இங்கேதான். நான் அவனுக்கு ஒன்றுவிட்ட சித்தப்பா ஆகவேண்டும். சின்ன வயதில் எல்லாவற்றையும் தொலைத்து விட்டுப் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தேன். கொஞ்சம் காசு சேர்த்துக் கொண்டு இங்கேயே இனிக் காலத்தைக் கழிக்கலாம் என்று திரும்பி வந்தபோது எங்கள் அண்ணார் இறந்த புதிது, கட்டுக் குத்தகை, வாடகை மாதிரி ஒரு தொகை தந்துவிட்டு இங்கேயே தங்கிக் கொள்வதாகக் கேட்டபோது, சசி சரி என்றான். அவன் தொழில் வெளிதேசத்தில் இருந்ததால் அவனுக்கும் இதைப் பார்க்கச் சிரமம் தானே. இருவருக்கும் இந்த ஏற்பாடு வசதியாகிப் போயிற்று. அவன் பணத்தை எப்போதுமே கரெக்டாக பாங்கில் போட்டு விடுவேன்.

''உன் கல்யாண சமயம் வீட்டுக்காரிக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லாததால் வர முடியவில்லை. பெண் பெரிய இடம் என்றார்கள். சரி, இடையில் வந்த சரிவு நீங்கி நன்றாயிருப்பான் என்று நினைத்தால் இப்படி வந்து ஒட்டு மொத்தமாய் விற்கிறேன் என்று நிற்கிறானே?

''உன்னை இங்கே கூட்டி வராமல் மணியக்காரர் வீட்டில் தங்கியதே எனக்குக் கொஞ்சம் யோசனைதான். சரி... வாடகை வாங்குவதால் அன்னியமாய் உணருகிறான் போல என்று பார்த்தால், அவன் ஒரேயடியாய் வெட்டித் தறித்துக் கொள்ளும் முடிவோடு அல்லவா வந்திருக்கிறான்!

''பாரம்மா, எனக்குப் பிள்ளைகுட்டி கிடையாது. எனக்குப் பிறகு, இது சசிக்கேதான் வந்து சேரும். ஆனால் பணவிஷயம் பார், இடையிலே இரண்டு நரி, நாய் வந்து பிடுங்க முயற்சிக்காமல் இராது. அத்தோடு, விலை பேசி

விற்றுவிட்டால் உங்களுக்கும் இதன்மேல் மனம் விட்டுப் போனாலும் போகக்கூடும். அதனால் 'ஒத்தியாய்ப் பத்திரம் எழுதிப் பணம் வாங்கிக் கொண்டு போ. பிறகு வட்டியோடு தந்துவிட்டுத் திருப்பிக் கொள்' என்று வகை செய்து பணம் கொடுத்தேன். வட்டி வளரும் என்கிறபோது சீக்கிரம் திருப்புகிற கருத்தும் வரும் அல்லவா?

''ஒரு விஷயம் கவனத்தில் வையம்மா. பூர்வீக நிலமும் வீடும் பெற்ற தாய் தகப்பன் மாதிரி. அனுபவத்தில் சொல்கிறேன். அந்த மாதிரி விற்பது திரும்பக் கிடைப்பது இல்லை. அதனால் இதை விற்க வேண்டாம் என்று உன் கணவனுக்கு எடுத்துச் சொல்லம்மா'' என்று முடித்தார் அவர்.

பெரிதாகத் தலையாட்டி வைத்தவளுக்கு உள்ளூர மனம் குழம்பியது. ஏன் இப்படி?

இப்போதுதானே நாற்பது லட்சத்துக்குச் 'செக்' வாங்கினான்? அதற்குள் என்ன பண நெருக்கடி? ஒருவேளை, விலைவாசி ஏற்றத்தால் அவன் கணக்கிட்டதற்கும் அதிகமாகப் பணம் தேவைப்படுகிறதா? அதை அந்த நகைகள் மேலேயே இன்னும் கொஞ்சம் வாங்கி இருக்கலாமே!

சென்னைக்குத் திரும்பி வரும்போது இதே யோசனையை மானசா கணவனிடம் தெரிவித்தபோது அவன் வெளியே வெறித்தபடி சற்று நேரம் அசையால் இருந்தான்.

அவள் மீண்டும் பேச முயலவும், திரும்பி அவளை நேராக நோக்கி, ''பண விவகாரம் நாம் இருவரும் இனிப் பேசாமல் இருப்பது நல்லது'' என்றான் முடிவான குரலில்.

முகத்தில் அறை விழுந்தது போல உணர்ந்தாள் மானசா.



மாற்றமோ ஏற்றமோ இல்லாத குரலில் கூறியபோதும், ஒரு மனைவியாக அவனது பொருளாதார நிலையைப் பற்றிப் பேச மானசாவுக்கு உரிமை இல்லை என்பதைத் தானே சசிசேகரன் எடுத்துரைத்தான்? அதாவது, அவளை முழுக்க முழுக்க அன்னியமாய் விலக்கி நிறுத்தி, என் சொத்து பத்து பற்றிப் பேச நீ யாரடி என்று கேளாமல் கேட்டான்.

அவமானத்தால் முகம் கன்றிச் சிவந்தபோதும், மான சாவுக்கு ஆத்திரமும் வந்தது. அவளது நகைகளுக்காகவே அவளை மணந்து, அந்த நகைகளை ஈடுவைத்துப் பணத் தையும் வாங்கி அதைப் பயன்படுத்திக் கொண்டும் இருப்ப வன் எப்படி இப்படிப் பேசலாம்?

மனதில் நினைத்ததைச் சொல்லி அவனோடு காச்மூச் என்று சண்டை போடலாமா என்றுகூட ஒருதரம் யோசித் தாள். ஆனால் அவன் அந்த மாதிரி அவளை அதட்டிப் பேசி வாய்மூடச் சொல்லவில்லையே! தவிரவும், ஒரு வேளை, அவர்கள் தனிமையில் இருந்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பாளோ என்னவோ? ஆனால் சக பிரயாணிகள் அறியக் கணவனிடம் தகராறு செய்ய அவமா னமாக வேறு அவள் உணர்ந்ததால் அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

ஆனால் ஒரேயடியாகச் சும்மா விடவும் மனமின்றி, ''உங்கள் சித்தப்பாதான் இதுபற்றி உங்களிடம் சொல்லச் சொன்னார்...'' என்று எரிச்சலுடன் முணுமுணுத்தாள்.

மனைவியைத் திரும்பிப் பாராமலே, ''நம் நிலைமை நமக்குத்தான் தெரியும். நிலைமைக்கு ஏற்பச் சரியான முடிவும், நம்மால்தான் எடுக்க முடியும். அதை விட்டு,

அடுத்தவர்கள் யோசனையை எல்லாம் கேட்டுப் பின்பற்றிக் கொண்டிருந்தால் அப்புறம், அது, பொதிக் கழுதையைத் தூக்கிச் சுமந்து சென்ற அப்பா மகன் கதை போலப் படு முட்டாள்தனமான செயலாக முடியும்'' என்று தணிவான குரலில், பழைய மாதிரியே சசிசேகரனும் பேசினான்.

அந்தக் கதை அவளுக்கும் தெரியும். கழுதை மேல் அப்பா ஏறி, மகன் கூட நடந்து சென்றபோது, பார்த்த சிலர், 'என்ன கொடுமைக்கார மனிதன். சின்னப்பையனைக் கால் நோக நடக்க விட்டு விட்டு, இவன் சொகுசாகப் பயணம் செய்கிறானே' என்று சொல்லக் கேட்டு, தந்தை கழுதை மேலிருந்து இறங்கி, மகனை ஏற்றித் தான் நடந்து போனா னாம். இப்போது பார்த்த சிலர், 'வயதான தகப்பனை நடக்க வைத்துவிட்டு, இந்த வயதுப் பையன் சுகமாக கழுதைச் சவாரி செய்கிறானே! தந்தையையும் கூட ஏற்றிக் கொள்ளக் கூடாதோ!' என்று கூறினார்களாம். அதுவும் சரிதான் என்று இருவருமே அந்தக் கழுதை மேல் ஏறிப் போனார்களாம். இதைப் பார்த்த சில பேர், 'இரண்டு தடியர்களையும் சுமக்க முடியாமல் பாவம், இந்த நோஞ்சான் கழுதை தள்ளாடுகி றது. இருவரும் திடகாத்திரர்கள்தானே? இருவருமாய் சேர்ந்து கழுதையைச் சுமந்து செல்வதற்கென்ன?' என்று பேசிக் கொண்டு போனார்களாம். தகப்பனும் மகனும் சேர்ந்து யோசித்துவிட்டு, எதற்கு வம்பு என்று, இருவரு மாய்க் கழுதையைச் சுமந்து கொண்டு போனார்களாம்!

மடத்தனமான வேலைதான். ஆனால், அவள் பேச வந்ததை இதற்கு எப்படி ஒப்பிடலாம்?

''பூர்வீக நிலம், வீடு எல்லாம் பெற்ற தாய் தநதை மாதிரி. அதனால்தான்....'' என்றவளை இடைநிறுத்தி சசிசே கரன் பேசினான். ''என்னது! நிலமும் வீடும் அம்மா அப்பா மாதிரியா? ஒன்றுமே கொடுக்கா விட்டாலும் பெற்றோர் பிரியத்தை அள்ளித் தருவார்கள். ஒரு பத்து நாள் சோம்பியி ருந்து பார், பயிரில் பூச்சியும் களையும் பெருகிப் பயிர்

நலிந்து நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். இரண்டு ஆண்டு பராமரிக்காமல் பூட்டி வைத்தால், கரையானும் பூச்சியுமாக வீடே சிதிலமாகிவிடும். இந்த ஜடப் பொருட்களை நம் பெற்றோரோடு ஒப்பிடுவதா? அடுத்தவர் என்ன சொன்னாலும் அதை அப்படியே ஏற்பதா? யோசிப்பதில்லையா?''

அது அவளுக்குச் சசிசேகரன் கொடுத்த குட்டு, இது மட்டுமல்ல, முதலிலும் அவளைத்தான் குட்டியிருக்கிறான். அவள் சற்றும் யோசியாமல் சந்தியாவின் பேச்சைக் கேட்டுப் படுமுட்டாள்தனமாக நடந்து கொள்கிறாளாம்!

செய்வதை எல்லாம் செய்துவிட்டு, என்ன மாதிரிக் குறிப்புக் காட்டுகிறான்? அண்ணியின் பேச்சை நம்பாமல் இவன் சொல்வதே வேதம் என்று அப்படியே அவன் அடிபற்றி நடந்து கொண்டிருந்தால் 'நீ புத்திசா...லி!' என்று மானசாவை மெச்சிக் கொள்வான் போல!

வேறொன்று தோன்றவும், ''தன் வீடு, தன் ஊர், தன் தேசம் என்ற நேசம் இல்லாமல் யாராலும் இருக்க முடியாது; இதெல்லாம் வெறும் ஜடப்பொருட்கள்தானே என்று அலட்சியப்படுத்தவும் முடியாது. உங்களாலும்தான் அப்படி ஓர் அலட்சியம். உங்களிடம் இருந்திருந்தால், இந்த வீடு, வீட்டடி நிலங்களைக் கூட நீங்கள் முன்பே விற்றிருப்பீர்கள். இப்போது சும்மாவேனும் வெறும் வீம்புக்காக என்னிடம் இப்படிப் பேசுகிறீர்களே தவிர, உங்கள் மனதிலும் அந்தப் பாசம் இல்லாமல் போகவில்லை'' என்று நிச்சயமான குரலில் இயம்பி மானசா கணவனை மடக்கினாள்.

மறுக்க மாட்டாதவன் போலச் சில கணங்கள் சசிசேகரன் மவுனமாக இருந்தான். பிறகு ''நீ சொல்வதும் ஓரளவுக்குச் சரிதான் மானசா. ஆனால், தலையை அடகு வைத்தாவது காப்பாற்றியாக வேண்டும் என்கிற அளவுக்கு எனக்குச் சொந்த மண் மீது பாசவெறி பொங்கியதில்லை. அவ்வளவுதான்'' என்று முடித்தான்.

''ஆனால் பாசம் உண்டுதான். அப்படித்தானே?'' என்றாள் மானசா விடாமல்.

''ஆமாம்!'' என்றான் அவன் சுருக்கமாக.

''பின் ஏன் விற்கவேண்டும்? அதைவிட.... என்ற மனைவியின் பேச்சில் குறுக்கிட்டு, ''மானசா, ப்ளீஸ்...'' என்றான் சசிசேகரன்.

அவள் கேள்வியாய் நோக்கவும், '' 'சென்ஸ் ஆஃப் இம்பார்ட்டன்ஸ்' என்பார்கள். எது எதற்கு எந்தெந்த அளவு மதிப்புக் கொடுப்பது என்பது. இந்தப் பூர்வீக மண்ணின் மேல் உள்ள பற்றைக் காட்டிலும் முக்கியமான தாய் எத்தனையோ இருக்கின்றன. அவற்றோடு ஒப்பிடும் போது இந்தப் பற்று மிகவும் மதிப்பற்றுப் போய்விடுகிறது'' என்றான் அவன் வறண்ட குரலில்.

''அப்படி எந்த முக்கியமான காரியத்துக்காக இப் போது இந்த விற்பனை நடவடிக்கை?'' என்று மீண்டும் விடாமல் துருவினாள் மானசா. மனதுக்குப் பிரியமற்ற ஒரு காரியத்தை விருப்பமற்றேனும் இவன் ஏன் செய்ய வேண் டும் என்று ஒரே குறுகுறுப்பு அவளுக்கு.

''எதுவாயிருந்தாலும் உனக்குச் சொல்லத்தான் போகி றேன். ஆனால் இப்போதல்ல.'' என்று பூடகமாக உரைத்த வன், கால்களைச் சற்றுமுன்னே நீட்டிச் சாய்ந்த வாக்கில் அமர்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டான்.

பேச்சு முடிந்தது என்று சொல்லாமல் சொல்கிறானாக் கும்! போகட்டும். சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்துதான் தீரும்! விஷயம் தானாகவே வெளியே வரட்டும் என்று அவளும் அவனைப் போலவே சாய்ந்து அமர்ந்து, அலட்சி யம் போலக் காட்டிக் கொண்டாள்.

ஆனால், இந்த அலட்சிய பாவனை எல்லாம் நாலே நாட்களில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

சென்னை திரும்பிய பிறகு தொடர்ந்த நாலு நாட்களும் சசிசேகரன் தன் வேலையில் படு 'பிஸி'யாக இருந்தான். காலையில் வீட்டை விட்டுச் சென்றால் இரவுதான் வீடு திரும்பினான்.

அவன் வேலையில்தான் மும்முரமாக ஈடுபட்டிருந்தானா, அல்லது மனைவியான அவளிடம் பேசப் பிரிய மற்று வெளியே சுற்றுகிறானா என்று அவளுக்கு உள்ளூர ஐயம்தான்.

கணவனிடமே அதுபற்றிக் கேட்கலாம்தான். ஆனால் அவளது கேள்விக்கு வரும் பதில் உண்மையானதாக இருக்கும் என்றும் தான் அவளுக்கு என்ன நிச்சயம்?

கேட்டு, அதுவேறு இன்னுமொரு குழப்பத்தை இழுத்துக் கொள்வானேன் என்று அவளும் எதையும் கண்டு கொள்ளாமலே ஒதுங்கிப் போனாள்.

பகல் முழுவதும் குட்டி போட்ட பூனை மாதிரி வளைய வருவாள். அது அலுக்கும்போது டி.வி. முன் உட்கார்ந்து எந்த நிகழ்ச்சியிலாவது மனதை ஈடுபடுத்த முயற்சிப்பாள். பாதியிலேயே அது மறைந்து, நம் வாழ்வு ஏன் இப்படியாகி விட்டது? ஒரு பதினைந்து நாட்கள் அவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தோமே என்று மனம் மறுகத் தொடங்கி விடும். அதை மறக்க மீண்டும் நடப்பாள்.

இப்படியே மானசா பொழுதை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்த போது, நால்ர்ம் நாள் காலையில் வெளியே செல்லக் கிளம்பும்போது சசிசேகரன் மானசாவிடம் அவர்கள் இருந்த வீட்டைப் பற்றி சில அபிப்பிராயம் கேட்டான்.

வீடு பிடித்திருக்கிறதா, பாதுகாப்பாகத் தோன்றுகிறதா என்று அவன் விசாரித்தான் காரணம் புரியாமல் ''ம்... என்று வெறுமனே தலையாட்டினாள் அவள்.

தொடர்ந்து, ''ஆனால் ஏன் கேட்கிறீர்கள்?'' என்று அவள் வினவியதைக் கேட்க அவன் அங்கே நின்று கொண்டிருக்கவில்லை.

அன்று மாலை திரும்பி வரும்போது, டாக்சியில் வந்து இறங்கிய சசிசேகரன் கையில் ஒரு பெட்டியையும் கொண்டு வந்தான்.

இரவு உணவு முடிந்த பின் கதவுகளை எல்லாம் பூட்டியானபின், கீழ் ஜன்னல் கதவுகளை மூடித் திரைகளை இழுத்து விட்டு விட்டு அவளிடம் வந்தான்.

''எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஒத்துப் பார்த்துக் கொள்'' என்று கூறி முன்பு வக்கீல் தந்த லிஸ்டைக் கொடுத்து விட்டு, அவன் பெட்டியைத் திறந்து காட்டவும் மானசா அதிர்ந்து போய் அப்படியே நின்று விட்டாள்.

காரணம், அந்தப் பெட்டியில் இருந்தவை அவளது வைர வைடூர்ய ரத்தினங்கள் பதித்த நகைகள். அவளது நல்வாழ்வுக்கென அவளுடைய தாயார் பத்திரப்படுத்தி அளித்தவை. ஒரு வகையில் அவளது வாழ்வை அழித்த வைகளுமான அந்த நகைகள் மொத்தத்தையும் கண்ணெதிரே காணவும் சற்று நேரம் அவளால் ஒன்றுமே சொல்லக் முடவில்லை.

ஒருவாறு சுதாரித்து ''இந்த நகைகள் எப்படி...'' என்று அவள் ஏதோ தொடங்கியபோது, ''உஷ்'' என்று அவளைத் தடுத்தான் அவளுடைய கணவன்.

''இந்தப் பகுதி பாதுகாப்பானதுதான் என்றாலும், எதற்கும் மெல்லவே பேசுவது நல்லது'' என்று எச்சரிக்கை செய்தான்.

என்ன நல்லது? மண்ணாங்கட்டி! என்ன மாதிரி நிலைமையில் உப்புப் பெறாத விஷயத்தைப் போய்ச் சொல்லிக் கொண்டு என்று மனம் பொருமினாலும் கணவ

னின் பேச்சுக்கிணங்கி தாழ்ந்த குரலிலேயே ''இவை எப்படி இங்கே வந்தன?'' என்று வினவினாள் மானசா.

''பணம் கொடுத்துத் திருப்பி வந்தேன்,'' என்றான் சசிசேகரன் அமைதியாக.

''ச்சு... பின்னே பணம் கொடுக்காமல் எப்படித் திருப்ப முடியுமாம்? ஆனால் இதைத் திருப்பிவிட்டால், உங்கள் தொழிலுக்குப் பணம்? அதற்கு என்ன செய்வீர்கள்?'' என்று கேட்கும் போதே அவளுக்குத் தொண்டை அடைத்தது.

சொல்லத்தான் போகிறேன் என்றானே, இப்போது அவன் சொல்லாமலே அவளுக்கு மளமளவென்று எல்லாம் புரிந்து போயிற்று. அவன் வாங்கிய நாற்பது லட்சத்தில் தொழிலுக்காக அது தொடர்பான தொடக்க வேலைகளுக் காகக் கொஞ்சம் செலவு செய்திருப்பான்; கூடவே கடன் வாங்கிய மறுநாளே திருப்பிக் கொடுத்தாலும் கூட ஒருமாத வட்டி கொடுத்தாக வேண்டும். அதற்குரிய பணம், ஏற்க னவே செலவு செய்தது என்று இவைகளுக்காகவே ஊர் நிலத்தை விற்க முயன்றிருக்கிறான்! அவ்வளவு ரோஷமா? ஆனால் தொழிலைப் பற்றி அவ்வளவு ஆர்வத்தோடு பேசினானே! பணமில்லாமல் எப்படித் தொழில் நடத்து வான்?

ஆனால், ''எல்லோருமே தொழில் செய்துதான் வாழ வேண்டும் என்று இல்லை, மானசா'' என்றான் அவன், ''எல்லோரும் பல்லக்கில் ஏறிக் கொண்டால் சுமப்பவர் யார்? தொழில் நடத்துபவர்களிடம் வேலை பார்த்தும் பிழைக்கலாம். என்க்குத் துபாயில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து விட்டேன். ஏற்கனவே அந்தப் பகுதியில் வசித்த வன் என்பதால் உடனே வேலை கிடைத்து விட்டது. இன்னும் பத்து நாட்களில் நான் கிளம்ப வேண்டும்''

நான் கிளம்ப வேண்டுமா? அவன் மட்டுமா?

சற்று நேரம் மானசாவின் கண்முன் பூச்சி பறந்தது. ஒருவாறு பேசமுடிந்ததும், ''நா... நான்?!'' என்று திக்கித்தி ணறினாள்.

''ஏன்? உனக்கு என்ன?'' என்றான் அவன் உணர்ச்சி யேதும் இல்லாத குரலில்.

உனக்கு என்னவா! அவ்வளவு உதாசீனமா? தொட் டுத் தாலிகட்டி விட்டு பொறுப்பில்லாமல் இதென்ன பேச்சு?

''என்னவோ நீங்கள் மட்டும் கிளம்பப் போவதுபோ லப் பேசுகிறீர்கள், என் வழி என்ன? எங்கே எப்படி இருப்பது என்று ஒன்றுமே பார்க்கத் தேவை இல்லையா?'' என்று படபடத்தாள் அவள்.

''தொட்டுத் தாலி கட்டியவனுக்கு அந்தக் கடமை இல்லாமல் எப்படிப் போகும்? மணிகண்டனுடைய பெற் றோர் இனி இந்தியா திரும்பப் போவது இல்லையாம். இந்த வீடு பிடித்தமாக, பாதுகாப்பாக இருப்பதாக நீயே சொல்லி யிருக்கிறாய். அதனால் நீ இங்கேயே இருக்கலாம். செலவுக் குப் பணம் அனுப்புவேன். மாதம் ஒரு பதினைந்து ஆயி ரம்... எப்படியும் இருப்பதிற்குள் உன் செலவை முடித்துக் கொள்ள முடியும் அல்லவா?''

''நான் இங்கே தனியாக இருக்கமாட்டேன்!'' என்றாள் மானசா ஆத்திரத்தோடு.

''உன் அண்ணியோடு இருப்பது உனக்குப் பிடிக்காதே என்று தான் இந்த ஏற்பாடு செய்தேன். இல்லை, அண்ணன் வீட்டிலேயே இருப்பது என்றால் ''உன் விருப்பம்...'' என்றான் அவன் உணர்ச்சி துடைத்த அதே குரலிலேயே.

ஆனால், ''நான் அங்கே இருக்கமாட்டேன்'' என்று கிரீச்சிட்டாள் மனைவி.

''இரண்டில் ஏதோ ஒன்று, நீயே முடிவு செய்.'' என்றான் சசிசேகரன் சலனமே இல்லாமல்.

''நான் உங்களோடு வருகிறேன்... என்றாள் மானசா விம்மும் குரலில்.

''அது சாத்தியப்படாது.'' என்றான் அவள் கணவன். ''அங்கே என் சம்பளம் மாதம் முப்பதாயிரம் ரூபாய்தான். அதில் குடும்பத்தை அழைத்து வர அனுமதி கிடையாது...

குறுக்கிட்டு ''அப்படியானால் போகாதீர்கள்'' என்றாள் மானசா அவசரமாக.

அவளை நேராக நோக்கி லேசாகத் தலையசைத்தான் சசிசேகரன். ''சாப்பிட வேண்டும் அல்லவா? இப்போது மனைவியையும் பராமரிக்க வேண்டும். பணம் இல்லாமல் முடியாது மானசா. அதனால் என் விஷயம் இனி மாற்றுவ தற்கில்லை. நீ எங்கே தங்குவது உனக்கு வசதியாக இருக் கும் என்பதை இரவு முழுவதும் யோசித்து முடிவு செய். குட்நைட்'' என்றவன் மேலே வாதமிட இடம் கொடாமல் அந்த வீட்டில் இவன் மட்டுமாய்ப் பயன்படுத்தும் அறைக் குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

மானசா விக்கித்து நின்றாள்.

21

சசிசேகரன் உள்ளே சென்று சாத்திக் கொண்ட கதவையே பார்த்தபடி, செயலற்று நின்ற மானசா, வெகு வாக நிலைகுலைந்து போனாள்.

அவளைப் பிரிந்து போகப் போவதாகச் சொல்லிவிட் டானே!

எப்படிச் சொன்னான்? எப்...படி அவனால் சொல்ல முடிந்தது?

தவியாய்த் தவித்தவளுக்கு மேற்காசிய நாடுகளில் பணிபுரியச் செல்வோர் ஓர் ஆண்டுக்கு ஒரு முறைதான் தாயகம் திரும்ப முடியும் என்பது நினைவுவர மேலும் துடித்துப் போனாள்.

அவ்வளவு காலம், சசிசேகரனைப் பிரிந்து அவளால் உயிர் வாழ இயலுமா?

'செல்லாமை உண்டேடல் எனக்கு உரை, மற்று நின்
வல் வரவு வாழ்வார்க்கு உரை'

என்ற குறள் நினைவு வந்தது.

வள்ளுவர் மேல் தனி மதிப்பும் வந்தது. எப்படி உணர்ந்து பாடியிருக்கிறார்!

இப்போதே கைகால் சோர்ந்து, வயிறு காந்தி நெஞ்சுக் கூடு காலியாகி விட்டாற்போல என்னென்னவோ செய்கி றதே! இந்த வேதனை ஓர் ஆண்டுகாலம் தாங்க முடியுமா? நிச்சயமாக அது முடிகிற காரியம் அல்ல.

சசிசேகரன் தனித்து வெளிநாடு செல்வதைத் தடுத்தே ஆகவேண்டும்!

ஆனால் எப்படி? எப்படி அவனைத் தடை செய்வது?

ஓடிப் போய் கதவைத் தட்டித் திறக்கச் செய்து, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு 'உங்களைப் பிரிந்து இங்கே இருக்கமாட்டேன்' என்று 'ஓ'வென்று அழுதால் என்ன?

காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டால் ஒத்துக் கொண்டு இங்கேயே தங்கிவிட மாட்டானா?

ஊகூம். மாட்டான். வினாடிக்கு வினாடி நிறம் மாறுகின்ற இந்தப் பெண், நாளையே 'என் பணம்' என்று குத்திக் குதறுவாள் என்று தான் நினைப்பான்; நினைத்து நிச்சயமாக மறுத்து விடுவான்.

அவளும்தான், அவன் சொன்னது ஒன்றைக்கூட நம் பாமல் என்ன பேச்சு பேசிவிட்டாள்! நம்ப வேண்டியவனை நம்பாமல், நம்பக்கூடாத அண்ணியை நம்பி. பாதகீ! காதகீ!... அண்ணி, நீ என்ன கொடும்பாவம் செய்து விட்டாய்! அவ்வளவு வெறுப்பா? அவ்வளவு ஆங்காரமா?

கடைசியில் சசிசேகரனின் பேச்சுதானே மெய்போலி ருக்கிறது? மெய் போலிருக்கிறது என்ன? மெய்யேதான்.

'மனைவி நகையைப் பயன்படுத்திப் பணம் வாங்கி யது மனம் ஒப்பாததால் அந்தப் பேச்சு வாயில் இலகுவாய் வரவில்லை' என்றானே! அண்ணனைக் கேட்டுப் பார் என்று வேண்டினானே! முரட்டடியடியாய் மறுத்தானே!

ஏற்கனவே இருந்த உறுத்தலோடு அவள் பேச்சும் சேர்ந்து கொள்ள எப்படி நொந்தானோ? ரோஷக்காரன் வேறு! எல்லாம் சேர்ந்து கொள்ள, ஆண்டுக் கணக்கில் திட்டமிட்ட தொழிலையே தூக்கி எறிந்து விட்டு, அவளது நகைகளைத் திருப்பி அவளிடமே கொடுத்து விட்டானே!

தொழிலைப் பற்றிப் பேசும்போது கணவன் முகம் மலர்ந்து விகசித்தவிதம் நினைவு வந்தது.

மனைவியிடம் கேவலப்பட்டுக் கொண்டு, அப்படி ஒரு தொழிலைச் செய்து வெற்றி பெறுவதை விட, எவ்வ ளவு பிடித்தமான தொழிலானாலும் அதை விட்டு அடுத்தவ ரிடம் கைகட்டிப் பிழைப்பது மேல் என்று முடிவுக்கு வந்து விட்டானே! கோடிக் கணக்கிலான லாபத்தை விடவும், மனைவிமுன் தன் மதிப்போடு நிற்பது மேல் என்ற கருத்தில் செயல்படுகிறவனை என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்! இந்தக் காலத்திலும் வருமானத்தை விடத் தன்மானத்தைப் பெரிதென்று கருதுகிற ஒருவனைப்போய்... கடவுளே!

லேசில் தன் துன்பத்தை வெளிக்காட்டுகிறவன் அல்ல சசிசேகரன். ஆனால், அன்று ஊருக்குச் செல்லும்போது தொழிலைப் பற்றிப் பேசிய பின் பெருமூச்சுவிட்டான்!

வெற்றிகரமாக நடந்த தொழில் அழிந்தது பற்றி வருந்தினான் என்று எண்ணினாளே, இனி அப்படி ஒரு தொழில் செய்யும் வாய்ப்பே இல்லை என்று அல்லவோ அவன் ஏங்கிப் பெருமூச்சு விட்டிருக்கிறான்!

ஊரில், வந்த வேலையைச் செய்ய உந்துபவளே அவள்தான் என்று சசிசேகரன் சொன்னது நினைவு வந்தது. மெய்தானே, அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவளது கொடிய பேச்சு நினைவு வந்தது, அத்தனையையும் விற்றுத் தொலைத்தேனும் அவள் பணத்தைத் திருப்பி விடுமாறு அவனை உந்தித் தள்ளித்தான் இருக்கும்!

கடைசியாக, என்ன மாதிரி ஒரு பைத்தியக்காரத்தனமான ஆலோசனை சொன்னான்! அவளது நகைகளைத் திருப்பித் தந்து விடுவதற்காகவே தன் சொத்துக்கள் அத்தனையையும் விற்க முனைந்தவனிடம் போய், பணம் தேவை என்றால் நகை மீதே மேலும் கொஞ்சம் கடன் வாங்கச் சொன்னாளே! வார்த்தையால் மட்டுமின்றி, இரு கைகளாலும் கூட அவள் முகத்தில் ஓங்கி அறையாமல் விட்டானே! அதுவே அதிசயம்தான்!

ஆனால் இதெல்லாம் நடந்து முடிந்த கதை. எண்ணி எண்ணிப் பார்க்கப் பார்க்க வேதனையைத் தவிர வேறு எந்தப் பயனையும் தராதவை... அப்படியும் சொல்வதற்கில்லை. மீண்டும் மீண்டும் ஒவ்வொரு சம்பவத்தையும் எண்ணி எண்ணிப் பார்க்கும் போதுதானே உண்மை என்ன வென்று நன்றாகப் புரிகிறது? கணவனின் சிறந்த தன்மையும் தெரிய வருகிறது!

அண்ணி சந்தியாவை நம்பி, அவள் பேச்சையே அடிப்படையாகக் கொண்டு மானசா மூட்டாள்தனமாகத் தீட்டிய வண்ணங்களும், அதற்கு நேர்மாறான கணவனின் குணங்களும்... எல்லாமே இப்போதுதானே புரிபடுகின்றன!

ஆனால் இப்போது அவை புரிபட்டு என்ன பிரயோஜனம் என்பதுதான் அவளுக்கு இன்னமும் புலனாகவில்லை.

சசிசேகரன் எல்லாவற்றையும் முடிவு செய்துவிட்டல்லவோ அவளிடம் சொல்கிறான்!

முடிவு மட்டுமல்ல! அந்த முடிவை நிறைவேற்றுவதற்கான அடிப்படை நடவடிக்கைகளையும் எடுத்து முடித்து விட்ட பிறகு!

இனி அதை மாற்றுவானா?

அவளுக்கு நம்பிக்கை வர மறுத்தது.

ஆனால், அதற்காக அப்படியே விட்டுவிட மனமின்றிக் கணவனைக் கூப்பிட்டுப் பேசினாள். அல்ல பேச முயற்சித்தாள்.

ஆனால் அவன், கதவைத் திறந்து அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, ''இரவின் இருளில் எந்தப் பிரச்சினையுமே பெரிதாகத் தோன்றும் என்பார்கள். எனவே, நீ பேசவிரும்புவது எதுவானாலும், நாளைக் காலையில் சொல்லு, மானசா. இப்போது படுத்துக் கொஞ்சம் தூங்க முயற்சி செய்... படுக்கச் செல்லுமுன் அந்தப் பெட்டியைப் பூட்டி, பத்திரப்படுத்தி விட்டு படு. குட் நைட்'' என்றவன் மீண்டும் கதவைச் சாத்திக் கொண்டான்.

பெரிய 'குட்நைட்! முகத்துக்கு நேரே கதவைச் சாத்திவிட்டு, இந்த நாகரீகத்தில் இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை!' என்று எண்ணியபடி, கணவன் பத்திரப்படுத்தி வைக்கச் சொன்ன நகைகளை மானசா வெறுப்புடன் பார்த்தாள்.

இந்த நகைகள் அல்லவோ இத்தனைத் துன்பத்துக்கும் காரணம்! அவளுக்கு நல்வாழ்வு அமைவதற்கென அவளுடைய தாயார் பாதுகாத்து வைத்த நகைகள்! கடைசியில்

அவளது வாழ்வின் அத்தனை குளறுபடிகளுக்கும் இந்த நகைகளே காரணம் ஆகிவிட்டனவே!

ஒருவரது மகிழ்ச்சி பணத்திலோ, நகையிலோ இல்லை என்பது எவ்வளவு உண்மை!

இந்த நகைகளோ, மனம் வேறுபட்டுப் பிரிந்து செல்லும் கணவன் அனுப்பும் பணமோ அவளுக்குச் சிறிதளவு சுகத்தையேனும் தர முடியுமா?

திறந்து கிடந்த நகைப் பெட்டியை அப்படியே போட்டு விட்டுப் போய் விடவேண்டும் போல மானசாவுக்கு ஆத்திரம் வந்தது. ஆனால், கணவன் கூறியதை அடியோடு அலட்சியப்படுத்தவும் முடியாமல், நகைப் பெட்டியை மூடி, டீ.பாய்க்கு அடியில் தள்ளிவிட்டுச் சென்று படுத்தாள்.

படுத்தாளே தவிர, மானசாவுக்கு உறக்கம் வர மறுத்தது. மனம் ஒவ்வொன்றாக எடுத்து, அலசி ஆராய்ந்த வண்ணமே இருந்தது. திரும்பத் திரும்ப, மேலும் மேலும் பெருகிய தவிப்புடன்.

சசிசேகரனின் விளக்கத்தை ஏற்று, அவனது மனோபாவத்தோடு ஒத்திருந்து யோசித்துப் பார்த்தால் அவன் மேல் குற்றம் எதுவும் இருப்பதாகவே தோன்றவில்லை.

திருமணநாள் இரவின் போதுகூட, சந்தியாவின் பேச்சை ஒதுக்கி, அண்ணன் பேச்சை மட்டும் எண்ணிப் பார்த்தால், அதில் சசிசேகரனைத் தவறாக நினைக்க சிறிதும் காரணம் இருப்பாக இப்போது அவளுக்குத் தோன்றவில்லை!

இந்த அறிவு அவளுக்கு, அன்றைக்கு ஏன் இல்லாமல் போயிற்று?

அன்று மட்டுமல்ல. ஆறாத வடுவாக நாவினால் கணவனைச் செந்தேளாய்க் கொட்டிக் கொட்டித் தீர்க்கும் வரை அறிவு வரவே இல்லைதான்! அவன் மனம் அடி

யோடு வெறுத்துப் போகும் வரையிலும் கூட அப்படியே தானே இருந்து விட்டாள்!

ஆனால் அப்படி வெறுத்துவிடுவானோ?

முன் எல்லாம் கணவன் மானு என்பதும், இன்னமும் கொஞ்சலாக மனு என்றதும் நினைவு வந்தது. இப்போது யாரோ மாதிரி 'மானசா' என்று தானே அழைக்கிறான். மனதளவில் யாரோ ஆகிவிட்டான் என்று தானே இதற்குப் பொருள்?

மனதோடு போராடிக் களைத்து ஒருவாறு கண்மூடிய அவள் மீண்டும் விழித்த போது மணி எட்டாகியிருந்தது.

அவசர அவசரமாகப் பல்லைத் துலக்கி முகம் கழுவிக் கொண்டு ஓடிப்போனாள் அங்கே சசிசேகரன் வெளியே கிளம்பிவிடக் கூடாதே!

அங்கே அவனும் அன்று சற்றுத் தாமதமாகவே விழித்தது போல சசிசேகரனும், அப்போதுதான் குளித்து விட்டு வந்து கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் முகத்தில் சிறு கடுமை பரவ், ''என்ன இது?'' என்று நகைப் பெட்டியைக் காட்டினான். ''பத்திரமாய் எடுத்து வைக்கச் சொன்னேன் அல்லவா?''

''எனக்கு அவைகளைப் பிடிக்கவில்லை'' என்றாள் மானசா எரிச்சலோடு.

''இந்த டிசைன் பிடிக்கவில்லை என்றால் வேற்று மாதிரி செய்து கொள்'' என்றாள் அவன் வேண்டுமென்றே தவறாக அர்த்தம் கொண்டு.

''இந்த நகைகளை எந்த மாதிரி செய்தாலும் - எனக்குப் பிடிக்காது! என்றாள் அவள் பட்டென்று.

''அப்படியானால் சும்மாவே பத்திரப்படுத்தி வை!'' என்றவன், அதற்குமேல் அந்த நகைகளுக்கும் தனக்கும்

சம்பந்தம் இல்லாதவன் போல, ''காலைச் சிற்றுண்டிக்கு ரொட்டி வாங்கி வரட்டுமா? முட்டை அடை செய்தால் இலகுவாகவும் சீக்கிரமாகவும் வேலை முடிந்துவிடும்'' என்றான்.

தாமதமாக விழித்த மனைவி, அவசர அவசரமாகச் சிற்றுண்டி தயாரிப்பில் இறங்கிச் சிரமப்பட வேண்டாமாம்! கரிசனம்! ஆனால், இந்தக் கரிசனம் யாருக்கு வேண்டும்?

''ஃப்ரிஜ்ஜில் மாவு இருக்கிறது. சட்னிக்குத் தேங்காயும் இருக்கிறது.'' என்று முணுமுணுத்துவிட்டு, அவனை நிமிர்ந்து பார்த்து, ''நான் உங்களிடம் பேச வேண்டும்'' என்றாள்.

அவன் முகத்தில் திரைவிழுந்தது. கையில் இருந்த டவலால் தலையை அழுந்தத் துவட்டியபடி, ''நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு என்றால், அருகில் இருக்கும் பாங்கில் பாதுகாப்புப் பெட்டிக்கு ஏற்பாடு செய்து விட் டேன். நீ தங்குமிடம் உன் விருப்பம் என்று விட்டேன், மற்றபடி பேசுவதற்கு ஒன்றும் இல்லை'' என்றான் இளக்க மற்ற குரலில்.

''அண்ணி பேசியவிதத்தில் மனம் குழம்பி உங்களைத் தவறாக எண்ணிப் பேசிவிட்டேன். அதற்காக என்னை அடியோடு வெறுத்து விட்டீர்களா?'' என்று கேட்டபோது அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

''நீ விரைவிலேயே உண்மை உணர்ந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியும், மானசா. அதற்காக மட்டுமல்ல, வேறு எதற்காகவும் கூட என்னால் உன்னை வெறுக்க முடியாது ம.. மானசா.'' என்றான் கணவன் எதையும் காட்டாத குரலில்.

''அப்படியானால் என்னை விட்டுப் போகாதீர்கள்'' என்றாள் அவள் கெஞ்சலும் கண்ணீருமாக.

ஈரம் காய்ந்து விட்டிருந்த தோளை மீண்டும் துடைத்த படி அவன் சொன்னான், ''அதுதான் சொன்னேனே மானசா, சாப்பிட வேண்டும்; உன் செலவு நல்லபடியாகவே நடக்க வேண்டும். அதற்குப் பணம் தேவை என்று நேற்றே சொன்னேனே... என்று உரைத்தவன், அவள் ஏதோ சொல்ல வாயெடுக்கவும், ''அதற்கு இதை விட்டால் வேறு வழியே இல்லை!'' என்றான் மிகவும் அழுத்தம் பெற்று விட்ட குரலில்.

அண்ணியிடம் அடங்கி ஒதுங்கிப் போய் பழகிவிட்ட காரணத்தினாலே, அன்றி, நல்லவனான இந்தக் கணவனுக் குச் செய்துவிட்ட அநியாயத்தால் ஏற்பட்ட குற்ற உணர் வின் காரணமாகவோ, அல்லது இப்போது இவனிடம் வாதிட்டுப் பயன் இராது என்று தெரிந்ததினாலோ அந்த நேரம் மேலே நின்று பேசாமல், சிற்றுண்டி வேலையைப் பார்க்கச் சென்றாள் மானசா.

'சுடச் சுடப் போடப்போட' என்று தான் மட்டும் உண்டு விட்டு, மனைவி எப்படிச் சாப்பிட்டாலும், எதைத் தின்றாலும், இல்லை பட்டினியே கிடந்தாலும் அவள்பாடு என்று அக்கறையற்றுப் போய்விடுகிற ரகமில்லை சசிசேக ரன். என்ன இருந்தாலும் இருவரும் பகிர்ந்துதான் உண்ண வேண்டும் என்பவன்.

எனவே, வழக்கம் போல அவனுக்கு நாலும் தனக்கு இரண்டும் என்று தேவையான தோசைகளைச் சுட்டு எடுக் கும்போதே, இந்த ஓர் உணவுப் பழக்கத்திலிருந்தே உண் மையை அவள் ஊகித்திருக்க வேண்டுமா? என்று மானசா வுக்குள் எண்ணம் ஓடியது. மனைவிக்கு இந்த மதிப்புக் கொடுப்பவன், 'வாரிசைப் பெற்றுப்போட ஒரு பெண் கிடைப்பது கூடுதல் நன்மை' என்று எப்படிச் சொல்லியி ருக்க முடியும்? இதை அவள் சற்றும் யோசித்துப் பார்க்க வில்லையே!

சட்டென மானசா, உடம்பை உலுக்கிவிட்டுக் கொண்டு நிமிர்ந்தாள். இந்தக் கழிவிரக்கங்களில் வீணாக்க இனி நேரம் இல்லை. இதை ஒதுக்கி, இனி என்ன செய்வது என்று திட்டமிட்டாக வேண்டும்.

கைபாட்டில் வேலையைச் செய்ய, மனதால் மிகவும் தீவிரமாய்ச் சிந்தித்து ஒரு முடிவுக்கும் வந்தாள். அது வெற்றியாகுமோ என்னவோ, ஆனால், சும்மா இருந்தால் கணவன் பிரிந்து செல்வது நிச்சயம் என்ற நிலையில் இந்த ஒரு முயற்சி செய்து பார்த்தே தீரவேண்டும் என்று தீர்மானித்து அதைச் செயலாக்கவும் முனைந்தாள் அவள்.

22

வெளியே கிளம்புமுன் சசிசேகரன் கூறியவற்றை மானசா முழுக் கவனத்துடன் கேட்கவே இல்லை.

'நகைகளை இப்போது கண்மறைவாகப் பத்திரப்படுத்தி வை. பாதுகாப்புப் பெட்டகத்துக்கு எடுத்துச் செல்லும் போது நானும் உடன் வருகிறேன். நகை வீட்டில் இருக்கும் போது யாரையும் உள்ளே விடாதே...!'

எல்லாவற்றுக்கும் 'சரிசரி' என்று தலையாட்டினாளே தவிர, அதற்குமேல் அவன் பேச்சு இந்தக் காதில் புகுந்து அந்தக் காது வழியே வெளியே சென்றது. அவ்வளவுதான். அவளது மனது, எதையும் கவனியாது உள்ளே தீவிரமாக யோசித்துத் திட்டம் ஒன்று தீட்டிக் கொண்டிருந்தது.

''அதன்படி, கணவன் வெள்ளியேறிச் சென்று சரியாக பதினைந்து நிமிடத்திற்கெல்லாம் அவளும் வெளியே கிளம்பத் தயாராகிவிட்டாள்.

நகைப் பெட்டியிலிருந்து நகைகளை ஒரு சாதாரணப் பெட்டிக்கு மாற்றி எடுத்துக் கொண்டு அவளும் வெளியே கிளம்பிப் போனாள்.

அண்ணன் வந்திருக்க வேண்டுமே என்று உள்ளூர வேண்டிக் கொண்டே சென்றவளுக்கு அண்ணனின் அலுவலகத்தில் அவனைக் காணவும் பெரிதும் ஆறுதலாக இருந்தது.

தங்கையைக் கண்டதும், ''உட்கார். மாப்பிள்ளை எங்கே?'' என்று கதிரேசன் விசாரித்தான்.

பெட்டியைத் திறந்து நகைளை எடுத்து மேஜைமேல் வைத்தபடி, ''நான் மட்டும்தான் வந்தேன்...'' என்று பதிலிறுத்தாள் தங்கை.

''எப்படி...?''

''ஆட்டோவில்... என்ற மானசாவின் பதில் முடியு முன்பே, ''முட்டாள்!'' என்று சீறினான் அண்ணன்.

''இவ்வளவு நகைளை வைத்துக் கொண்டு ஆட்டோவில் தனியாக வருவதா? இதில் பத்தில் ஒரு பங்கு நகைகளுக்காக ஆட்டோ டிரைவரையும் சாகடித்து உன்னையும் கொன்றிருப்பார்கள் தெரியுமா? என்றான் கோபத்துடன்.

''பெட்டியில் நகை இருப்பதுதான் யாருக்கும் தெரியாதே... என்றாள் மானசா சிரத்தையற்று

ஒரு வேக மூச்சுடன், ''அறிவிருக்கிறதா, உனக்கு? ஒரு சின்ன ஆபத்து நடந்தது என்று வை! பெட்டி கீழே விழுந்து திறந்தது என்றால்? நீ பெட்டியைச் சாவியிட்டுப் பூட்டக்கூட இல்லை போல இருக்கிறதே! என்ன ஆகியிருக்கும் என்று இப்போதாவது புரிகிறதா?'' என்று மேலும் மேலும் அதட்டியவன், தங்கையின் விழியோரங்களில் எட்டிப் பார்த்த கண்ணீரைக் காணவும் இளகினான்.

''சரிசரி. ஏதோ உன் நல்லகாலம், அப்படி ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், எப்போதும் அதிருஷ்டம் நம் பக்கம் இருக்கும் என்று சொல்ல முடியாது. அதனால் இனிக் கவனத்துடன் நடந்து கொள்!'' என்று உத்திரவிட்டு விட்டு ''இப்போது சொல், என்ன விஷயமாய் இவ்வளவு தூரம் வந்தாய்?'' என்று விசாரித்தான்

''இதை... இந்த நகைகளை வைத்துக் கொண்டு பழைய மாதிரி நாற்பது லட்சம் பணம் கொடுங்கள், அண்ணா!'' என்று சின்னக் குரலில் அண்ணனிடம் கேட் பாள் மானசா.

''என்னடி, புருஷனும் பெண்டாட்டியுமாக விளையாடு கிறீர்களா?'' என்று மீண்டும் கோபத்துடன் படபடத்தான் கதிரேசன். அவன் ஒருநாள் நகையை வைத்துப் பணம் வாங்கிப் போகிறான். பத்தே நாட்களில் திரும்பி வந்து 'இந்தா பணம் என்று விட்டெறிந்து விட்டு நகைகளை வாங்கிப் போகிறான். அதற்கு மறுநாள் நீ வருகிறாய். இந்தா நகை பணத்தைக் கொடு என்கிறாய்! இதென்ன .., விளை யாட்டா? வட்டி எவ்வளவு வீணாகும் தெரியுமா? இந்தப் பத்து நாட்களுக்குச் சசிசேகர் கொடுத்திருக்கும் வட்டி என்ன தெரியுமா? எண்பது ஆயிரம் ரூபாய்! எண்பதினாயி ரம் ரூபாய் என்றால் உங்களுக்கு அலட்சியமாக இருக்கி றதா?'' என்றான் கோபம் குறையாமலே.

''அவர் தொழில் வேண்டாம்; துபாயில் வேலைக்குப் போகிறேன், என்கிறார்... த... த.. தனியாக!'' என்று தங்கை சொல்லவும், கதிரேசன் சற்று நேரம் திகைத்துப் போனான்!

''தனியாக... துபாய்க்கு... வேலைக்குப் போகிறா ளாமா? மோகம் முப்பது நாள் கூடத் தாக்குப்பிடிக்கவில் லையா? இப்படிப்பட்டவர் அன்று, -'உங்கள் தங்கையை உயிருக்காகவே மணக்கிறேன்' என்று வசனம் பேசுவா னேன்?

'நெஞ்சு படபடக்க, ''என்றைக்கு அண்ணா? எப்போது?'' என்று பரபரப்புடன் வினவினாள் தங்கை.

''உங்கள் திருமணம் பற்றி பேசியபோது!''

''வே.. வேறு என்ன சொன்னார்?''

''இப்போது அதுவா முக்கியம்?''

''ப்ளீ...ஸ் அண்ணா. தயவு செய்து சொல்லுங்களேன்! எங்கள் திருமணம் பற்றிய பேச்சு எப்படி நடந்தது? இது ரொம்பவும் முக்கியம் அண்ணா. ப்ளீஸ்...''

இதில் என்ன இருக்கிறது என்பது போன்ற ஒரு கையசைவுடன் கதிரேசன் சொன்னான். எப்படி சசிசேகரன் கடன் கேட்டு வந்தான்; சந்தியாவின் அற்புதமான யோசனை; முதலில் பணம், திருமணத்தைப் பிணைத்துப் பேச சசிசேகரனுக்கு பிடிக்காதது; மானசாவைப் பார்த்துப் பேசியபிறகு சம்மதம் சொன்னது...

கிட்டத்தட்ட முந்தைய இரவில் மானசா ஊகித்ததுதான்!

அதுவும், 'மானசாவை அவளுக்காகவே மணக்க விரும்புகிறேன்: நகைகளுக்காக அல்ல. அது ஒரு கூடுதல் நன்மை அவ்வளவே' என்று சசிசேகரனின் வார்த்தைகளைக் கதிரேசன் திருப்பி உரைத்தபோது தாங்க முடியாமல் மானசா அழுதுவிட்டாள்.

''ஏய், என்னடி? ஏன் அழுகிறாய்?'' என்று கேட்ட அண்ணனிடம், ''இதை ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை?'' என்னிடம் எல்லாம் சொல்லி விடும்படி அவர் சொன்னாராமே, பிறகும் ஏன் அண்ணா சொல்லவில்லை?'' என்று அழுகுரலில் வினவினாள்.

தாடையைத் தடவியபடி, ''சொல்லியிருப்பேன். உன் அண்ணிதான் வேண்டாம் என்றாள். வாழ்வைத் தொடங்

கும் போதே இவ்வளவு கடன் என்றால் பயந்து விடுவாய்; கடன்காரன் வேண்டாம் என்றுகூடச் சொல்லக் கூடும் என்றாள். அது சரியென்றேதான் எனக்கும் தோன்றியது. உனக்குத்தான் ஒருமாதிரி அசட்டுத்தனங்கள் எல்லாம் உண்டே!'' என்றான் அண்ணன்.

உண்மைதான். மானசா மறுத்திருக்கக் கூடும்தான். அதுவும் முதலிரவென்று சந்தியா அவளிடம் கூறியதுபோலச் சொல்லியிருந்தால் நிச்சயமாகவே திருமணத்தை மறுத்துத்தான் இருந்திருப்பாள். ஆனாலும் இந்த அண்ணி என்னமாதிரி அவள் வாழ்வில் விளையாடிவிட்டாள்!

கெட்டிக்காரப் பையன். விட்டு விடக்கூடாது என்று எண்ணினேன். கூடவே, தொழில் ஆர்வத்தில் அவன் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்ற கவலையும் இருந்ததால்தான் சொல்லவில்லை'' என்று தொடர்ந்து சொல்லி முடித்த கதிரேசன், மீண்டும் தங்கையிடம் விசாரித்தான். ''இப்போது சொல் என்ன விஷயம்? உங்களுக்குள் என்ன தகராறு''

சற்றுத் திகைத்துப் போனாள் மானசா.

இப்போது இந்த அண்ணனிடம் என்னவென்று சொல்வது? அண்ணி செய்த சூழ்ச்சி என்றால்... ஒன்று, நம்ப மாட்டான்; நம்பினாலும் கணவன் மனைவிக்கிடையே தகராறு ஏற்படும். அதற்கு அவள் காரணம் ஆவதா? கணவனின் மனம் வேறுபட்டால் எவ்வளவு வேதனை என்பதை அனுபவித்துக் கொண்டு இருக்கும் போதே இன்னொரு கணவன் மனைவிக்கிடையே வேறுபாட்டை எப்படி உண்டாக்குவது? கணவன் மனைவிக்கிடையே கலக மூட்டுபவர்கள் இருபத்தியொரு பிறவிகள் இளவயது விதவைகளின் வேதனையை அனுபவிப்பார்கள் என்று மனுதர்மம் கூறுவதாகப் படித்தது நினைவு வந்தது. அதைச்

சசிசேகரனிடம் விளையாட்டு போலச் சொன்னதும் கூடத் தான்.

''என்னடி, கேட்கிறேன் இல்லையா?'' என்று கதிரே சன் அதட்டவும் மீண்டும் மானசா நடப்புக்கு வந்தாள்... அண்ணி என்ன கொடுமை செய்திருந்த போதும், இந்த வேதனை அதிகப்படி தண்டனையாகவே அவளுக்குத் தோன்றியது.

எனவே, ஒரேயடியாகச் சந்தியாவைக் காட்டிக் கொடுக்க மனமின்றி, ''அண்ணி இந்த நகை பற்றிச் சொன்.. னதை... நான் த... தவறாகப் புரிந்து கொண்டேன்... போலத் தோன்றுகிறது... இவரிடம் போய்ப்... ப... பணத்தக்காக மணந்தீர்கள் என்... என்று சமாளிக்க முயன்றாள்.

''அண்ணி என்ன சொன்னாள்?''

மானசா பதில் கூறத் தயங்கவும், புருவம் விரிய, ''அண்ணி என்ன சொன்னாள் என்று கேட்டேன்'' என்று அதட்டிக் கேட்டான்,கதிரேசன். வேறு வழியின்றி, சந்தியா வின் சுடுமொழிகளைத் தவிர்த்து விட்டு, சுருக்கமாக விவ ரம் சொன்னாள் தங்கை.

சற்று நேரம் மவுனமாய் இருந்து யோசித்து விட்டு ''இப்போது நிறையப் புரிகிறது. ஆனால் அம்மா செய்தது பெரும் தவறு மானசா! நகைகளுக்காக ரத்தத் தொடர்பே அறுந்து போய்விடுகிற காலம் இது. ஆனால், உறவே இல்லாத ஒருத்தி வந்து குடும்பத்தைத் தாங்க வேண்டும்; பணிவிடை செய்ய வேண்டும்; ஆயினும் என் நகை எல்லாம் என் மகளுக்கு மட்டும் தான் என்பது பெரும் பிழையல்லவா? அதன் பிறகு அண்ணிக்கு உன்னிடம் எப்படிப் பிரியம் நிலைக்கும்?'' என்றான் கதிரேசன்.

அண்ணன் தாயிடம் குறை கண்டது மானசாவுக்கு சிறிது வேதனையாக இருந்தது. பதினாறு வயதில் அருகி

லிருத்தி அவர் சொன்னது நினைவுவர, ''அப்படிப் பார்த் தால் அப்பாவின் தொழிலை உங்களுக்கே முழுமையாக அம்மா கொடுத்து விடவில்லையா? அது இதைவிட எத் தனை மடங்கு?'' என்று நினைவூட்டினாள்.

மீண்டும் யோசித்து விட்டுத் தலையாட்டினான் கதிரே சன் ''நீ சொல்வது சரிதான். ஆனால், தொழிலில் கோடிகள் புரண்டாலும், உடம்பில் மாட்டிக் கொள்ளும் நகைகள் தானே பெண்களுக்குத் தெரிகிறது?... நானும் அதுபற்றி நினைத்துப் பாராமலே இருந்து விட்டேன்...''

''இனிமேலும் நினைக்கத் தேவையில்லை அண்ணா. அண்ணியை மகிழ்ச்சியோடு வாழவையுங்கள். இந்த நகை களைக் கூட அண்ணிக்கே கொடுத்து விடுங்கள். இதன் விலையாகவே இந்த நாற்பது லட்சத்தை நீங்கள் தந்தால் கூட எனக்குப் போதும்'' என்றாள் தங்கை.

ஆனால், ''நானும் நம் அம்மா வயிற்றில் வளர்ந்து பிறந்தவன் என்றே நீ கருதவில்லைபோல் இருக்கிறதே!'' என்றான் அண்ணன். ''பணம் தருகிறேன் ஐம்பதாகத் தருகிறேன் கொண்டுபோ இந்த நகைகள்.. இவைகளில் எதுவும் இப்போது அணியத் தகுதியில்லை. கட்டுபிரித்து ஒரே மாதிரி இரண்டு செட் செய்யச் சொல்கிறேன். ஒன்று உனக்கு. ஒன்று அர்ச்சனாவுக்கு. மகளுக்கும் வருகிறது என்றால் அண்ணி மெல்லச் சமாதானம் ஆகிவிடுவாள். முன்பு போல மூட்டிக் கொடுக்க அந்தப் பாட்டி அவள் அம்மாவும் இல்லைபார்!''

இந்தப் பணத்துக்கு நீங்கள் வட்டி கட்டத் தேவை யில்லை. இந்தப் பாதி நகைகளின் விலைபோலப் போட்டுத் தருகிறேன். தொழிலிலும் 'டிரஸ்டில்' உன்னையும் சேர்த்து உனக்கும் ஒரு பங்கு வர ஏற்பாடு பண்ணுகிறேன் ஆனால். இவ்வளவுக்குப் பின், இந்தப் பணத்தை முன்

போல வாங்கிக் கொள்ள மாப்பிள்ளை சம்மதிப்பாரா?'' என்று ஐயத்துட்னும் சிறு கவலையுடனும் வினவினான் அவன்.

தங்கையின் அகன்ற விழிகளிலும் அதே கவலையும் பயமும் இருக்கக் கண்டு, ''நான் வேண்டுமானால் அவரிடம் பேசிப் பார்க்கட்டுமா?'' என்று சசிசேகரனைச் சமாதானப்படுத்தவும் முன் வந்தான்.

''இல்லை அண்ணா. என்ற மறுப்பாகத் தலையசைத்தாள் மானசா ''இது என் வாயால் கெட்டது, நான்தான் சீர் செய்து கொள்ளவும் வேண்டும்'' என்றாள் பெருமூச்சுடன். அத்தோடு, தொழில் உறவு மட்டும் அண்ணனோடு என்றவன் இப்போது அண்ணனின் விளக்கங்களை எப்படி ஏற்கக் கூடும்?

பணத்திற்கான டிடியைப் பாங்கில் எடுத்து வருவதற்காகச் சற்று நேரம் காத்திருக்க நேர்ந்தது.

ஏதோ யோசனையில் மூழ்கியிருந்த மானசா, திடுமெனக் கதிரேசனிடம் கேட்டாள். ''உங்களிடம் பணம் கிடைக்காமல் போயிருந்தால் அவர் வேறு என்ன செய்திருப்பார் அண்ணா?''

என்ன செய்திருப்பார்? ஆளை விழுங்குகிற வட்டிக்குக் கடன் வாங்கியிருப்பார். அல்லது தொழிலில் பெரும் பங்கை விற்றிருப்பார். இரண்டுமே மிகுந்த பாதிப்பாய் ஆகிவிட்டிருக்கும். அதனால்தான் இந்த நகைகளை ஈடாக்கும்படி நான் அவரை வற்புறுத்தினேன். ஆனால், இப்போது என்ன இப்படி ஒரு திடீர்க் கேள்வி? இன்னமும் மாப்பிள்ளை மேல் சந்தேகமா?'' என்று குரலில் கண்டனம் தொனிக்க கதிரேசன் வினவினான்.

''இல்லை அண்ணா. சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று நினைத்ததாகச் சொன்னீர்களே, என்ன சிக்கல் என்று தெரிந்து கொள்ள நினைத்தேன்'' என்றாள் மானசா

''அப்படியா? இன்னும் ஒன்றும் தெரிந்து கொள். இந்தப் பணத்தையும் முழுமையாகத் தானே பயன்படுத்திக் கொள்ள மாப்பிள்ளை விரும்பவில்லை மானு. கடன் பொறுப்பு தன்னதே என்றாலும், தொழிலில் உனக்குச் சமபங்கு கொடுக்கப் போவதாக சொன்னார். தெரியுமா'' என்று கூறவும், மானசா மிகவும் நொந்தாள். அப்படிப்பட்ட வரைப் போய் என்னவெல்லாம் பேசிவிட்டாள்!

காசோலையுடன் தங்கையைத் தானே அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டுப் போனான் கதிரேசன்.

வீட்டின் தனிமையில், கணவனுக்காகக் காத்திருக்கலா னாள் மானசா. மனதில் என்னென்னவோ குருட்டு யோச னைகள். கணவன் இதை ஏற்பானா, மாட்டானா? ஏற்று, அதன்பின் ஏற்படக்கூடி இன்ப வாழ்வை விட, அவன் றுத்து விட்டால் என்ன ஆகும் என்பதுதான் மனக் கண்முன் தெளிவாக வந்து வந்து நின்றது. வந்து நின்று, அவளை ஆட்டி அலைக்கழித்தது.

சும்மா இருந்தால் கொஞ்சம் பைத்தியம் கூடப் பிடித்தா லும் பிடித்துவிடும் என்று வேலையில் இறங்கினாள். சசிசே கரனுக்குப் பிடித்ததான சமையல் வகைகளை செய்து வைத்தாள். வீட்டைத் தலைகீழாகப் புரட்டிச் சுத்தம் செய் தாள்... கடைசியாகச் செய்வதற்கு ஒன்றுமில்லாமல் போய் விடவே, கட்டிலில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழு தாள்!

கடைசியாக, மாலை ஆறுமணி அளவில், கையில் சில பழங்கள் அடங்கிய பையுடன் சசிசேகரன் வீடு வந்து

சேர்ந்த போது, மானசா அழுது ஓய்ந்து, ஒருவிதமான அமைதி பெற்றிருந்தாள்.

மனைவியின் அழுது சிவந்த கண்களையும் வீங்கிய இமைகளையும் ஒருதரம் நோக்கி சசிசேகரன் உடனேயே பார்வையை அகற்றிக் கொண்டு உள்ளே நடந்தான். ''நல்ல ஆப்பிளாகக் கிடைத்தது. வாங்கி வந்தேன்'' என்று, சாப்பாட்டு மேஜைமேல் இருந்த பழத்தட்டில் அவற்றை அடுக்கி வைத்தான். அடுத்து, ''ஒரே வியர்வை கசகசப்பு. குளித்து விட்டு வருகிறேன்'' என்று அவனது அறைக்குள் புகுந்து கொண்டான்.

அவன் குளித்து உடைமாற்றி வந்ததும், ''சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா; என்று கேட்டு, எடுத்து வைத்தாள் மனைவி.

இரு தட்டுகளிலும் பரிமாறியபோதும், அவன் உண்ண உண்ண மானசா, சாப்பிடத் தோன்றாமல் சும்மாவே உட் கார்ந்திருந்தாள்.

''சாப்பிடவில்லை?''

''இல்லை,'' என்றாள் அவள் சோர்வுடன்.

''ஏன்?''

''பிடிக்கவில்லை:''

''இப்படி எத்தனை நாட்கள் பட்டினி கிடப்பதாக உத்தேசம்?'' என்று குரலில் கோபம் தொனிக்கக் கணவன் கேட்டான்.

திடுமென ஒரு வழிகண்டாற்போல உணர்ந்து, ''நீங் கள் துபாய்க்குத் தனியாகச் செல்லும் பயணத்தை நிறுத்தும் வரை '' என்று திடமான குரலில் பதிலிறுத்தாள்.

சட்டென சசிசேகரனின் முகத்தில் கடுமை பரவியது. யுவனை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''ஏன், இதைவிட ாத்தனமான யோசனை வேறு ஒன்றும் தோன்றவில்லை? ாெஞ்சம் யோசித்துப் பார்! என் பயணத்தை நீ நல்லவித ாாய்ப் ஒப்புக் கெள்ளும்வரை உண்ணா நோன்பு இருக்கி ேறன் என்று நானும் தொடங்கினால் என்ன செய்வாய்? ன்னை விட நான் பலசாலி பிடிவாதக்காரனும் கூட ன்பது என் அனுமானம். என்ன செய்யப் போகிறாய் ாொல்லு'' என்றான்.

உதடு துடிக்க அமர்ந்திருந்தவள் சில கணங்களில், ாட்டில் இருந்த சாதத்தில், கையில் பட்டதை எல்லாம் ேர்த்துப் பிசைந்து, உண்டேன் என்று இரண்டு பிடி தின்று ாிட்டு எழுந்தாள்.

கண்களில் நீர் வடிய வடிய, விரலால் சுண்டி விட்டப ுறம், உணவு மேஜைப் பொருட்களை ஒதுக்கி முடித்து ாிட்டு மானசா கணவனிடம் வந்து நின்றாள்.

''ஏதோ தெரியாமல் கண்ணில் பட்டுவிட்டது என்பதற் ாாக் கை விரலையே வெட்டிப் போட்டு விடுவீர்களா? ண்மை புரியாமல் ஒன்று சொன்னேன் என்பதற்காக, ாிவளவு எளிதாக என்னை விட்டுப் போய் விடுவீர் ாள்?'' என்று கண்ணீர் குரலில் படபடத்தாள்.

''பிரிந்து செல்லும் முடிவு எடுப்பது எனக்கும் எளிதாக ிருக்கவில்லை, மானசா. நாலு நாட்களாகத் தூக்கமின்றி, ிவு, பகல் சிந்தித்துக் கண்டுபிடித்த தீர்வு அது.'' என்றான் ாணவன் நிதானமாக.

''அது மெய்யென்றால் - என்னைப் பிரிவது உங்களுக் ாம் நன்மைதான் என்றால் போகாதீர்கள்...

''அது பற்றி முன்பே சொல்லி விட்டேனே!'' என்று மனைவியின் பேச்சில் குறுக்கிட்டுக் கூறினான் சசிசேகரன். ''பணம் வேண்டும், மானசா. அங்கே என் செலவுக்கு வேண்டும். விரும்பியதை உண்டு, ஆசைப்பட்டதை உடுத்தி நீ வாழ வேண்டும் என்பது எனக்கு ஆசை. அதற்குத் தேவையான பணம் துபாய் வேலையில் தான் கிடைக்கும்.''

இல்லை, வேறு வழி இருக்கிறது; என்று அண்ணன் கொடுத்த காசோலையைக் கணவனிடம் கொடுத்து விட லாம் என்ற துடிப்பு மானசாவுக்கு வந்தது. ஆனால் அதற்கு ரிய நேரம் இன்னமும் வரவில்லை என்பதை உணர்ந்து அதை ஒத்திப் போட்டாள்.

இப்போது என்ன செய்வது என்று புரியாத திகைப்பும், இவன் எதையும் ஒத்துக் கொள்ள மாட்டானோ என்ற கவலையுமாக மீண்டும் அவள் கண்களில் நீர் பெருகியது.

ஓர் அவலமான நிலையில் கூட தன் மதிப்பை வெகு வாகக் காத்தவள் மானசா. இன்று அதையெல்லாம் கைவிட்டு, சசிசேகரனின் முன் நின்று கையேந்தினாள். ''சரி, நான் தப்பு செய்தேன். ஒரு சூழ்ச்சியை நம்பி உங்களை மிகவும் நோகப் பேசி விட்டேன். உண்மை புரிந்த பின் அதற்காக எவ்வளவு வேதனைப் படுகிறேன் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? அதற்காக என்னை உங்க ளால் மன்னிக்கவே முடியாதா?''

விழிகளில் திரண்ட நீரை உள்ளிழுக்க முயன்றபடி மனைவி பேசிய விதம் தாங்காமல், அவளை இழுத்து அணைத்து ''நமக்கிடையே மன்னிப்பு எல்லாம் என் னம்மா? எப்படியும் நீ உண்மை உணர்ந்து கொள்வாய் என்பது எனக்கு நிச்சயம். இப்போது தெரிந்து கொண்டாய். அதுபோதும்'' என்றான் கணவன்.

இந்த அணைப்பை எப்படி மறுத்தாள்?

அசையாமல் சற்று நேரம் இருந்தவளுக்கு, இப்போது தோன்றியது போலத் தோன்றும் என்று உணர்ந்து, ஒரு பெருமூச்சுடன் மெல்ல விலகினாள். சசிசேகரனை நேராகப் பார்த்து, ''அப்படியானால் என்னை மன்னித்து விட்டீர்களா?'' என்று கேட்டாள்

லேசாக முறுவலித்து, ''அதை வார்த்தைகளால் சொன்னால்தான் திருப்தியா? மன்னித்து விட்டேன் போதுமா?'' என்றான் அவன்.

''அப்படியானால் போகாதீர்கள்!''

கைவிரித்து, ''வேறு வழியில்லை மானசா.'' என்றான் சசிசேகரன்

''இருக்கிறது.'' என்றவள், உள்ளே சென்று, ஐம்பது ரூபாய்க்கான காசோலையை எடுத்து வந்து கணவனி டம் நீட்டினாள்.

புரியவில்லை விறைத்து இறுக, ''வேண்டாம்'' என்றான் ஒற்றைச் சொல்லாக.

''மன்னித்து விட்டதாகச் சொன்னீர்களே?''

''மன்னிக்கிறேன். ஆனால் இது வேண்டாம்.

''முழுமையாக மன்னித்தீர்கள் என்றால், இதை ஏற்க வேண்டும்!'' என்றாள் மானசா.

சற்று நேரம் பேசாமலே நின்று விட்டு, ''அதை உள்ளே வைத்து விட்டு வா, மானசா கொஞ்சம் பேச வேண்டும்!'' என்று திரும்பி, ஒரு சோபாவில் அமர்ந்தான் சசிசேகரன்.

மானசாவும் வந்து உட்கார்ந்ததும் அவள் கையைப் பிடித்து லேசாக வருடியபடி, ''மானசா, நீ இப்போது பிரிவு

என்ற வார்த்தையில் அதிர்ந்து போய் இருக்கிறாய். அதனால் உன்னால் நிதானமாக யோசிக்க முடியவில்லை என்று என்க்குத் தோன்றுகிறது. சற்று சிந்தித்துப் பார் நம் திருமணம் நடந்தபோது நாம் இருவரும் முகம் அறியாத அன்னியர்கள் அல்ல." பதினைந்து நாட்கள் பழகியவர்கள் நன்றாகவே. என் அன்பை அப்போதும் நீ அறிவாய் தானே? ஆனாலும் உன்னால் என்னைத் தவறாக எண்ண முடிந்தது தானே? இந்த அதிர்ச்சி இல்லையென்றானபிறகு, சிலகாலம் கழித்து பழைய சஞ்சலம் மீண்டும் ஏற்பட்டால் நம் வாழ்க்கை நரகமாகிவிடாதா? அப்படி ஏற்படாது என்று தான் என்ன நிச்சயம் சொல்லு? அதனால் சொல்கிறேன், இனி ஒருமுறை இந்த விஷப் பரீட்சை வேண்டாம் மானசா. எனவே நாளைக்கு இந்தச் காசோலையை உன் அண்ணனிடம் திருப்பிக் கொடுத்து விட்டு உன் நகைகளை மீட்டு விடு. ''இந்த ஒரு நாளைக்கு அவர் ஏதேனும் வட்டி கேட்டால் சொல். தருகிறேன்'' என்று முடித்தான்.

''நகைகளை அடகாக வைக்கவில்லை. பாதி விற்று விட்டேன்'' என்றாள் மானசா, கணவனின் முகத்தையே பார்த்தபடி.

சற்றே அதிர்ந்தபோதும், உடனே சமாளித்து, ''பரவாயில்லை. இந்தப் பணத்தில் வேறு அதற்கு ஈடாக ஏதாவது வாங்கிக் கொள்'' என்றான் அவன். சாதாரணமாகவே.

அடிபட்டு நொந்த மனம் அவனுடையது. பிடிவாதமும் ரோஷமும் கூட நிறைய வைத்திருப்பவன். இவனுக்கு நம்பிக்கை இலகுவில் வந்து விடாது!

சற்று யோசித்து. விட்டு, ''சசி... என்று அழைக்கும் போதே மானசாவின் மனம் நொந்தது. மனம் தெளிந்து விட்ட அவளுக்கு 'சசி' என்று இந்த அழைப்பு இலகுவாக

வருகிறது. ஆனால், அவளுடைய இந்த 'சசியோ' 'மானசா' யிலிருந்து 'மானு'வுக்குக் கூட இறங்கவில்லையே!

எல்லாம் சரியாகி விடும் என்று பிடிவாதமாய் மன தைத் தேற்றிக் கொண்டு, மீண்டும் தொடங்கினாள். ''சசி, நானும் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள்தான். முதலாவுக்கு. அன்பைப் பொறுத்தவரை ஏழு ஆண்டுகளாக நான் பாலைவனத்தில் வளர்ந்து வாழ்ந்த பெண் என்பது உங்களுக்குத் தெரியும். கொடும் பாலைக்குப் பழக்கப்பட் டது போல நான் கானலுக்கும் பழகிப் போனவள், சசி. அண்ணன் என் பக்கம் பார்த்துச் சிரிப்பார் - என்னிடம் அன்போடு புன்னகை புரிவதாக எண்ணி அகமகிழ்ந்து போவேன். பிறகு தெரியும், ஆர்ச்சியோ, அண்ணியோ, அவர்களுடைய உறவினரோ அந்தப் பக்கம் நின்று கொண்டு இருக்கிறார்கள்; அந்தப் புன்னகையே அவர்க ளுக்காகத்தான் என்பது! உண்மை தெரிந்ததும் உள்ளூர நொறுங்கி போவேன். அண்ணி சினேகமாக நோக்கினாலே, அடிபடி, மனம் மாறிவிட்டாள் என்று மனம் குளிர்வேன். ஆனால், அது வேஷம் என்று வெகு குரூரமாய் வெளிப்ப டும். ஆர்ச்சிக்கும் இப்படி என்னை நோகடிப்பதில் ஒரு தனி இன்பம் உண்டு.

''இப்படிக் கானல் நீருக்கே பழக்கப்பட்ட நான், உண் மையான சோலை வனத்தைக் கண்டபோது அதுவும் நான் எப்போதும் கண்டு பழகிய கானல் நீராகத்தான் இருக்கும் என்று தவறாக எண்ணிவிட்டேன். அதுவும் முதலில் அப் படி நினைக்கவில்லை நான். ஆனால், இன்னொருவர் அதுவும் கானலே எனவும், அதற்கே பழக்கப்பட்டிருந்த எனை அட்டென நம்பி விட்டது... ஆனால் என்னுடைய இந்த ஒரு பிழைக்காக என்னை அடியோடு ஒதுக்கி விடுவீர்களா சசி?'' என்று கேட்டவள், அவன் அப்போதும் மௌனமாகவே அமர்ந்திருக்கவும், ''உங்களைப் பிரிந்தால் நான்

செத்துப் போவேன், சசி... என்று கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விசித்தாள்.

ஒருகணம் தான்.

அடுத்த கணம் மானசா கணவனின் இறுகிய அணைப்பில் இருந்தாள். ''இப்படியெல்லாம் பேசக்கூடாது.'' என்று அதட்டிக் கொண்டிருந்தான் அவன்.

''இனிப் பேசவில்லை. ஆனால் நான் சொன்னது மட்டும் மெய்தான் சசி'' என்று முணுமுணுப்பாக மொழிந்து விட்டு அவன் மார்பில் புதைந்து கொண்டாள் அவள்.

மேலும் ஒரு சிறு அமைதியின் பின், ''நீ ஜெயித்தாய், மானு'' என்று மனைவியின் காதோரம் மெதுவாக உரைத்தான் சசிசேகரன்.

எல்லையற்ற ஆறுதலில் ஒரு கணம் தொய்ந்த மானசா உடனே தன்னை மறந்து வெறிகொண்டவள் போன்று கணவனின் முகமெங்கும் முத்தமிடப் போனாள்.

குறிப்பாக எந்த வினாடியில் அவன் செய்கையைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டானோ, இருவருக்கும் தெரியாது. ஆனால் இப்போது, அவள் அவன் கையில் துவண்டு கிடக்க முத்த மழை பொழிந்தவன் சசிசேகரன்.

சற்றுப் பொறுத்து, கண்மூடிக் கிடந்தவளின் நெற்றியில் புரண்ட கூந்தல் சுருளை ஊதி விலக்கிவிட்டு, ''அன்று தடைப்பட்ட முதல் இரவை இப்போது தொடர்வது எனக்கு மிகவும் ஆசைதான். ஆனால், உன் உறுத்தல்கள், வேதனைகள் எல்லாம் முழுக்க முழுக்க விலகி விடவேண்டும் என்பது என் விருப்பம். சொல் மனு, உனக்கு இன்னமும் ஏதேனும் தெரிய வேண்டியிருக்கிறதா? ஏதேனும் சொல்ல வேண்டியிருக்கிறதா? எதுவாயிருந்தாலும் கேட்டுத் தெரிந்து கொள்ள உனக்கு அவகாசம் ஐந்தே நிமிடங்களே!

அதற்குமேல் வேறு வேலை இருக்கிறது!'' என்று ஒரு கணவன் பார்வையை பார்த்தான் சசிசேகரன்.

கன்னங்களில் ரோஜாக்கள் எட்டிப் பார்க்க, மானசா மெல்ல முறுவலித்தாள். 'எனக்கு உறுத்தல் எதுவும் இல்லை, சசி. ஆனால் இன்னமும் ஒரு சிறு விளக்கம் நான்தான் சொல்ல வேண்டும். செதுக்கினாற் போலக் கம்பீரமான கவர்ச்சி உடையவர் நீங்கள். வடிவத்தில் நான் உங்களுக்குப் பொருத்தமில்லை என்பதால் வந்த தாழ்வுணர்ச்சியும் என் மனம் கலங்கிவிட ஒரு காரணம்...'' என்று மென் குரலில் அவள் சொல்லிக் கொண்டுபோக, இடைமறித்து ''பொருத்தம் இல்லையா? இதென்ன அசட்டுத்தனமான பேச்சு? யார் அப்படிச் சொன்னது?'' என்று கேட்டான் அவள் கணவன்.

''யார் சொல்லவேண்டும்? கண்ணாடியில் பார்த்தால் தெரியாதா? அன்று பூங்காவில் கூடச் சொல்ல வில்லையா...

''பொருத்தம் என்றுதான் சொன்னார்கள்.''

''ஆமாம். கூடவே, 'உண்டாகியிருக்கிறாள் போல மெலிந்து' என்றும் சொல்லவில்லையா? அந்த மாதிரி நிலை யும் இல்லாதபோது அப்படிச் சொன்னால் குற்றவு என்று தானே பொருள்?''

''அதெல்லாமில்லை'' என்னைப் பொறுத்தவரை என் யும் நீ ரதிதான்''

''பொய் பொய்! முதல் தடவை என்னைப் பார்த்த போது என்னோடு பேசவே உங்களுக்குப் பிடிக்கவில் லையே! ரதிகளிடமெல்லாம் அப்படித்தான் முகத்தைத் திருப்பிவீர்களாக்கும்!?'' என்று கிண்டலாகக் கணவனை நோக்கிக் கேட்டாள் மானசா..

''ஓர் ஓட்டல் லாபியில், வயதுப் பெண் ஒருத்தி அறிமுகமற்ற இளைஞனிடம் பேச வந்தால் அவளைப் பற்றி என்ன நினைப்பது, மானு? நான் முகம் திருப்பியதன் காரணம் அதுதான். ஆனால், அப்போதும் இன்னும் கொஞ்சம் சதைப் பிடித்து, பொருத்தமான உடையணிந்தால் பேரழகியாய் இருப்பாய் என்றுதான் நினைத்தேன்'' என்று விளக்கம் கொடுத்தான் சசிசேகரன்.

''ஓகோ... என்று தலையாட்டிவிட்டு, ''கொஞ்ச நாட்களாக நான் நடந்து கொண்ட முறையில் ஓங்கி அறையாமல் எப்படித்தான் பொறுத்துப் போனீர்களோ? கண்டபடி பேசி விட்டேனே!'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

''உன்னிடம் கோபம் கொள்ள என்னால் எப்படி முடியும், மனு?''

''நிஜமாகவா?'' மீண்டும் சந்தேகம் காட்டினாள் மானசா. ''மனு என்ற அழைப்பே மறந்து போயிருந்ததே! 'மானு' அளவுகூட இறங்கவில்லையே!''

''அந்த அழைப்பை ஏற்கும் மனநிலை உனக்கு இல்லாதபோது எப்படி அப்படிக் கூப்பிடுவது? நீதான் வேற்றாளாய் விலகி நின்றாயே! உனக்குப் பிடிக்காதோ என்று...

''பிடிக்காததைச் செய்யாதவரா, அவ்வளவு கேட்டும் வெளிநாட்டுக்கு வேலைபார்க்கத் தனியே போவதாக அப்படிப் பிடிவாதம் பிடித்தீர்கள்?'' என்று சமயம் பார்த்துக் காலைவாரிக் குறைப்பட்டாள் மனைவி.

''அது மானப் பிரச்சினை மனு. வேறு வழியின்றி எடுத்த முடிவு'' என்று பொறுமையுடனேயே விளக்கம் கொடுத்தான் கணவன். கூடவே, இதனால் மனைவியின் மனம் மீண்டும் நொந்து விடாமல் இருப்பதற்காக, அவளது கன்னத்தோடு கன்னம் ஒட்டி இழையவும் செய்தான்.

அப்போதும், ஒரு நெடுமூச்சு விட்டு, ''இந்த அண்ணன் மட்டும், நீங்கள் முதலிலேயே அவரிடம் சொன்னபடி, எல்லா விவரங்களையும் எனக்கு முதலிலேயே தெரிவித்திருந்தால் இந்தக் குழப்பமே நேர்ந்திராது... இல்லையா!'' என்று சிறு வாட்டத்துடன் கணவனிடம் மானசா வினவினாள்.

முன்னுச்சியில் ஆறுதலாய் இதழ் பதித்து, ''அதெல்லாம் முடிந்த கதை. மறந்துவிடவேண்டும் கண்ணம்மா'' என்றான் கணவன்.

உடனேயே கை திருப்பி மணி பார்த்துவிட்டு, ''ஐந்து நிமிடங்களும் முடிந்து விட்டன. இனி...?'' என்று குறும்பு கண்ணில் நோக்கி, அவளைக் கைகளில் ஏந்திக் கண் சிமிட்டினான்.

மெல்ல நகைத்தவாறே கணவனின் தோள் வளைவில் முகம் புதைத்தாள் மானசா.

மேலும் மின்நூல்களுக்கு - www.tamilebooks.net : www.tamilnesan1981.blogspot.com

பாலைப் பசுங்கிளியே

ரமணிசந்திரன்